ௐ

கீதா அஷ்டாவதானி, வெண்பாப் புலி

T.R. பத்மநாபய்யர்

இயற்றி அருளிய

கீதை வெண்பா



வெளியீடு :

கீதாபவனம்,
அமெரிக்கன் மிஷன் சந்து,
காமராசர் சாலை,
மதுரை.

ௐ

கீதா அஷ்டாவதானி, வெண்பாப் புலி

T.R. பத்மநாபய்யர்

இயற்றி அருளிய

கீதை வெண்பா

பதிப்பாசிரியர்

T.R. தாமோதரன்

வெளியீடு :

கீதாபவனம்,
3,அமெரிக்கன் மிஷன் சந்து,
காமராசர் சாலை,
மதுரை.

First Edition : March 1998

Title : Gītai veṉbā

Editor : Dr. T.R. Damodaran
M.A., Ph.D., D.Ling., D.G.T.,


No. of Pages : 191

Size : 1X8 Demy

Pagemaker & Printers **Citi - Link Computers**
2-A, Panthadi 7th Street,
Madurai - 625 001. Ph : 37783

Published by : **Gita Bhavanam**
3, American Mission Street,
Kamarajar Salai,
Madurai - 625 009.

பொருளடக்கம்



T.R. பத்மநாபய்யர்



2வது கீதா ஸப்தாஹம் (30.12.54 - 5.1.55)



ஸ்ரீ:

ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி
ஸ்ரீ ஸ்ரீரங்கநாராயண ஜீயர் ஸ்வாமி

மங்களா ஸாசனம்

கண்ணன் கழலிணை நண்ணும் மனமுடையீர்
எண்ணும் திருநாமம் திண்ணம் நாரணமே !

கண்ணபெருமானின் திருவாய் மொழியாக தர்மக்ஷேத்ரமாகிய குருக்ஷேத்திர போர்க்களத்தில் பிறந்தது ஸ்ரீமத் பகவத் கீதை. எதிரணியில் வந்து நின்ற உற்றார் உறவினரையும் ஆசான் சான்றோர்களையும் கண்டு மதி மயங்கிய அர்ஜுனன் போரிடமாட்டேன் எனப் பின்வாங்கியதும், அவரது மனக்கலகத்தையகற்றி அவருக்குப் புத்தி புகட்டிச் செயல்படவைத்து ஞானம் ஊட்டிய அற்புத க்ரந்தம் கீதை.

ஸ்ரீ சங்கரர், ஸ்ரீ ராமானுஜர், ஸ்ரீமத்வர் போன்ற சமயாச்சாரியர்கள் வியாக்யாநம் எழுதி விளக்கியுள்ளார்கள். ஸ்ரீமத் பகவத் கீதை இன்றளவும் மக்கள் உள்ளத்தில் ஆன்மீக மேன்மை பெற ஒருவழிகாட்டியாக விளங்கி வருகிறது. அந்த பகவத் கீதையை தினமும் பாராயணம் செய்தும், தம் வாழ்நாளெல்லாம் வாழ்ந்து, பிறவிப்பயன் பெற்ற திருவாளர் T.R. பத்மநாபய்யர் தமிழில் கீதை வெண்பாவாக இயற்றி நமக்கெல்லாம் தந்துஅருளி உள்ளார். அதோடு அல்லாமல் கீதா பவனம் என்ற ஸ்தாபனத்தை ஏற்படுத்தி மதுரைக்கு ஒரு பெரிய ஆன்மீக நிறுவனத்தையும் நமக்கு கொடுத்துள்ளார். அவரது **100**வது ஆண்டு நிறைவுபெறும் இவ்வாண்டில் அவரது கீதை வெண்பா வெளிவருவது பாராட்டுக்குரியதாகும்.

அதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ள அனைவரும் பாராட்டுக் குரியவர்கள். ஸம்ஸ்கிருதமொழி தெரியாதவர்களும் தெரிந்து புரிந்து படிக்க வேண்டுமென்பதற்காகவே பத்மநாபய்யர் தமிழிலும் சௌராஷ்டிர மொழியிலும் மொழி பெயர்த்துள்ளார். நல்ல தமிழில் நமக்கு அளித்துள்ளார். தமிழ் கூறும் நல்லுலகம் அவரை நெஞ்சில் நிறுத்தி நினைவு கூறுவர் என்பது உறுதி.

வாழ்க்கை நெறியை நமக்கு காட்டும் கீதை."*கர்மண்யேவ அதிகாரஸ் தே மா பலேசு கதாசன* " என்ற கீதை வரிகளை பத்மநாபய்யர் கைபிடித்து வாழ்ந்தார் என்பதை அவரது வரலாறு நமக்குப் புலப்படுத்துகிறது. ஒரு தேச பக்தராகச் சிறை சென்றவர். தெய்வபக்தியோடு சிறையில் இருந்த வண்ணம் இக்கீதை வெண்பாவை செய்துள்ளார் என்பதை தெரிந்து கொள்ளும்போது அவரது ஈடுபாடு நமக்கு புலப்படுகிறது.

இவ்வரிய நூலை சௌராஷ்டிர கல்லூரி ஸம்ஸ்கிருத பேராசிரியர் திரு. T.R.தாமோதரன் அவர்கள் நன்கு பரிசோதித்துப் பதிப்பித்துள்ளார். தஞ்சை சரஸ்வதி மஹால் நூலகத்தில் பணி புரிந்து, அவர் அங்கு பல சுவடிகளிலிருந்து பதிப்பித்துள்ளார். அந்த அனுபவம் அவருக்கு இந்நூலைப் பதிப்பிக்கக் கைகொடுத்து உதவியது. அடிக்குறிப்புகளை காணும் போது ஆழ்ந்த அனுபவம், இருமொழிப் புலமை பெற்றிருக்கும் இவரது பதிப்பு திறமை நன்கு வெளிப்படுகிறது. இப்பணி செவ்வனே செய்து முடித்துள்ள அவரைப் பாராட்டிப் பல நூல்கள் அவர் மூலம் வெளிவர வேண்டுமென்று வாழ்த்துகிறோம். எல்லாச் செல்வங்களும் பெற்றுப் பல்லாண்டு பல்லாண்டாக நீடுழி வாழ வேணுமாய் வாழ்த்துகிறோம். இந்நூலை வெளியிடும் கீதாபவன நிர்வாகத்தாருக்கும் நூல் வெளியீட்டுக்குப் பொருட் செல்வத்தை அளித்த அன்பர்களுக்கும் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா திருவருள் கிடைக்க வேண்டுமென்று ஸ்ரீ கிருஷ்ணனை பிரார்த்தித்துக் கொள்கிறோம்.

ஸ்ரீரங்க நாராயண ஜீயர் ஸ்வாமி மடம்,
128, வடக்கு உத்தர வீதி,
ஸ்ரீரங்கம் – 620 006.
போன் : 432810

16.4.1998



அணிந்துரை

முனைவர். பு.மு. சாந்தமூர்த்தி
துணை முதல்வர், தமிழ்த் துறைத் தலைவர்,
சௌராட்டிரக் கல்லூரி, மதுரை.

இந்திய மண்ணில் இந்து சமய உணர்வுகளின் கருத்துப் பேழையாகக் கண்ணன் மொழிந்த கீதை கருதப்படுகிறது. சோர்வும் தளர்ச்சியும் அடைந்து பின்னடைவுடன் தயங்கிய ஆன்மா, ஆறுதலும் உறுதியும் கொண்டு எழுச்சியுடன் செயல்படத் தக்க வழிகளை அறிவுறுத்துவதாகக் கருதப்படும் கீதை மொழிகளைப் படித்தால் இன்பம்; உணர்ந்தால் பேரின்பம்; செயலாக்கினால் பெரும் பேரின்பம்.

" வேதங்கள் அறைகின்ற உலகெங்கும் விரிந்தநின்
பாதங்கள் இவைஎன்னின் படிவங்கள் எப்படியோ? " — என்று

கம்பராமாயணம் வழிபாட்டு மொழிகளாகப் பரம்பொருளைக் கூறும். எங்கும் விரிந்து பரவி இயல்பாக அமைந்த பரம் பொருள், கீதைக் கண்ணனாக நின்று கூறிய! மொழிகளின் தமிழாக்கமே அமரர் திரு. தொ.ரா. பத்மநாபய்யர் அவர்கள் இயற்றிய "கீதை வெண்பா" பயில்பவரின் நெஞ்சார்ந்த ஈடுபாடு இருந்தாலன்றி எந்த ஒரு நூலையும் அய்யம்திரிபற உணர முடியாது. நூலின் ஆன்மாவை உணர்ந்தால்தான் அதன் நுட்பத்தை வெளிப்படுத்த முடியும். நுனிப்புல் மேய்கின்ற கல்வி எப்பயனையும் தாராது. கீதைக்குள் தம்மைத் தந்து தம்மில் கீதையையே கண்டறிந்தவராகவே திரு. தொ.ரா. பத்மநாபய்யர் திகழ்ந்திருக்கிறார் என்பது முற்றும் உண்மை. *"சௌராஷ்டிர வியாசர்"* எனக் கருதப்பட்ட *கீதா அஷ்டாவதானி* பத்மநாபரின் உள்ளுணர்வு கீதையாகவே இருந்திருக்கிறது என்பதையும் அவருடைய தமிழ்க்கீதை உணர்த்துகிறது.

தமிழ்ப் பாவகைகளுள் வெண்பாவே முதலிடம் பெறுவது. செறிவான — தனித்தன்மையான இலக்கணத்துடன் அமைவதே வெண்பாப் பாடல். இலக்கணக் கட்டுப்பாடுகளுடன் அமைந்துள்ள வெண்பாப் பாவகையைத் திரு. தொ.ரா. பத்மநாபர் தேர்ந்தெடுத்திருப்பதும் அவருடைய தமிழ்ப்புலமையைக் காட்டுவதோடு பாவியற்றும் தமிழாற்றலையும் காட்டுகிறது. ஓசை நயத்தாலும் இலக்கணச் செறிவாலும் சிறப்புறும் வெண்பா யாப்பில் திரு. பத்மநாபர் பாடியுள்ள கீதை வெண்பாக்களைப் படிக்கும் போது " வெண்பாப்புலி " என்ற சிறப்புப் பட்டம் அவருக்கு வழங்கப்பட்டதற்குப் பாராட்டுக் கூற வேண்டும் என்றே உள்ளம் மகிழ்கிறது.

கன்மத்த கன்மமதைத் தான்பார்த்த கன்மத்தில்

கன்மமதைப் பார்த்திடக் கற்றவனே -நன்மதியோன்

மாந்தரில் யுக்தனவன் மற்றுமவன் கன்மமெலாம்

ஏந்தியே செய்தவனா மிங்கு.

(4:18) என்னும் வெண்பாவில்

வெண்பாவிற்குரிய சிறப்பான ஓசையான ஏந்திசைச் செப்பல் அழகாகவே அமைந்திருக்கிறது.

“கன்மபலன் வேண்டானாய்க் காரியமே செய்திடுமோர்

நன்மனத்தன் சந்யாசி யோகியாம் - மன்னவனே

ஓர்கரும மின்றியக்னி ஹோத்ரமில் லாதிருப்போன்

ஓர்கநிலை ஈதடையா னென்று”

(6:1) என்னும் வெண்பாவில்

ஏந்திசைச் செப்பலோசை இனிமையாகவே கேட்கிறது.

மொழியாக்கத்தின் போது தம் உள்ளப்பக்குவத்தின் அடிப்படையில் பாடல்களை எழுதும் போது மொழி பெயர்ப்பாளர்களின் மொழியும் மாறுபடுவது இயல்பே. இந்தக் கண்ணோட்டத்துடன் நான்காம் அத்தியாயத்தின் ஏழாவது, எட்டாவது பாடல்களின் இரு மொழி பெயர்ப்புகளைக் கண்டால் மேற்கூறிய உண்மை புலனாகும். வாதிகேசரி அழகிய மணவாளச் சீயர் பாடிய வெண்பாக்களையும் பத்மநாபர் பாடிய வெண்பாக்களையும் படித்தால் சொல்வதில் உள்ள பக்குவ மனநிலையை உணரலாம்.

“அறந்தளரு மக்கால மெக்கால மாங்கே

மறங்கிளர்ந்து பாவம் வளரும் - பிறங்கரசர்

வெந்நைத் தருவிக்கும் வில்விசயா அக்காலத்

தென்னைப் பிறப்பிப்பன் யான்”

– என்பது ஏழாவது பாடலின் அழகிய மணவாளச் சீயர் தமிழாக்கம்.

“என்று தருமங்கள் குன்றி அதர்மங்கள்

நின்று தலையெடுக்க நேருமோ - அன்றுயான்

என்னைச் சிருட்டித்துக் கொள்ளுவ னீதுணர்வாய்

முன்னியே பாரத! நீ முற்று ”

– என்பது பத்மநாபரின் தமிழாக்கம்

"நல்லார்க டம்மை நலம்புரிந்து காத்தற்கும்
பொல்லாரைப் பொன்றுநெறி போக்கற்குந் - சொல்லாரு
முந்தை யறநாட்ட முய்த்தற்கு நான்பிறப்ப
னிந்தவுகந் தோறும் இசைந்து"

– என்பது முன்னவரின் தமிழாக்கம்

"சிட்டரைக் காத்திடவும் துட்டரை மாய்த்திடவும்
நட்டமாந் தன்மநிலை நாட்டிடவும் - இட்டமாய்
ஒவ்வோர் யுகந்தனிலும் உற்றிங் கவதரிப்பேன்
இவ்வாறே என்றும்போல் இன்று "

– என்பது பின்னவரின் தமிழாக்கம்

கீதையின் தமிழாக்கத்தின் இவ்விரு அமைப்புகளும் மொழி பெயர்ப்பாளர் தம் உளநிலைக் கேற்றவாறே அமைந்தன எனலாம்.

" சற்றுப் பிசகெனினும் தன்கடமை தான்மேலாம்
குற்றம் பிறர்கடமை கோருவது - மற்றும்
பிறர்கடமை செவ்வையாய்ச் செய்திடினும் பீழை
மறலிபய மற்றதுவும் செய்யும் - அறவழியாம்
தன்கடமை யுற்றதனிற் சாவினும் மேலாகும்
மன்கடமை தன்னில் மகிழ்"

– என்னும்வெண்பாத் தொடர்கள்

கருத்துகளை எளிமையாகத் தரும் பாங்கினைப் படித்தின்புறலாம். மேலும், அறன்வலியுறுத்தல், போன்ற குறள் மொழிகளுடன் தொடர்புள்ளனவாகவும் அமையக் காணலாம்.

"எல்லோரு ளத்தும் இருந்துறையும் ஆன்மா யான்"

எனத் தொடங்கும் வெண்பாவிலிருந்து

"எல்லையிலா என்மகிமை இங்கெடுத்து உன்றனுக்குச்
சொல்லாலோர் உத்தேசம் சொல்லியுளேன்"

என்ற அடிகளுடன் உள்ள வெண்பா முடிய உள்ள பாடல்கள், கீதைக் கண்ணனே எல்லாம் என்பதை எளிய சொற்களால் எல்லாரும் புரிந்து கொள்ளும் வகையில் அமைந்துள்ளன. இரண்டாம் அத்தியாயத்தில்

" ஆமை யுறுப்பெல்லாந் தானடக்கிக் கொண்டாற்போல்

தீமை தரும்விடயச் சேர்க்கையில் - ஏமம் செய்

திந்திரியந் தம்மை இழுத்துமே காப்பவனும்

அந்தத் திடப்பரக்ஞ னாம் "

(2.58) என்றுள்ள வெண்பாவைப் படிக்கும் போது

"ஒருமையுள் ஆமைபோல் அய்ந்தடக்க லாற்றின்

எழுமையும் ஏமாப் புடைத்து"

என்னும் குறள்மொழி நினைவில் ஒலிக்கிறது.

இதனைப் போலவே ஏராளமான குறள்பாடல்கள் கீதைமொழிகளுக்குப் பொருந்தும் வண்ணம் சிறப்புறவே கண்டின்புறலாம்.

அமரர் தொ. ரா. பத்மநாபரின் ஸ்ரீமத் பகவத் கீதை வெண்பா நூலைப் பதிப்பிக்கும் முயற்சியில் பெரிதும் ஈடுபாடு கொண்டு உழைத்த முனைவர் தி.ரா. தாமோதரன் அவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது. இப் பாராட்டிற்குக் காரணமும் உண்டு. வெண்பாப் புலியின் கீதைத் தமிழாக்கத்தைப் பதிப்பிக்கும் முயற்சியில் பொருத்தமான இடங்களில் எல்லாம் நடனகோபால நாயகியின் பாடல் வரிகளையும் சேர்த்துப் பதிப்பித்திருக்கும் பாங்கும் பாராட்டுதற் குரியதே.

" பண்டமிழில் பத்மநாபர் பாடிவைத்த கீதைமொழி

வெண்பாக்கள் நெஞ்சிற்குள் வித்தாகிப் - பண்பாடும்!

ஆர்வத்தால் வந்தமொழி அத்தனையும் வாழ்த்தாகிச்

சேர்ந்தளிக்கும் எனறென்றும் சீர் "

மதுரை – 4. புமு. சாந்தமூர்த்தி

24.3.98

அறிமுகவுரை

டாக்டர். தா.கு. சுப்பிரமணியன்
எம்.ஏ.,பி.எச்.டி.,
தமிழ்ப் பேராசிரியர்,
மதுரை. கல்லூரி,

இவ்வுலகில் கிடைத்தற்கரியது மானிடப்பிறவி. இப்பிறவியைப் பயன்படுத்தி மற்றீண்டு வாராதிருக்க வழிவகை செய்தலே நலம். எனவே இப்பிறப்பில் இரைபணியோடு இறைப் பணியையும் செய்து உய்தலே நலம். இறைப்பணியைச் செய்து உலகமக்களை நல்வழிப்படுத்தத் தகுதியான களங்கள் தேவை. தகுதிமிக்க களங்கள் மாமதுரையில் பல அமைந்துள்ளன. அவைகளில் முதன்மை பெற்றதும் ஏற்றம் மிக்கதுமான ஒரு திருத்தலமாக விளங்குவது "*கீதா பவனம்*" ஆகும். கீதையைத் தவிர எதையும் ஓதாது அதையே தமது இலட்சியமாகக் கொண்டொழுகும் மகளிர் பலரை உருவாக்கியது; உருவாக்குகிறது; உருவாக்குவது இக் கீதா பவனம். இந்த ஆன்மிக நிறுவனம் **9.12.61** அன்று கண்ணபிரானின் திருவருளால் தொடங்கப்பட்டது.

இதன் நிறுவனர் "*கீதா அஷ்டாவதானி*" தொ.ரா பத்மநாபய்யர் அவர்கள் தேசத்தையும் தெய்வீகத்தையும் இரு கண்களாகக் கொண்டொழுகியவர். மகாத்மா காந்தி அடிகளால் போற்றப்பட்ட மகான். பகவத் கீதையைக் கற்பது கற்பிப்பது ஆகியவைகளையே தமது முழு மூச்சாகக் கொண்டிருந்தவர். தியாகம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்த மகான் பத்மநாபய்யரின் அரிய இலக்கியப்பணி – அல்ல – இறைப்பணிக்குத் தக்க எடுத்துக் காட்டாகத் திகழ்வது. "*கீதை வெண்பா*" என்னும் இச்சீரிய நூலாகும். இவர் அருளிச் செய்துள்ள இருபதுக்கும் மேலான நூல்களில் மணிமகுடமாய்த் திகழ்வது இந்நூல். படிப்போரனைவரையும் பரவசப்படுத்தும் பாங்குடையதாய்த் திகழ்வது இவ்வரிய நூல். *ஸ்ரீ பத்மநாபய்யரின் நூற்றாண்டு விழா வினையொட்டி இந்நூல் வெளியிடப்படுவது பாராட்டுவதற்குரியதாகும்.*

இந்நூல் முழுவதும் கவிதை வடிவில் அமைந்துள்ளது ; கவிதையும் வெண்பாவாக அமைந்துள்ளது. தமிழில் வெண்பாப் பாடுவதில் வல்லவர் புகழேந்தி என்னும் புலவராவார். "*வெண்பாவிற் புகழேந்தி*" என்று அவரைச் சிறப்பிப்பர். இவ்வாறு புகழேந்தியைப் புகழ்ந்தவர் வெண்பாப்புலி பத்மநாபய்யரின் கீதை வெண்பாவைப் படித்திருந்தால் இவரையும் அவ்வாறே போற்றி மகிழ்ந்திருப்பர்.

"சௌராஷ்டிர வியாசர்" ஸ்ரீ பத்மநாபய்யர் அவர்களை பகவத் கீதை ஒவ்வொரு சுலோகத்தையும் தம் ஆழ்மனத்தில் உள்வாங்கி அதை ஒவ்வொரு வெண்பாவாகத் தமிழில் அருளிச் செய்துள்ளார். வெண்பா யாப்பு இவருக்கு இறையருளால் இயல்பாகவே கைகூடிற்று. இந் நூலைப் பயிலும் பொழுது மொழி பெயர்க்கப்பட்டது என்னும் ஐயம் தோன்றாதவாறு இந்நூல் அமைந்திருப்பது வியப்புக்குரியது. செப்பலோசை பிறழாதவாறு வெண்பாக்கள் அமைந்திருப்பது பாராட்டிற்குரியது.

முக்குணத்தின் மாயையினால் மூடியதா மென்சொரூபம்
தக்கவர்க் கல்லால் தரணியிடை - மிக்கதொரு
மோகத்தே சிக்கியுள்ள மூடர்கள் பார்த்திடவே
ஆகும் பிறப்பிலவ்ய யம் (7.13)

இது நேரிசை வெண்பாவாகப் பரிணமித்து இருக்கிறது. பெரும்பாலானவைகள் இந்நூல் நேரிசை வெண்பாவாகவே உள்ளன. மிகுதியான காய்ச் சீர்களைப் பெற்று ஏந்திசைச் செப்பலோசை உடையதாய் அமைந்துள்ளன.

கர்மயோகம், ஞானயோகம், பக்தியோகம், பிரபத்தியோகம் என்னும் நான்கையும் விளக்கும் இந்நூலில் இறுதியாகக் கண்ணன் சரணாகதி என்னும் பிரபத்தி மார்கத்தை அருளிச் செய்கிறான். "*சர்வ தர்மான் பரித்யஜ்ய மாம் ஏகம் சரணம் வ்ரஜ அஹம் த்வா சர்வ பாபேப்யோ மோக்ஷயிஸ்யாமி மாசுச*" இச்சுலோகத்திற்கு சரமச்லோகம் என்று பெயர். இந்த சுலோகம் மட்டுமே பகவத் கீதையென்றும் மற்றவையெல்லாம் இதை விளங்கிக் கொள்ளச் சொல்லப்பட்ட முன்னுரையாகுமென்றும் கூறுவர். இதை எளிய தமிழில் வெண்பாவாகத் தந்துள்ள பாங்கைப் பாராட்டாதிருக்க முடியுமா!

எல்லாத் தரும மரிந்தென் சரணடைவாய்
பொல்லாத பாவமும் போக்கிடுவேன் - நல்லாய்
விடுவிப்பேன் உன்னை விசனமேன்? உன்னைத்
தடுத்தாள நானிருக்கும் போது. (18.66)

சரணகதியை வலியுறுத்தும் இப்புனித நூலை தமிழ் மொழியில் யாத்துள்ள பத்பநாபய்யரின் புகழ் ஓங்குக. தமிழ் அன்னையின் மகுடத்தில் சூட்டிய மணிகளுள் இதுவும் ஒன்றாகவமைந்து ஒளிரும் என்பதில் ஐயமில்லை. தமிழ் இலக்கிய வரலாற்றில் இந்நூல் ஒரு மைல்கல்லாக அமையும் எனில் மிகையாகாது. இந்நூலை ஓதுவோரனைவருக்கும் கண்ணன் எம்பெருமானின் திருவருள் காட்டுவதாக.

" செத்துலோ ஏ சேஸ்தே நிஜம்மெனி ரெத்துமு தொப்பொ அர்ஜீனுகு
பக்திகார் மொஜொ முக்தி தெவுஸ்மெனி செத்துகொன் ஸங்கிரேஸ் கொங்கிகு "

என்று நாயகி சுவாமிகள் அருளிச் செய்கிறார். "முடிவில் நான் இருப்பது உண்மை ; நீ என்னிடத்துப் பக்தி செலுத்துவாய் ; உனக்கு நான் முக்தியைத் தருகிறேன் ; இது சத்தியம்" என்று தேர்த்தட்டிலிருந்து கண்ணன் சொன்ன இந்த மெய்ம்மைப் பெருவார்த்தைகளை *கீதா அஷ்டாவதானி* தொ. ரா. பத்மநாபய்யர் தமிழில் அற்புதமான வெண்பாக்களால் யாத்துள்ளார். பத்மநாபய்யர் புகழ் ஓங்க இந்நூலை நாம் ஓதி உணர்வோம். "சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து" சொல்வோம்; கண்ணன் கழலிணை நண்ணுவோம் ; கவலையற்ற வாழ்க்கை வாழ்வோம்.

அன்புடன்

தா.கு. சுப்பிரமணியன்

பதிப்புரை

– தி.ரா. தாமோதரன்.

" வன்பற்றறுக்கு மருந்தென்று மாயவன் றானுரைத்த
இன்பக்கட லமுதாமென நின்றவிக் கீதைதன்னை
அன்பர்க்குரைப்பவர் கேட்பவர் ஆதரித்தோதுமவர்
துன்பக்கடலில் துளங்குகை நீங்கித் துலங்குவரே " எனக் கீதார்த்த ஸங்க்ரஹத்தில் வேதாந்த தேசிகர் அருளிச் செய்தார். பகவத் கீதையை உரைப்பதும், கேட்பதும், அதன்பிரச்சாரத்தை ஆதரித்துக் கூறுவதும் ஆகிய எல்லாம், நம்பிறவிக் கடலின் துன்பத்தை நீக்கவல்லதாம்.

இவ்வரிய செயலை தம் வாழ்நாளெல்லாம் செய்து வந்த தொப்பே. ரா. பத்மநாபய்யர் எவ்வளவு பேருபெற்றவர்! கீதையைத் தானே ஓதியதன்றி, தாய்மார்கள் பலருக்கும் கற்பித்தும் பொருள் கூறியும் வந்தார். தம்தாய் மொழியாம் ஸௌந்தர்ய ஸௌராஷ்ட்ரத்திலும் மொழிபெயர்த்தார். அதையும் தாய்மார்கள் இன்றும் மனனம் செய்து ஓதி வருகின்றனர்.

தமிழ் கூறும் நல்லுலகமும் இதன் அருமை பெருமைகளை உணர வேண்டுமென்று விரும்பி, தமிழ் மொழியில் பாவடிவில், அதுவும் மிகக்

கடினமான வெண்பா வடிவில் மொழி பெயர்த்திருப்பது பாராட்டிற் குரியதாகும். மொழி பெயர்ப்பில் முழுவெற்றியும் கண்டுள்ளார்.

பிற மொழிபெயர்ப்புகள் :

காலந்தோறும் பகவத்கீதை, தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு உள்ளது. உலக மொழிகள் அனைத்திலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ள இந்நூல் தமிழில் பல புலவர்களால் பல வகையில் மொழி பெயர்க்கபட்டிருப்பது, தமிழ் மக்களிடையே பகவத்கீதைக்கு இருக்கும் மரியாதையும், பக்தியும் வரவேற்பின் அளவும் என்ன என்பதைப் புலப்படுகிறது. 13ம் நூற்றாண்டில் ஆளாவந்தார் வடமொழியில் எழுதிய *"கீதார்த்த ஸங்கிரகம்"* எனும் கீதைச் சுருக்கத்தை வேதாந்த தேசிகர் தமிழ் மொழியில் மொழி பெயர்த்தார். இது காலத்தால் முந்திய மொழி பெயர்ப்பாகும். அடுத்து 15ம் நூற்றாண்டில் அழகிய மணவாள சீயர் என்னும் வைணவப் பெரியவர் தமிழில் *வெண்பாப்பாக்களாக* மொழி பெயர்த்துள்ளார். இவை வைணவ சித்தாந்தத்தையும் வலியுறுத்துவனவாக அமைந்தன.

கீதை உரைகள் எவ்வாறு அத்துவைத, விசிஷ்டாத்துவைத, துவைத மதங்களை நிலைநிறுத்த எழுதப்பட்டனவோ, அவ்வாறே சில மொழி பெயர்ப்புகளும் அமைந்தன. *ஈசுவரகீதை* எனும் சிவபிரகாசம், *பரமகீதை* எனும் சொரூபாநந்த சித்தி ஆகியனவும் கீதையின் மொழிபெயர்ப்புகளே.

அண்மைக்காலத்தில் பட்டனார் என்பவர் *பகவத்கீதை* எனும் பரமார்த்த தரிசனம் என்ற தலைப்பில் பகவத் கீதையைத் தமிழில் பாவடிவில் மொழி பெயர்ந்துள்ளார். முத்து ஐயர் என்பவர் *பகவத் கீதை வெண்பா* என்ற தலைப்பில் வெண்பாக்களாக, கீதையைத் தமிழில் மொழி பெயர்ந்துள்ளார். பாரதியாரும் வசனக் கவிதையாகக் கீதை மொழி பெயர்ப்பை நமக்கு வழங்கியுள்ளார்.

இவர்களின் அடியொட்டி, இவ்வாண்டு **(1998–99)** நூற்றாண்டு விழாகாணும் நாயகன் கீதாஷ்டாவதானி வெண்பாப்புலி T.R. பத்மநாபய்யரும் "*கீதை வெண்பா*" என்ற தலைப்பில் ஓர் அரிய இனிய, எளிய தமிழ் மொழிபெயர்ப்பை, வெண்பாப் பாவகையில் நமக்கு அளித்துள்ளார்.

மூலம் :

இந்நூல் தற்சமயம் பதிப்பிக்கப்பட்டு, நூலாக வெளிவருகின்றது. சுதந்திரப் போராட்ட வீரரான திரு.TRP அவர்கள் உப்புச் சத்தியாகிரகத்தின் போது சிறைவாசம் பெற்றார். அப்போது

சிறையில் மொழிபெயர்க்கப்பட்டது தான் இந்நூலாகும். கண்ணன் சிறையில் பிறந்தது போல, பத்மநாபய்யரின் கீதை வெண்பாவும் சிறையில் தம் பிரசவத்தைப் பெற்றது. அன்று அவர்தம் கைப்பட எழுதிய நோட்டு நமக்குக் கிடைக்கப் பெறவில்லை. நல்ல காலம். அவரது சீடர்களில் ஒருவரான திருமதி ராணி. வசந்தா ஜெயராமன் அவர்கள்,திருமதி OLVR தனலட்சுமி & பாக்யலட்சுமி அம்மையார் அவர்களின் தூண்டுதலால் எழுதி வைத்த நோட்டு கிடைக்கப் பெற்றோம். அதை அடிப்படையாகக் கொண்டுதான் இந்நூல் பதிப்பிக்கப்பட்டுள்ளது. அவரது தொலை நோக்குப் பார்வையும், எதையும் எழுதிவைப்பது வரலாற்றுக்குதவும் என்ற அறிவுத்திறனும், பணியும் பாராட்டுக்குரியன. இந்நூலைப் படிக்கின்ற அனைவரும் அவருக்கு நன்றிக் கடன் பட்டுள்ளோம்.

இவரது கையெழுத்துப் பிரதியை மூலமாகக் கொண்டுதான் இக் கீதை வெண்பா பதிப்பிக்கப்பட்டுள்ளது. இவர் தம் நினைவாற்றலால், தாம் மனனம் செய்ததையும் வகுப்பில் பாடம் கேட்டதையும் வைத்து, தனதுக் கையெழுத்துப் பிரதியைத் தயார் செய்துள்ளார். அவ்வாறு எழுதும் காலத்தே, வெண்பா இலக்கணத்தை கருத்தில் நிறுத்தாது, பாக்களை நான்கு வரிகளாக மட்டுமே இவரால் எழுதமுடிந்துள்ளது. அதனால் பல இடங்களில் சீர், தளை தடை பட்டுப் போயிற்று. எம்மால் முடிந்தவரை அவைகளைச் சீர் செய்து பதிப்பித்துள்ளோம். சில இடங்களில் புதிதாகவே வெண்பாக்களையும் எழுதி இணைத்துள்ளோம். தொடர் அறுந்து விடச் கூடாததென்ற கருத்தில் இவ்வாறு எம்மால் எழுதப்பட்டதே யொழிய வேறென்றுமில்லை.

மொழிபெயர்ப்பு :

கீதைவெண்பாவின் மொழிபெயர்ப்பில் பல இடங்களில் தவிர்க்க இயலாத சமஸ்கிருதச் சொற்களை, அப்படியே பயன்படுத்தியுள்ளார். அதனால் வெண்பாவின் அழகு கெடவில்லை. தமிழ் மட்டுமே அறிந்துள்ள வாசகர்கள் இந்நூலைப் படிக்கின்ற போது, இடர்படக் கூடாதென்ற காரணத்திற்காக ஆங்காங்கே சமஸ்கிருதச் சொற்களுக்கு விளக்கமும், பொருளும் வழங்கப்பட்டுள்ளன.

கருத்துப்பிழையேது மின்றி, மிகச் சிறப்பாக கீதை வெண்பா மொழி பெயர்க்கப்பட்டுள்ளது என்பதில் ஐயமில்லை. மேலும் சில

இடங்களில், சமஸ்கிருத மூலத்தில் காணபெறாத நல்ல கருத்துக்களும், உவமைகளும் பயன் படுத்தப்பட்டுள்ளன. அவைகளில் சில எடுத்துக் காட்டுகள்.

மூலத்தில் கூறப்படாத உவமைகள்

"நன்செயிடை வித்திடலே போல்" (2.10), "ஏட்டுச் சுரைபோ லவே" (2.29)

"வான் மழையும் நற்றுணையாய் நின்றுயர நாற்றை வளர்த்துப்பின் முற்றியபின் சத்துருவாம் போல்" (6.6)

இவைகளைப் போல பல இடங்களில், கீதையின் பொருள் வாசகர்களுக்கு எளிதில் புரியும் படியாக உவமைகளை அமைத்திருக்கிறார்.

இந்நூலைப் பதிப்பிக்க வேண்டும் என்று எண்ணிய போது அதற்கு உறுதுணையாகவும் தூண்டுகோலாகவும், சகோதரி திருமதி கீதா பாரதி அவர்களும், நண்பர் தா.கு. சுப்பிரமணியன் திரு. C.P. சத்தியமூர்த்தி அவர்களும் இருந்தார்கள். டாக்டர். பு.மு. சாந்தமூர்த்தி இந்நூலுக்கு நல்லதொரு அணிந்துரையும் வழங்கியுள்ளார்கள். நண்பர் தா.கு. சுப்பிரமணியன் அவர்கள் இந்நூலுக்கு ஓர் அறிமுகவுரை வழங்கியுள்ளார். கணிப்பொறியில் அச்சிட்ட Citi-Link Computers, நிறுவன உரிமையாளர்கள் திருவாளர்கள் T.S.சிவபிரகாஷ் D.T.T. S.சதீஸ்குமார்D.T.T. G.கண்ணன்D.T.T. ஆகியோர் முகமலர்ச்சியோடு பணியாற்றியதை இங்கு குறிப்பிடாமல் இருக்க முடியாது. கணிப்பொறி தட்டச்சுப் பணியினை இனிதே நிறைவேற்றிக் கொடுத்தவர் அருமைச் சகோதரி செல்வி லெட்சுமிபிரியா அவர்கள். அவ்வப்போது, அச்சுப்பணியினை மேற்பார்வையிட்டும், அவைகளை உடனுக்குடன் என்கையில் கிடைக்குமாறும், பல வழிகளில் உதவியாக இருந்த "ராணி சாரீஸ்" திரு. R.S. சாந்தாராம், அவரது குமாரர் திரு. R.S. சுரேஷ்D.T.T. ஆகியோரையும் நாம் மறக்கமுடியாது. இந்நூலைப் படித்து பதிப்பிக்கும் பொழுது உறுதுணையாய் இருந்த என் வாழ்க்கைத் துணைவி திருமதி. நிர்மலா எம்.ஏ.,எம்.பில்., அவர்களையும் நான் இப்போது நினைவில் நிறுத்திப் பார்க்கிறேன். ஒரு தனிமனித முயற்சியால் எந்த நூலும் வெளிவர முடியாது. மேற்கூறிய பல அன்பு நெஞ்சங்களின் ஆதரவால் தான் இந்நூல் மிகச் சிறப்பாக அமைந்துள்ளது. அதற்காக எனது இதயம் நிறைந்த நன்றியினை அனைவருக்கும் உரிமை ஆக்குகிறேன். என்னையும் ஒரு பொருட்டாகக் கருதி இவ்வரிய முயற்சிக்கு ஆட்படுத்திய கீதா பவனத்தாருக்கும் எனது நன்றி!

நன்றியுரை

கீதாபவன ஸ்தாபகரும், ஸௌராஷ்ட்ர வியாஸர் கீதா அஷ்டவதானி எனப் பல சிறப்புகளை பெற்றவருமான ஸ்ரீ (தொப்பே) T.R. பத்மநாபய்யர் அவர்களின் வாழ்க்கை வரலாறு பற்றிய நூல் வெளியிடவேண்டும் என்ற எண்ணம் நெடுங்காலமாகவே அவருடைய சிஷ்யர்களிடமும் பக்தர்களிடமும் இருந்து வந்தது. அத்தகைய சந்தர்ப்பம் இப்பொழுது கை கூடியது பற்றி பெருமிதம் கொள்கிறோம். அவருடைய வாழ்க்கையில் ஏற்பட்ட பல்வேறு சம்பவங்கள், அனுபவங்கள் பற்றி அவருடன் நெருங்கிப் பழகிய நண்பர்களிடமும், மற்றும் அவருடைய குடும்பத்தினரிடமும், அரசியல் வாழ்வில் சிறைச்சாலையில் அவருடன் இருந்தவர்களிடமும் கேட்டுத் தெரிந்து கொண்டு பல்வேறு சம்பவங்களைப் பல்வேறு கோணங்களில் வெளியிட்டிருக்கிறோம்.

தவிர ஆன்மீக வாழ்வில் அவர் வகித்தபங்கே மிக சிரோஷ்டமாகும். வாழ்நாள் முழுவதும் கீதைக்கென்றே, பகவத் கீதையை மக்களிடையே பரப்புவது ஒன்றே தமது லட்சியமாய்க் கொண்டவராய்த் திகழ்ந்து அந்த ஆர்வத்தில் கீதையை ஸௌராஷ்ட்ர மொழியில் இயற்றியும், தமிழில் வெண்பாக்களாகவும் பாடியுள்ளார். தமிழில் இயற்றிய கீதா வெண்பா எனும் இந்நூலை வெளியீடு செய்வதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

கீதா வெண்பாவில் மூலத்தில் ஸம்ஸ்கிருத மொழியில் உள்ள பகவத்கீதையை சிறிதும் மாற்றமின்றி 18 அத்தியாயத்தில் உள்ள 700 சுலோகங்களையும் சற்றும் பிறழாமல் மொழி பெயர்த்துள்ளார். தமிழில் வெளிவரும் இந்த *"கீதா வெண்பா"* நூல் தமிழ் அன்னைக்குச் சூட்டப்படும் மாலையாக அமையும் என்பதை அறிஞர்கள் நிச்சயம் அறிவார்கள். தமிழ் இலக்கியத்திற்கும் அதனுடைய வளர்ச்சிக்கும் ஸ்ரீ T.R. பத்மநாபய்யர் ஆற்றிய பங்கு இந்நூல் வெளியீட்டால் தமிழ் கூறும் நல்லுலகம் நிச்சயமாக அறிந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்படும் என நம்புகிறோம்.

இந்நூலை வெளியிட வாழ்க்கை வரலாறு பற்றிப் பல குறிப்புகளைச் சேகரித்து எழுதிக் கொடுத்தும்,அவற்றை தொகுத்துச் சரிபார்த்துக் கொடுத்தவர்களுக்கும் எனது நன்றி. முக்கியமாக சகோதரி ஸ்ரீமதி (ராணி) R.J. வசந்தா, ஸ்ரீமதி B.N. சரஸ்வதி நரசிம்மன் M.A.,M.Ed.,ஸ்ரீமதி S.P. கீதாபாரதி M.A., அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து கொள்கிறோம்.

கீதாவெண்பா கையெழுத்துப் பிரதியைச் சரிபார்த்துப் மூலகருத்துகளுடன் அவை ஓட்டிவரும் பல குறிப்புகளை ஆங்காங்கே சுட்டிக்காட்டி, அதனை அந்தந்தப் பக்கத்திலேயே எழுதியும் இன்னும் பலவகையிலும் எங்களுக்கு உற்றதுணையாக இருந்த ஸௌராஷ்ட்ரக் கல்லூரி சம்ஸ்கிருதப் பேராசிரியர் டாக்டர். T.R. தாமோதரன் அவர்களுக்கும் எங்கள் இதயப் பூர்வமான நன்றியைத் தெரிவித்து கொள்கிறோம். இந்த நூல் வெளியிட ஸ்ரீ T.R.தாமோதரன் ஆற்றிய பங்கு சொல்லில் அடங்காது. அவருக்கும் நூலை வெளியிட உதவிய நன்கொடையாளர்களுக்கும் பிரசுரகுழுவினருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்நூலில் இடம்பெற்றுள்ள வெண்பாக்களின் சீர், தளை, முதலியவைகளைச் சரிபார்த்து உதவிய ஸௌராஷ்ட்ரக் கல்லூரித் துணை முதல்வர் தமிழ்துறைப் பேராசிரியர் டாக்டர். பு.மு. சாந்தமூர்த்தி அவர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

N.V. கிருஷ்ணமூர்த்தி
காரியதரிசி
கீதாபவனம், மதுரை.

கீதா வெண்பா நூல் பிரசுரக்குழு

1) ஸ்ரீ N.M.N. சந்திரசேகரன்

2) ஸ்ரீமதி. S.P. கீதாபாரதி

3) ஸ்ரீ N.V. கிருஷ்ணமூர்த்தி

4) ஸ்ரீ K.K.சுப்ரமணியன்

5) டாக்டர். T.R. தாமோதரன்

கீதா வெண்பா புஸ்தக வெளியீடு நன்கொடையாளர்கள்

1) கீதா ப்ரபோதரத்னா O.L.V.R. தனலெட்சுமி அம்மாள் ஞாபகர்த்தமாக அல்லு A.N. சுப்ரமணியன் & A.S. மீனா	5,000
2) ஸ்ரீ P.A.B. குப்புசாமிஐயர்-சேஷம்மாள் ஞாபகர்த்தமாக P.A.B.K. பாலசுப்ரமணியன் & திலோத்தமா	5,000
3) ஸ்ரீமதி. N.V. தனலெட்சுமி	2,000
4) முகுந்து M.V. துரைசாமி & தனலெட்சுமி அம்மாள்	2,000

5) ஸ்ரீமதி. S.P. கீதாபாரதி M.A.,	1,006
6) ஸ்ரீ N.M.N.சந்திரசேகரன்	1,000
7) கீதா ப்ரபோதரத்னா ஸ்ரீமதி அன்னா கு. பாக்யலெட்சுமி அம்மாள்	1,000
8) ராணி சாரீஸ் R.S. சாந்தாராம் & R.S. சூரியகாந்தம்	1,000
9) ஆத்மஞானி ஸ்ரீ. K.L.N. ஜானகிராமன் அவர்கள் ஞாபகார்த்தமாக A.R.காய்திரி	2,016
10) (தொப்பே) T.K. ஆத்மராம் & T.K. பாரதா	1,006
11. குமரன் சில்க் தூர்வாஸ் D.G. கிருஷ்ணன்	1,006

12. மற்றும் ரூ50 முதல் 500 வரை நன்கொடை வழங்கிய அபிமானிகள்.

அனைவருக்கும் கீதா பவன நிர்வாகிகள் தமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறார்கள்

கீ³தா கீ³துன்

மழை வேண்டி வருணன் பிரார்த்தனை

பூபாளம் ராகம் ஆதி தாளம்

1. மழையின்றி மாநிலம் வறண்டது வருணா !
மாந்தர் படுத்துயர்க் களவிலை யந்தோ
பிழையென்ன செய்யினும் பெருமனதுடனே
பேணுவ துன்கடன் பேரருட் கடலே !
உழவர்கள் உழுதனர்; பயிரெல்லாம் நட்டனர்;
உன்னையே நோக்குவார்; உண்மையா மிதுகாண்!
விழிதுயில் கின்றனை இன்னும் நீமன்னா !
வியப்பிதுவே பள்ளி யெழுந்தருள்வாயே !

2. தென்திசை வறண்டது ; வடக்கில் பெருவெள்ளச்
சேத நிகழ்ந்திடச் செய்திடல்தகுமோ ?
கன்றினை தாய்போல காத்திடும் கடனைக்
கடந்து நின்றாலுன்றன் கருணைக்கு மழகோ
நன்று முன்னால் வரும் தீமையு முன்னால்
நாட்டினை உய்விக்கச் செய்வது நீயே!
பொன்றுவீழா முன்னம் புறப்பட்டு வருவாய்
புகழுனக்கே பள்ளி யெழுந்தருள்வாயே !

3. சித்திரை மதியெனத் தினகரன் காய்வான்
சிறுகுளம் கூடங்கள் நீர்வற்றிப் போக
இத்தரைக் கிதுவென்ன காலமோ அறியோம்!
ஏறிட்டுப் பார்த்திட வேண்டுங்காண் அரசே !
எத்திரத் தாலுன்னை வழிபடில் வருவாய்
என்பதும் ஏழையேன் அறிகிலேன்! ஐயோ!
நித்திரை செய்திடற் கிதுபொழுதல்ல
நேரங்காண் நீ பள்ளி யெழுந்தருள்வாயே !

4. மேகங்கள் வானிடை அங்கங்கு தோன்றிடும்
வேகமாய் சிதறிடும் விலகிடும் நொடியில்
காகங்கள் குருவிகள் கால்நடை முதலாய்
களைத்துமே வீழ்ந்திடும் பாட்டையிற்பலவும்
தேகங்களுடன் வளர்சீவர்கள் எவைதாம்
தெய்வமே உனதருள் விடுத்துயிர் வாழும்
சோகங்களற்றிடும் வான் பொய்த்துத் துன்பம்
சூழுமுன் நீ பள்ளியெழுந்தருள்வாயே !


5. பலவருடம் போயிந் தாது ஆண்டும்
படிமிசை மழையின்றிக் காய்கின்றதையோ !
சிவசிவ வென்றெதிர் பார்த்துக்கண் பூத்தோம்
சீர்கெடச் செய்யற்க மேற்றிசைக்கதிபா
உவரியிநீரடுத் உவப்புடனளிக்க
உனதுயிர் வள்ளன்மை குறைவுபட்டுள்ளதோ !
அவமாக எமது உரை கருதற்க அரசே
அன்புருவே பள்ளி யெழுந்தருள்வாயே !


தொடர்ந்து பெய்த மழை நிற்பதற்காக பாடியது

1) மிதமாக வெயில் வேண்டும் காற்று மழையுமவ் வாறே
மேதினியில் அமைய வேண்டும் மிகுவெள்ளத்தால்பஞ்சம்
விளைவின்மையால் பஞ்சம் வேறு வகையான பஞ்சம்.

2) புதுமையாம் நோய் முதலாய்ப் பூகம்பமாதி பொல்லாங்கு
சூழாமலே புனிதமுறும் நடையுடையும் பாவனையும்
விளங்கப் போதமுடன் மாந்தர் வாழ்க! - இதமான
வார்த்தையுடன் எழிலான சேவை செயற்கு இணையிலா
இச்சையோங்க இவன்தன்மை அடியோடும்இறந்தொழிய
வள்ளன்மை எனும் குணமே மேலோங்கவே

3) மதமான மதயானை வலிகுன்றி நலிவெய்த
மகிழ்ந்துநீ அருள வேண்டும்
வடிவிலாய் விளங்கு பெயர் குணமிலாய்
குறியிலாய் மறைமுடிவாய் மன்னுபொருளே





Dear Friend,

You Should See

me in Madura

before I can decide

Yours Sincerely

18.12.33 **Sri. M.K. Gandhi**

To

Sri. T.R. Padmanabaiyer
31, Mahal Ist Street,
Madura.
South India.

வேதாந்த டிண்டிமொ.

1. வேதாந்த டிண்டிமோஸ் தத்வ
ஏகு உத்கோ4ஷணம் கரின்
ரா:ந்தக் வெதூ3 ருத்ய தேஜஸ்
த3க்ஷிணாமூர்த்தி நாவ் ஸெரொ

2. ஆத்மானாத்ம பதா3ர்த்து2ன்தீ
போ4க்த்ரு போ4க யத்வ லக்ஷணுன்
ப்ரஹ்மோஸாத்மாஸி நா: தேஹீ
ஏஸி வேதாந்த டிண்டிமொ.

3. ஞானாக்ஞானு பதா3ர்த்து2 தீ3
ஆத்மாகு ப3ந்த முக்தி தேன்
ஞான்ஹால் முக்தீஸி பந்தோன்யு
ஏஸி வேதாந்த டிண்டிமொ.

4. க்ஞாத்ருக் நேயம் பதா3தர்த்து2ன் தீ3
பா4ஸ்ய பா4ஸக லக்ஷனுன்
க்ஞாதா ப்ரஹமம் ஜக3த் ஞேயம்
ஏஸி வேதாந்த டிண்டி மொ.

5. ஸுக2து3க்கு2 பதா3ர்த்து2ன் தீ3
ப்ரிய விப்ரபி காரகுன்
ஸுக2ம் ப்ரஹ்மம் ஜக3த்து3க்கு2
ஏஸி வேதாந்த டிண்டிமொ.

6. ஸமஷ்டி வியஷ்டிரூபுன் தீ3
பதா3ர்த்து2ன் ஸர்வ ஸம்மது
ஸமஷ்டி ஈ:ஸ்வரூ வியஷ்டி
ஜீவு வேதாந்த டிண்டிமொ.

7. ஞானு கர்மு பதா3ர்த்து2ன் தீ3
வஸ்து கர்த்தராதம தந்தரகுன்
க்ஞான் ஹால் மோக்ஷீஸி கர்மா:ல் நா:
ஏஸி வேதாந்த டிண்டிமொ.

8. ஸ்ரோதவ்யா ஸ்ராவ்ய ரூபுன் தீ^{3}
பதா^{3}ர்த்து^{2}ன் ஸூக^{2}து^{3} க்கு^{2} தேன்
ஸ்ரோதவ்யு ப்ரஹ்ம நா : அன்யு
ஏஸி வேதாந்த டிண்டிமொ.

9. சிந்த்யா சிந்த்யுன் பதா^{3}ர்த்து^{2}ன் தீ^{3}
விஸ்ராந்தி ஸ்ராந்தி தாயகுன்
சிந்த்யு ப்^{3}ரஹ்ம பரம் நா : ன்யு.
ஏஸி வேதாந்த டிண்டிமொ.

10. த்^{4}யே யாத்^{4}யேய பதா^{3}ர்த்து^{2} ன்தீ^{3}
தீ^{4}ஸ மாத்^{4}யா ஸமாதி தேன்
த்^{4}யா தவ்யு ப்^{3}ரஹ்ம்ம நா : அன்யு.
ஏஸி வேதாந்த டிண்டிமொ.

11. யோகி^{3}னு போ^{4}கி^{3}னு காயி
த்யாகி^{3}னூ ராகி^{3}னுக் மெளி
க்ஞான் ஹால் மோக்ஷீஸி ஸெந்தேப் நீ.
ஏஸி வேதாந்த டிண்டிமொ.

12. வாணாஸ்ரமனுனால் ஜூண்ணா
கர்மொபாஸனொ ஹால் மெளி
ப்^{3}ரஹ்மக்னு வினா மோக்ஷி
ஏஸி வேதாந்த டிண்டிமொ.

13. அஸத்யு ஸர்வ ஸம்ஸாரு
ரஸா பா^{4}ஸாதி தூ^{3}ஷிது
உபேஷ்யு ப்ரஹ்ம விக்ஞேயு :
ஏஸி வேதாந்த டிண்டிமொ.

14. வ்ருதா^{2} க்ரியான் வ்ருதா^{2} வத்தான்
வ்ருதா^{2} வாது^{2}ன் மனோரதுன்
ஸொட்டி ப்ரஹ்மமு விக்ஞேயு.
ஏஸி வேதாந்த டிண்டிமொ.

மராட்டிய மொழில் தொ.ரா. பத்மனாபய்யர் எழுதிய அத^{4}யாய பந்த^4 ராவா.

1) கா^{2}லீம் சகா^{2} வரிமுளநித்ய அச்வத்த^2 போ^{2} லீலா
ஜ்யாச்யா பானாம் மதே^{4}ம் வேத^{3}ஜா ணேதோ வேத^3
ஜாணதோ (ஊர்த்துலீவ)

2) வரிஹிசாகா^{2} பு^{2}டல் யாதயாஸ
ஹீம்போ^{4}க^3 பானேம் கு^{3}ண புஷ்டஜே தே^{2}ம்
காலீம்ஹிமு ளேம்நிக^4 தீநவீன
த்^{3}ருடா வலீம் கர்மப^{3}ளேம் ந்ரு–லோகீம் (அத^{4}ச சோர்தவம்)

3) ஹ்யாசேம் தஸேம் ரூபதி^{3} ஸேந யேதே^{2}ம்
பா^{4}ஸேந பேண்டா^{3} பு^{3}ட^3 கா^{2}ந கா^{2}ந்தா^{3}
கே^{4} ஊனிவைராக்^{3}ய அப^{3}ங்க^3 சஸ்த்ர
தோடு^{3}ணி யாம் ஹாத்^{3}ருட^4 மூலவ்ருக்ஷ (நரூப மன்யே)

4) க்^{4}யாவா பு டே^{4}ம் போத^4 தயா பதா^{3}சா
ஜேது^{2}னி மாகே^{3}ம் பி^{2}ரணேம் நஸேசி (தத: பதம்)
த்^{3}யாவீபு^{3}டீ^{3}த்யா பரமாத்ம – தத்வீம்
பரவ்ருத்தி ஜேதே^{2}ம் ஸ்பு^{2}ரவீ அநாதி^{3}
ஜே மான மோஹாம் ஹஸங்க^3 தோ^{3}ஷ

5) ஜாநூனி நிர்வாஸன ஆத்ம – நிஷ்ட
த்^{3}வந்த்^{3}வேம் நகே^{4} தீஸுக^{2}து: க^{2}முள (நிர்மான)
தேப்ராக்ஞத்யாநித்யா – பதீ^{3}ம் ப்ரவிஷ்ட

6) நத்யாஸ உஜனீ ஸுர்யகாய ஸேஅக்^{3}னி சந்த^{3}ஹே
ஜேத^2 கே^{3} லாந பரதே மாஜே^{2}ம் அந்திமதா^{4} மதேம்
(நதத்பாஸ்)

7) மாஜா^{2}சி அம்சஸம் ஸாரீம் ஜா^{2}லாஜு வஸநாதன
பஞ்சேந்த்^{3}ரி யேம் மனோயுக்தப்ரக்ருதிந்தூணி கே^{2}சிதோ
(மனம)

8) புஷ்பாதி^{3} காந்துனிவாரா க^{3}ந்த^{4} கே^{2}ஞ் சூனி கே^{4}தஸே
தசீம் கே^{4} ஊனி ஹீம் ஸர்வதே^{4} ஹஸோ பீ^{3}த^{4}ரீ பிரபோ

9) ச்ரோத்ர ஜிஹ்வாத்வசா சக்ஷீ (சரீரம்)
க்ராண ஆணிக தேம் மன
ஹ்யா ஸ்வாம்ஸ அதி^{4} ஷ்டுணி (ச்ரோத்ரம்)
தேதே விஷய ஸேவிதோ.

10) ஸோ டி^{3} தோ த^{4}ரிதோ தே^{3}ஹ
போ^{4}கி^{3} தோகுண – யுக்தஹா
பரீநபாஹ தீமுட^{4} (உத்க்ராமந்தம்)
க்ஞானிடோ^{3} ளஸ பாஹதீ

11) யோகீ^{3} யத்ன – ப^{3}ளே ஹ்யாஸ
பாஹ தீஹிருத^{3}யீம் ஸ்தி^{2}த
சித்த – ஹ¨ன அப்த்தா^{4}த் மே (யதந்தோ)
ப்ரயத்னேம் ஹிநபாஹதீ

12) ஸ¨ர் யாந்த ஜனதே தேஜ
ஜேம் விச்வஉஜளீதஸே (யதாநித்ய)
தஸே சந்த்^{3} ராந்த அக்^{3}னிந்த
ஜாணமாஜே^{2}ம் சிதேஜதே

13) ஆகர்ஷண – ப^{3}ளேம் பூ^{4}தேம்
த^{4}ரா – ரூபேம் த^{4}ரீதஸே
வனஸ் பதீம்ஸமீ ஸோம(கா^{3} மாலிப்ய)
போஷி தோம் ப^{4}ரிலாரஸேம்

14) மீவைச்வாநர –ரூபானேம்
ப்ராணி தே[3]ஹாந்த ராஹூனி (அஹம் வைப்)
அந்நேம் பசவீம் சாரீ
ப்ராணா பாணாம் ஸபு[2]ங்குனீ

15) ஸர்வந்தரீம் மீகரிதோம் நிவாஸ
தே[3] தோம் ஸ்ம்ருதிக் ஞானவிவேகஸர்வாம் (ஸர்வஸ்ய)
ஸம்க்[3]ர வேதா[3]ம்ஸ் ஹிமீசி வேத்ய
தேவ[3]க்ஞ மீவேத – ரஹஸ்ய – கர்த்தா

16) லோ கீம் புருஷ தே தோ[3]ந
க்ஷர ஆணிக அக்ஷர
க்ஷர ஸர்வசி ஹீம் பூதேம் (த[3]வாவிமௌ)
ஸ்தி[2]ர அக்ஷர போ[3]லிலா

17) ம் ஹன தீபரமாத்மாதோ
திஜா புருஷ உத்தம
விச்வ போஷக ஹச்வாத்மா (உத்தமபுருஷ)
ஜோவிச்வேச்வர அவ்யய

18) மீக்ஷரா –அக்ஷராஹீனி
வேக[3]ளா ஆணிஉத்தம
வேத[3]லோகம் ஹணேமாதேம் (யஸமாக்ஷரம்)
ம் ஹணூனி புருஷோத்தம்

19) மோஹாஸா, ரூனி ஜோதூ[3]ர
ஜாணேமீ புருஷோத்தம்
ஸர்வ– க்[3] தோ ஸர்வ– பா[4]வேம் (யோமா மேவம்)
ஸர்வ – ரூபிம் ப[4]ஜேம் மஜ

20) அத்யாந்த கூ[3]ட[3] ஹேம் சாஸ்த்ர
நிர்மளா துஜபோ[3] லிலோம் (இதிகுஹ்ய)
ஹேம் ஜாணே தோ பு[3]த்தி மந்த
ஹோயீலக்ருத – க்ருத்யசி

உ

செந்தமிழ் வடமொழி ஸௌராஷ்ட்ர மொழிகளில் விற்பன்னரும் *கீதா ப்ரவசனபடு, கீதா அஷ்டாவதானி, கீதா ரெத்தினம், ஸௌராஷ்ட்ர வியாஸர்* என அழைக்கப்படுபவரும் ஆகிய

பிர்ம்மஸ்ரீ தொ. ரா. பத்மனாபய்யர் அவர்கள்
62–வது ஜெயந்தி விழாவில்

கீதா பவன நிர்வாகக் கமிட்டியார்

வாசித்தளித்த வாழ்த்துப்பா

பூமன்னுங் கன்னி பொருந்துமெழிற் கூடலது
தாமன்னி வாழ்வு தழைக்கவருள் – மாமதுர
வல்லி கழலிணையை வாழ்த்துபுகழ் பத்மநாபன்
சொல்லதனை நம்பிற் சுகம்.

கூடுபுகழ் ஜாபாலி கோத்திரத்துள் ஓர்மணியாய்
நீடுலகுள் வந்து நிதங்கீதைப் – பீடுறவே
செப்பிவரு பத்மநாபச் சீமான் கிளையுடனே
எப்போதும் வாழ்க இனிது.

பாடுபுகழ் மிக்காறு பத்திரண்டு நற்செயந்தி
சூடிமகிழ் பத்மநாபச் சுந்தரன் – நீடுலகுள்
செந்திருவின் நல்லருளைச் சேர்ந்து கிளையுடனே
சந்ததமும் வாழ்க தழைத்து.

ஆயிரம் நாப்படைத்த ஆதிசேடன் தன்னாவாற்
பாயிரம் பாடவளர் பத்மநாபன் – ஆயுள்
வளரவென மக்கள் வழுத்துபுகழ் மேவித்
தளரா, துறைகநீ தான்.

கண்ணா யிரம்பெற்றோன் கண்டு களிகூரப்
பண்ணார் புகழ்படைத்த பத்மநாபன் – தண்ணார்ந்த
வெள்ளணி நாள்கண்டு விற்பன்னர்கள் வாழ்த்தொலி
வெள்ள மெனத்திகழு மே.

தன்னா லியன்றளவு தர்ம மதுவளர
என்னாளும் போதம் இனிதுறைத்து – நன்னாளிற்
பொன்னாடை பூணும் புனிதபத்ம நாபனெனுங்
கன்னா செயமங் களம்.

பூத்திகழுங் கன்னி புணர்மார்பன் வாழ்கூடல்
ஆத்திகர்கள் வாழ அருள்புரியும் – சாத்திரந்தேர்
மாமறையோன் விஸ்வநாத மால்புகழ் பத்மநாபன்
தாமகிழ்ந்து வாழ்க தழைத்து.

விற்பனஸௌ ராஷ்ட்ர வியாஸ ரெனஉலகம்
நற்பட்டம் தன்னை நயந்துதரப் – பெற்றுவளர்
கற்பகமாம் பத்மநாபன் கண்ணன் திருவருளாற்
பொற்புடனே ஓங்கப் பொலிந்து.

தக்க வடமொழியுந் தண்டமிழ்ஸௌ ராஷ்டிரமும்
பக்கமுடன் கற்றுப் பரிதியென – இக்கூடல்
தன்னி லவதாரம் தான்செய்த பத்மநாபா
இன்னுமொரு நூற்றண் டிரு.

மூவாத கீர்த்தி முழுங்குஸௌ ராஷ்ட்ரமொழி
பாவாண ரேத்திப் பரவுதுதி – ஓவாது
செய்யபக வற்கீதைச் செய்தபத்ம நாபனெனுந்
துய்யன் பெருக சுகம்.

பூமகள் வாசம் பொருந்துராம சாமிஅய்யர்
தாமகிழ வந்த தனையனெனப் – பாமகள்
நந்திக் குடியிருக்கும் நாப்படைத்த பத்மனாப
உத்மனார் வாழ்க உவந்து.

மாசத்தோர் என்றும் மதிக்கும் புகழ்கொண்ட
சேசம்மாள் தன்வயிற்றுச்செல்வனெனப் – பாசமுடன்
மக்கள் துதிக்க வளர்பத்ம நாபய்யர்
எக்கணமும் வாழ்க இனிது.

பத்த மகாசகோவு பாத்தியாயர் பட்டமது
தக்க படிபெற்ற சாமிநாதன் – பக்கமுடன்
போற்றுபத்ம நாபய்யர் பூதலித்து ளேமகிழ்ந்து
ஏற்றமுடன் வாழ்க இனிது.

பாடு மகாமஹோவு பாத்தியாயர் என்றிசை
சூடுமனந்த க்ருஷ்ண சுகணரகம் – தேடிவளர்
பத்மநாபா வுந்தன் பணிவளர வேசிறந்து
இத்தரையுள் நீயோங்க வே.

தக்க துரைசாமி சாத்திரியா ரும்புகழும்
பக்தியுள சக்திமிகு பத்மநாப – ரெக்கணமும்
வாழ வதுரவல்லி, வண்கமலப் போதடியை
ஏழை இறைஞ்சிடுவே னே.

மதுரை
7-8-60

இங்ஙனம்,
கீதா பவன நிர்வாகக் கமிட்டியார்.

ௐ

ஓம் ஸ்ரீ கணேசாய நம :
ஓம் ஸ்ரீ பத்மநாப குருப்யோ நம :

கீதா அஷ்டாவதானி
தொ.ரா. பத்மநாபய்யரின் திவ்ய சரிதம்

S.P. கீதா பாரதி M.A.,

வஸுதே^{3}வ ஸுதம் தே^{3}வம் கம்ச சாணூர மர்த^{3}னம்
தே^{3}வகீ பரமாநந்த^{3}ம் க்ருஷ்ணம் வந்தே^{3} ஜக^{3}த்^{3} கு^{3}ரும்.

முன்னுரை :

நமது பாரத நாடு பழம் பெருமை படைத்தது. பக்தியும் பண்புமே தனது உயிர்நாடியாகக் கொண்டது. அறிவையும். அருளையுமே உண்மைச் செல்வமெனப் போற்றுவது. அழியாத ஆத்மஞானத்தை அனைவரும் பெற வேண்டும் என்பதையே உயர்ந்த குறிக்கோளாகக் கொண்டுள்ளது. மனித இனத்தின் மாணிக்கங்களான பல மஹனீயர்களைத் தோற்றுவித்துள்ளது. தொன்று தொட்டுப் பெரும் புகழ் பெற்ற ஸௌராஷ்ட்ர ஸமூகத்தில் ஸ்ரீமத் வேங்கடரமண பாகவதர், ஸ்ரீ வேங்கட சூரி ஸ்வாமிகள், மதுரையின் ஜோதியெனப் போற்றப்படும் ஸ்ரீமந் நடனகோபால நாயகி ஸ்வாமிகள் முதலியோர் அவதரித்தனர். அம்மஹான்களின் வரிசையில் தோன்றியவர் தான் கீதா அஷ்டாவதானியான டி.ஆர். பத்மநாபய்யர்.

அவதாரம் :

ஸ்ரீ விளம்பி வருஷம் பங்குனி மாதம் 23ம்தேதி 4-4-1899 மங்கள வாரம் உத்திராட நட்சத்திரத்தில் சீர்மிகும் மதுரையில் ஸௌராஷ்ட்ர குலந்தனில், ஜாபாலி கோத்திரத்தில் ஸ்ரீ தொப்பே இராமசாமி அய்யருக்கும், அன்னாரின் தர்ம பத்தினி சேஷம்மாளுக்கும்

பத்மநாபய்யர் தவப்புதல்வராய் அவதரித்தார். அவரது புண்ணிய ஜாதகக் குறிப்பில் இராசி சக்கரத்தில் ஒவ்வொரு வீட்டிலும் இரண்டு கிரஹங்கள் ஒன்று சேராமல் ஒன்பது வீடுகளிலும் ஒவ்வொரு கிரஹமாக நிற்பதனால் ஒரு ஸமூஹத்திற்குக் தலைவராவார் என்ற ஜோதிட நூல்களின் கூற்றுக் கிணங்கப் பத்பநாபய்யர் ஸௌராஷ்ட்ரா ஸமூஹத்தின் ஒப்புயர்வற்ற ஆத்மஞானியாக விளங்குகிறார்.

கல்விச் சிறப்பு :

பெற்றோரின் அன்பு அரவணைப்பில் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்த பத்மநாபரைக் கல்வி கற்க பள்ளிக்கு அனுப்பிய போது அவரும் மிகுந்த ஆர்வத்துடன் கல்வி கற்றார். 'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்பதற்கேற்ப பள்ளிப்பருவத்திலேயே இயற்கையாகக் கவிதைகள் புனையும் ஆற்றலுடையவராக விளங்கினார். நேரம் கிடைக்கும் போதெல்லாம் தீந்தமிழிலும், ஸௌந்தர்ய ஸௌராஷ்ட்ர மொழியிலும் கவிதைகள் எழுதி வந்தார். அவரது இனிமையான குரல் வளத்தில் மயங்கிய ஆசிரியர்கள், பள்ளியில் பிரார்த்தனை நேரங்களிலும்,பள்ளி விழாக்களிலும் அவரையே பாடச் சொன்னார்கள்.

பத்மநாபரின் கல்விச்சிறப்பையும், அறிவுக் கூர்மையையும் அறிந்த ஆசிரியரும், பெற்றோரும், உயர்நிலைப் பள்ளிப்படிப்பிற்குப் பின் அவரை மருத்துவக்கல்வி படிக்க வைக்க விரும்பினர். ஆனால் மருத்துவக் கல்வித்துறையில் தவளை போன்ற உயிரினங்களை அறுத்து ஆராய்ச்சி செய்ய வேண்டியிருப்பதைக் கண்டு, கருணை உள்ளம் கொண்ட பத்மநாபரின் மனம் மருத்துவத்துறைக் கல்வியை விரும்பவில்லை.

பத்மநாபரின் உலகியற்கல்விக்குத் தந்தையும், உணர்வியல் கல்விக்குத் தாயும் உறுதுணையாக நின்றனர். இராமாயணம், மஹாபாரதம் போன்ற இதிஹாஸங்கள், அத்வைத கிரந்தங்கள் முதலியவற்றின் வேதாந்த ஞானக் கல்வியைத் தாயின் மூலம் பத்மநாபர் பெற்றுச், சிறு பிராயத்திலிருந்தே அருள் நெறியில் நாட்டமுடையவராய்த் திகழ்ந்தார்.

தமிழ், ஹிந்தி, ஸமஸ்கிருதம், ஆங்கிலம், ஸௌராஷ்ட்ரம் என்னும் ஐந்து மொழிகளிலும் நன்கு தேர்ச்சி பெற்ற பத்மநாபரின் கவிபுனையும் ஆற்றலையும், சொல்லாற்றலையும் கண்டு, அவருடன் கல்வி பயின்ற அவருடைய நண்பர்களான ஸ்ரீC.M.V. கிருஷ்ணமாச்சாரி, ஸ்ரீ A.R. ராகவன் முதலியோரும், ஸ்ரீ K.M.S. லெக்ஷ்மணய்யர், ஸ்ரீ P.S.A.கிருஷ்ணய்யர், ஸ்ரீ C.M. வெங்கடாஜலபதி அய்யர் போன்ற ஸௌராஷ்ட்ர ஸமூஹப் பெரியோர்களும் அவரைப் புகழ்ந்து பாராட்டினர். அவரது தமிழ்ப்புலமையை அறிந்து ஸௌராஷ்ட்ரா பிராஹ்மண மஹாநாட்டின் தலைமையுரையை அவரைக் கொண்டு எழுத வைத்தனர். பாராட்டு விழாக்களில் வாழ்த்துப்பாக்களை அவரையே இயற்றச் சொல்லி வழங்கி வந்தனர். **“ஸௌராஷ்ட்ரா ஸமூஹத் தமிழ்க் கவிச் சக்கரவர்த்தி”** என்று அவரைப் போற்றினர்.

இல்லற வாழ்க்கை :

சிறு வயதிலேயே தந்தையை இழந்த பத்மநாபர், தாயின் விருப்பத்திற்கிணங்க ஸ்ரீ செட்டி நா.இராமய்யர், சங்கரம்மாள் தம்பதியரின் செல்வப்புதல்வி சீதாலெக்ஷ்மியைத் திருமணம் செய்து கொண்டார். அன்பு அன்னையின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு மதுரை கீழவாசலில் இருந்த சாரி & ராம் கம்பெனியில் எழுத்தர் பணியில் சேர்ந்தார். அப்பணியில் நாட்டமின்றிச் சில ஆண்டுகளிலேயே அங்கிருந்து விலகினார்.அருட்செல்வத்தையே நாடும் அவர் மனம் பொருட்செல்வத்தைப் பெறும் பணியில் ஈடுபடவில்லை.

அருள் வேட்கை :

தம் இல்வாழ்க்கையில் நாட்டமில்லாதவராய், அமைதியை நாடுபவராய்ப் பத்மநாபர் ஒருநாள் யாரிடமும், எதுவும் கூறாமல் மஹான்களைக் காண வேண்டும் என்னும் விருப்புடையவராய்ப் பொதிகை மலையை நோக்கிச் சென்றார். தம்மை மறந்தவராய்த், தாம் போவது எங்கே என்பதும் புரியாதவராய், நடந்து கொண்டே இருந்தார். அகிலத்தில் இருள் சூழச் சூரியன் அஸ்தமிக்க, அகத்தில் ஞான சூரியன் உதயமானது. அவ்வமயம் ஒரு சிறுவன் அவர் முன் தோன்றி, அவரை வழிமறித்து, ஐயா! நீர் யார்? எங்கே செல்கின்றீர்? இருட்டிக் கொண்டு

வரும் இந்நேரத்தில் மலைப்பாதையில் உமக்கென்ன வேலை? என்று கேட்டான். "என்னைத் தடுக்கும் நீ யார்? என்னை ஏன் தடுக்கிறாய்? என் வழியே என்னைப் போகவிடு, என்று பத்மநாபர் சொல்லித் தம் வழியே போக முயன்றார்.

அப்பொழுது அச் சிறுவன் அவரைத் தடுத்தி நிறுத்தி, "ஐயா! இதற்கு மேலும் நீர் சென்றால் காட்டு விலங்குகளுக்கு இரையாகி விடுவீர். ஜன நடமாட்டமற்ற இப்பாதையில் எதை நாடிச் செல்கின்றீர்?" என்று கேட்டான்.

"தம்பி, நான் அமைதியை நாடிச் செல்கின்றேன், என்னைத் தடுக்கும் நீ யாரென்று சொல்லவில்லையே " என்று பத்மநாபர் கூறியதும் அச்சிறுவன் புன்முறுவலுடன், "நான் இம் மலைக்காட்டில் வாழும் சிறுவன். அமைதியை நாடியா நீர் இங்கு வந்தீர்? உண்மையில் எத்தனையோ மக்கள் உம்மால் அமைதி பெறக் காத்துக் கொண்டிருக்கின்றனர். வாரும் கீழே இறங்கிச் செல்வோம். உமக்குத்துணையாக நானும் வருகிறேன்," என்று சொன்னான்.

மகுடி யோசையில் மயங்கிய நாகம் போல் அப்பாலகனின் அன்பு வார்த்தைக்குக் கட்டுப்பட்டு, அவனுடன் பத்மநாபர் மலையிலிருந்து இறங்கி, மக்கள் நடமாடும் இடத்திற்கு வந்து சேர்ந்தார்.

மலையடிவாரத்திலிருந்த சிலரிடம் பத்மநாபரைக் கவனமாகப் பார்த்துக் கொள்ளுமாறும், அவரைத் தேடி வருவோரிடம் ஒப்படைக்கும் படியும் கூறி அச்சிறுவன் மறைந்தான். மறுநாள் காலை நடந்ததை எல்லாம் அறிந்த பத்மநாபர் குன்று தோறும் வாழும் குமரப் பெருமானே தன்னைத் தடுத்தாட் கொள்ளச் சிறுவன் வடிவில் வந்ததையுணர்ந்து தாமாகவே தம் இல்லம் நோக்கிச் சென்றார். கணவரைப் பிரிந்து தவித்த அவரின் தர்ம பத்தினியான சீதாலக்ஷ்மி அம்மையார் அவரை அன்போடு உபசரித்து இனிய வார்த்தைகளைக் கூறினார். அறநெறி வழுவாது இல்லறத்தை நல்லறமாக வாழ்ந்த அத்திவ்ய தம்பதியர் ஸந்ததி என்னும் நூல் அறுபடாமலிருக்க ஆஸ்திக்கோர் ஆண்மகவும், ஆசைக்கோர் பெண்மகவும் பெற்றனர்.

தெய்வீக நூல்களை இயற்றுதல் :

முருகப் பெருமானின் திருவருளைப் பெற்ற பத்மநாபர் ஸதா ஸர்வ காலமும் குமரனின் திருநாமங்களையே உச்சரித்துக் கொண்டிருந்தார், திருவள்ளுவர் நாடகம், மஹாராஜன் துறவு என்ற நூற்களைத் தமிழ் வசன நடையிலும், வேந்தன் துறவு என்ற நூலைத் தமிழ்ச்செய்யுள் நடையிலும் இயற்றினார். தேவபாஷையாம் ஸம்ஸ்கிருதத்தில் ஆழ்ந்த புலமை பெற்றிருந்த பத்மநாபர் ஜகத்குரு சங்கராச்சாரியாரால் இயற்றப்பட்ட ஆன்மபோதமென்னும் நூலை ஸம்ஸ் கிருதத்திலிருந்து, அனைவரும் நன்கறிந்து கொள்ளும் வண்ணம் அழகிய செந்தமிழில் தாலாட்டுப்பிரபந்தமாக எளிய நடையில் எழுதினார். அந்நூலைப் படித்த திருப்புவன மடாதிபதி காசிகாநந்த ஞானாசார்யஸ்வாமிகள் பத்மநாபரை *ஸௌராஷ்ட்ரர்களில் தமிழ் வித்வத் திலகம்* எனப் பாராட்டியுள்ளார்.

தெய்வீகத்தையும், தேசீயத்தையும் தம்மிரு கண்களாகக் கருதிய பத்மநாபர்,"இந்தியத்தாய், பாரதநாட்டின் பண்டைப் பெருமை, தேசீயகீதங்கள், தேசபக்தர்களுக்கு இரங்கற் பாக்கள்" போன்ற வண்ண வண்ணப் பாமாலைகளைப் பாரதத் தாய்க்கு அணிவித்தார். பொருள் வசதியின்மையால் அந்நூல்கள் அன்று அச்சாக்கப்படவில்லை. அவ்வரிய தமிழ்நூல்கள் பத்மநாபரின் ஆழ்ந்த தமிழ்ப் புலமையையும், தமிழ்பற்றையும், தேசப்பற்றையும், தேசீயத் தலைவர்கள் மீது வைத்திருந்த மதிப்பையும் உணர்த்துகின்றன.

நாட்டுப் பற்று :

மொழிப்பற்றும், நாட்டுப்பற்றுமுடைய பத்மநாபர் 1930 - ஆம் வருடம் மஹாத்மா காந்தியின் சுதந்திரப் போராட்டத்தால் ஈர்க்கப்பட்டு, நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் வீறு கொண்டெழுந்த தியாக சீலராய்த் தேசத் தொண்டராய்த் திகழ்ந்தார்.

உப்புச் சத்தியாக்கிரஹம் :

1931இல் காந்தியடிகள் உப்புச்சத்தியாகிரகப் போராட்டத்தைக் குஜராத் மாநிலத்தில் தண்டி என்னும் இடத்தில் நடத்திய போது, தமிழ் நாட்டில் மூதறிஞர் ராஜாஜியின் தலைமையில் உப்புச் சத்தியாக்கிரகம்

வேதாரண்யத்தில் நடந்தது. அப்போது பத்மநாபர் தம் தொழிலை மறந்து, கர்ப்பிணியான மனைவியைப் பிரிந்து ராஜாஜியுடன் சென்றார். திருச்சியிலிருந்து வேதாரண்யம் வரை பாத யாத்திரையாகவே சென்று வழியில் நடைபெறும் நிகழ்ச்சிகள், பொதுக்கூட்டங்கள் மற்றும் இதர விஷயங்களை எல்லாம் குறிப்பு எடுத்து எழுத வேண்டிய பெரும்பணி அவருக்குத் கொடுக்கப்பட்டது. அவரும் அப்பணியை மிகச்சிறப்பாகச் செய்தார்.

உப்புச் சத்தியாக்கிரஹம் பற்றிப் பிற்கால சந்ததிகள் அறிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன் மகாராஜபுரம் வேதாரண்யம் கஸ்தூரிபா காந்தி கன்யா குருகுலம் ஸ்தாபனத்தார், ''*வேதாரண்யம் உப்புச் கிரகச் சரித்திரம்*'' என்ற பெயரில் ஒரு நூலை வெளியிட்டனர். அந்நூலில் உள்ள விஷயங்கள் ராஜாஜி, ஜி.ராமச்சந்திரன், T.R. பத்மநாபய்யர் ஆகிய மூவரால் எழுதப்பட்டதாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அந்நூலின் பெரும் பகுதி சுமார் 150 பக்கங்கள் வரை மிக விளக்கமாகவும், உருக்கமாகவும் T.R. பத்மநாபய்யர் எழுதிய குறிப்பேட்டிலிருந்து வெளியிடப்பட்டுள்ளது. உப்புச்சத்தியாக்கிரகப் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்ற தம் அனுபவங்களையும், தாம் நேரில் பார்த்தவற்றையும் ஒரு குறிப்பேட்டில் பத்மநாபர் எழுதி வைத்திருந்தார். அக்குறிப்பேட்டில் கண்டுள்ள பொது விஷயங்கள் மட்டுமே இந்நூலில் இடம் பெற்றுள்ளன. தனிப்பட்ட முறையில் அவரது சொந்த கருத்துகள் இதுகாறும் வெளியிடப்படவில்லை.

அஹிம்ஸா மூர்த்தியும் அறப்போரும் :

சுதந்திரப் போரில் முதன்மையானது வேதாரண்ய உப்புச் சத்தியாக்கிரகப் போர். எதுவும் மதிப்பில்லாததை உப்பு பெறாத விஷயம் என்பார்கள். அத்தகைய மதிப்பற்ற உப்பினுள் பிரம்மாண்டமான நம் தேசத்தின் சுதந்திரத்தைப் புகுத்தி உலகம் கண்டும், கேட்டுமறியாத ஒரு பேரியக்கமாக்கி இந்நாட்டின் சிறுவர் முதல் முதியோர் வரை, பாமரர் முதல் பண்டிதர் வரை சாதிசமயவேறுபாடின்றி அனைவரையும் ஈடுபடச் செய்த முதல் பொது மக்கள் பேரியக்கமாகும். அஹிம்ஸா மூர்த்தியான காந்தியடிகள் வகுத்த சுதந்திரப் போராட்டத்தில் இதுவே முதன்மையானது. இதைத்தான் நாமக்கல் கவிஞர் ராமலிங்கம் பிள்ளை, ''கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது,'' எனச் சிறப்பித்துப்பாடினார்.

சிறைச்சாலையில் அறச் சிந்தனை :

சத்தியாக்கிரகிகள் அரசாங்கத்தாரால் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டனர். சிறை வாழ்க்கை பத்மநாபரின் வாழ்க்கைக்குத் திருப்பு முனையாக அமைந்தது. ராஜாஜியுடன் சிறைவாழ்க்கை மேற்கொண்டிருந்த பத்மநாபர் தம்முடன் சிறைவாஸம் செய்த தேசபக்தரும், உப்புச் சத்தியாக்கிரகத்தின் போது பாதயாத்திரையில் பொக்கிஷதாராக இருந்தவருமான ஸ்ரீ P.K.ராமாச்சாரி அவர்கள் கொண்டு வந்திருந்த ஸ்ரீமத் பகவத் கீதை நூலைத் தீவிரமாகவும், ஆழமாகவும் படித்தார்.

கண்ணன் பிறந்தது சிறைச்சாலையில். தமிழ்க் கீதை வெண்பா பிறந்ததும் சிறைச்சாலையில் தான். கீதைக் கருத்துகளில் தம் மனதைப் பறிகொடுத்த பத்மநாபர் கீதை படிப்பதையே முழு மூச்சாகக் கொண்டார். கீதையின் எழுநூறு சுலோகங்களையும் மனதில் பொருள்பட தெளிந்ததோடு ஒவ்வொரு சுலோகத்தின் மேலேயும், அதற்கிணையான தமிழ் வெண்பாப் பாடலை எழுதினார். எழுநூறு வெண்பாப் பாடல்களையும் எழுதி நிறைவு செய்து ராஜாஜியிடம் காண்பித்தார். அப்பாடல்களைப் படித்துப் பார்த்த மூதறிஞர் ராஜாஜி அவரது அறிவுத் திறத்தைப் பாராட்டி இத்தகைய தமிழ் அறிஞரோடு சிறையில் இருந்தாலும் அது சிறைவாசமல்ல, நிறை வாசமாகும் என்றார். அன்று பத்மநாபர் தம் சிறைவாசத்தின் போது எழுதிய கீதை வெண்பா இன்று புத்தக வடிவில் வெளிவருகின்றது.

வாழ்க்கைத் துணைவியாரின் வாட்டம் :

பத்மநாபய்யர் சிறைக்குச் சென்ற போது, சிறையில் தொண்டர்கள் படும் வேதனையைக் கேள்விப்பட்டுப் பத்மநாபய்யரின் துணைவியார் மனம் கலங்கி, யாரிடமும் எதுவும் கூறாமல் தனியாகப் புறப்பட்டுத் தம் கணவர் சிறைப்பட்டிருக்கும் இடத்தை விசாரித்தறிந்து, திருச்சிச் சிறைக்குச் சென்றார். சிறை அதிகாரிகளின் அனுமதி பெற்றுத் தம் கணவரைச் சந்தித்துக் கண்ணீர் மல்க, "நானும் உங்களுடன் இச்சிறையில் தங்க இடம் கொடுக்கச் சொல்லுங்கள்," என்று மனமுருக மொழிந்தார்.அதற்குள் அவ்வம்மையாரைத் தேடிக் கொண்டு அங்கு வந்த உற்றார் உறவினர்,அவருக்கு ஆறுதல் கூறி அம்மையாரை மதுரைக்கு அழைத்து வந்தனர்.

இருள் நீக்கிய அருட்பணி :

சிறைவாசம் முடிந்து வீடு திரும்பிய பின் பத்மநாபய்யர் தாம் கீதையில் கற்றதைப் படித்ததை மனனம் செய்யலானார். மனிதனை வையத்துள் வாழ்வாங்கு வாழச் செய்கின்றதும், அரை மனிதனை நிறை மனிதனாக்குவதும் துன்பக்கடலில் துவள்பவனை இன்பக்கரையேற்கும் தோணியைப் போன்றதும், தனக்குள்ளிருக்கும் தெய்வீகத்தை உணர்த்துவதுமான கீதையின் மஹத்துவத்தை அறிந்து கீதானந்தத்தில் மலரிலுள்ள தேனை உண்ட வண்டு போல் லயித்திருந்தார். அவர் தமக்கு ஸ்ரீதனமாகக் கிடைத்த இல்லத்தின் ஒரு பகுதியை வாடகைக்கு விட்டும், நெல் மகசூலின் மூலம் கிடைக்கும் வருமானத்திலிருந்தும் வாழ்க்கை நடத்திக் குடும்பக் கவலையற்றிருந்தார்.

மக்கள் மனதில் அறியாமை என்னும் இருளையகற்றக் கீதா ஞானமென்னும் தீபத்தை ஏற்ற பத்மநாபய்யர் விரும்பினார். ஆனால் அக்காலத்தில் மக்கள் கீதையை ஒரு கொலை சாஸ்திர நூலாக நினைத்திருந்தனர். யுத்தம் நடைபெற்ற குரு க்ஷேத்திரத்தில் தர்மயுத்தம் செய்ய மோஹத்தால் மயங்கிய தயங்கிய அர்ஜுனனுக்கு அச்சுதன் கடமையை அறிவுறுத்தி யுத்தம் செய்ய வைத்ததால், அந்த யுத்தகளத்தில் உபதேசிக்கப்பட்ட கீதையைப் படிப்பவர்கள் வீட்டில் யுத்தம் நிகழும் என்றெல்லாம் தவறான கருத்து மக்களிடையே நிலவிய அக்காலத்தில், அவர்கள் எண்ணத்தை எல்லாம் சிறுகச் சிறுக மாற்றிப், பொறுமையுடன் அவர்களைக் கீதை படிப்பதில் ஈடுபடுத்தப் பத்மநாபய்யர் அயராது பாடுபட்டார்.

மகளிரும் மஹத்தான கீதையும் :

வேதகாலத்தில் மைத்ரேயீ, கார்க்கீ, லோபமுத்ரா போன்ற மகளிர் வேதங்களை, உபநிடதங்களைக் கற்றுத் தெளிந்திருந்தனர். இடைக்காலத்தில் சாஸ்திரங்களைப் படிக்கப் பெண்களுக்கு உரிமையில்லை என்று மக்கள் எண்ண ஆரம்பித்தனர். அதிலும் உபநிஷதங்களின் ஸாரமான ஸ்ரீமத் பகவத்கீதையைப் பெண்கள் படிக்கவோ, கேட்கவோ கூடாதென தடுத்தனர். தாய்மார்களுக்குக் கீதையைக் கற்றுத் கொடுத்தால் தான், அவர்கள் மூலம் குழந்தைகளும் கீதையைக் கற்பார்கள் என்று எண்ணிய பத்மநாபய்யர் தாய்மார்களிடையே கீதையை எப்படிப் பரப்புவது என்ற சிந்தனையிலாழ்ந்தார்.

கீதை கற்பிக்கும் பணியைத் தம் இல்லத்தில் ஆரம்பித்தார். முதன் முதலில் கீதையைத் தம் ஸஹதர்ம சாரிணியான சீதாலக்ஷ்மி அம்மையாருக்கும், பிற்காலத்தில் கீதா அம்மையார் என்று பெயர் பெற்ற தம் உடன்பிறவாச் சகோதரியான ஜோளி ஸரஸ்வதி அம்மையாருக்கும், தம் குழந்தைகளான சீதாராமனுக்கும், வஸந்தாவிற்கும் கீதை பாராயணம் செய்யக் கற்றுக் கொடுத்தார். அன்னா.கு. பாக்கிய லெட்சுமி அம்மையார், O.L.V.R.தனலெட்சுமி அம்மையார், நாட்டாண்மை G.கிருஷ்ணாமணி அம்மையார், வாழைக்கொண்டா சொர்ணம்மாள், திருக்கொண்டா தனலெட்சுமி அம்மையார் ஆகியோரும் பத்மநாபரைக் குருவாக ஏற்றுச் சிரத்தையுடன் கீதையைப் படிக்க ஆரம்பித்தனர். பத்மநாபரும் ஸமஸ்கிருத மொழியின் உச்சரிப்பை அவர்களுக்குக் கற்றுத் கொடுத்து, உச்சரிப்பு, சந்திப் பிழையின்றிக் கீதையைப் பாராயணம் செய்யச் செய்தார். கற்பூரத்தைப் போன்ற பக்குவ மனம் படைத்த அவர்களும் விரைவில் கீதையை நன்கு கற்று, மடைதிறந்த வெள்ளம் போல் தடையின்றிக் கீதையைப் பாராமல் பாராயணம் செய்தனர்.

கீதை பாராயணப் பயன் :

காலையில் தொடர்ந்து இரண்டு மணி நேரம் கீதையைப் பாராயணம் செய்தால் மனம், வாக்கு, காயம் என்ற கர்மேந்திரியங்களும் எங்கும் அலைபாய்ந்து ஓடாமல் நிற்கின்றன. கீதாபாராயணத்தால் பல தான தர்மங்கள் யக்ஞங்கள் செய்த பயனும், தவம் செய்த புண்ணிய பயனும் பெறலாம் என்று கீதா மாஹாத்ம்யத்தில் அகிலநாயகன் அருளியிருக்கிறார்.

புரட்சி வழியில் அயர்ச்சியின்றிக் கீதையைப் பரப்புதல் :

சிறிது சிறிதாகப் பத்மநாபய்யரிடம் தாய்மார்கள், சகோதர சகோதரிகள், மாணவ, மாணவியர் கீதையைக் கற்றுத் கொள்ளத் தொடங்கினார். கீதையைக் கற்போரின் எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்கப் பத்மநாபய்யரின் இல்லத்தில் இடம் போதாமையால், ஆனந்தாஸ்ரமத்தில் கீதையைக் கற்றுக் கொடுக்க ஆரம்பித்தார். பத்மநாபய்யர் தம் இடைவிடா முயற்சியால் பலரைக் கீதையில் ஈடுபடுத்தினார். மனிதன் தன் இறுதிக் காலத்தில் தான் கீதை படிக்க

வேண்டும், கேட்க வேண்டும் என்ற மக்களின் எண்ணத்தை மாற்றி, எல்லோரும், எப்பொழுதும் கீதையைப் படித்தால் தான் உயர்வு பெற முடியும் என்ற கருத்தை மக்களின் மனதில் பதிய வைத்தார்.

கீதையின் கருத்துகளை எல்லோரும் எளிதில் புரிந்து கொள்ளச் சிறு பாடல்களாகக் கிளிக்கண்ணிகளாக, வினாவிடைகளாகத் தீந்தமிழிலும் ஸௌந்தர்ய ஸௌராஷ்ட்ர மொழியிலும் பாடினார். தாய்மொழிப் பற்று மிகுந்த அவர், ஸம்ஸ்கிருத மொழியில் மிகுந்த தேர்ச்சி பெற்ற அவர்,கீதையின் 700 சுலோகங்களையும் ஸௌராஷ்ட்ர மொழியில் மொழியாக்கம் செய்தார். மூல கிரந்தத்தின் சுவை நுணுக்கம் சிறிதும் குன்றாமல் வேறு மொழிகளில் இயற்றுவது எளிதான காரியமல்ல. ஸௌராஷ்ட்ர ஸஞ்ஜயன் எனப் போற்றப்படும். பத்மநாபய்யர் தெய்வத்திருவருளாலும் தம் புலமையாலும் அற்புதமான முறையில், மொழியாக்கம் என்று தோன்றா வண்ணம் ஸௌராஷ்ட்ர கீதையை எழுதி ஸௌராஷ்ட்ர சமூஹத்திற்குப் பெரும் புகழைச் சேர்த்தார். உபநிஷத்துக்களின் ஸாரமான ஸ்ரீமத் பகவத்கீதை பத்மநாபரின் முகார விந்தத்தினின்றும் பத்மநாபரின் அர்ஜுனனுக்குக் கிடைத்தது. ஸௌராஷ்ட்ர ஸ்ரீமத் பகவத்கீதை முகார விந்தத்தினின்றும் நம் அனைவருக்கும் கிடைத்தது நாம் செய்த புண்ணிய தவத்தின் பயனேயாகும்.

பத்மநாபய்யர் கீதையை எப்போதும் பாராயணம் செய்வதோடு நில்லாமல் மனனம் செய்ய ஆரம்பித்தார்.

கீதாஸ்ரயே அஹம் திஷ்டாமி கீதா மே ச உத்தமம் கிருஹம்

"கீதையை ஆதாரமாகக் கொண்டு நான் வாழ்கிறேன். கீதையே என் சிறந்த வீடு'' என்று கார்முகில் வண்ணன் கண்ணன் கீதாமாஹாத்ம்யத்தில் கூறியது போல் பத்மநாபய்யரும் கீதையைத் தம் உயிர் மூச்சாகக் கொண்டு வாழ்ந்தார். அவருடைய ஒவ்வொரு நாடி நரம்பிலும் கீதையின் நாதம் ஒலிக்கத் தொடங்கியது. அச்சமயம் மஹாத்மா காந்தியிடமிருந்து விரைவில் மதுரைக்கு வர இருக்கும் தம்மை மதுரையில் சந்திக்குமாறு ஒரு கடிதம் வந்தது.

அன்பனும், அண்ணலும் :

1934இல் மஹாத்மா காந்தி மதுரையில் "மதுரை காந்தி" என்று போற்றப்படும் ஸ்ரீ என்.எம்.ஆர். சுப்புராமன் இல்லத்தில் தங்கியிருந்தார் மஹாத்மா காந்தியின் பிரார்த்தனை நேரமான பொழுது புலரும்

நேரத்தில் பத்மநாபய்யர் அங்குச் சென்ற போது, மிக்க மகிழ்ச்சியுடன் காந்தியடிகள் அவரை வரவேற்றுக் கீதையிலிருந்து ஒரு பகுதியைப் பாராயணம் செய்யச் சொன்னார். பாராயணம் நிறைவு பெற்றதும் மஹாத்மாகாந்தி பத்மநாபய்யரின் உன்னதமான, இனிமையான உச்சரிப்பைப் புகழ்ந்ததோடு, தமது அலுவலகப்பணிகளை மேற்கொள்ளும் மாடியறைக்கு வரச்சொல்லித், தம் பணிகளுக்கிடையே பகவத்கீதை முழுவதையும் அவரைப் பாராயணம் செய்யச் சொன்னார். பத்மநாபர் மிகத் தெளிவாக, ஸ்பஷ்டமாக கீதையின் பதினெட்டு அத்தியாயங்களையும் பாராமல் பாராயணம் செய்ததை ஆழ்ந்த பரவஸத்துடன் கேட்ட மஹாத்மா காந்தியடிகள் அன்பரை மனமார வாழ்த்தி ஆசீர்வாதம் செய்தார். மஹாத்மா காந்தி தம் ஹரிஜன இதழிலும் பத்மநாபய்யரின் கீதா பாராயணத்தைப் புகழ்ந்து எழுதினார்.

கீதா ஸப்தாஹம் ;

பத்மநாபய்யர் நாடெங்கிலும் கீதையைப் பரப்ப வேண்டும் என்று உறுதி கொண்டார். " யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்", என்று அருளுணர்வுடன் ஸதா கீதா பாராயணம், கீதா பிரவசனம் செய்தார். எந்த நேரத்திலும் கீதையைக் கற்றுக் கொடுக்கத் தயாராக இருந்தார். கீதா ஸப்தாஹம் ஒன்று செய்ய வேண்டும் என்று விரும்பினார் கீதை தெரியாத புரோஹிதர்களைக் கொண்டு கீதா ஸப்தாஹம் எவ்வாறு செய்வதெனச் சிந்தித்தார். மனத்துணிவுடனும், உற்சாகத்துடனும் இரவு நேரங்களில் ஆனந்தாஸ்ரமத்தில் புரோகிதர்களுக்குக் கீதையைக் கற்பித்தார். அவர்களும் ஆர்வத்துடன் கற்றுக்கொண்டார்கள். இது மிகவும் போற்றுதற்குரிய செயலென்று நம் ஸௌராஷ்ட்ரா ஸமூஹ புரோஹிதர்களில் மிகுந்த பாண்டித்தியம் பெற்ற ஸ்ரீ P.S. கோவிந்தய்யங்கார் மிக மிகப் பெருமையுடன் அடிக்கடி சொல்வது வழக்கம்.

1942இல் மதுரையில் திருப்பரங்குன்றம் சாலையில் இருக்கும் ஸ்ரீவிவேகானந்த மடத்தில் முதன் முதலில் கீதா ஸப்தாஹத்தை பத்மநாபய்யர் நடத்தினார். முதல் நாள் காலையில் ஏழு மணிக்கு ஆரம்பித்து, ஏழாம் நாள் காலை ஏழு மணிவரை ஒவ்வொரு ஸத்ஸங்கக் குழுவினராக இரண்டு மணி நேரம் கீதா பாராயணத்தைத் தொடர்ந்து இடைவிடாமல் செய்தனர். ஒரு வினாடியும் தடையின்றி அந்த அகண்ட

கீதா பாராயணம் பயபக்தியுடன் நடைபெற்றதைப் பார்த்து மக்கள் மகிழ்ச்சியும் ஆச்சரியமும் அடைத்தார்கள்.

கீதா ஸப்தாஹத்தினால் ஆயிரக்கணக்கான மக்கள் கீதா பாராயணத்தைக் கேட்கவும், பார்க்கவும் முடிந்தது. மக்கள் மனதில் கீதையைக் கற்றுக் கொள்ளும் ஆசைக்கும், ஆர்வத்திற்கும் அந்தச் ஸப்தாஹம் வித்திட்டது. கீதையைக் கற்றுக் கொள்வோரின் எண்ணிக்கை நாளாக நாளாக அதிகரித்தது. 1948ல் நவபத்கான கோர்ட்டுத் தெருவிலிருக்கும் ஸௌராஷ்ட்ரா பெண்கள் பள்ளியில் பிரதி தமிழ்மாதம் மாதப்பிறப்பன்று காலை ஏழு மணி முதல் ஒன்பது மணி வரை கீதையின் பதினெட்டு அத்யாயங்களையும் ஆடவர், மகளிராகிய இருபாலரும் பாராயணம் செய்ய ஆரம்பித்தனர்.

அவிநாசாநந்தரின் பாராட்டு :

இராமகிருஷ்ணா மிஷன் அவிநாசாநந்த ஸ்வாமிகள் மதுரையில் C.M.V.கிருஷ்ணமாச்சாரியாரின் இல்லத்தில் தங்கியிருந்தபோது, பத்மநாபய்யரின் அழைப்பை ஏற்றுக் கீதா பாராயணத்தில் கலந்து கொண்டார். ஸ்ரீபத்மநாபய்யருக்குக் கீதையில் இருந்த ஆர்வமும், புலமையும் கண்டு வியந்தார். நூற்றுக்கணக்கான ஆடவரும், மகளிரும் சிறிதும் உச்சரிப்புப் பிழையின்றிக் கீதையைப் பாராயணம் செய்வதைக் கண்டு மகிழ்ந்தார்.

C.M.V.K.அவர்கள் இல்லத்திற்குப் பத்மநாபய்யரை வர வழைத்து," வடநாடுகளில் ஸம்ஸ்கிருதம் நன்கு தெரிந்திருந்தும் கீதையைப் படிப்பவர் மிகக் குறைவே. கீதா மந்திர், கீதாபவனம் என்று கீதைக்காகக்கட்டப்பட்ட பெரிய பெரிய கட்டடங்கள் உண்டு. அங்குள்ள சுவர்களில் தேரில் அர்ஜுனன் வீற்றிருக்க அச்சுதன் தேரோட்டியாக இருக்கும் சித்திரம் பல வண்ணங்களில் தீட்டப்பட்டிருக்கும். கீதா சுலோகங்கள் சலவைக் கற்களில் பொறிக்கப்பட்டிருக்கும். ஆனால் அங்கு கீதை பாராயணம் நடைபெறுவதில்லை. இங்கோ தமிழ்நாட்டிலே, மதுரையம்பதியிலே நூற்றுக்கணக்கானோர் அழகான உச்சரிப்புடன், எவ்வளவு ஸரளமாக, இனிமையாக கீதாபாராயணம் செய்வதைக் கேட்டு அளவிலா ஆனந்தமடைகிறேன். ஆகையால் இங்கு ஒரு கீதா பவனம் ஸ்தாபிக்க வேண்டும்" என்று கூறித் தம் எண்ணத்தை வெளிப்படுத்தினார்.

இவ்வாறு அவிநாசாநந்த ஸ்வாமிகள் மதுரைக்கு வரும்போதெல்லாம் கீதா பவனம் ஸ்தாபிக்க வேண்டும் என்பதை வற்புறுத்திக் கூறலானார். இவ்வெண்ணம் பத்மநாபய்யரின் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்து விட்டது. அதற்காக முயற்சிகள் செய்யலானார்.

மதுரை காந்தியின் அறக்கொடை :

பத்மநாபய்யர் ஸௌராஷ்ட்ர ஸமூஹப் பிரமுகர்களிடம் தம் எண்ணத்தை வெளியிட்டு, நிதி திரட்டுவதைப் பற்றி ஆலோசனை நடத்தினார். அச்சமயத்தில் மதுரையின் காந்தியெனப் போற்றப்படும். N.M.R.சுப்புராமன் தம் அருந்தவப் புதல்வியான சீதாபாயின் மரணத்தால் மீளாத்துயரில் மூழ்கியிருந்தார். பத்மநாபய்யர், T.K. ராமா முதலியோர் N.M.R.S. இல்லம் சென்று ஆறுதல் கூறி வந்தனர். யாக்கையின் நிலையாமையையும், முக்திக்கு மார்க்கத்தையும் கீதை சுலோகங்கள் மூலமும், தாம் இயற்றிய சுலோகங்கள் மூலமும் பத்மநாபர் பாடிக் காண்பித்து அவரைத் தேற்றினார். பத்மநாபரின் வார்த்தைகளுக்கிணங்கத் தம் மகள் சீதாபாயின் நினைவாக N.M.R. சுப்புராமன் அவர்கள் பத்தாயிரம் ரூபாயைக் கொடுத்தார். எஸ்.பி. கிருஷ்ணமாச்சாரி, ஓ.எல்.வி.ராமசாமி அய்யர், டி.எஸ். இராமலிங்கம், என்.எஸ். கோவிந்தய்யர், அன்னாபாக்கியலக்ஷ்மி அம்மாள், ஓ.எல்.வி.ஆர். தனலக்ஷ்மி அம்மாள், என்.ஜி. கிருஷ்ணாமணி அம்மாள், அல்லு துளஸி அம்மாள் முதலானோர் நம் ஸமூஹ மக்களிடம் நிதி வசூல் செய்தனர். மக்கள் அனைவரும் தம் தம் சக்திக்குத் தகுந்தபடி நன்கொடை அன்புடன் வழங்கினர்.

தெய்வக்குடில் தோன்றுதல் :

இறைவனின் திருவருளாலும், ஸாதுக்கள் பலரின் அயராத முயற்சியாலும், நம் ஸமூஹ மக்களின் பொருள் உதவியாலும் கீதா பவனம் உருவாகும் காலம் கனிந்தது. ஸ்ரீ அவிநாஸாநந்தா ஸ்வாமிகளின் ஆசையும், பத்மநாபய்யரின் ஆசையும் நிறைவேறும் காலம் நெருங்கியது. ஸ்ரீமந் நாராயணனின் திருவருளால் மதுரையில் காமராஜர் சாலையில் அமெரிக்கன் மிஷன் சந்தில் 3-ஆம் எண் இலக்க ஓர் ஓட்டு வீடு வாங்கப்பட்டது. சிறந்த திறமையும் அனுபவமும் வாய்ந்த பொறியாளர் ஆலோசனைப் படி கட்டடம் கட்டத் திட்டமிடப்பட்டது.

25.1.61ஆம் தேதி ஞானானந்த கிரி ஸ்வாமிகளால் வாஸ்து பூஜை செய்யப்பட்டது. 9.12.61ஆம் தேதி பத்மநாபய்யர் தலைமையில் என்.எம்.ஆர். சுப்புராமன் அவர்களால் கட்டடத் திறப்பு விழா சிறப்பாக நடைபெற்றது. ஸகல வேலைகளும் பூர்த்தியான பின் சில மாதங்கழித்து வைதீக முறைப்படி கிருஹப்பிரவேசம் நடைபெற்றது. கீதா பவன கீழ்த்தள ஹாலுக்குச் சீதாஹால் என்ற பெயர் சூட்டப்பட்டது. சில ஆண்டுகளுக்குப் பின் ஆத்ம ஞானி K.L.N. ஜானகிராமன் துணைவியாரின் நினைவாக 'ராஜாமணி ஹால்' என்ற பெயருடன் மேல் தளம் கட்டப்பட்டது.

விழா நிகழ்ச்சிகள் :

கிருஹப்பிரவேசத்தையொட்டி நடந்த ஊர்வலத்தில் ஏராளமான அன்பர்கள் பங்கேற்றுச் சிறப்பித்தனர். சான்றோர் பலர் வாழ்த்துரை வழங்கினர். 10 நாள்களுக்கு விழா நடைபெற்றது. பல ஹரிகதா காலக்ஷேபங்கள் நடந்தன. அதைத் தொடர்ந்து மார்கழி மாதம் முழுவதும் கீதாபவனத்திலேயே காலையிலும், மாலையிலும் கீதா பாராயணம் நடந்தது. இன்றும் தொடர்ந்து ஆண்டு முழுவதும் நடைபெறுகிறது.

மொழிபெயர்ப்பாளரின் சொல்லாற்றல் :

கவிபுனையும் ஆற்றல் மிக்க பத்மநாபய்யர் சொல்வன்மை மிகுந்தவராயும் திகழ்ந்தார். ஸம்ஸ்கிருதம், தமிழ், ஸௌராஷ்ட்ரம், ஹிந்தி என்னும் நான்கு மொழிகளிலும் நல்ல பாண்டித்தியம் பெற்றிருந்தார். 1939இல் ஹரித்துவாரில் இருந்து தென்னாட்டு யாத்திரை மேற்கொண்ட ஸ்வாமி மஹேஸ்வராநந்த மண்டலேஸ்வரர் ஸௌராஷ்ட்ர விப்ர குலத்திலகரான பத்மநாபய்யரின் நெருங்கிய நண்பரான ஸ்வாமி சிவானந்த சரஸ்வதி அவர்களின் வார்த்தைக்கிணங்கி மதுரைக்கு வருகை புரிந்தார். ராவ்பகதூர் ஸ்ரீ K.M.S.லெக்ஷ்மணய்யர் ஸ்வாமிகள் தங்குவதற்கு ஸ்ரீவிவேகானந்த மடத்தில் ஏற்பாடுகள் செய்தார். முப்பது ஸந்நியாஸிகளுடன் பத்து நாள்கள் அம்மடத்தில் தங்கியிருந்த ஸ்வாமி மஹேஸ்வரானந்த மண்டலேஸ்வரர் தினந்தோறும் மாலையில் சுமார் இரண்டு மணி நேரம் வேதாந்த உபந்யாஸம் ஹிந்தி மொழியில் செய்தார். ஹிந்தி தெரியாத மக்கள் புரிந்து கொள்வதற்காகத் தமிழில் மொழி பெயர்க்கும் பொறுப்பை அன்புடன் பத்மநாபய்யர் ஏற்றுக் கொண்டார்.

மொழி பெயர்ப்பாளரான பத்மநாபய்யரின் பக்திரசம் ததும்பம் விளக்கங்களைக் கேட்டுத் திரளாகப் பக்தர்கள் வந்து கூடி ஆனந்தப்பரவஸம் அடைந்தனர். மஹேஸ்வரானந்த ஸ்வாமிகளுடன், பத்மநாபய்யருக்கும் பக்தியுடன் அன்பர்கள் தினந்தோறும் விருந்து படைத்தனர். இவற்றையெல்லாம் பார்த்த மஹேஸ்வரானந்த ஸ்வாமிகள் ஹரித்துவாரை அடைந்ததும் நூற்றுக்கணக்கான ஸந்நியாஸிகளின் மத்தியில் சுவாமி சிவாநந்தரிடம், "தென்னாட்டினர் ஸாதுக்களிடம் அதிக அன்பு காட்டுகின்றனர். மதுரையில் நடந்த வரவேற்பைப் போல், பக்தர்கள் திரண்டு வந்து உற்சாகத்துடன் உபன்யாஸத்தைக் கேட்டது போல் வேறெந்த ஊரிலும் நடைபெறவில்லை. இந்தச் சிறப்பிற்கெல்லாம் காரணம் பத்மநாபய்யரின் மொழிபெயர்க்கும் திறனும், சொல்வன்மையுமேயாகும்," என்று பத்மநாபய்யரை மிகவும் புகழ்ந்து பேசியதைச் சுவாமி ஸிவானந்த ஸரஸ்வதி அவர்கள் கூறியுள்ளார். இவ்வாறெல்லாம் மஹான்களால் போற்றப்படும் பத்மநாபய்யர் நம் ஸமூஹத்தில் அவதரிக்க, நாம் பெரிதும் புண்ணியம் செய்திருக்க வேண்டும்.

அற்புதம் புரிந்த மஹான் :

ஸ்ரீபரமாநந்தபுரி குரு ஸ்வாமிகளுடன் பத்மநாபய்யர் காசி யாத்திரைக்குச் சென்ற போது அவரின் மஹத்துவத்தை உணர்த்தக்கூடிய ஒரு சம்பவம் நடந்தது. கங்கைக் கரையில் கீதாபவன சிஷ்யர்களுடன் பத்மநாபய்யர் நின்று கொண்டிருந்த போது ஒரு தொழு நோயாளி மற்றவர்களை இடித்துத் தள்ளிக் கொண்டு பத்மநாபய்யரின் அருகில் வந்து அவருடைய பாதாரவிந்தங்களில் விழுந்து வணங்கினான். உடனே அவரும் "தீர்க்காயுஷ்மான் பவ" என்று சொல்லி ஆசீர்வதித்துத் தம் இரு கைகளாலும் அவனைத் தொட்டு எழுப்பினார். எழுந்து நின்ற அத்தொழுநோய்க்காரனோ, "சுவாமி, என் உடல் நிலையைக் கண்டுமா இப்பேர்ப்பட்ட ஆசி வழங்கினீர்கள்? இந்த உடலின் எரிச்சலையும், வேதனையையும் தாங்க முடியாமல் நான் படும் அவஸ்தைக்கு அளவே இல்லை. என்னுயிர் விரைவில் பிரிய வேண்டுமென்று ஆசீர்வதியுங்கள்" என்று கண்ணீர் பெருகக் கதறினான்.

கருணைக்கடலான பத்மநாபய்யர் அன்புடன் அவனைத் தடவிக் கொடுத்து, "அப்பா! நீ கவலைப்படாதே. இந்த நோய் திருமாலின்

திருவருளால் விரைவில் குணமாகி விடும்", என்று கூறினார். இரண்டு நாள்கள் கழித்து அதே தொழுநோய்க்காரன் அங்கிங்கும் அலைந்து காசியில் தங்கியிருந்த பத்மநாபய்யர் இருப்பிடத்திற்கு வந்து சேர்ந்தான். பத்மநாபய்யரின் திருவடிகளில் விழுந்து வணங்கிப் பலவாறு போற்றினான். "சுவாமி , தங்கள் சத்திய வாக்குப் பலித்து விட்டது. என் உடல் உபாதைகளும், எரிச்சலும் குறைந்து கொண்டே வருகிறது. என் தோற்றத்தில் நல்ல மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. உங்களுக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்?" என்று கண்களில் ஆனந்தபாஷ்பம் பொங்கக் கேட்டான். பதம்நாபய்யரோ அவனைக் கையசைத்துக் காட்டி, ''எல்லாம் இறைவனின் திருவிளையாடல், ஒரு கருவியாக உள்ள என்னைப் புகழ வேண்டா," எனறு அடக்கத்துடன் கூறினார்.

அருகிலிருந்த அன்பர்களோ இச்சம்பவத்தினால் ஆச்சரியப்பட்டனர். பத்மநாபய்யரை அற்புதம் புரிந்த மஹான் எனப் போற்றினர். அவர்களிடமும் பத்மநாபய்யர், "இங்கு நடந்த சம்பவத்தை வெளியில் தெரிவிக்க வேண்டா, ஒரு குறிக்கோளுக்காகப் பாடுபட்டுக் கொண்டிருக்கும் என் லட்சியப்பாதை இதனால் மாறிவிடும். மக்கள் பலர் தம் குறைகளை, வியாதிகளைப் போக்கிக் கொள்ள என்னை நாடி வர ஆரம்பித்து விடுவர். என்னிடம் உண்மையில் எந்த அற்புத சக்தியும் இல்லை. இந்தச் சம்பவத்தை எல்லோரும் மறந்து விடுங்கள்,''என்று கூறினார்.

வருண பகவானை அழைத்தல் :

ஒரு சமயம் மதுரையில் தண்ணீர்ப்பஞ்சம் வந்த போது நவபத்கானா கோர்ட் தெருவிலிருக்கும் ஸௌராஷ்ட்ர பெண்கள் பள்ளியில் பத்மநாபய்யர் நம் ஸமூஹ புரோஹிதர்களைக் கொண்டு ஒரு பெரிய வருணஜபம், யக்ஞம் செய்தார். அப்போது அவர் தினமும் மழையின் வருகைக்காக ஒரு பாட்டை இயற்றி எல்லோரையும் பாடச்செய்தார்.

''மழையின்றி மாநிலம் வரண்டது வருணா
மாந்தர் படும்துயர் அளவில்லை யந்தோ
பிழையென்ன செய்யினும் பெருமனதுடனே
பேணுவதுன் கடன் பேரருட் கடலே''

என்ற பாடலால் வருணபகவானும் மனம் உருகிப் பனிக்கட்டி மழையாக வாரி இறைத்தார். மழையின்றிப் பஞ்சம் ஏற்பட்ட போது ஸ்ரீ முத்து ஸ்வாமி தீக்ஷிதர் அம்ருதவர்ஷிணி ராகத்தில் "ஸத்ய ஸுவ்ருஷ்டி வர்ஷய வர்ஷய'' உடனே நல்ல மழை பொழிய வேண்டும் என்று பாடிய்வுடன் மழை பொழிந்ததைப் போல ஸௌராஷ்ட்ர ஸமூஹ மகான் சுகந்த துய தீர்த்தார்ய சுவாமிகள் தஞ்சாவூரில் பஞ்சம் ஏற்பட்டபோது வருண பகவானைத் துதித்துப் பாடிய பாடலால் மழைபெய்ததைப் போல பத்மநாபய்யரின் பாடலால் நல்ல மழை பெய்தது. பத்மநாபய்யர் வருண பகவானிடம் மட்டும் அன்றிப் பஞ்ச பூதங்களிடமும் பிரார்த்தனை செய்திருக்கிறார். மிதமான வெயில் வேண்டும் மிதமான மழை வேண்டும் காற்றும் அவ்வாறே மிதமாய் வேண்டும் என்று பாடியுள்ளார்.

விருப்பு வெறுப்பு கடந்த நிலை :

ஸ்ரீபரமாநந்தபுரி சுவாமிகளுடன் புனிதயாத்திரை பத்மநாபய்யர் செய்த போது பூரிஜகந்நாத்தில் ஸமுத்ர ஸ்நாநம் செய்ய அனைவரும் சென்றனர். அலைகள் கொந்தளிக்கும் அக்கடலில் குளிக்கப் பத்மநாபய்யர் தயங்கியபோது, ஸ்ரீபரமாநந்தபுரி சுவாமிகள் சற்று ஆழத்திற்குச் சென்றால் அலைகளின் பயமில்லை என்று கூறிக் பத்மநாபய்யரை வற்புறுத்தி கரையிலிருந்து கடலில் சுமார் 15 அடி தூரத்திற்கு அப்பால் அழைத்துச் சென்றார். இருவரும் கைகோர்த்து ஸ்நாநம் செய்தனர். ஒரு பெரிய அலை எழுந்து இருவரையும் பிரித்தது. பரமாநந்தபுரி சுவாமிகள் எவ்வாறோ சமாளித்துக் கொண்டு கரைக்கு வந்து சேர்ந்தார். ஆனால் பத்மநாய்யரோ அலைகளால் அங்குமிங்கும் அலைக்கழிக்கப்பட்டு, வெகு சிரமப்பட்டு, நேரங்கழித்துக் கரை வந்து சேர்ந்த போது, தம்மை இந்நிலைக்கு ஆளாக்கிய ஸ்வாமிகள் மீது சிறிது கூட சினமோ, வெறுப்போ கொள்ளாமல் புன்முறுவல் பூத்தார். உடனே பரமாநந்தபுரி ஸ்வாமிகள் அவரை ஆலிங்கனம் செய்து, பொறுமையின் இருப்பிடமாகத் திகழ்ந்த அவரைப் பலவாறு புகழ்ந்து பேசினார்.

புனிதமான வாழ்க்கை நெறி :

அன்பும், அடக்கமும் உருவாய் அமைந்த அவரின் எளிய தோற்றம்,

கருணை ததும்பும் கண்கள், புன்முறுவல் பூத்த முகம் அவரை ஒரு சிறந்த மஹானாகப் பறைசாற்றுகின்றன. தினசரி காலையில் பிரஹ்ம முஹுர்த்தத்தில் எழுந்து கீதை பாராயணம் செய்வது காலை சிற்றுண்டி முடிந்ததும் ஒன்பது மணி முதல் பதினோறு மணி வரை கீதா பிரவசனம் செய்வது, அதன் பின் எந்த நேரத்தில் யார் வந்தாலும் கீதையைக் கற்றுக் கொடுப்பது. நேரம் கிடைக்கும் பொதெல்லாம் பல நூல்களை எழுதுவது பத்மநாபய்யரின் அன்றாட அலுவலாகும்.

ஒவ்வொரு திங்கட்கிழமையும் மாலை ஆறு மணி முதல் எட்டு மணி வரை தம் இல்லத்தில் தாழியற்றிய கீதாகீதுன், ஆன்ம போதத்தாலாட்டு முதலிய நூல்களிலுள்ள பாடல்களைப் பாடிப் பஜனை செய்வார். செவ்வாய்க்கிழமை தோறும் காலையில் தம் இல்லத்திலிருந்து புறப்படும் போது கீதையைப் பாராயணம் செய்ய ஆரம்பித்துப் பாதயாத்திரையாகவே திருப்பரங்குன்றம் சென்று முருகனைத் தரிசனம் பண்ணிவிட்டு மீண்டும் வீடு திரும்பும் வரை கீதையைப் பாராயணம் செய்து கொண்டே வருவது வழக்கம்.

பெரியோர்களும், வித்வான்களும் தம்மை நாடி வந்த போது அவர்களை அன்புடன் வரவேற்றுப் பணிவுடன் ஒரு மாணவனைப் போல் நடந்து கொண்டார். "கற்றது கைம்மண்ணளவு, கல்லாதது உலகளவு" என்ற எண்ணத்துடன் அடக்கத்தின் மறு உருவாய்த் திகழ்ந்தார். "வாது வந்தான் கெரிகின் விர்தா தி^{3}ன்னு கம்டுனொகன் " பயனில்லாத வீண் வார்த்தைகளைப் பேசிப் பொன்னான காலத்தை வீணே கழிக்க வேண்டாம் என்ற நடனகோபாலநாயகி சுவாமிகளின் அருள் உபதேசத்திற்கிணங்க அதிகம் பேசாமல், உன்னத லட்சியப் பாதையில் முன்னேறினார். பொருளாசை அற்றவராய் அருள் வேட்கையுடையவராய்த் திகழ்ந்தார். காங்கிரஸ் தியாகியான அவருக்கு அரசாங்கம் ஐந்து ஏக்கர் நிலத்தை இனாமாக வழங்கியது. ஆனால் அவரோ பூமிதானயக்ஞம் நடத்திக் கொண்டு மதுரைக்கு வந்த வினோபாஜியிடம், அந்த ஐந்து ஏக்கர் நிலத்தைத் தானமாகக் கொடுத்துத் தியாகச் செம்மலாகத் திகழ்ந்தார்.

பத்மநாபய்யர் தம் இல்லத்தில் நடைபெறும் விசேஷங்களில் கலந்து கொள்ளும் அனைவரையும் ஏழை, பணக்காரன், படித்தவன், பாமரன் என்ற பாகுபாடின்றி ஒரே மாதிரி வரவேற்று உபசரித்தார். தம் மகள் வஸந்தாவின் திருமண வைபவத்தின் போது விருந்துக்கு முதல்

பந்திக்கு அமர்ந்த ஏழை எளியோரைப் பத்மநாபய்யர் வரவேற்றுவிருந்து படைத்தது அவரது ஸமத்துவ புத்தியைக் காட்டுகிறது. " எல்லா உயிர்களிடத்தும் நான் ஸமமாக இருக்கிறேன்" என்று பகவத்கீதையில் பரந்தாமன் பகர்ந்ததைப் படித்த பத்மநாபய்யர் அவ்வுணர்வுடன் வாழ்ந்தார் என்பதை இந்நிகழ்ச்சி உணர்த்துகிறது.

கீதையின் நாயகனான கிருஷ்ண பகவானையே தம் உயிராய் மதித்து வாழ்ந்த பத்மநாபய்யர் அமைதியின் இருப்பிடமாய்ச் சாந்த ஸ்வரூபியாய்த் திகழ்ந்தார். தம்மிடம் கீதையைக் கற்றுக் கொள்பவர், தவறாகச் சொன்னாலும் , சினங்கொள்ளாது குழந்தைகளின் மழலைப் போல், கேட்பார். உச்சரிப்பதிலும், பதம் பிரிப்பதிலும் பிழைகள் ஏற்படும் போது, "பழகப் பழகச் சரியாகி விடும், பயிற்சியால், முயற்சியால், சிரத்தையால் எதையும் நன்கு கற்க முடியும்", என்று கூறி ஊக்குவிப்பார்.

பன்மொழிப்புலமை பெற்றுள்ள பத்மநாபய்யர் மராட்டிமொழியையும் நன்கு அறிந்திருந்தார். கீதையின் தியான சுலோகங்களையும், கீதையின் 15வது அத்யாயத்தையும் மராட்டிமொழியிலே மொழியாக்கம் செய்து தம் சிஷ்யர்களுக்குப் பாராயணம் செய்யக் கற்றுக் கொடுத்தார். வினோபாஜி பாதயாத்திரையாக மதுரைக்கு வந்த போது அவருடைய முன்னிலையில் அவருடைய தாய் மொழியான மராட்டி மொழியில், பத்மநாபய்யர் தம் சிஷ்யர்களைக் கீதை பாராயணம் செய்யச் செய்தார். அதைக் கேட்டு அகமகிழ்ந்த வினோபாஜி பத்மநாபய்யரைப் புகழ்ந்து நல்லாசி வழங்கினார். வெளிநாடுகளிலிருந்து மதுரைக்கு வரும் ஞானிகளை மஹான்களைப் பண்டிதர்களை நேரில் சென்று சந்தித்து ஆசி பெறுவார். அவர்களைத் தரிசிக்கச் செல்லும் போது கூட்டமிருந்தால் ஓர் ஓரமாக அமர்ந்து கூட்டம் கலையும் வரை காத்திருந்து, பின் அவர்களை நெருங்கி, வணங்கி ஆசிபெறுவார். தமக்கு ஏற்படும் ஐயங்களைக் கூறி விளக்கம் பெறுவார். நானென்ற அகங்காரமோ, ஆணவமோ இன்றி எப்பொழுதும் அமைதியாகவும், அடக்கமாகவும் இருப்பார்.

ஸ்ரீ நாயகி சுவாமிகளின் கீர்த்தனைகள் :

மதுரை ஸௌராஷ்ட்ர பிரமுகரும், சிறந்த தொழில் அதிபரும்

பத்மநாபய்யரின் நெருங்கிய நண்பருமான ஸ்ரீசி.எம்.வி. கிருஷ்ணமாச்சாரி அவர்கள் பத்மநாபய்யரின் மொழிப்புலமையைப், பல்வேறு திறமைகளைப் பள்ளிப்பருவத்திலிருந்தே நன்கு அறிந்தவர்,ஸௌராஷ்ட்ர ஆழ்வார், “மதுரையின் ஜோதி” என்றெல்லாம் போற்றப்படும் ஸ்ரீமந்நடன கோபாலநாயகி ஸ்வாமிகள் கவின்மிகு ஸௌராஷ்ட்ர மொழியிலும், தீந்தமிழ் மொழியிலும் அருளிய கீர்த்தனைகளை அச்சிட்டுப் புத்தக வடிவில் வெளிவரத் தீவிரமுயற்சி செய்து கொண்டிருந்தார். “இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன் கண் விடல்,” என்ற வள்ளுவர் வாக்கின்படி அப்புத்தகம் உருவாக்கும் பணியைப் பத்மநாபய்யரிடமும், ஸ்ரீமந்நடன கோபால நாயகி ஸ்வாமிகளின் பேரனான ஸ்ரீ கோபாலய்யரிடமும் ஒப்படைத்தார். பத்மநாபய்யர் தமக்குக் கொடுக்கப்பட்ட பணியைப் பசி நோக்காது, கண் துஞ்சாது, ஆராய்ந்து, பாடல்களைத் தொகுத்து, வாக்குப்பரம்பரையாக வரும் சொற்களில் உள்ள சிறு பிழைகளைத் திருத்தி புத்தகருபமாக வெளிவர வடிவமைத்துக் கொடுத்ததோடு முதல் பதிப்பில் முன்னுரையும் எழுதினார்.

ஸ்ரீ ராமகிருஷ்ண ஸமாஜம் :

ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரிடம் எல்லையற்ற பக்தி கொண்டிருந்த G.A.இராமமூர்த்தி அவர்களின் முயற்சியால் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்ரீஇராமகிருஷ்ண ஸமாஜத்திற்குப் பத்மநாபய்யர் முதன் முதலில் தலைவராக இருந்து அரிய சேவை செய்தார். அந்த ஸ்தாபனத்தின் மூலம் ஒவ்வொரு தமிழ்மாதப் பிறப்புத் தோறும் ஸ்ரீமத்பகவத் கீதை ஸம்பூர்ண பாராயணம் செய்து அநேக மக்களை அப்பாரயணத்தில் ஈடுபடச் செய்தார்.

மனப்பக்குவம் :

1942ம் ஆண்டில் இரண்டாவது உலக மஹாயுத்தத்தின் போது மக்கள் பீதியுற்று அல்லல்பட்டு, அவதியுறுங்காலத்தில் வியாபாரிகள் பெரும் பொருளீட்டிக் கொண்டிருந்தனர். சாயப்பவுடர் வியாபாரம் செய்து கொண்டிருந்த பத்மநாபய்யரின் ஆத்ம நண்பர்களான ஸ்ரீ A.R. இராகவனும், C.M.V.கிருஷ்ணமாச்சாரியும்

பத்மநாபய்யரையும் அத்தொழிலில் ஈடுபடுமாறு கூறினார். ஆனால் பத்மநாபய்யரின் மனம் அதற்கு ஒப்பவில்லை. பொருளீட்டுவதை விடத் தேசத்தை ஆபத்தான நிலையிலிருந்து காப்பதும், மக்களை அமைதிப்படுத்துவதுமே தலையாய கடமையெனக் கருதினார். இரவும், பகலும் கீதா பாராயணத்திலேயே ஈடுபட்டார்.

ஹூடினிம் பிஸினிம் சல்நிம் ஹோங்கும்
நடனகோபால் தி⁴யான் ஸொண்ணகோ

எழும்போதும், அமரும் போதும், நடக்கும் போதும், உறங்கும் போதும், நடனகோபாலனின் சிந்தனையை விட்டு விடாதே, என்று ஸ்ரீமந் நடனகோபால நாயகி ஸ்வாமிகள் அருளியதைப் போல் தம் சிந்தனையிலும், சொல்லிலும், செயலிலும் பத்மநாபய்யர் கீதா தியானத்திலேயே ஈடுபட்டிருந்தார்.

கீதா அஷ்டாவதானி :

பத்மநாபய்யருக்குக் கீதையில் சிறந்த பாண்டித்தியம் இருப்பதைப் பார்த்த நம் ஸமூஹ பெரியோர்களும், பண்டிதர்களும் அவருடைய திறமைக்குத் தக்க விருது வழங்கிப் பாராட்ட எண்ணினர். ராவ்பகதூர் ஸ்ரீ K.M.S. லெக்ஷ்மணய்யர், ராஷ்ட்ர பந்து ஸ்ரீ L.K.T. துளசிராம், ஸ்ரீ P.S. கிருஷ்ணய்யர், ஸ்ரீ கு.வெ. பத்மநாபய்யர் ஆகியோர் இதில் முன்னின்று முயற்சி செய்தவராவர். வழங்கறிஞர் R.S. சுந்தரராமன், வாசஸ்பதி N.S. விஸ்வநாதய்யர் உட்பட எண்மர் ஸௌராஷ்ட்ர பெண்கள் பள்ளியில் கூடிப் பத்மநாபய்யரின் அறிவுத் திறத்தைச் சோதித்தனர்.

அன்று மஹாபாரதப் போரில் அபிமன்யு பத்ம வியூஹத்தின் நடுவில் நின்று கொண்டு, தன்னை எதிர் நோக்கி வரும் அம்புகளைச் சூறாவளிக் காற்றைப் போல் சுற்றிச் சுற்றித் தன் அம்புகளால் தடுத்துப் போர் செய்தான். அதனால் வீர அபிமன்யு என்று பட்டமும் பெற்றான்.

பண்டிதர் எண்மரால் சூழப் பெற்ற ஒரு நவீன பத்ம வியூஹத்தின் நடுவில் நின்று கொண்டு பத்மநாபய்யரும் தம்மை நோக்கி வரும் கேள்விக்கணைகளுக்குத் தயக்கமின்றிப் பதில்கணை தொடுத்தார். எண்மரும் எட்டுவிதமான முறைகளில் கேள்விகள் கேட்டனர்.

உதாரணமாக ஒரு சுலோகத்தின் முதல் பதத்தைக் கூறி அந்தச் சுலோகம் முழுவதையும் கூறச் சொல்வது, ஒரு சுலோகத்தைச் சொல்லி அத்தியாயத்தின் பெயரைக் கேட்பது, ஒரு சுலோகத்தைக் கூறி அதன் பொருளைக் கேட்பது, சுலோகத்தின் எண்ணைக் கேட்பது, எண்ணைச் சொல்லி அதற்குரிய சுலோகத்தைக் கேட்பது, ஒரு அத்தியாயத்தை கீழிருந்து மேலாக சுலோகங்களைக் கூறச் சொல்வது. ஒரு சுலோகத்தின் இறுதிப் பதத்தைக் கூறி அந்த சுலோகத்தையும் கூறச் சொல்வது, ஒரு சுலோகத்தின் பொருளைக் கூறி அதற்குரிய சுலோகத்தைக் கேட்பது. இப்படி எட்டுவிதமான முறையில் ஒருவர் பின் ஒருவராகவும்,கூட்டாகவும் இடைவெளியின்றிக் கேட்டபோது, பத்மநாபய்யரும் உடனுக்குடன் மிகச்சிறந்த முறையில் பதிலளித்த போது எல்லோரும் வியந்து *கீதா அஷ்டாவதானி* என்று அவரைப் போற்றினர். ஸௌராஷ்ட்ர பிராஹ்மண 9வது மஹாநாட்டில் அவருக்கு *கீதா அஷ்டாவதானி* என்ற பட்டம் வழங்கி கௌரவித்தனர்.

ஸௌராஷ்ட்ர கீதை :

பத்மநாபய்யர் ஸௌராஷ்ட்ர மொழியின் கீதையை மொழிபெயர்ந்துள்ளார். இவருடைய ஸௌராஷ்ட்ர கீதையின் சிறப்பை அறிந்த ஸ்ரீ அனந்த கிருஷ்ண சாஸ்திரி அவர்கள் 7.2.1952ல் மீனாக்ஷி அம்மன் திருக்கோயிலில் *ஸௌராஷ்ட்ர வியாஸர்* என்ற பட்டத்தை வழங்கினார். பத்மநாபய்யருடைய ஸௌராஷ்ட்ர கீதையின் சிறப்பை அறிந்த ஸ்ரீஅனந்த கிருஷ்ண சாஸ்திரி அவர்கள் 7.2.1952ல மீனாஷி அம்மன் திருக்கோயில் *ஸௌராஷ்ட்ர வியாஸர்* என்ற பட்டத்தை 5.1.1955இல் ஸ்ரீராமகிருஷ்ண ஸமாஜத்தினர் பத்மநாபய்யருக்கு *கீதா ரத்னம்* என்ற விருதை வழங்கினர். ஸ்ரீமான் மாதவ தீர்த்த ஸமஸ்தானம் ஸ்ரீ மஜ்ஜிகேஹல்லி மடாதிபதிகள் 23.9.1956ல் அவருக்கு "*கீதா பிரவசனபடு*" (*கீதைச் சொற்பொழிவில் நிபுணர்*)என்ற விருதை வழங்கினார்.

கீதை வெண்பா :

தமிழ் மொழில் பகவத்கீதையை மொழி பெயர்க்கவேண்டும் என்ற ஆர்வம் நீண்ட நாட்களாக இவருக்கு இருந்து வந்தது.

உப்புச்சத்தியாகிரஹத்தின் போது சிறையில் இருந்த சமயம் பென்சிலையும், பேப்பரையும் வைத்து கொண்டு தமிழில் மொழி பெயர்த்தார். பாவகையிலேயே மிகவும் கடினமான வெண்பாவைத் தேர்ந்தெடுத்து இனிய எளிய திமிழில் மொழிபெயர்த்தார். பத்மநாபய்யரின் தமிழில் வெண்பாப் பாடும் திறமையைப் புகழ்ந்த தமிழ் வித்வான் ஸ்ரீ வி.கே. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் அவருக்கு 7.8.1960-ல் *"வெண்பாபுலி"* என்ற பட்டத்தைக் கீதாபவனத்தில் வழங்கினார்.

பிதாமஹர் பீஷ்மரும், பத்மநாபரும் :

விதியின் வினைப்பயனாகப் பத்மநாபய்யர் சில ஆண்டுகள் பக்கவாத நோயால் பீடிக்கப்பட்டார். படுக்கையில் இருந்த போதிலும் அவர் பொழுதை வீணாகப் போக்காமல் கீதா தியானத்திலேயே ஈடுபட்டிருந்தார். தம் சிஷ்யர்களுக்கு கீதையில் ஏற்படும் ஐயங்களை அந்நிலையிலும் அகற்றினார். யுத்தகளத்தில் அம்புப்படுக்கையிலிருந்த பீஷ்மர் பாண்டவர்களுக்கு நீதி போதித்ததைப் போல் படுத்த, படுக்கையாக இருந்த பத்மநாபய்யர் வடமொழியிலிருந்த உத்தர கீதையைத் தம் தாய் மொழியான ஸௌராஷ்ட்ர மொழியில் மொழி பெயர்த்தார். தம்மால் எழுத இயலாது என்பதால் தம்மிடம் கீதை கற்றுக் கொள்ள வரும் அன்பர்களைக் கொண்டு எழுத வைத்தார். அவ்வாறு எழுதியவர்களில் அன்னா பாக்கியலக்ஷ்மி அம்மையாரின் மகளான திருமதி. பிருந்தா அவர்கள் குறிப்பிடத் தக்கவர்.

நோய்வாய்ப்பட்டுப் படுக்கையில் இருந்த போது யார் வந்து உடல் நலம் விசாரித்தாலும் இன்முகத்துடன், "இந்த வியாதி, உபாதிகளெல்லாம் உடலுக்குத் தான். நிர்விகாரமற்ற ஆத்ம சொரூபமாக எனக்குத் துன்ப மேது? விதியை வெல்ல யாரால் இயலும்? பிராரப்தவினை அனுபவித்தே தீரும், ஆத்மானந்தத்தில் திளைத்துக் கொண்டிருக்கும் எனக்கு இதனால் எந்த பாதிப்பும் இல்லை", என்பார்.

இவ்வாறு கீதையைத் தம் உயிர் மூச்சாகக்கொண்டு, கீதையை அனைவருக்கும் கற்றுக் கொடுத்துக் கீதைக் கருத்துப்படி வாழ்ந்த இம்மாஹான் தமது 64 வது வயதில் 12.11.63ஆம் தேதி காலை 10.30 மணிக்கு அமரர் ஆனார்.

இறுதி யாத்திரை :

உலகம் முழுவதையும் கீதாமயமாக்க விரும்பிய மஹான் பத்மநாபய்யரின் இறுதி யாத்திரையின் போது ஆடவர் முன்னாலும், மகளிர் பின்னாலும் கீதையைப் பாராயணம் செய்து கொண்டு சென்றனர். வெள்ளம் போல் மக்கள் கூட்டமாகப் பின் தொடர்ந்தனர். அன்னாருடைய சடலத்தை ஆற்று மணலைக் கொட்டிச், சந்தனக் கட்டைகளாலும், கற்பூரம் பசுவின் நெய் ஊற்றி சூடத்தாலும் அக்னி தேவனிடம் ஸமர்ப்பித்தனர். அவருடைய அஸ்தியைப் பல புண்ணிய ஸ்தலங்களுக்குக் கொண்டு சென்று புனித நதிகளிலும் கடலிலும் பக்தர்கள் கரைத்தனர்.

முடிவுரை :

கீதா குரு. பத்மநாபய்யரின் மறைவுக்குப் பின் அவரின் ஸத்திய ஸங்கல்பத்தின் படி கீதா அம்மையார் தம் இல்லத்திலும், கீதா பவனத்தில் கீதா ப்ரபோதரத்தினம் என்ற பட்டங்கள் பெற்ற அன்னா பாக்கியலக்ஷ்மி அம்மையார், ஒண்டிவில்லு,O.L.V.R. தனலெக்ஷ்மி அம்மையார் என்ற இரு அம்மையார்களும் தினந்தோறும் காலையிலும், மாலையிலும் கீதா பாராயணம், கீதா பிரவசனம், கீதா யக்ஞம் ஆகியவற்றைத் தொடர்ந்து செய்து வருகிறார்கள். கீதா அஷ்டாவதானி பத்மநாபய்யரின் ஜெயந்தி விழா கீதாபவனத்தில் பங்குனி மாதத்தில் 10 நாள்கள் மிக விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. அவ்வமயம் பல மஹான்களும், ஆன்றோர்களும், சான்றோர்களும், இசை விற்பன்னர்களும் கலந்து கொண்டு சிறப்பிக்கிறார்கள்.

ஓம் ஸ்ரீ ரஸ்து

"ஸௌராஷ்ட்ர" டி.ஆர் பத்மநாபய்யர் அபி நந்தனம்

மதுரை நகரத்தில் கீதா நிலையத்தைப் பிரதிஷ்டை செய்தவராயும் பகவத்கீதை முதலிய அநேகவித கிரந்தங்களைச் செய்தவராயும், விசேஷமாக ஸௌராஷ்ட்ர பகவத்கீதையை எழுதினவராயும், வியாச பகவத்கீதைக்கு "மாத்ரா மாத்ரேண" ஸௌராஷ்ட்ர பாஷையில் கீதா ரசனையினால் இரவும், பகலும் தன் ஸமாஜத்தில் அதையே பிரசாரம் பண்ணுவதில் கங்கணம் கட்டிக் கொண்டவராயும் இருக்கிற டி.ஆர். பத்மநாபய்யர் என்பவர் அவருடைய ஸௌராஷ்ட்ர பகவத்கீதையை பக்த ஸமாஜத்தின் வாயிலாக ஸ்திரீ புருஷ வித்தியாசமில்லாமல் ஒவ்வொரு நாளும் பாராயண முதலிய செய்கையினால் பகவத்கீதா கைங்கரியமே தன்னுடைய தனம் (ஆஸ்தி) என்று எண்ணுகிறார். இவ்விதமாக அவருடைய நித்தியம் செய்து வருகிற செய்கையைப் பார்த்து சந்தோஷமடைந்த அந்தரங்கத்தையுடைய நான் அப்பேர்ப்பட்ட இந்த ஸௌராஷ்ட்ர வித்வத் சிரேஷ்டராகிய இவரை *ஸௌராஷ்ட்ர வியாசர்* என்ற விருதினால் அலங்கரிக்கிறேன். மேலும் இந்த பாகவத சிரேஷ்டரை பகவானும் பின்வருமாறு ஆசீர்வதிக்கிறார்.

அந்நியாஸ் சிந்தயந்தோ மாம் ஏ ஜனா : பர்யுபாஸதே
தேஷாம் நித்யாபியுக்தானாம் யோக க்ஷேமம் வஹாம்யஹம்

இந்த பிரதிக்ஞைக்கு இணங்க அவருடைய யோக க்ஷேமத்தை வகிப்பதனால் பகவான் தயவுடன் அனுக்கிரஹம் செய்வாராக.

இப்படிக்கு
ஸுதீஜன விதேயன்
அனந்த கிருஷ்ண சாஸ்த்திரி
சாஸ்த்ர ரத்னாகர மஹாமஹோ பாத்ய

ஸ்ரீ மீனாக்ஷியம்மன் கோவில்
திருக்கல்யாண மண்டபம் மதுரை
7.2.52

(ஸம்ஸ்கிருத்தின் மொழிபெயர்ப்பு)

கீதா ஸப்தாஹம் கீதா ஸப்தாஹம் கீதா ஸப்தாஹம்

ஸ்ரீ கிருஷ்ணாய பரப்ரஹ்மணே நம!

ஸௌராஷ்ட்ர வியாஸர், கீதா அஷ்டாவதானி

ஸ்ரீ தொ.ரா. பத்மநாபய்யர் அவர்களுக்கு

ஸ்ரீமத் பகவத் கீதா ஸப்தாஹ விழாவின் போது அளிக்கப்பட்ட

அபிநந்தனப் பத்திரம்

யஸ்யாந்த:கரணம் நித்யம் கீதாயாம் ரமதே ஸதா

ஸ ஸாக்னிக : ஸதா ஜாபீ க்ரியாவான் ஸ.ச பண்டித:

"ஸ்ரீமத் பகவத் கீதா மஹாத்ம்யம்"

எவனுடைய உள்ளம் எப்போதும் கீதையில் ஆனந்தமடைகிறதோ அவன் அக்கினியைப் பூஜித்தவனாவான். இடைவிடாத ஜபம் செய்தவனாவான். செய்ய வேண்டிய கருமங்களையெல்லாம் செய்தவனாவான். எல்லாம் உணர்ந்த பண்டிதனாவான். என்று ஸ்ரீமத் பகவத் கீதா மஹாத்மியத்தில் அருளியபடி வித்வத் சிரேஷ்டராகிய ஸௌராஷ்ட்ர வியாஸர், கீதா அஷ்டாவதானி ஸ்ரீ தொ.ரா. பத்மநாபய்யர் அவர்கள் தம் வாழ்க்கை முழுவதும் ஸ்ரீமத் பகவத் கீதா பிரசாரத்திற்கென்றே அர்ப்பணம் செய்த மஹான் ஆவார்.

அன்னாருடைய தனி முயற்சியால் பல்லாயிரக்கணக்கான பக்த மஹாஜனங்கள் ஸ்திரி புருஷர் வித்தியாஸமின்றி, ஸர்வ ஸாஸ்திர மயமான ஸ்ரீமத் பகவத்கீதையை அறிந்து கொள்வதற்கும், கீதையைச் சம்பூர்ண பாராயணம் செய்வதற்கும் ஏதுவாயிருக்கின்றது.

நம் முன்னோர்களான ஸ்ரீமத் வேங்கடசூரி சுவாமிகள் ஸ்ரீ தொ.மு. ராமராய், ஸ்ரீமந்நடன கோபால நாயகி சுவாமிகள் ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகள் (குய்யான் தேவுன்) போன்றே பாகவத சிரேஷ்டரும் வரகவியுமாவார். பத்மநாபய்யரும்.

ஸ்ரீமத் பகவத்கீதா கைங்கரியமே உருவெடுத்தவராய பண்டித சிரோமணி ஸ்ரீ பத்மநாபய்யர் அவர்களை, பகவத்கீதா பக்தர்களாகிய நாம் இந்த அரியதொரு வைபத்தில், ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவின் திருவருளை முன்னிட்டு

'கீ தா ர த் ன ம்''

என்ற விருதினால் அலங்கரிக்கின்றோம். அன்னார் இறைவன் திருவருளால் சகல ஐஸ்வரியங்களுடன் பல்லாண்டு காலம் வாழ்வாராக

இப்படிக்கு

ஸ்ரீமத் பகவத் கீதா பக்த கோடிகள்

ஸ்ரீராமகிருஷ்ண ஸமாஜம்
மதுரை

ஜய மார்கழி மாதம்21ம் தேதி
5.1.1955

கீதா ஸப்தாஹம் கீதா ஸப்தாஹம் கீதா ஸப்தாஹம்

ஓம்
ஸ்ரீ :

ஸ்ரீமத் வீர ராமோ விஜயதேதராம்
ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸமஸ்த பிருதாங்கிதரும்
ஸ்ரீமன் மாதவ தீர்த்த ஸமஸ்தானம் ஸ்ரீ மஜ்ஜிகே ஹல்லி மடாதிபதிகளும்
ஸ்ரீமத் வீரராமச்சந்த்ர தேவரின் ஸ்ரீபாத பத்மாராதகரும்
ஸ்ரீ ஸ்ரீனிவாஸ மாதவ தீர்த்த ஸ்ரீபாதங்களின் கரகமல ஸஞ்ஜாதருமான ஸ்ரீ 108 ஸ்ரீவீர மாதவ தீர்த்த ஸ்ரீ பாதங்கள்

நமது ஸமஸ்தானத்தின் முக்கிய

ஸிஷ்யர் ஸ்ரீகீதா அவதானம் T.R. *பத்மநாபய்யர்* -க்கு
அபிமானி ஸ்ரீமந் நாராயண ஸ்மரண பூர்வகமாக
எழுதிக் கொடுத்த ஸன்மான பிருது பத்ரிகா
நாம் உங்களை அபிமானித்து நம் ஸமஸ்தானத்திலிருந்து

கீதா பிரவசனபடு

பிருது ஸன்மானப் பத்திரம் கொடுத்திருக்கிறோம். நீங்கள் இந்தப் ஸன்மானப் பத்திரத்தை ஸ்வீகரித்துக் கொண்டு ஸ்ரீமத் வீரராமச்சந்திரமூர்த்தியின் கிருபைக்குப் பாத்திராளாக வேண்டும்.

இதி ஸ்ரீமந் நாராயணஸ்மரணம்

முகாம் :-
துன்முகி வருஷம் புரட்டாசி மாதம் 8ந்தேதி
23.9.1956

ஓம்

கீதா அஷ்டாவதானி ஸ்ரீ டி.ஆர். பத்மனாபய்யருக்குக் கீதாபவன நிர்வாகக் கமிட்டியாரால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்ட பொழுது இராமனாதபுரம் தமிழ் வித்வான்

ஸ்ரீ வி.கே. ஸ்ரீ நிவாஸய்யங்காரால்

"வெண்பாப்புலி" என்ற பட்டம் பாடல் ரூபமாக வழங்கப்பட்டது

மன்னு புகழ் கொண்ட மதுரை நகரில் வசிக்கும் பாலர், விருத்தர், பாவையர் யாவரும் புரிந்து கீதை கற்றுத் தேர்ந்து சிரவணம் செய்து பேரின்பமடைய அனுகூலமாக இருப்பவரும், தேவபாஷையாகிய வடமொழி வல்லுநரும், தமிழ், ஹிந்தி, ஸௌராஷ்ட்ரம் முதலிய மொழிகளில் விற்பன்னரும் கவிதா சிரேஷ்டருமாகிய பிரம்ஹ ஸ்ரீ டி.ஆர். பத்மனாபய்யர் அவர்கள் தமிழன்னை செய்த தவப்பயனால் ஆசு மதுர, வித்தார சித்திரம் என்று சொல்லப்பட்ட நாற்கவிகளில் சிறந்த முதற் பாவாகிய வெண்பா பாடுவதில் தனக்கு நிகர் எவருமில்லையெனப் பாடுந் திறமையும் பெற்று விளங்கிறார். இவரது பாடல்கள் யாவற்றையும் புகழ்ந்து பல தமிழ்ப் புலவர்கள் பாடியிருக்கிறார்கள். ஆயினும் பொன்னாடை போர்த்தும் புனித நன்னாளில் எளியேன் மனமுவந்து கீதாபவனக் கமிட்டியார் மற்றும் அங்குக் குழுமியிருந்த பெரியோர்கள் அனுமதியுடன் இவருக்கு *"வெண்பாப்புலி"* என்ற பட்டமும் வழங்கி அவர் பொன்னடியில் இந்த வெண்பாவைச் சமர்ப்பிக்கிறேன்.

வெண்பாப் புலியெனப்பேர் மேவுபுகழ் பத்மநாபன்
தண்பாடலின் பந்தனை நுகர - பெண்பாகங்
கொண்டோனும் சீதரனும் கூடிக் குடிபுகுந்தார்
தன்டமிழ்க் கடலிலே தான்

வி.கே. ஸ்ரீ நிவாசய்யங்கார்,
தமிழ் வித்துவான், இராமநாதபுரம்

இங்ஙனம்
கீதா பவன நிர்வாகக் கமிட்டியார்,
7.8.1960

பிரஹ்மஸ்ரீ. தொ.ரா. பத்மநாபய்யர் அவர்கள் இயற்றிய நூல்கள்

1. ஆன்மபோத தாலாட்டு	-	தமிழ் மொழி பெயர்ப்பு
2. ஸௌராஷ்ட்ர பாஷையில் ஸ்ரீமத் பகவத்கீதா	-	தமிழ் எழுத்தில்
3. ஸௌராஷ்ட்ர பாஷையில் ஸ்ரீமத் பகவத் கீதை	-	தேவநாகரியில்
4. ஸ்ரீமத் பகவத் கீதை மூலம் முதல் 3 அத்யாயங்கள்	-	தமிழில்
5. ஸ்ரீமத் பகவத் கீதை (வெண்பா)	-	தமிழில்
6. ஸ்ரீமத் பகவத் கீதை (வினா விடை)	-	தமிழில்
7. ஸப்தரிஷி ராமாயணம்	-	தமிழில்
8. ஸப்தரிஷி ராமாயணு	-	ஸௌ. பா. த. எ.
9. அத்யாத்ம ராமாயணு	-	ஸௌ. பா. த. எ.
10. கீதா நிலைய பால பஜனுவளி (கீதா கீதுன்)	-	ஸௌ. பா. த. எ.
11. பிரஸ்னோத்தரி	-	தமிழ் எழுத்து
12. தமிழின் பெருமை (வெண்பா)	-	தமிழ்
13. இந்தியத்தாய் (பத்திய ரூபம்) பாரதநாட்டின் பண்டைப் பெருமை	-	தமிழ்
14. வேந்தன் துறவு (விருத்தப்பா)	-	தமிழ்
15. தேசிய கீதங்கள்	-	தமிழ்
16. இரங்கற் பாக்கள் (திலகர் முதல்)	-	தமிழ்
17. பூஜாவிதி - பாலபஜனுவளி	-	ஸௌ. பாஷை
18. திருவள்ளுவர் நாடகம்	-	தமிழ்
19. ஆசிரியர் தேசீய கீதங்கள்	-	தமிழ்
20. வருணன் திருப்பள்ளியெழுச்சி	-	தமிழ்

ஸ்ரீமத் பகவத் கீதை வெண்பா

பார்த்தாய ப்ரதி பே³ாதி⁴தாம் என்ற சுலோகத்தின் மொழி பெயர்ப்பு

ஆசிரியப்பா

1. நானிலம் புரக்கும் நாரா யணனே
மேனிலம் மாந்தர் மேவுவான் வேண்டிப்
பார்த்தனுக் கன்று பகர்ந்திடத் தோன்றினை
கீர்த்தியால் நிறைந்து கீதை யெனும் பெயர்[1]
கொண்டெழ ஆத்தும்[2] தத்துவா மிர்தம்
எண்டிசை பெருக ஈரொன் பானாய்
அத்தியா யங்கள் அமைத்துமே நின்றனை
நித்திய வத்துவின்[3] நிறைபெறு ஞானம்
தெளிந்த வியாதன்[4] திருவருள் சுரக்க
வளந்திகழ் அன்னாய்! மகிதல மிசையே
பாரத நூல்நடு பாகமாய் நின்றனை
வேரறப் பிறவி வினையெலாம் அறுக்கும்
உன்னத முறைகள் ஓதியே நின்றனை
உன்னுடை பெருமை உளமதில் நாளும்
பேசி நினைந்து பிழைபடா வகையில்
நேசமாய் நினைவில் நிறுத்துவன் என்றும்.

---

1. கீதை யெனும் பேர் - எனக் கொளல் சிறப்பு.

2. ஆர்த்தும் என்க.

3. வத்துவின் - வஸ்துவின் - பொருளின்

4. வியாதன் - வியாசன் - வியாச முனிவர்.

நமோஸ்துதே - என்ற சுலோகத்தின் மொழிபெயர்ப்பு :-

2. பரந்த விவேகமும் பனுவற் பணியால்
சிறந்த மகிமையும் தெய்வீகம் விளங்கப்
பூத்த தாமரை இதழே போல
நேத்ரங் கொண்ட நிர்மல வியாத!
பாரத மென்னும் தைலம் வார்த்து!
அஞ்ஞான மொழிய அவனியோ ருய்ய
மெய்ஞ்ஞான போத விரிசுடர் விளக்கை
ஏற்றியே வைத்தனை இன்னரு ளாலே!
ஆற்றிய நன்மையை அனுதினம் நினைத்து
தொழுவோம்! தொழுவோம்!! தொழுவோம்!!! யாமே!

ப்ரபன்ன பாரிஜாதாய - என்ற சுலோகத்தின் மொழிபெயர்ப்பு :-

3. சரண்புகுந் தோருக்குக் கற்பகத் தருவாய்க்
கருணை பொழியும் கண்ணன் காக்கக்
கோலினை ஏத்திக் காலியை[2] மேய்க்கும்
கொற்றவன் குரைகழல் குறுகினோம் காக்க!
கீதாம் ருதமே சுரந்திடும் தூயோன்
ஞாதா ஞான முத்திரை நாதன்
கண்ணன் கழலினை எண்ணித் துதித்துப்
புண்ணிய தெய்திப் புனிதம் பெறுவோம்.

---

1. வார்த்து - நிரப்பி எனில் மொழிபெயர்ப்பு சிறக்கும்.
2. காலியை - ஆவினை எனில் சிறப்பு.

ஸர்வோ பநிஷதோ கோ³ாவோ - எனும் சுலோகத்தின் மொழிபெயர்ப்பு :-

4. உபநிஷத் தெல்லாம் உயர்பசுக் கூட்டம்
அபிநவக் கீதையே அடைதகு க்ஷீரம்
கறப்போன் கண்ணன் கன்றாம் பார்த்தன்
சிறப்புறு பெரியோர் தீஞ்சுவை நுகர்வோர்.

வசுதே³வ சுதம் தே³வம்- எனும்சுலோகத்தின்மொழிபெயர்ப்பு:-

5. வசுதேவன் சுதனே மாபெருங் கடவுள் ;
கம்ச சாணுரரை தும்சம் செய்தோன் ;
தேவகி சிந்தை மகிழ்ந்திடும் செல்வன் ;
ஜகத்குரு கண்ணன் கழலிணை சரணே !

பீ⁴ஷ்ம த்³ரோண தடா ஜயத்ரத² ஜலா - எனும் சுலோகத்தின் மொழிபெயர்ப்பு :-

6. வீட்டு[1] துரோணர் விளங்கிய கரையாய்[2]
ஜயதிர தன்னதில் ஓடும் ஜலமாய்
நிருபன் காந்தாரன் நீலோத் பலமாய்க்
சல்லியன் கிராக வதியாய் நிற்கக்
கிருபனே நீரிற் கிளர்ந்தெழும் ஓட்டமாய்க்,
கர்ணன் கதித்தெழு திரையாய்க்[3] காண
அஸ்வத் தாம னோடு விகர்ணன்
பங்கப் படுத்தும் வெங்கட் சுராவாய்
துரியோ தனனீர் சுற்றும் சுழியாய்த்
அமைந்ததோர் ரணநதி ஐவர் கடந்தனர்,
பரமனே ஓட்டிய படகினில் அமர்ந்தே !

---

1. வீட்டு - பீட்டு - பீஷ்ம பீஷ்மர்

2. நதியின் இருகரைகள். பீஷ்மரும் துரோணரும்

3. திரை - அலை.

பாரா சர்யவச - என்ற சுலோகத்தின் மொழிபெயர்ப்பு :-

7. பராசரன் பயந்த வியாசமா முனி,தன்
தூயநல் வாயிடை தோன்றிய மொழிகள்
ஏயதோர் தடாகமாய் இருந்திட வதிலோர்
மா,பா ரதமெனும் தாமரை நன்மலர்
கீதையை நன்மண மாகப் புனைந்து
பலப்பல கதைகள் இதழ்களாய் விரிய
ஹரிகதை என்னும் அணிகல னோடு
பெரியோர் தூயோர் ஆகிய பிரமரம்
சுற்றிலுஞ் சூழத் தோன்றிய தன்றே
ஆயவிம் மலரே அவனியில் மாந்தர்
காயும் கலிமலம் கழித்திட வேண்டுவோர்க்(கு)
ஏய நற்பயன் எய்தவைக் கும்மே!

மூகம் கரோதி வாசாலம் - சுலோகத்தின் மொழிபெயர்ப்பு:-

8. மூகரைப் பேசவும் முடங்குகால் ஊனனை
மேகமண்ட லஞ்சேர் வெற்பினைக் கடக்கவும்
நினைத்த பொழுதில் நிகழ்ந்திட வல்ல
இனித்த கிருபை எவனிடத் துளதோ
அவன்பர மானந்த மாதவன் ; அவனையே
கவனமாய் என்மனம் கருதித் துதிக்கும்!

யம் ப்ரஹ்மா வருணேந்த்ர – எனும் சுலோகத்தின் மொழிபெயர்ப்பு:-

9. பிரம்மா வருணன் இந்திர னுருத்திரன்
மருத்து களாதி வானவர் யாவருந்
திவ்விய கீதம் செவ்விதாய்ச் சாற்றித்
துதிக்கும் தூயோன் துணையடி சரணம்.
சாம வேதிகள் சாற்றும் பரம்பொருள்
காமிக எல்லா யோகிகள் நிட்டையில்
ஒன்றாய்க் கலந்து உணரும் பொருளை
தேவா சுரரும் திக்குத் பாலகரும்
யாவரா லுந்தன் அந்தம தறிபடா
அந்தக் கடவுளை அடைவுடன் துதிப்போம்.

அர்ச்சுன விஷாத யோகம் எனும் முதலாவது அத்தியாயம்

இருவிகற்ப நேரிசை வெண்பா

1. குருக்ஷேத் திரத்தே குழுமிய போருக்
கிருதிறத்தார் நின்றிப்ப தெண்ணித் - திருதனவன்
சஞ்சயனைப் பார்த்துச் சகலமும் சாற்றுகெனச்
சஞ்சயன் சாற்றுமிவை தாம்.*

2. தன்பகைவர் பாண்டவர்கள் தம்முடைய சேனையினைத்
தன்கண்ணால் பார்த்துச் சகியாமல் - வன்கண்ணன்
அந்தத் துரியன்தன் ஆசானைத் தேடிப்போய்
இந்தமொழி சொல்வான் இருந்து.

3. இருந்தென்ன போயென்ன என்சொல்வேன் பாரீர்
திருந்தியநும் சீடனாம் செங்கோல் - துருபதன்தன்
மைந்தன் நடத்துமந்த மாபெருஞ் சேனையினை
எந்நாள்யாம் வெல்வோமோ இங்கு.*

---

*சமஸ்கிருத மொழியில் உள்ள பகவத் கீதை நேர் கூற்றாகத் (Direct Speech) தொடங்கும். இங்கும் அதே முறையில் இருந்தாலும், த்ருதராஷ்ட்ர உவாச எனத் தனித்தொடராய்க் கூறி முதல் சுலோகம் முழுவதும் நேர்கூற்றாகவே இல்லாமல், ''திருதனவன் சஞ்சயனைப் பார்த்து'' எனப் பாடலின் உட்பகுதியாகவே வந்திருப்பது கவனத்தில் கொள்ளத்தக்கது. இவ்வுக்தி அடுத்த பாடலில் தொடராதிருப்பதும் கவனிக்கத்தக்கது. ஏனெனில் இரண்டாம் பாடலின் தொடக்கச் செய்தியாய் முதல் பாடலின் ஈற்றடியில் "சஞ்சயன் கூறுமிவை தான்" எனக் கூறப்பட்டதும் சிறப்பு.

* எந்நாள்யாம் ஜெய்பொம் இருங்கு - எனக் கையெழுத்துப் பிரதியில் இருப்பதை இவ்வாறு மாற்றி அமைத்துள்ளோம்.

4. இங்குள்ள வீரரெலாம் பீமார்ச் சுனர்க்கிணையாய்
எங்கும் ரதிகரென எய்தரும்பேர் - தங்கும்
விராடன் யுயுதானன் வில்லார் துருபதன்
நராதிபரும் உள்ளார் நடு.

5. துட்டகேது சேகிதானன் தோன்றினர் ; மற்றுமே
இட்டமாய்க் காசிமன்னன் இங்குளாரே - மட்டில்
புருஜித் துடன்குந்தி போஜனும் சைப்யன்
தருவிக்கப் பட்டுளரே ஈண்டு.

6. வீர யுதாமன்யு மேவினன் உத்தமோஜன்
தீரன் சுபத்திரையின் சேய்வந்தனன் - போர்புரிய
அந்தத் துரோபதையின் மைந்தரும் தாமடைந்தார்
இந்தநாள் எம்மை எதிர்த்து.

7&8 அந்தணரில் உத்தமரே! யானுரைப்பேன் கேட்பீரென்
சொந்த தளகர்த்தர் தொகையினையே - முந்தவே
உங்களையும் பீஷ்மரையும் உன்னுவன் ஆதித்தன்
திங்களைப் போலமைந்தீ ரென்று.

8&9 பின்னும் கருணன் கிருபனசு வத்தாமன்
இன்னும் விகர்ணன் ஜயத்திரதன் - நன்னயமாய்
அஸ்திரங்கள் தாங்கும் அசகாய சூரர்கள்
முஸ்திப்பாய் நின்றுளரே முன்

10. முன்னிற்கும் நஞ்சே மூச்சுவிடும் காற்றொன்றேசது
ஒன்னவர் சேனையினை ஓட்டிவிடும் - பின்னென்
பெருந்தொகையாய்ப் பீஷ்மரால் பேணப் படுமெற்
கொருபொருட்டோ பீமன் தளம்.

11. தளகர்த்தர் வீட்டுமரைத்* தத்தம் உயிர்போல்
களமிசையே காக்குங் கடமை - உளமதில்
நீக்கவொண் ணாதாய் நினைத்து நிகழ்த்திடுவீர்
ஆக்கும் அனைத்திற் கழகு.

12. வல்லவன் தொல்லோன் வனிதையரைத் தீண்டாத
எல்லைக்குள் நின்ற எழிலமைந்தோன் - நல்லவன்
கௌரவர்க்குப் பாட்டன் கனைத்துச்சங் கூதிநின்றான்
பௌருஷ+ மூட்டிடவே பார்த்து.

13. பார்த்திதனைக் கௌரவர்கள் பக்கத்தில் அங்குடனே
ஆர்த்தனர் சங்கங்கள் பேரிகைகள் - ஊர்த்துவமாய்க்
கொம்பூதும் கோடுடனே கூடியதோர் பேரொலியால்
நம்போல்வார்க் குண்டாம் நடுக்கு.

14. நடுக்கமுறப் பாண்டவனும் நாரணன் தானும்
மிடுக்குடனே சங்கங்கள் ஊதி - நடுக்களத்தில்
வெண்புரவி பூட்டி விளங்கியநற் றேரிடத்தே
பண்புடனே நின்றார்போ ருக்கு.

15. போர்முழங்கும் சங்கங்கள் பாஞ்சசன்யம் தேவதத்தம்
பார்முழங்கும் பௌண்டரமிம் மூன்றையும் பார்விழுங்கும்
அந்த ஹிருஷிகேசன் அர்ச்சுனனும் பீமனிவர்
சொந்தமாய் ஊதினரே தொட்டு.

16. தோன்றினபின் வேறு அனந்த விஜயமும்
ஆன்ற தருமன்கைச் சங்கமே - சான்றாய்
நகுலசக தேவர் மணிபுஷ்பம் மற்றும்
சுகோஷத்தின் கோக்ஷம் அவண்.

17. அவனின்னும் நாசி அரசன் சிகண்டி
உவந்திருட்டத் யும்னன் விராடன் - நவமாகச்
சாத்யகியும் தத்தமது சங்கங்கள் ஊதினர்
வார்த்தியத்தின் ஓசையிடை மற்று.

---

* *பீஷ்மர்*

\+ *ஆண்மை, வீரம்*

18. மற்றுத் துருபதனும் மன்னவனும் பாஞ்சாலி
பெற்ற குழந்தைகள் ஐவரும் - சற்றும்
பயமே உணராத பாலன் அபிமன்யு
ஜயம்பெருக ஊதினரே சங்கு.

19. சங்கங்கள் தாம்முழங்கும் சப்தமே மேலெழுந்து
எங்குமிலாப் பேரிடியோ வென்றெண்ண - அங்கிருந்த
கௌரவர்கள் உள்ளம் கலங்கிக் கிலிகொள்ள
பௌருஷமும் கெட்டார் பயந்து.

20. குரங்குக் கொடிபடைத்த கோபாலன் தோழன்
தரங்கொள் பகைவர்தம் தானை - பரப்பியே
நிற்பதைப் பார்த்துவில் நீட்டுமுன் கண்ணனிடம்
சொற்களிவை சொல்வான் துணிந்து.

அர்ச்சுனன் கூறியது

21&22 துணிவுடனே போருக்குத் தோன்றியுள எம்மை
மணிவண்ணா! பார்த்திட வேண்டும் - அணிவகுத்து
நிற்குமிரு சேனையிடை நேராகத் தேர்செலுத்தி
நிற்கவே செய்திடுவாய் நீ!

23. நீசதுரி யோதனன்றன் நெஞ்சங் களிகூர
ஆசையுடன் போருக் கடைந்துள்ள - நேசமுளோர்
யாரென்று ணர்தல் அவசியமா மாதலினால்
தேரினையே ஓட்டாய்ச் சிறிது.

சஞ்சயன் கூறியது :

24. ஓட்டென்று சொன்ன குடாகேசன் தன்னுரையைக்
கேட்ட வுடனேயக் கேசவனும் - பூட்டியதேர்
அந்தவிரு சேனையிடை அச்சமயந் தானமைத்தான்
குந்திமகன் பார்க்கக் கொணர்ந்து.

25. பார்த்தா லெதிரில் பகைவரென நிற்பவர்கள்
கீர்த்திபெறு வீட்டுமரும் வில்வித்தை - பூர்த்தியாய்க்
கற்றுணர்ந்த அந்தணரும் காவலரும் கண்ணியராம்
மற்றெவரைக் காண்பமென மன்.

26. மன்னன் அருச்சுனன் மாதுலரை* மைத்துனரை
இன்னமுள பந்துஜன மெல்லாரைத் - தன்னருமை
மக்கள் சகோதரரை மாறிவந்த தோழரையுந்
தக்கவா சான்மாரைப்⁺ பார்த்து.

27. பார்த்துக் கிலேசமுறும் பார்த்தன் பகர்ந்திடுவான்
வார்த்திகளும் வாலிபரும் மாய்க்கிளைஞர் - போர்த்தொழிலை
மேற்கொண்டு வந்தனரால் மேதினியில் வீண்பழியை
ஏற்கவொண் ணாதென் றெணி.

அர்ச்சுனன் கூறியது:

28. எண்ணமிட் டிவ்வண்ணம் ஏங்கியே நின்றுபின்
கண்ணனைப் பார்த்துக் கழறுவான் - திண்ணமாய்க்
கைகால் நடுங்கினதென்? கண்ணு மிருண்டனவே ;
மெய்விதிர்ப்பு முற்றேன் மிகுந்து.

29. மிகுந்த கவலையினால் மேலெல்லாம் வெந்தேன்
தகுந்த வழியொன்றும் காணேன் - முகுந்தனே !
நாக்கும் வறண்டேன்! நழுவினதென் காண்டீவம்
வாக்குக் குழறிடவே வந்து

30. வந்தவினை யிப்படியோ மாதவனே கேசவனே
சிந்தை கலங்கியதென் செய்வேனே - நிந்தையினை
நோக்கித் திடமிழந்தேன் நோக்குகையில் துன்நிமித்தம்
ஆக்குவதென் னென்பேன் அறிந்து.

31. அறிவதனைக் கொண்டுநான் ஆராய்ந்த காலை
பெறுவதோர் நன்மையென் பேசாய் - உறுபோரில்
எண்ணினத்தார் தம்மைக்கொன் றென்னாட்டை வென்றுவிடில்
என்னாகும் வேண்டேன் இதம்.

பஃறொடை வெண்பா

32,32&34 இதந்தருவோய்! கோவிந்தா! இவ்வரசும் போகம்
எதன்பொருட்டு இச்சிப்ப தென்றால் - பதமாக
மாதுலரும் மைத்துனரும் மக்களும் பந்துசினம்
ஆதரவா மாசான்மார் ஐயன்மார் - கோதிலார்
ஆமிவர் தம்மோ டனுபவித்தற் காகுமோ?
வாமனா! போருக் கிவர்வந்தார் - நாமிவரைக்
கொன்றாலோ வீண்பழியே யாகுமாம்! - நன்றோ
அவர்தம் முயிர்பொருளை அற்பமா யெண்ணிப்
புவிக்கோர் புகழெய்தப் போக, - நவையெய்தல்
நானோ? எனக்கிந்த நல்லரசும் போகமும்
ஏனோ? அறியேன் இனி.

35. இனிதே சுவர்க்கமத்ய பாதாள மூன்றும்
தனதாக்கி யாளுமோர் பாக்யம் - எனதாக
வந்திடு மென்றாலும் கண்ணா! நினைத்தாலும்
முந்திடுமோ என்கை கொலைக்கு!

36. கொலையால் ஜனார்த்தனனே! கூடா சுகமொன்
றலையாத தாயிய*வ ரேனும் - கொலை புரிந்தால்
அங்கவரைப் பீடித்தற் காகுமோர் குற்றமெலாம்
எங்களையே வந்தடையு மே.

37. மேலுங் கிளைஞரையே மேதினியிற் கொன்றதனால்
ஏலுமோ உள்ளமகிழ் வெய்வது - நீலநிற
வண்ண மாதவா! கோபாலா! நம்மவரைத்
தண்டிலே கோறல் தவறு.

38. தவறாம் குலக்ஷயத்தால் மித்திரது ரோகம்
அவரையே பாவநெறிக் காக்கும் - விவரமிதை
அற்பமுங் கல்லாப்பே ராசையினாற் கட்டுண்டுப்
பொறப்பிழந்து நின்றாரிப் போது.

39. என்னாம் குலக்ஷயத்தால் என்றால் குலதர்மம்
பன்னா ளிருந்தவெல்லாம் பாழடையும் - இன்னாள்
அதன்மம் குடிபுகுமே! அந்தக் குலத்தில்
புதரிற் புலிபுகுந்தாற் போல்*

40. அதன்மம்[2] குடிபுகவே அக்குலத்துப் பெண்கள்
மதிகெட்டுப் துஷ்டையாய் மாறி - அதுவழியே
வர்ணமும் சங்கரமாம்[3] வார்ஷ்ணேயா! அக்காதல்
சொர்ணமிரும் பாதல்போல் சொல்.

41. கூடாத நட்பின் குலமது துண்டாகில்
நாடாமல் எய்தும் நரகந்தான் - வீடேது
பிண்டநந்தண் ணீரும் பிதிர்க்க ளடையாதே
திண்டாடி வீழும் திகைத்து.

36.*ஆததாயின :- அக்னித[3] தா க[3]ரதச் சைவ சஸ்த்ர பாணிர்த்த[4]னாபஹ : !
க்ஷேத்ர த[3]ாரஹரச்சைவ ஷடே[3]தேஹ்யாததாயிந: !!

தீவைப்பவன், விஷம் வைப்பவன், ஆயுதங்கொண்டு ஆயுதமில்லாதவரைக் கொல்பவன், பொருளை அபகரிப்பவன், பிறர்பூமியை அபகரிப்பவன் பிறன்மனைவியை அபகாப்பவன் - இவ்வறுவரும் ஆததாயிகள் எனப்படுவர்.

ஆததாயியவர் - கொடும் பாவிகள். சமஸ்கிருதச் சொல் அப்படியே பயன்படுத்தப்பட்டுள்ளது.

*மூலத்தில் கூறப்படாத உவமைகளை மிகப் பொருத்தமாக ஆசிரியர் இங்கு எடுத்தாளுகிறார்.

1. அதன்மம் - அதர்மம், 2. வர்ணமும் சங்கரமாம் - ஜாதிக்கலப்பு

42. சாதிகுல தன்மம் சனாதனமாய் நின்றவெலாம்
பேதித்துக் கெட்டதாம் பேருலகில் - மாதவா
நற்குலமே கெட்டழிய நாடியே செய்பவர்கள்
தற்கொலை செய்வதுபோல்* தான்.

43. குலதன்மம் பாழடையக் கொன்றவர்க ளெய்தும்
பலமோ நரகமெனப் பார்த்தோம் - நிலமிசையே
நீக்கவொண் ணாத நியதியா யீதிருக்க
ஆக்குவதென் துக்கம் அறி.

44. ஐயோவென் பந்துக்கள் ஆருயிரை நீக்கி......
எய்வனோ பாணத்தை என்னைய* - செய்வனேல்
பாழ்நரகா மன்றோ பதிபெறும்பே ராசையினால்
வாழ்வதென் வாழ்வதென் வாழ்வு.

45. என்கை யிலாயுதங்கள் இல்லாது கௌரவர்கள்
தங்கையி லாயுதங்கள் தாங்கியே - வன்போர்
நிகழ்த்தியெனைக் கொன்றாலும் நேர்மையா மென்றே
புகலுவ னையனேயிப் போது.

46. இவ்வாறு சொல்லியே ஏந்தியவில் லம்பினையும்
ஒவ்வா தெனப்போட்டான் ! உள்ளத்தைக் - கவ்வியதோர்
துக்கம் பெரிதாகச் சோர்வினால் தேரினிலே
திக்கெனவே தானமர்ந்தான் சென்று.

அர்ச்சுன விஷாத யோகம் எனும்
முதல் அத்தியாயம் முற்றிற்று.

என்னைய - என் + ஐய

ஸாங்க்ய யோக மெனும்.
இரண்டாவது அத்தியாயம்

சஞ்சயன் கூறியது :

1. மதுசூ தனனப்பால் மாவிரக் கங்கொண்டு
நதிபோ லவனுக்குங் கண்ணீர் - மிதமாக்கச்
சொல்லி வருமென்றே சொல்லுவான் சஞ்சயனும்
எல்லா மனத்துதிக்க வேற்று.

ஸ்ரீ பகவான் கூறியது :

2. பார்க்கிறாய் பார்த்தா நெருக்கடியாம் நேரமிது
போர்க்கோலத் தோடு புறப்பட்டுச் - சீர்கேடாம்
ஆரியனுக் கேற்காத ஆழ்நரகில் வீழ்த்துமந்தக்
காரியத்தை யெண்ணினையக் கால்.

3. பேடியென வாழ்தல் பிசகாகும்[3] பார்த்தாகேள் !
நாடின்இவ் வுண்மை நலமன்றோ? - வாடிப்
உண்மையிது வொவ்வாதா? மூன்றனுக்கு - மண்மேல்
பகைவர் தவிர்த்திடப்[2] பண்ணுவோய் ! அற்பத்
திகைப்பை யுதறி யெழு.

---

1. அயல்கூற்று நோக்குக.
2. க்லைப்யம் என்பதற்கு பேடித்தனம் என்பது பொருள் ஆனால் பெண்மையென மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது.
3. பிசகாகும் - பேச்சுவழக்கு மொழி
4. பரந்தப - எனில் எரிப்பவன் என்பதாகும். இங்குத் தவித்திட என்பதற்குப் பதிலாகப் தகித்திட என்றிருந்தால் மொழிபெயர்ப்புப் பொருத்தமாக இருக்கும்.

அர்ச்சுனன் கூறியது :

4. பூசித்தற் கானவராம் புண்ணியர்கள் வீட்டுமரோ
டாசிரிய ராந்துரோண வந்தணனோ - டோசையெழு
என்வில்லை யேந்தி எதிர்த்துமே போராடல்
என்னோ மதுசூ தனா.
என்? மது சூதனா சொல்

5. இகத்திலே கையேந்தி யேற்றுண்ணல் நன்றாம்
மகத்துவஞ்சேர் ஆசான்மார் கொல்லா - தகத்தெழுந்த
ஆசையதற் கொன்றிவரை அப்பா லனுபவித்தல்
நீசமாம்ரத் தந்தோய்ந்த தூண்.

6. யார் ஜெயித்தல் நன்றோ அறியேனது நிற்கப்
போர் முகத்தில் யாரைநாம் கொன்றிந்தப் - பார்முழுவதும்
ஆள விரும் போமோ அன்னோர் எதிர்நின்று
மாள இருந்துளரே மற்று.

7. கடமையிது தானெனவே கண்டறியத் தானும்
திடமிழந்து நிற்கும் நின்சீடன் - அடியனேன்
வந்தே சரணடைந்தேன் மற்றுயான் செய்திடவென்?
சந்தேகந் தீர்ந்திடவே சாற்று.

8. பூவுல்க முற்றும் பொருந்த வொருகுடைக்கீழ்
காலல் புரிந்திடவே கைக்குறினும் - தேவருல
காளக் கிடைத்தாலும் அன்றென் துயர்போமோ
நீளுவதே யன்றி நினை.

சஞ்ஞயன் கூறியது :

9. குடாகேச னிவ்வாறு கோவிந்தன் றன்பால்
அடாததாம் போரென் றறைந்து - தொடேனென்றே
ஆயுதங்கள் விட்டெறிந்(து) ஆடேனான் போரென்றே
வாய்திறவா னாயினான் மன்.

ஸ்ரீ பகவான் கூறியது :

10. சிந்தா குலனாய்ச் சேனையிடை நிற்பவனுக்
கிந்தாகே ளென்ன விருடிகேசன் - அந்தமுள
புன்சிரிப்புத் தோன்றப் புகலுவான் பாரத! கேள்
நன்செயிடை வித்திடலே போல்[1]

11. ஞானமுளான் போல நவின்றனையே யானாலும்
ஈனமுள துக்கமதை யெய்தினாய் - ஞானிமார்[2]
தக்கோ ருலகில் இறந்தார்க்கும் இருப்போர்க்கும்
துக்கியார் கொள்வாய் துணிவு.

12. முன்னா விருக்கவில்லை யென்பதுவு மெற்கில்லை
பின்னா விருப்பதில்லை யென்பதில்லை - அன்னதே
நீயுமிங் குள்ள நிருபரு(ம்) மற்றவரும்
ஆயுங்கா ளிஃதே யடைவு.

13. இந்த வுடலில் இளமையுங் கௌமாரம்[3]
வந்துபின் வார்த்திகமும் வந்தாற்போல் - இந்தவுடல்
மாறியே வேற்றுடலம் வந்தடையு முள்ளவிவ்
வாறுணர்ந்தோர் சித்தமயங் கார்.

14. கௌந்தேயா ! வைம்புலன்கள் காணும் விஷயமொலாஞ்
சொந்தமா யேற்குஞ் சுபாவத்தால் - வந்தனவாம்
சூடுகுளிர் துக்கசுகம் தோன்றி மறைந்திடுமாம்
வாடுவதென்? வந்தால் பொறு.

---

1. உவமை புகுத்தப்பட்டுள்ளது.

2. ஞானமார் என்பதை ஞானிமார் என மாற்றப்பட்டுள்ளது.

3. முறையே குழந்தைப் பருவம் பின் இளமையும் எனக் கீதையில் உள்ளது. இங்குத் தளைதட்டாதிருக்க முறை மாற்றி வைக்கப்பட்டுள்ளது.

15. துக்கசுகந் தோன்றியக்கால் தொல்லை களிப்பெய்தார்
தக்கவனா யுள்ளோன் தரணியிடை - பக்குவியாம்
நித்தியமாம் வாழ்வெய்து(ம்) நேர்மையனா(ம்) மாந்தர்க்குள்
உத்தமான ! நன்ரு யுணர்.

16. இல்லையெனல் நித்தியத்திற் கில்லையாம் இங்கிருப்பு
இல்லாது முள்ளதென லில்லையே - நல்லதொரு
தத்துவத்தின் மெய்ப்பொருளைச் சங்கையறக் கண்டவர்கள்
சத்தசத்தைத் தாமறிவர் தாம்.

17. நீக்கமற வெங்கும் நிறைகின்ற வப்பொருளை
நோக்குங்கால் நாசமிலா நுண்ணியனே - ஆக்கமாய்
அப்படியே என்றுமுள வப்பொருளைத் தான்கெடுக்க
இப்புவியில் லாற்றலுளா ரில்.

18. தேக மழிபடுமே தேகியோ நாசிமிலான்
ஏகனே நித்தியனா மெல்லையிலான் - ஆகையால்
பாரத! நீயெழுந்து பாணம்விற் கைப்பிடித்துப்
போரினையே வெண்ணிப் புரி.*

19. கொலையுண் பவனாயுங் கொல்லுவோ னாயுந்
தலையிரண்டாய்ச் சாற்றுவதை யெண்ணிடில் - இல்லையவர்
உண்மையுணர்ந் தாரல்லர்; உற்றவித் தேகிகொலை
பணனுவதில் மற்றதுவு மில்.

20. இல்லை பிறப்பிதற்குச் சாவதுவு மில்லையாம்
இல்லா திருந்தோர்கால் தோன்றவிலை - எல்லையிலான்
என்றுமுளான் தோன்றலிலான் மாறுதலு மில்லாதான்
என்றுமொரு நிலையா யுற்றிருப்பான் - பொன்றுவிழுந்
தேகத்தோ டென்றும் சிதைவுற் றழிவதிலா
தாகுமிது வென்றே யறி!

---

*இவ்வெண்பாவில் போர் புரிய அழைக்கிறார். கீதை சுலோகத்தில் ஆன்மா அழிவற்றது; உடல் அழியக் கூடியது என்று உள்ளது.

21. பார்த்தா! அழிவிலானைப் பாரிற் பிறப்பிலியைப்
பார்த்தாலு மாறாப் பரவுருவை - ஈர்த்தாலும்
வேறெது செய்தாலும் மேனியது மாறானை
கூறாகச் செய்வதார் கூறுவாய் - வேறொருவர்
ஏவி யிதையழிக்க ஏற்படுமோ வென்பதனைப்
பாவித்தே யெற்குப் பகர்.

22. கிழிந்த வுடைமாற்றிப் புதிது பெறல்போல்
கழிந்த வுடல்விட்டிங் கடையும் - விழுந்திறந்து
போகப் புதுவுடலிற் போயுயிர் தங்குதற்கோ
சோகப் படுவார்நீ சொல்.

23. சேதிக்க வாயுதமிற் றீயினால் வேகாதாம்
சோதித்தால் தண்ணீரிற் றோயாதாம் - ஏதிங்குக்
காற்று லராததோர் கண்ணியமென் றேயிந்த
வாற்கு லுணர்வா யறிந்து.

24. தோய்ந்திடலும் வெந்திடலும் சீவிடலாந் தோஷமெல்லா(ம்)
மாய்ந்திடி லான்மா வடைந்திலனே - ஏய்ந்தவொரு
நித்தியனா யெங்குமாய்த் தானு(ம்) சனாதனனாய்
எத்திசைக்கு முள்ள திது.

25. அவ்வியத்த[1] மான்மா அசிந்த்ய[2] மவிகார்யம்[3]
இவ்வகைத்தா மான்மா யெனவுணர்ந்தால் - எவ்வழிக்கும்
சோகித்த லெற்றுக்கோ சொல்லுவாய் நீயிந்த
மோகிப்பை யின்றே முடி.*

---

1. அவ்வியத்த - அவ்யக்த - புலன்களுக்கு எட்டாதது
2. அசிந்த்ய - சிந்தனைக்கு (மனதிற்கு) எட்டாதது
3. அவிகார்ய - மாற்றமுடியாதது.

25. ஐம்பொறியால் சிந்தையால் எட்ட முடியாத,
எம்மாற்றம் பெற்றிடா வான்மாவாம்! - செம்புலத்தால்
தேர்ந்திலையோ? ஆதலின் சோகத்தை ஏற்க
உரியவனோ நீ! யென் றுணர். - தி. ரா. தாமோதரன்

26. இடையறா தான்மா பிறப்பு மிறப்பும்
அடையுமென வெண்ணுவையே யானால் - அடைவாக
அவ்வழிக்குந் துக்க மடையவு மேதுவிலை
செவ்விதாய் நீமனதிற் றேர்.

27. பிறந்தோ ரிறப்பதுவும் பின்னிவ் வுலகத்
திறந்தோர் பிறப்பதுவு மெண்ணில் - மறந்தாலும்
நீக்கவொண் ணாத நியாதியா யீதிருக்க
ஆக்குவதென் னூகித் தறி.

28. ஆதியி லவ்வியத்த மந்தத்தி லஃதேயாம்
பாதியி லோவ்யத்தப் பட்டதுபோல் - ஈதெமக்குத்
தோன்றிடுமேல் நீயுந் துயரப் படுவதெனல்
ஆன்றதோர் செய்கை யல.

29. ஆத்துமனை யாச்சரிய மாய்ச்சிலர் பார்த்திடுவார்
நேர்த்தி யென்றோர் சாரார் நிகழ்த்திடுவார் - சாத்திரத்தில்
அற்புதமாய்ச் சொல்லுமென அங்குச்சிலர் கேட்கச்
சற்புத்தி யற்றசிலர் சாத்திரத்தை - எத்தனைநாள்
கேட்டாலு முண்மையினைக் கிஞ்சிற்றுங் கற்பதில்லை
ஏட்டுச் சுரைபோ லவே.

30. எல்லா வுடம்பினுலுந் தங்குவோ னெப்பொழுதும்
நல்லாய்கேள் நாசமுறத் தக்கவனோ - நில்லாது
செல்லுமுயிர் யாதிற்காச் சிந்தை வியாகுலம்
ஒல்லையா யிஃதுநீ ஓட்டு

31. உன்கடமை செய்யுங்கால் ஒவ்வாத மூன்றனுக்குத்
தன்டமைக் குற்றெழுமோர் சஞ்சலமே - மன்கடமை
தர்மமாம் யுத்தத்திற் றான்பிறிது வேறில்லை
மர்மமது விட்டாய் மறந்து.

32. வலியவரும் போரால் வரும்வீர சொர்க்கம்
நலிய விதை விடுதல் நன்றோ - வலிமிகுந்த
க்ஷத்திரியர் கண்டிதனைச் சந்தோஷம் கொள்ளுவார்
யுத்தமிது முக்திதர லால்.

33. அறப்போ ரிதனை நிராகரிப்பை யானால்
பிறப்புடன் வந்த பெருந்தர்மம் - துறப்பதலால்
லாபமும் வந்தடையும் பார்த்தா கிதையுணராய்
பாபிநீ யாகுவையோ பார்.

34. இலகியசீர் பேரும் இடித்துமே வீழ்ந்து
உலகிற் பழிச்சொல்லே உண்டாம் - குலவுபுகழ்
கொண்டபேர்க் கிந்தக் குறைச்சொல்லிற் சாவுவே
றுண்டோ வுறுதியாய் ஓர்.

35. சயத்துடன் மீளுவதுஞ் சாத்தியமில் லென்றே
பயத்தால் திறமிழந்தான் பார்த்தன் - வியப்பிதுவே
என்றுனைக் கௌரவமா யெண்ணியுள பேரெல்லாம்
இன்றே நினைப்பரென வெண்ணு.

36. நிந்தையாய் வார்த்தை நிகழ்த்திடுவர் நின்பகைவர்
அந்தோவுன் னாற்றல் அவமதித்தே - சிந்தைக்
கிதனினும் பொல்லா இகழ்ச்சிவே றுண்டோ
அதனையே செவ்விதா யாய்.

37. இகத்திலிப்போர் வென்றாலே ராஜ்ஜியத்தை யாள்வாய்
சுகத்தமைந்த சொர்க்கந் துறந்தால் - சுகத்தினை
எண்ணியே போராடு தோன்றி டேயெழுவாய்
திண்ணமே யென்றுறுதி செய்து.

38. பாபம் வராதவழி பண்ணுவதற் குத்தரங்கேள்
தாபமுங் கோபமுந் தானின்றி - லாபநட்டம்
துக்கசுகந் தோல்விசயந் தோன்றிச் சமமென்றே
பக்குவமா யெண்ணப் பழகு.

39. சாங்கியத்தை* யொட்டி யிதைச்சாற்றினோம் பந்தமது
நீங்குமா றுன்றனுக்கு நேர்வழியே - ஈங்கினிமேல்
யோகமதை யொட்டியே ஓதுவன் கன்மத்தின்
வேகங் கெடுக்கும் விதி.

40. வீண்முயற்சி அல்ல; விரோதப் பயனொன்றும்
காண்பதற்கு மில்லையிதிற் காண்பாய் நீ - மாண்பாகும்
தன்மஞ் சிறிதிதனைத் தானியற்றி நின்றாலும்
சன்மப் பெரும்பயமுஞ் சாம்.

(அல்லது)

முயற்சிவீ ணாவதில்லை மோதிமுரண் பட்ட
பயனும் விளைவதில்லை பாராய் - வியனுலகத்
திந்தவறத் தேசிறி திங்கியற்றி நின்றாலும்
மைந்தா பயம்போம் மரித்து.

41. தன்னை யறிந்திடலே தான்முடிவு வேறில்லை
பின்னைப்பல் வேறு பிடித்தொழுகு - மன்னவரின்
புத்தி பலவிதத்திற் போயலைய விட்டிருப்பர்
நத்தியே நாடார் நலம்.

---

* சாங்கியம் என்றது ஆத்மா அனாத்மா விசாரம் ஆகும். அதற்கு வழி கர்மயோகம் ஆகும். கர்மங்களை இறைவனுக்கு அர்ப்பணம் செய்து நடுநிலை வகித்தலேயாம்.

42,43&
44 போகமதி காரம் புனைந்திருக்க விச்சித்தோர்
ஏகமோ நிச்சயத் தேயிருத்த - லாகுமோ
மேலுமவர் சொர்க்கமே மேலாம் பதவியென
நாலுமறை பூர்வாங்கம் நல்கியதைச் - சாலத்
தெரிந்தவர்போல் ஞானமிலார் செப்பிடுமோர் வார்த்தை
மருந்தாய் மதிமயக்கம் பண்ணத் - திருந்தியநல்
ஆறா மறிவற் றதுவே பெரிதென்பார்
தேறார் திகழுமோர் உண்மையினை - ஈறொன்று
மில்லாமல் மேன்மே லிறந்து பிறப்பதுமாய்ச்
சொல்லால் விதவிதமாய் வேதஞ்சொல் - எல்லாக்
கருமங்கள் செய்தே கடையிலதி காரம்
பெருமையுடன் போகம் பெறுதல் - அருமையென
இச்சையோடி யற்றிடும் கன்மத்தா லிப்புவியில்
நிச்சயமா யேதுமுடி வுண்டு.

45. வேதஞ்சொல் முக்குணங்கள் வேந்தே யடையற்க
சோதித்துத் துக்கசுகம் லாபநட்டம் - ஆதியாய்
நீக்கியே யோகமும் க்ஷேம நினையாதே
நீக்கமறத் தானாய் நிலைத்து.

46. ஊரிற் பெருவெள்ள முற்றிடுங் காலத்தே
ஏரிநீர் தன்னாலே ஏதுபயன் - சீரியநல்
வேதமே யானாலுந் தன்னையுணர் வித்தகற்கு
யாது பயனுளதோ பார்.

47. கருமத்தே கண்ணாய்க் கருதாய் பலனே
மரும மிதைநீ மறவாய் - பெருமை
இதுவே பிறிதில் அகர்ம மதுவும்
உதவா துதவா தொழி.

48. வெற்றியுந் தோல்வியும் வேறாய் நினையாது
பற்றிவா என்றுரைசெய் பக்குவத்தோ - டுற்றிருந்து
தேகத்தோ டுற்றவினை செய்வா யிதைத்தானே
யோகமெனச் சொல்வா ருணர்ந்து.

49. பலன்கருதாக் கன்மந்தான் பாரிடையே மேலாம்
பலன்கருதிச் செய்தவினை பாழாம் - புலன்வழியே
செல்லா மனதுடனிக் காமவினை செய்மதி
இல்லார் கிருபணரென்* றெண்ணு.

50. புத்தியுக்த னைமேல் பொருந்துகுணங் குற்றங்கள்
இத்தரணிக் கெய்தா திருப்பனே - அத்தகைய
யோகமே செய்வாய்நீ யோகமெனில் கன்மத்தில்
ஆகுமது வோர்திறமை யே.

51. புத்தியுக்தன் ஞானி புரியுங் கருமத்தே
சித்தியெதிர் நோக்கிச் செயலிலதால் - முத்தியினைப்
பெற்றுப் பிறவிப் பெரும்பந்த மற்றநிலைக்
குற்றிருப்பா னென்றே யுணர்.

52. பொய்யெல்லா மெய்யென்று போற்று நிலைகடந்து
ஐயமற ஆன்மா அறிந்தாயேல் - துய்யநிலை
வந்துற்றாய் கேட்டதுவுங் கேட்பதும் வாங்காத
அந்தநிர் வேதநிலை யஃது

53. என்ன விபரீத மேற்படினு மெப்பொழுதும்
தன்னிலே தானாய்ச் சலனமிலாத் - தன்மையனாய்ப்
புத்தி நிலைதவறாப் போதம் வளர்ந்திடுமேல்
சித்திக்கும் யோகநிலை தான்.

---

*கிருபணர் - லோபிகள்

அர்ச்சுனன் கூறியது.

54. நிலைபிறழா ஞானி சமாதிநிலை கண்டேன்
இலகும் விதம்யாதா மிங்கே - நிலைபிறழான்
நிற்றல் நடத்தல் நிலைத்தல் உரையாடல்
உற்றவிவை எவ்வா றுரை.

ஸ்ரீபகவான் கூறியது :

55. பார்த்தா வொருவன் பகர்மனதின் பற்றெல்லாம்
தீர்த்துத் தனக்குள் திருப்தியது - பூர்த்தியாய்த்
தன்னா லடைந்து தரணிக் கிருப்பனேல்
அன்னோன் திடப்ரக்ஞ னாம்.

56. துக்கத்திற் றோயான் சுகத்தையும் கோரானாய்
மிக்க பயமிச்சை கோபமதிற் - சிக்கானாய்
எம்முனிவ னுள்ளானோ அன்னோன் திடப்பிரக்ஞன்
செம்மையாய் நீயிதனைத் தேர்.

57. இச்சை கடிந்தவனாய் என்றுமி ருப்பவனும்
நச்சியே இன்ப நயவானும் - உச்சமாய்த்
தீங்கே வரினும் அருவருப்புச் சேரானும்
ஈங்குத் திடப்பிரக்ஞ னே.

58. ஆமை யுறுப்பெல்லாந் தானடக்கிக் கொண்டாற்போல்
தீமை தரும்விடயச் சேர்க்கையில் - ஏமஞ்செய்
திந்திரியந் தம்மை இழுத்துமே காப்பவனும்
அந்தப் திடப்பரக்ஞ னாம்.

59. விடயப் பிரவிருத்தி விட்டவனுக் கந்த
விடயமே நீங்கினதென் றாலும் - விடயத்தில்
இச்சை பின்னால் இருக்குமது நீங்கவே
மெச்சும் பரதிருஷ்டி வேண்டு.

60. நிட்டை பயில்வோனை நீக்கியதில் நில்லாது
விட்டுப் பிரித்துமே வேறாக்கும் - கட்டுக்
கடங்காத அம்மனத்தின் ஆற்றலைக் கேட்பாய்போர்
தொடங்காது நிற்பவனே நீ.

61. திடமான சிந்தையுடன் தேர்ந்துமே என்னை
முடிவாகக் கொண்டென்றேன் மூவா - வடிவினில்
புத்தியை நாட்டும் புனிதனே தீரனாம்
அத்துக்குள் ளிந்திரியம் வைத்து.

62. எண்ணத்தால் பற்றுண்டாம்! இச்சையின் றோன்லாகும்
பண்ணிய விச்சையால் பார்த்தாகேள் - கண்ணிய்முங்
கெட்டழியச் செய்திடுமக் கேடான கோபமெனுந்
துட்டனே தோன்றிவிடு வான்.

63. கோபம் மதிமயக்கம் கொண்டாடச் செய்யுமப்பால்
ஞாபகச் சக்திதானும் நட்டமாம் - தீபமாம்
அந்தப் பகுத்தறிவும் அற்றுப்போ மன்றவன்பால்
வந்ததே நாசம் மருங்கு.

64. ஆனால் தனையடக்கு மாற்றல் படைத்தவனோ
தானாய் விடயவழி தான்செலினும் - ஏனோ
இராகத் துவேடமெலா மெய்துவனோ எய்தும்
தராதலத்திற் சாந்தியெனும் பேறு.

65. சமாதி நிலையில் சகலமாந் துக்க
சமேதங்கள் தாமழிந்து போகும் - சமாதானத்
தோடிருப்போன் புத்திக் குடனே சமாதிநிலை
தேடிவரு மென்பதனைத் தேர்.

66. யுக்தமிலா* மாந்தருக்கு முண்டோமெய்ஞ் ஞானமது
யுக்தமிலார் பாவனைக்கே யுற்றாரோ - அஃதேபோல்
பாவனையு மின்றேல் பரவியதோர் சாந்தியிலை
மேவிய சாந்தியின்றேல் வீரகேள் - சீவர்க்குச்
சவுக்கிய மில்லை தரணியிடை யீதறிவாய்
எவரா யினுமென் னிவண்.

67. கப்பலைத் தண்ணீரில் காற்றடித்துச் சென்றாற்போல்
தப்பான வாற்றிலே தான்செலுத்திச் - செப்புமனக்
கப்பலை ஐம்புலனாம் காற்றடித்துச் சென்றிடுமாம்
அப்பகுத் தேயுணர்த லற்று.

68. ஆதலா லைம்புலன்கள் அவ்வவ் விடயத்தே
போதலே யில்லாமற் போற்றிடலால் - சீதனமாம்
புத்தி நிலைவறாப் புண்ணியநல் தலாறொன்று
சித்திக்குந் தானாய்ச் சிறந்து.

69. தன்னை யடக்கினவன் தாரணியோர் தூங்குங்கால்
உன்னியே சாக்கிரத்தில் உற்றிருப்பான் - பின்னையவர்
கண்விழித்து நின்றிங்கால் கண்டுயில்வோ னாயிடுவான்
உண்முகனாய் நிற்கும் முனி.

---

* *யுக்தமிலா மாந்தர் - நிலைபெறாதவன்*

70. நதியெலாஞ் சாகரத்தை நாடிப் புகுந்தால்
அதிலெந்த மாறுதலு மாகா - ததுபோலும்
இச்சை யறுத்தவன்பா லேதுவரி னுந்தனது
நிச்சயத்திற் றான்பிறழான் நின்று.

71. வேண்டுத லில்லான் விடயப்பற் றற்றனாய்
ஈண்டுநான் என்னதென்ப தில்லானாய்ப் - பூண்டவினை
தீருமா றெண்ணிச் சிறுபகல் நின்றானே
சேருவன் சாந்தியெனும் பேறு.

72. பிரமத்தின் நிச்சயத்தைப் பேதமறக் கற்றோர்
கருமத்தி னாற்பந்தங் காணார் - ஒருமையாய்
அந்தப் பிரமத்தி லைக்கியப்பட் டேயிருத்தல்
அந்தந்தி லுங்கூடு மால்.

ஸாங்க்ய யோக மெனும்.
இரண்டாவது அத்தியாயம் முற்றிற்று

கர்ம யோகம் எனும்
முன்றாவது அத்தியாயம்

அர்ச்சுனன் கூறியது :

1. கன்மத்தின் ஞானமே கண்ணியமா மென்பாயேல்
என்னையிக் கோர கிருத்தியத்தை - என்னோ! நீர்
செய்யென்று சொன்னீர் ஜனார்த்தனா கேசவா
உய்வழிஈ தாமோ உரை.

2. முரண்பட்ட வார்த்தையினை முன்பின் மொழிந்தீர்
இருண்டதா யாகியதென் சிந்தை - சரணடைந்த
என்றனுக்கு மேலாம் பதவியை யெய்துவழி
ஒன்றே யுறுதியா யோது.

ஸ்ரீபகவான் கூறியது :

3. பூர்வத்தில் யானே புகன்றே னெனையடையும்
ஆர்வர்த்தக் காறிரண் டாமென்றே - சார்வாகச்
சாங்கியர்க்கும் யோகியர்க்கும் ஞானகர்ம யோகங்கள்
தாங்கியதா மிவ்ரண்டே தாம்.

4. கன்மத்தைச் செய்யான் விடுதலையைக் காண்பதிலை
கன்மத்தைச் செய்யாது விட்டதனால் - சன்மத்தோ
டுற்றவினை தீர்ந்து பிரமத்தி லொன்றாக
உற்றிருப்ப தில்லென் றுணர்.

5. மூலப் பிரகிருதி* முக்குணத்தின் சேட்டையினால்
சாலவே சீவர்கள் தாமாக - ஏறும்
கருமத்தைச் செய்வர் கணமேனுஞ் சும்மா
இருமெனினுங் கேளா தவர்.

---

* இயற்கையாக உள்ள பண்புகள்

6. இச்சை தவிராதோன் இம்சித் தடக்குவது
பிச்சையெடுத் தேகுபேர னாவதுபோல் - இச்சகத்தே
நத்திமனம் நாடி நவிலா திருப்பதினால்
மித்தியா சாரனவ னே!

7. இதயத்தா லிந்திரிய விச்சையெலாங் கட்டிப்
புதியநல் வேகம் புகட்டிப் பதியுமொரு
பற்றெலா மற்றுப் பணிந்துசெயுங் கன்மத்தன்
மற்றவனின் மேலாய் மதி.

8. நியதியாங் கன்ம நிகழ்த்திடுவாய் நீயே
பயனோக்கிற் கன்மமகன் மத்தில் - உயர்வாம்
சரீரமும் போஷிக்கத் தான் முடியா தாகும்
இராதேல் கருமமென இங்கு.

9. கன்மத்தால் மாந்தரெலாங் கட்டுண்டர் யக்ஞமாங்
கன்மத்தால் கட்டுண்ட தில்லையாம் - உன்மனத்தே
பற்றொன்று மின்றிப் பகர்யக்ய கன்மத்தைக்
குற்றமின்றிச் செய்வாய் குறித்து.

10. பூர்வ மனிதரையே தான்படைத்த போதினிலே
சார்வாக யக்ஞமந் தான்படைத்தான் - ஆர்வமுடன்
அந்தப் பிரமன் அமோகமாய்த் தான்பெரு
சொந்தச் சுரபிபோல் யக்ஞமது - தந்திடுக
இச்சை படுவன் எல்லாம் நீர் பெற்றிடுவீர் !
நிச்சய மீதென்றா னினைத்து.*

**கையெழுத்து பிரதியில் சில எழுத்துகள் அல்லது சொற்கள் விடுபட்டோ மாறுபட்டோ அமைந்துள்ளன. கீழே சரியான மொழி பெயர்ப்பிற்காகத் தருகிறோம்- தி.ரா.தாமோதரன்

யாகமுடன் மாந்தரையும் நான்முகன் பூவுலகில்
யோகமுடன் ஆன்மாவை ஆக்கினான் - போகமுடன்
வேண்டியதை வர்ஷிக்கும் காமதேனு வாகவே
உண்டிங்கே யென்றே மொழிந்து.

11. யக்ஞமிது தன்னால் இமையவரை யாதரித்தல்
யக்ஞ்புல னாய்த்தருவர் சாதனங்கள் - யக்ஞத்தால்
நல்லய்ய னிவ்வாறு நானிலத்திற் றானடைந்து
எல்லவரு முற்றிருப்பீ ரென்று.

12. தேவர் களிப் பெய்திச் செய்திடுமோர் யக்ஞத்தில்
மேவுபல னத்தனையு மீந்திடுவர்- சேவை
புரியாக் கூலிபெறல் பொல்லாதா முண்டேல்
பெரியதிருட் டென்றதனைப் பேசு.

13. நல்லவர் யக்ஞ நவையிலாச் சேடமுண்டு
எல்லா நவைகள் ஓழிப்பராம் - அல்லாத
அற்பர் தமக்கென்றே ஆக்கியே உண்ணுவரால்
உற்பவமாம் பாவத்தி னோடு.

14. அன்னத்தா லன்றி அனைத்துயிரும் வாழாவே
அன்ன மழையின்றே லாகாதாம் - மின்னுமழை
யக்ஞத்தா லன்றிப் பிறவற்றால் வாராதாம்
யக்ஞமுங் கன்மத்தி லாம்.

15: கருமமோ வேதத்தில் வேதமக்ஷ ரத்தில்[1]
கிரமமாய்த் தோன்றிவரல் தன்னால் - சருவமுமாய்
உள்ளபிர மந்தானே யக்ஞத்தி லுள்ளதென
உள்ளபடி சொன்னேன் உணர்.

16. பார்த்தாவிவ் வேற்பாடு பார்த்து நடவாதோர்
யார்தானப் பாவநெறிக் காளாகார் - கீர்த்தியிலா
வீண்மக்க ளாகி விடயத்தில் மூழ்குமிவர்
ஆண்மக்க ளாகார் அறி.

---

1. வேதம் அக்ஷரத்தில் - ப்ரஹ்மாக்ஷரம் என்பதன் மொழிபெயர்ப்பு இது. அழிவற்ற பரம் பொருள் என்பது இதன் பொருளாம்.

17. உன்முகனாய்த் தானிருந் துள்ளத் திருப்தியுடன்
அன்மையிலே சந்துஷ்டி கொண்டானாய்-உண்மையாய்
நிற்குமவர்க் கென்றும் நியதியாம் கன்மமிலை
பற்குணா! நீயிதனைப் பார்![1]

18. இத்தகையோன் கன்மத்தா(ல்) இங்கடையும் பேறில்லை
நத்தியதைச் செய்யானேல் நட்டமிலை - எத்தகைய
அற்பப் பொருளும் அவன்வேண்டி அன்னியர்பால்
நிற்பதிலை யென்றே நினை.

19. ஆதலாற் பற்றின்றி ஆற்றிடுமக் கருமம்
நீதமுட னித்தம் நிகழ்ந்திடலால் - ஆதிபரன்
தன்னை யவனடைவான் சற்றுஞ்சந் தேகமில்லை
மின்னலுக்குப் பின்மழையே போல்.

20. ஜனகாதி மேதையர்கள் கன்மத்தாற் றானே
தனதான பூரணத்தைப் பெற்றார் - மனத்தால்
அறியாத மாந்தர்க் கறிவுறுத்த வேணும்
குறியோடு கன்மநீ செய்.

21. மேலோர் நடந்தவழி மேதினியோர் தாம்நடப்பார்
சாலவிலர் காட்டுவழி சான்றாகக் - கோலூன்றிச்
செல்வேன் றனக்குவழி காட்டுவதைச் சிந்தித்தே
பல்வேறு நீமனத்திற் பார்.

---

1. எவன ஆன்மாவில் இன்புற்று, ஆன்மாவில் நிறைவுபெற்று, ஆன்மாவிலேயே மகிழ்கின்றானோ அவன் செய்ய வேண்டிய கர்மம் ஏதுவுமில்லை. கங்கைக் கரையில் உள்ளவன் குளிப்பதற்குக் கிணறு வெட்டுவானா? திருமூலரும் தம் திருமந்திரத்தில்
'வேண்டார்கள் கன்மம் விமலனுக் காட்பட்டோர்
வேண்டார்கள் கன்ம மதிலிச்சை யற்றோர்' எனக் கூறுகிறார். வள்ளுவரும்
'வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில' எனத் திருக்குறளில் கூறியதையும்
ஒப்புநோக்குக.

11. யக்ஞமீது தன்னால் இமையவரை யாதரித்தல்
யக்ஞ்புல னாய்த்தருவர் சாதனங்கள் - யக்ஞத்தால்
நல்லய்ய னிவ்வாறு நானிலத்திற் றானடைந்து
எல்லவரு முற்றிருப்பீ ரென்று.

12. தேவர் களிப் பெய்திச் செய்திடுமோர் யக்ஞத்தில்
மேவுபல னத்தனையு மீந்திடுவர்- சேவை
புரியாக் கூலிபெறல் பொல்லாதா முண்டேல்
பெரியதிருட் டென்றதனைப் பேசு.

13. நல்லவர் யக்ஞ நவையிலாச் சேடமுண்டு
எல்லா நவைகள் ஒழிப்பராம் - அல்லாத
அற்பர் தமக்கென்றே ஆக்கியே உண்ணுவரால்
உற்பவமாம் பாவத்தி னோடு.

14. அன்னத்தா லன்றி அனைத்துயிரும் வாழாவே
அன்ன மழையின்றே லாகாதாம் - மின்னுமழை
யக்ஞத்தா லன்றிப் பிறவற்றால் வாராதாம்
யக்ஞமுங் கன்மத்தி லாம்.

15. கருமமோ வேதத்தில் வேதமக்ஷ ரத்தில்[1]
கிரமமாய்த் தோன்றிவரல் தன்னால் - சருவமுமாய்
உள்ளபிர மந்தானே யக்ஞத்தி லுள்ளதென
உள்ளபடி சொன்னேன் உணர்.

16. பார்த்தாவிவ் வேற்பாடு பார்த்து நடவாதோர்
யார்தானப் பாவநெறிக் காளாகார் - கீர்த்தியிலா
வீண்மக்க ளாகி விடயத்தில் மூழ்குமிவர்
ஆண்மக்க ளாகார் அறி.

---

1. வேதம் அக்ஷரத்தில் - ப்ரஹமாக்ஷரம் என்பதன் மொழிபெயர்ப்பு இது. அழிவற்ற பரம் பொருள் என்பது இதன் பொருளாம்.

17. உண்முகனாய்த் தானிருந் துள்ளத் திருப்தியுடன்
அண்மையிலே சந்துஷ்டி கொண்டானாய்-உண்மையாய்
நிற்குமவர்க் கென்றும் நியதியாம் கன்மமிலை
பற்குணா! நீயிதனைப் பார்![1]

18. இத்தகையோன் கன்மத்தா(ல்) இங்கடையும் பேறில்லை
நத்தியதைச் செய்யானேல் நட்டமிலை - எத்தகைய
அற்பப் பொருளும் அவன்வேண்டி அன்னியர்பால்
நிற்பதிலை யென்றே நினை.

19. ஆதலாற் பற்றின்றி ஆற்றிடுமக் கருமம்
நீதமுட னித்தம் நிகழ்ந்திடலால் - ஆதிபரன்
தன்னை யவனடைவான் சற்றுஞ்சந் தேகமில்லை
மின்னலுக்குப் பின்மழையே போல்.

20. ஜனகாதி மேதையர்கள் கன்மத்தாற் றானே
தனதான பூரணத்தைப் பெற்றார் - மனத்தால்
அறியாத மாந்தர்க் கறிவுறுத்த வேனும்
குறியோடு கன்மநீ செய்.

21. மேலோர் நடந்தவழி மேதினியோர் தாம்நடப்பார்
சாலவிலர் காட்டுவழி சான்றாகக் - கோலூன்றிச்
செல்வேன் றனக்குவழி காட்டுவதைச் சிந்தித்தே
பல்வேறு நீமனத்திற் பார்.

---

1. எவன ஆன்மாவில் இன்புற்று, ஆன்மாவில் நிறைவுபெற்று, ஆன்மாவிலேயே மகிழ்கின்றானோ அவன் செய்ய வேண்டிய கர்மம் ஏதுவுமில்லை. கங்கைக் கரையில் உள்ளவன் குளிப்பதற்குக் கிணறு வெட்டுவானா? திருமூலரும் தம் திருமந்திரத்தில்

'வேண்டார்கள் கன்மம் விமலனுக் காட்பட்டோர்
வேண்டார்கள் கன்ம மதிலிச்சை யற்றோர்' எனக் கூறுகிறார். வள்ளுவரும்
'வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில' எனத் திருக்குறளில் கூறியதையும்

ஒப்புநோக்குக.

22. உறுகன்ம மெற்கில்லை ஒன்றும்யான் வேண்டிப்
பெறுவதற் கேதுமிங் கில்லை - உறுதியான்
கோரிப் பெறாததிலை மூவுலகில் ஆனாலும்
சீரிதாய்ச் செய்வான் செயல்.

23. சலிப்பின்றி யான்கருமம் தாங்கிப் புரிவேன்
மலைப்பின்றி மற்றவர் பின்பற்றச் - சலிப்புறிலோ
எல்லா வழிகளிலும் பார்த்தா எனைத்தொடர்வர்
நல்லாரிவை யென்றிந் நாள்.

24. இங்குரித்தா யென்கருமம் யானியற்ற வில்லையெனில்
இங்கிருக்கும் மாந்தர் இறந்தழிவார் - சங்கரிக்க
வந்தவனா னாயிடுவேன் மண்மே லிதுநிகழ்ந்தால்
நிந்தையென் மேலாம் நினை.

25. பாரதா! பாமரர்கள் பற்றுடனே செய்தாற்போல்
நேரதாய்ப் பற்றின்றி நின்றந்தக் - காரியத்தை
ஞானிகள் செய்திடுவர் ஞாலத்தோர் பின்பற்றத்
தானல்லால் வேறா யல.

26. கன்மத்திற் பற்றுடைய பாமரருக் கேகலக்கம்
சென்மத்தில் ஞானி செயலாகா - நன்மைக்கே
தானுமவை செய்துடன் சான்றாகக் காட்டுவதே
தானவன் ஆற்றுங் கடன்.

27. பிரகிருதி தன்னிற் பிறந்த குணமூன்றும்
வருகருமஞ் செய்யவழி காட்டும் - பெருகிவரு
மந்த வகங்காரத் தாளான அம்மனிதன்
சொந்தமென வேற்குஞ் சுமை.

28. குணகர்ம னன்றாய் விபாகித்* துணர்ந்தோன்
குணரூப மானபுலன் கொண்டே - குணரூப
மானவிஷ யங்கள் அறிபடுவ தென்றெண்ணித்
தானொருபற் றற்றிருப்பன் றான்.

29. பேதை மதியோர் பிரகிருதி யின்குணத்தால்
சாதிக்குங் கன்மமெலாந் தம்மதென்பர் - போதமுயர்
ஞானியவர் சிந்தை கலங்கிடுதல் நாடாது
தானு மவையியற்று வார்.

30. அகங்கார மாசையிலாக் கன்மமே யாற்றி
உகந்தெனக்கே யர்ப்பணமாய்ச் செய்தே - அகந்தனிலே
உன்மனதை வைப்பாய் உடல்நடுக்க மின்றியுடன்
கன்மமாம் யுத்தமிதிற் சார்.

31. நித்தஞ் சிரத்தையுட னின்றேய சூயையிலாச்
சித்தம் படைத்தவராய்ச் சேர்ந்திருந்து - நத்தியென்
கொள்கை விடாதியற்றக் கூடியதா மன்னவரே
தள்ளிடுவார் கன்மத்தின் சார்பு.

32. இழிவாகப் பேசியே எத்தனமுஞ் செய்யாப்
பழியேற் றிடுவோரிப் பார்மேல் - அழிவார்கள்
ஞான மிழந்து மதியிழந்து நாசமுறும்
ஈனவழிக் கேகியவ ரிங்கு.

33. பேதித்துச் சீவர் பிரகிருதி பேதத்தால்
பேதித்த கன்மமே பேணுவர் - சோதித்தால்
ஞானிக்கு மிஃதே நவிலுவார் நிக்கிரகந்
தானிங் குதவா தறி.

---

* விபாகித்து - பாகுபடுத்திச் சத்துவம், ரஜஸ், தமம் எனும் முக்குணங்களின்; இயக்கத்தால் ஏற்படும் வெவ்வேறான செயல்களின் பாகுபாடு. குணத்ரய விபாகயோகம் (அத்.14) விரிவாக இவற்றைக் கூறும்.

34. இந்திரியங் களால்வருமி ராகத் துவேடங்கள்
கந்தமுத லைந்தினோ டுற்றக்கால் - மைந்தனே
ஞானிக் கிவைபகையாம் நண்ணாதே அப்புறத்தே
தானிருக்கச் செய்தல் தவம்.

35. சற்றுப் பிசகெனினும் தன்கடமை தான்மேலாம்
குற்றம் பிறர்கடமை கோருவது - மற்றும்
பிறர்கடமை செவ்வையாய்ச் செய்திடினும் பீழை
மறலி[1]பய மற்றதுவுஞ் செய்யும் - அறவழியாம்
தன்கடமை யுற்றதனிற் சாவெனினும் மேலாகும்
மன்கடமை தன்னில் மகிழ்.

அர்ச்சுனன் கூறியது :

36. தன்னையறி யாமல் சகத்தில் விடயமெனுந்
தன்னிற் கிடந்துழலப் பண்ணியது - என்னவென
என்னறிவுக் கெட்டுமா றிங்குரைத்துக் கண்ணாநீ
செந்நெறிக் கேயிட்டுக் செல்![2]

பகவான் கூறியது :

37. இச்சை சினமே இராசதத்திற் றோன்று மிவை
விச்சைக்கு வெம்பகையாம் மேதினியில் - அச்சோ
மகாசன னொன்றாம் மகாபாவி மற்றொன்(று)
அகோகெட்ட துட்டரிவ ராம்.

---

1. மறலி - மயக்கம்
2. எதை உண்ணக் கூடாது என்று கூறப்படுகிறதோ அதையே நோயாளி உண்ண விரும்புகிறான். தெரிந்திருக்கும் மனிதன் அதர்மம் செய்கிறான். மனிதனை இறைவன் பாவத்தில் ஈடுபடச் செய்கிறாரா அல்லது மனிதனின் முன்வினைப் பயனா? அல்லது இதற்கு அப்பால் ஏதேனும் காரணம் உண்டா என்பதுதான் இங்கே கேட்கப்பட்டுள்ளது.

38. கனலிற் புகையுண்டு கண்ணாடி மாசு
தனஞ்சயா பிண்ட மறைவுண்டு - அனந்தரம்
நின்று மறைத்திடல்போல் நின்மலமாம் புத்தியினைச்
சென்று மறைத்திடுமிச் சை.

39. அடக்க முடியா வனலெனு மாசை
விடற்கரிய தொல்லை விளைக்கும் - படிமிசையே
ஞானிக் கிதைவிடவோர் நண்ணுபகை வேறில்லை
ஞானமதைத் தான்மறைத்த லால்.

40. ஐந்தாம் புலன்களிலும் ஆகத் தனிலமையும்
புந்தியு ளந்தனிலும் புக்கிருந்து - சந்ததமும்
தேகிக்கே ஞானந் தெரியாமற் றான்மறைத்து
மோகிக்கச் செய்யுமெனல் முன்னு.

41. இந்திரியந் தம்மை வயமாக்கி இங்குநீ
அந்தப் பகைவனைத் தானழிப்பாய் - அந்தமுள
ஆன்மஞா னத்தோ டனுபவநன் ஞானத்தைத்
தான்மறைத்து நிற்பதிது தான்.

42. இந்தச் சரீரத்திற் கிந்திரிய மேலாகும்
இந்தியத்தின் மேலாகும் எண்ணுமுளம் - புந்தி
அதனினு மேலாகும் ஆராய்ந்தா லங்கதன்மேல்
எதுவா மெனிலாத் மனே.

43. புத்திக்கு மேலாம் பொருளதுவே தானென்று
புத்தியி லுள்ளத்தைத் தானிறுத்தி - நத்தியெழு
மிச்சையின் ரூபமாய் இங்கிருக்குஞ் சத்துருவை
நிச்சயமாய்த் தான்ஜெயிப்பாய் நீ.

கர்ம யோகம் எனும்
மூன்றாவது அத்தியாயம் முற்றிற்று.

ஞான கர்ம ஸந்நியாஸ யோகம் எனும்
நான்காவது அத்தியாயம்

ஸ்ரீபகவான் கூறியது :

1. கேடிலா யோகம் விவஸ்வது* கேட்கப், பின்
நாடி யுரைத்ததை நாமன்றோ - தேடி
மனு*வுக் கவனுரைத்தான் மண்மே லிக்ஷ்வாகு*!
மனுவா லிதையுணர்ந்தான் மற்று.

2. பிதாபின் மகனாகப் பேருலகி லிஃது
பதாதிமுதற் றானையுட னாண்ட - நிதானமதி
மன்னவர்கள் மட்டில் வழங்கியபின் காலத்தால்
என்னொ மறைந்ததுவா மிங்கு.

3. புராதனமா மிஃது புகன்றோ னுனக்குத்
தராதலத்தில் நீயென்னைச் சார்ந்த - பராவியசீர்
பக்தனும் நண்பனாயத் தானிருக்கும் பண்பறிந்து
யுக்தமென யோகத் துறை.

இதற்கு முந்தைய அத்தியாயத்தில் ஞான கர்மயோகங்கள் அனாதியான இரு தனித்தனி மார்க்கங்கள் என்று ஸ்ரீகிருஷ்ணர் விவரித்தார். கர்மத்தை ஆசை, மமதை இன்றி இறைவனுக்கே அர்ப்பணம் செய்ய வேண்டும் என்று உபதேசித்தார். இனி இறைவனின் வடிவத்தை எவ்வாறு அறிதல் வேண்டும், கர்மாவை எப்படி அர்ப்பணம் செய்ய வேண்டும் எனும் செய்திகள் இவ்வத்தியாத்தில் விளக்கப்படுகின்றன.

** விவஸ்வது - சூரியன். மனு - விவஸ்வானின் மகன், இக்ஷ்வாகு - சூரிய குலத்து முதல் அரசன்.*

அர்ச்சுனன் கூறியது :

4. பிற்பட்ட தாங்கள் பிசகிலா யோகமிது
முற்பட்ட அந்த விவஸ்வதுபோல் - கற்பிக்க
எவ்வாறு ஆதியிலே ஏற்பட்ட தென்பதனை
எவ்வாறு நம்புவனோ இங்கு.

பகவான் கூறியது :

5. பிறவி அநேகம் பெற்றுள நீயும்
பிறவிபல பெற்றுளாய் பின்னப் - பிறவியெலாம்
நானறிவே னீயறியாய் நானிலத் தீதறிவாய்
மானவப ரந்தபன் நீ.

6. வந்து பிறப்பதில்லை மாறுதலு மெற்கில்லை
இந்த வுலகுக்கே ஈஸ்வரனாம் - சொந்தமாம்
அந்தப் பிரகிருதி என்வயமா யாக்கியே
வந்திடுவேன் மாயையிளா லிங்கு.

7. என்று தருமங்கள் குன்றி அதர்மங்கள்
நின்று தலையெடுக்க நேருமோ - அன்றுயான்
என்னைச் சிருட்டித்துக் கொள்ளுவ னீதுணர்வாய்
முன்னியே பாரத! நீ முற்று!

8. சிட்டரைக் காத்திடவும் துட்டரை மாய்த்திடவும்
நட்டமாந் தன்மநிலை நாட்டிடவும் - இட்டமாய்
ஒவ்வோர் யுகந்தனிலும் உற்றிங் கவதரிப்பேன்
இவ்வாறே என்றும்போல் இன்று.

9. என்திவ்ய சன்மமுங் கன்மமு மிவ்வாறென்
றுண்மையாய்க் கண்டுள்ள வுத்தமர்கள் - பின்சன்மம்
என்று மடையாதே என்னை யடைந்திருப்பர்
பொன்றுநாள் வந்துடலம் போய்.

10. இச்சை பயஞ்சினமே யில்லாது விட்டொழிந்து
நிச்சயமா யென்னில் நினைவிருத்தி - எச்சமிலா
தென்னைச் சரணடைந்தோர் ஞானத்தீ சுத்திசெய
என்னை யடைந்துள்ளார் பலர்.

11. எந்த வழியால் எனைத்தொழுது நின்றனரோ
அந்த வழியே யவர்பயனைச் - சிந்தா
தடைவரிதி லொன்று மையமிலை பார்த்தா!
கடவெல்லா மென்கடவே* யாம்.

12. கன்மத்தில் சித்திபெறக் கண்ணாய்க் கடவுளரைத்
தன்மனத்தே பூசிப்பர் தாரணியோர் - இம்மைக்குச்
சித்தியி லெளிதாம் தீரனாய் நின்றான்ம
வித்தை பெறல்தான் அரிது.

13. நாலுவித வர்ணங்கள் நானமைத்தேன் தாரணியில்
ஏலும் வகையாற் குணகர்மம் - சால
அறித்தேநான் செய்திடினும் செய்தது நானில்
அறிந்திடு அவ்வயனாய் என்று.

14. கன்மமெனைக் கட்டாது கன்மபலத் திச்சையெனக்
கின்மையறிந் திவ்வா றெனையுணர்ந்தோர் - கன்மத்தால்
கட்டுப் படாதிருக்கக் கண்டுவழி கொண்டார்காண்
திட்டாக இஃது தெரிந்து.

---

* கடவு - வழி

15. முன்ன மிருந்த முமுக்ஷுக்க ளீதறிந்தே
கன்ம மியற்றினரக் காலத்தே - முன்னோர்
முனஞ்செய் தவாறே முடிப்பாய்நீ கன்மம்
தனஞ்செயா வஃதே தலை.

16. முற்றும் தெரிந்த முனிவர்கள் தம்மையும்
சற்றுக் கலக்கமுறத் தான்செய்யும் - மற்றையக்
கன்ம மகன்மங் களறுவே னஃதுணர்ந்தால்
சென்மப் பிணிதீரு மே.

17. நல்லதுந் தீயதுமாய் நல்குமிரு கன்மங்கள்
ஒல்லையா யிங்குணர வேண்டுமே - சொல்லும்
அகன்மமது யாதென் றறியவே வேண்டும்
மிகவுங் கடினமிது வாம்.

18. கன்மத்த கன்மமதைத் தான்பார்த்த கன்மத்தில்
கன்மமதைப் பார்த்திடக் கற்றவனே - நன்மதியோன்
மாந்தரில் யுக்தனவன் மற்றுமவன் கன்மமெலாம்
ஏந்தியே செய்தவனா மிங்கு.

19. இச்சையுஞ் சங்கல்ப மில்லா தெவன்கன்மம்
இச்சகத்தே செய்யு மியல்புளனோ - மெச்சுதீ
என்னுமுயர் ஞானத்தால் யார்கன்மம் வெந்தனவோ
அன்னவனே பண்டிதனா மே.

20. பலாபேட்சை நீக்கித் திருப்தி படைத்தோன்
இலாமலெச் சார்பு மிறந்தோன் - உலாவியெக்
கன்மத்தைச் செய்தாலும் கன்மஞ்செய் யாதோனே
மன்மகனே நீமனதில் கொள்.

21. நம்பியொன்றைப் பெறுதல் நாடாமல் இந்திரியந்
தம்பின்னே செல்லா தவையடக்கி - இம்பரில்
எல்லாந் துறந்தவனுந் தீதுபெறச் செய்தொழிலால்
நில்லாது பந்தமவன் பால்.

22. தேடா தெதுவரினும் உள்ளத் திருப்தியுடன்
வாடாது தொந்த்ங்கள் வந்திடினும் - நீடாது
மத்சரமு னீக்கி மனதுசமத் துற்றியற்றும்
அத்தருமம் பந்தமிலா தாம்.

23. அபிமான மற்றவனாய் முக்தனாய் ஆன்மத்து
உபமான மற்ற வுறுதி - தவமாற்றி
யக்ஞ மியற்றிடுவோன் கன்மங்க ளெல்லாமே
மங்கி மறைந்திடுமா மிங்கு.

24. அர்ப்பணமு மந்த அவியும் பிரம்மமாம்
அக்கினியும் பின்னர் அளிப்பவனும் - அப்பிரம்மம்
கன்மத்தி லும்பிரம்மங் காணுவோன் அப்பிரம்ம
நின்மலத்திற் சேருவனாம் நேர்.

25. யோகிகள் சில்லோர் உரித்தாயத் தேவருக்கே
ஆகுமோர் யக்ஞமே ஆற்றுவர் - வாகுடனே
வேறுசிலர் ஆன்மாவை ஆதியாய் அவ்வறியால்
கூறுபிர மத்தளிப்பர் கொண்டு.

26. சிலர்ஞான விந்திரியம் நிக்கிரகத் தீயில்
சிலர்விடய மைந்தினையுஞ் சேர்த்து - நலமருள
இந்திரியந் தம்மில் இயற்றுவர் ஹோமத்தை
மைந்தா யிதைமனதில் வை.

27. ஞானகன் மேந்திரிய கன்மங்கள் வாயுகண்
காணதோர் கன்மங்க ளத்தனையும் - ஞானவொளி
விட்டெரியு' ஆத்துமாந் நிக்கிரக வக்கினியில்
இட்டெரிப்பர் வேறு சிலர்.

28. தனயக்ஞும் சில்லோர் தவயக்ஞும் சில்லோர்
வினயமாய் யோகயக்ஞும் சில்லோர் - கனமாக
நிட்டையால் நின்று விரதம் நிகழ்த்திடுவார்
பட்டாங்கி லுள்ளபடி யெல்லாம் - மட்டின்றித்
தாந்தெரிந்த வற்றையே தானமாய்த் தான்வழங்கி
மாந்தருக்குள் போதம் வளர்த்து.

29. பிராணத்தே யபான மதைப்பிப்பர் பின்னும்
பிராணத் திலபானம் பெற்றிடுவர் - மற்றும்
பிராணா பானத்தினுடை வேகத்தைத் தானிறுத்திப்
பிராணாயா மஞ்செய்வர் பின்.

30. மிதமா யுணவண்டு மேதினியிற் சில்லோர்
பதமாக வப்பிராண கன்மம் - நிதமும்
பிராணத்திற் பெய்தோமம் செய்திடுவர் பேசில்
பராவிய யிப்பண்பினால் யக்ஞும் தராதலத்தில்
செய்திவர் பாவஞ் சிதையச் சிறப்பினையே
எய்தியவ ராகு மிவர்.

31. யக்ஞசே ஷாமிருதம் ஏந்தியே வுண்டவர்கள்
சுக்ஞானி யாய்நித்ய மாம்பிரமத் - தெஞ்ஞான்றும்
சென்றிருப்பர் யக்ஞமிவை யொன்றனுஞ் செய்யாது
நின்றிருப்போ னிந்தநிலமிசையே - ஒன்றும்
பயன்பெறவு மேதுமிலை என்றால் பரத்தில்
அவன்பெறுவ தேதுண் டறை.

32. விவிதமா ́யெக்ஞும் விளம்பிநல் வேதம்
அவையெலாங் கன்மத் துதிக்கும் - புவிக்கிதனை
நீயுணர்ந்தா யானால் விடுதலையும் இன்றேயாம்
நீயடைவா யிஃது நிசம்.

33. பொருளீந்து யக்ஞும் புரிவதிலும் ஞான
அருள்யக்ஞும் தானே புனிதம் - புரிகன்மம்
எல்லாம்பின் ஞானத்தை எய்தி முடிவடையும்
வில்லேந்தும் பாரதநீ தேர்.

34. *சரணடைதல் சேவை தருமிக்கமிவ் வாற்றால்
முரணின்றி ஞானியிட முற்றாய் - அருணோக்கால்
அங்கவன் கன்டவுண்மை அற்புதமாய்த் தானெடுத்து
இங்கிதமாய்ச் சொல்லு மிருந்து.

35. மேற்சொல்லு முண்மையினை மேதினியிற் கண்டவற்கு
ஏற்படு மோகந்தா னென்பதிலே - சீர்படவே
சீவரெலாம் உம்மிலும் என்னிலும் தாமடங்கி
மேவுதலைக் காண்பா ரிவர்.

36. பாவியர்க்கும் பாவியராய்ப் பார்த்தா இருந்தாலும்
மேவியநன் ஞானப் புணை* யென்றால் - பாவமெலாம்
தாண்டியே சென்றிடுவாய் ! தாரணியில் இவ்வுண்மை
காண்டி கருத்துணரத் தான்.

---

34. * பணிவும் பரிவும் கேள்வியுடன் சேவை
நனிமிகு இஃதொன்றே நீயறிக ! - துணிவுடைய
ஞானியரும் அங்கவர் கண்டவுண்மை இன்றே
இனிதாகக் கூறிடுவார் அறி ! தி.ரா.தாமோதரன்

36. * புணை - படகு

37. நெருப்பது கட்டையெலாம் நீராய் யெரித்தங்
கிருப்பதுபோல் கன்மமெலா* மிங்கு - நெருப்பென்னும்
ஞானத்தால் வெந்துநீ ராகியே நாசமாகும்
ஞானம் பவித்ரமாம் நாடு.

38. ஞானத்தைப் போன்று பவித்திரமாம் நல்வழியும்
வானகத்தில் மண்ணிலு மில்லையாம் - ஞானத்தீ
காலத்தால் யோகத்தால் கண்டோர்கள் தம்மைத்தான்
சீலத்தே காண்பார் சிறந்து.

39. சிரத்தையாய்ப் பக்தியாய்ச் சிந்தை யதனில்
பரத்தமைந்த ஞானம் படைப்பன் - விரக்தனாய்
விட்டெலா ஞானம் விளங்குமவன் தானடைவான்
சட்டெனச் சாந்தியினைத் தான்.

40. சிரத்தையிலான் அஞ்ஞானி சந்தேகச் சிந்தை
இருத்தியவன் நாசமே யெய்தும் - திருப்திசுகம்
இம்மை மறுமை இரண்டில் பலனடையான்
சம்சய முற்றவனாய் நின்று.

41. இந்திரிய கன்மங்கள் எய்தாது தள்ளிடற்கு
அந்த் யோகந்தான் அருமந்தாம் - சந்தேகம்
ஞானத்தால் நீங்கியவை நானிலத் தற்றுதன்னில்
தானைதென் றுள்ளவனே கன்மமது - தானென்றால்
கட்டுப்ப டாதவனாய்த் தானிருக்கக் காண்பவனாம்
சிட்டனே பாரதநீ தேர்.

---

37. * கன்மமெலாம்-ஸர்வகர்மாணி- பிராப்தம் நீங்கலாக எல்லாக் கருமங்களையும்.

ஒப்பு: போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசாகும் செப்பேலோ ரெம்பாவய் - திருப்பாவை. இருட்டறையில் தீக்குச்சியை கிழித்தால் இருள் ஓடுவதுபோல் இறையருள் பலபிறவியில் செய்தபாவத்தைப் போக்கும்.

42. ஆன்மாவைப் பற்றியுள்ள ஐயமெலாம் அஞ்ஞானத்
தான்மாவில் வந்ததெனத் தானறிந்து - ஆன்மாவின்
ஞானமெனும் கட்கத்தால் நாசம்செய் தேயோகம்
தானியற்ற இன்றே எழு.

ஞான கர்ம ஸந்நியாச யோகமெனும் நான்காவது அத்தியாயம் முற்றிற்று.

ஸந்நியாச யோகம் ஐந்தாவது அத்தியாயம்

அர்ச்சுனன் கேட்டது :

1. கன்மசந் யாசம் கழற்றுவாய் நீயேபின்
கன்மமும் செய்யுமா றேவுவாய் - என்னேயோ !
நல்லதிது வென்றெநீ நாடி யுறுதியாய்ச்
சொல்லுவாய் கண்ணா தொடர்ந்து.

ஸ்ரீபகவான் கூறியது :

2. இவ்விரண்டும் முக்தியையே யெய்தவைக்கு மென்றாலும்
செவ்விதாய்க் கன்மங்கள் செய்திடலே - எவ்வழிக்கும்
சந்யாசம் தன்னின்மேல் சந்தேக மில்லையதில்
மன்மகனே கொள்வாய் மனத்து.

3. வெறுப்பும் விருப்புமிலான் சந்யாசி யாவான்
மறுப்பிலா வுண்மையிது மண்மேல் - துறப்பதெல்லாம்
துக்கசுக மாதிதொடர் பென்றேமேற் சொன்னவனே
தக்கவனா யாவறோ தான்.

4. சாங்கியமும் யோகமும் தாமிவைகள் வேறாக
ஈங்கெடுத்துப் பல்லோ ரியம்பிடுவார் - தாங்கியபேர்
ஞானியவ் வாறுரையான் ஒன்றுறுதி யாய்நாடில்
ஏனிரண்டில் ஆகு மிதம்.

5. ஞானிக்கும் யோகிக்கும் நாடிப் பெறும்பயனோ
தானொன்றா மிந்தத் தரணியிடை - மேனின்று
இவ்விரண்டு மொன்றாகப் பார்த்தவனே யிவ்வுலகில்
செவ்விதாய்ப் பார்த்தவனாம் தேர்.

6. கன்ம மியற்றாது கன்ம விடுதலையோ
தன்மந் தனக்கிளையாய்க் கூடாதே - கன்மத்தைச்
செய்துதன் சித்தம் பரிசுத்தம் செய்தவனே
எய்தும் பிரமத் தெளிது.

7. யோகயுக்தன் சுத்தாத்மா இந்திரியத் தானடக்கித்
தேகம் வயமாக்கும் தீரனாய் - ஏகமாய்
எங்கும்தா னாகவிருப் போன்பு ரியும்செயலால்
தங்காதாம் பந்தமவை தாம்.

8&9. உண்மை யுணர்வோன் உறுதியாய்த் தன்னிலே
எண்ணுமோர் எண்ணமெலாம் யாதென்னில் - கண்கொண்டு
பார்த்தல் பரிசித்தல் கேட்டல் முகர்ந்திடுதல்
ஈர்த்தல் பிடித்தல் விடுதலும் - ஆர்த்தல்
அருந்தல் உரையாடல் தூங்கலுங் கால்கள்
வருந்த நடத்தல் சுவாசித்தல் - திருந்திமைகள்
மூடல் திறத்தல் முதலாங் கருமங்கள்
நாடிப் புரிந்திடினும் நானவற்றி - னோடு
கலந்திருப்போ னல்ல கருவி கரணம்
புலன்கொண் டனுபவிக்கும் போழ்து - இலதாம்
எனக்கதிற் சம்பந்தம் என்பதனை யெண்ணி
மனத்தே நினைத்திடுவான் மற்று.

10. பற்றெலா மற்றுப் பரமனுக் கர்ப்பணமாய்
உற்றே யொருவ னுழைத்திடினோ - நற்றா
மரையிலைநீர் போலும் பவவினைகள் வந்து
புரியாவா மின்னலவன் பால்.

11. யோகியர் சித்தமது சுத்திசெய ஓம்பியே
தேகமன மிந்திரியம் புத்தியினால் - ஆகுமக்
கன்மத்தை யாற்றிடுவார் பந்தமது கட்டோடே
இன்மையா யாக்கி யிருந்து.

12. நிட்டா பரன்யுக்தன் நேரும் பலனினையான்
தட்டாது சாந்திநிலை தானடைவான் - கிட்டாதாம்
அந்த அயுக்தற்கு* ஆசையாற் கட்டுண்டு
சொந்த நலங்கோர லால்.

13. வசியமா யிந்திரியம் கட்டிவிட வல்லோன்
வசியுமொன் பான்வாயில் கோட்டைக் - குசிதனாய்
உள்ளத் துறவடைந்(து) உற்றதொரு கன்மமெலாந்
தள்ளித் தனித்திருந்தே தான்.

14. கர்த்ருத்து வம்கன்மங் கடவுள் படைத்திலனே
கர்மபல சம்யோகங் காட்டிலனே - சத்துருவாம்
மாயை யவித்தையே மற்றிவற்றைச் செய்திடுமாம்
ஏயவுல கந்தனிலென் றெண்ணு.

15. பாவ சுகிர்த்தங்கள்* பண்ணுவது மீசனை
மேவுமஞ் ஞான மறைந்திடலால் - ஆவதாம்
ஞான மிழந்த நிலையிலே நானிலத்தோர்க்
கீனமா யாகி மதி.

---

12. * அயுக்தன் - யோகம் கைவரப் பெறாதவன்
13. சுகிர்த்தங்கள் - புண்ணியங்கள்

16. ஆத்மநன் ஞானத்தால் யாவரின் அஞ்ஞானம்
நீத்தொழித்த தாயினுமிந் நீணிலத்தே - ஏற்றுமெழில்
ஞானமது சூரியன்போல் நல்லொளியி னாற்பிரமந்
தானுரக் காட்டிடுமே தான்.

17. தத்புத்தி யாவும் அதுவே தானாகவும்
தந்நிஷ்ட னாகவுந் தானிருந்து - நித்தம்
சரண மடைந்தால் ஞானம் பவமொழிக்க
வாரார் மறுபிறப்பில் தாம்.

18. வித்தகர்க ளானவர்தாம் வித்தியாச மாயெவையும்
சித்தமிசை யெண்ணிடுதற் செய்யாரே - உத்தமராம்
அந்தணரு மப்பசுவு மானையும் நாயுமின்னு
மந்தப் பறையனுமொன் றாம்*

19. இகத்திலே முக்திசுக மெய்திடுவர் தத்த
மகத்திற் சமமா யனைத்தும் - புகுத்திடுவோர்
அப்பிரமந் தானும் சமமாய்நிர் தோஷமதால்
அப்பிரமத் துற்றிருப்ப ராம்.

20. சலிப்புஞ்சந் தோஷமிலாத் தன்மையனாய் நின்று
நிலைபிறழாச் சிந்தையு ளானாகி - நிலையாம்
பிரமத்தி ருப்பன் அசம்மூட னாவான்
பிரமவித் தாகு மவன்.

---

*18. ** அங்கிங் கெனாதபடி எங்கும் பிரகாசமாய்
ஆனந்தபூர்த்தியாகி அருளொடு நிறைந்தது
எங்கெங்கு பார்த்தாலும் எவ்வுயிர்க்கும் அவ்வுயிராய்
அங்கங்கிருப்பது நீயன்றோ பராபரமே — தாயுமானவர்*

*20. ** அஸம்மூடன் - மோகமில்லாதவன்
பிரியமுள்ளவற்றை அடைந்து மகிழ்ச்சியில்லாமலும்,
பிரியமில்லாததை அடைந்து வருந்தி மனம்தளராமலும் இருப்பவன்.*

21. வெளிவிட்யத் தேயுறினும் பற்றினை விட்டோன்
களியெல்லாந் தன்னுள்ளே காண்போன் - உளந்தான்
பிரமத்தே வைத்த பிழையிலா நோக்கால்
பெருஞ்சுகமே பெற்றிடுவான் பின்.

22. பரிசத்தி னின்பமெலாம் பாரிடையே துக்கந்
தருமிவை வந்துவந்து போகும் - வரும்போம்
இவற்றிலோர் இன்பத்தை யெய்திடுதல் எண்ணான்
தவறில்லா ஞானத் தவன்.

24. அந்தர் சுகியாயும் அந்தரா ராமனா *
யந்தப் பிரகாசத் தோடிருக்கும் - அந்தமுள
யோகி பிரம்மனா யுற்றிருந்து பின்னடைவன்
ஏகப் பிரமத்தி னிங்கு.

25. குற்றங் களைந்தவனாய்ச் சந்தேகங் கொன்றவனாய்
உற்ற வுறுப்பை ஓடுக்கியே - மற்றும்
பிறர்நன்மை பேணும் இருடிகள்* பின்னால்
நிருவாணம் பெற்றிருப்பர் நின்று.

26. காமக் குரோதமிவை கட்டோடு விட்டவனாய்
ஏமமாய்ச் சித்தம் வயமாக்கித் - தோமறவே
ஆத்துமனைத் தானறிந்து பற்றெலா மற்றொழித்த
நீத்தோனாஞ் சந்நியாசி நீணிலத்தில் - பாத்திரனாய்
இங்குட னங்கு நிருவாண நிலையெய்தி
இங்கித மாயிருப்ப னே.

---

24. *அந்தராராமன் -தனக்குள்ளே மகிழ்பவன்.தனக்குள் தானே பூர்ணாநந்தத்தை அனுபவிப்பது ஈசுவர தரிசனத்தின் அடையாளங்களில் ஒன்றாகும். சமுத்திரத்தின் மேல்பரப்பில் அலைகள் சுருண்டோடுகின்றன. ஆனால் அதன் கீழுள்ள நீர்த்தொகுதியோ அசைவற்று அமைதியாயிருக்கிறது.

25. * இருடிகள் - இருசிகள் - ரிஷிகள்

27&28. வெளிவிடயஞ் சேரான் விழியிரண்டு நெற்றி
வெளிக்கே தம்பார்வை விடாமல் - அளித்துப்
பிராண அபானத்தின் ஓட்டத்தை நாசித்
துவாரகத்தே மட்டாகச் செய்து - பராவியெழும்
இந்திரியச் சிந்தையும் புந்தி வயமாக்கிப்
பந்த நிவர்த்தியே பார்த்திருந்து - சிந்தையில்
இச்சை பயங்கோப மில்லாத அம்முனியே
உச்சிதனாம் முக்தன் உணர்.

29. யக்ஞ தபமெல்லா ஏற்பவனு மிவ்வுலகுக்
கிங்கித மாம்பெரிய ஈஸ்வரனும் - தங்குபுகழ்
மித்திர னெவ்வுயிர்க்கு மேதினியில் யானென்றே
இத்திறமா யென்னை இதயத்தே - நித்தமும்
எண்ணி யிருப்பவர்கள் எய்துவர் சாந்திநிலை
திண்ணமென் றேயிதனைத் தேர்.

ஸந்நியாச யோகம் எனும்
ஐந்தாவது அத்தியாயம் முற்றிற்று.

---

27. நடன கோபால ஹரி நாக் தீ^{3} தெ^{3}ாளானு மத்^{3}தி^{4}ம்
நடனம் க^{2}ளரேஸ் ஸவரே - நன்ஸாப் ஹோர் - (நடனம்)
ஸவோ தீ^{3} தொ^{3}ளானுமத்தி^{4}ம் மிஸ்குநாஸ்தோ ஸதா ஹிப்பள்ளி
- நடன கோபால நாயகி சுவாமிகள்

தியான யோகம் எனும் ஆறாவது அத்தியாயம்

1. கன்மபலன் வேண்டானாய்க் காரியமே செய்திடுமோர்
நன்மனத்தன் சந்யாசி யோகியாம் - மன்னவனே
ஓர்கரும மின்றியக்னி ஹோத்ரமில் லாதிருப்போன்
ஓர்கநிலை யீதடையா னென்று.

2. பாண்டவா சந்யாசம் யோகமென் றேபகர்வாய்
ஈண்டுச்சங் கல்பமது விட்டா ல்லால் - யாண்டுமவன்
யோகியே யாவதிலை உண்மையா யீதறிவாய்
தேகிக்கே யுற்ற செயல்.

3. கன்ம்மாரு ருட்சுக்கே* காரணமாய்ச் சாற்றுவரே
மன்மகனே! வாரூட* வந்நிலையில் - பன்மையில்
செல்லாச் சமநிலையே செப்புவர் காரணமாய்
நல்லாய் நனிவணர்க வே.

4. விடய கருமத்திற் பற்றெல்லாம் விட்டோர்
முடித்தெலாச் சங்கல்பம் விட்ட - அடியவரே
யோகாரூ டன்* பெயர் கொண்டவராம் பார்த்தனே!
வாகுடனே தேராய் வழி.

5. தன்னைத்தன் னாலே தரணிக் குயர்நிலைக்கே
முன்னியடை வித்தல் முறையாகும் - இன்னுயிர்க்கு
மித்திரனுஞ் சத்துருவும் மேதினியிற் றானேயாம்
உத்தரமீ தேற்பா யுளத்து.

---

3. * ஆருருட்சு - ஆருருக்ஷ : - உயர ஏற விரும்புகிறவர்
4. * வாரூட - யோகாரூட : - யோகத்தில் உயர்ந்தநிலை எய்தியவர்.

6. தான்றனக்கு மித்திரனாம் ; தன்னைய டக்கினனேல்
தான்றன் வயமிலதேல் சத்துருவாம் - வான்மழையும்
நற்றுணையாய் நின்றுயர நாற்றை வளர்த்துப்பின்
முற்றியபின் சத்துருவாம் போல்.*

7. போதத்த டங்கும் புனிதமுளோர் நோக்கமெலாம்
சோதிப் பரமான்மா தன்னிலாம் - ஏதும்
சுகதுக்கஞ் சூடுகுளிர் மானாவ மானம்
சுகமே வடையா தவர்க்கு.

8. ஞானவிஞ் ஞானமது நாடியே விந்திரியக்
கோனெனவே நிற்கவக் கூடஸ்தன் - ஆனவற்குப்
பொன்னும் பிடிமண்ணும் கல்லுமொன்று போலென்னில்
அன்னவனே யோகியுக்த னாம்.

9. நலம்நினைப்போர், தோழர், பகைவருதா சீனர்*
புலமைமிகு மத்தியஸ்த ரின்னும் - குலக்கிளைஞர்
தன்னைத் துவேஷிப்போர் சாதுக்கள் கெட்டவரைப்
பின்னமிலா தொன்றெனவே பேணிவரு - மன்னவனே
உத்தம நற்பதமே உன்னியே பெற்றிடுவான்
நித்தியமாம் வாழ்வில் நிலைத்து.

---

5. * தன்னாலே தன்னை உயர்த்திக் கொளல்வேண்டும்
தன்னையே தானேயாம் தாழ்த்தாதே - தன்னில்
உறவினன் தானேயாம் அன்றித் தனக்கும்
உறவினன் தானே யவன். - தி.ரா. தாமோதரன்

6. * மூலத்தில் உவமை கூறப்படவில்லை.இங்கே மொழிபெயர்ப்பாளர் தம் கருத்தினை வலியுறுத்தச் சிறந்த பொருத்தமான உவமையைப் புகுத்தியுள்ளார்.

"தன்னை யறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை யறியாமற் றானே கெடுகின்றான்" - திருமந்திரம்

10. ஆக்கமீ தாசையிலா னாகிப் புலன்சிந்தை
நீக்கமறத் தானடக்கி நித்தமும் - ஊக்கமொடு
ஏகாந்தி யாயிருந்து இவ்வுலகில் யோகியவன்
ஏகாக் ரகம்பயில்க வே.

11&12. பரிசுத்த மானவிடம் பார்த்துத் தெரிந்து
தரைமேல் தருப்பையே தாங்க - வரிவேங்கைத்
தோலாயி னும்புல்வாய்த் தோலாயி னும்கொண்டு
நூலா லமைத்த படம்விரித்து - மேலே
இருந்தே கனமான கோ டியற்றும் யோகத்
திருந்து மனத்தூய்மை தேர்.

13. தேக மசையாமல் கண்டஞ் சிரம்நிமிர
ஏகமாய் நாசிமுனை நோக்கியே - வாகுடனே
வைத்தவிழி கொண்டிருந்தே மாறிலா யோகமது
செய்திடுதல் அஃதே சிறப்பு.

14. பிரசாந்த* வாத்துமனாய்ப் பீதியற்று நின்று
பிரமச் சரியமே பேணிப் பொருமனதைத்
தன்வயமா யாக்கித் தரணியிடை மத்பரனாய்
உன்னி நிலைக்க உளம்.

---

8. ஞானம்-சாஸ்திர அறிவு;விஞ்ஞானம்-சாஸ்திரம் கண்ட உண்மைகளை அனுபவத்தால் உணரும் அறிவு.

*கூடஸ்த்தன்-'கூடம்' என்பது இரும்படிக்கும் சம்மட்டிக்கல்லைக் குறிக்கும். அதன்மேல் வைத்து அடிக்கப்படும் இரும்புதான் வடிவம்மாறும்; கல் என்றும் மாறுபடாதிருப்பர்.

* 'ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குவர்' - அப்பர்
'ஓடும் இரு நதியும் ஒன்றாகக் கண்டவர்கள்
நாடும் பொருளான நட்பே பராபரமே' - தாயுமானவர்
நாடும் பொருளான நட்பே பராபரமே' - தாயுமானவர்

9. * உதாசீனர் - ஸாதக பாதகம் செய்யாமல் ஒதுக்கியிருப்பவர்.

15. இவ்வாறு சித்தமதை யென்னில் நிலைநிறுத்திச்
செவ்வியநல் யோகி சிறந்தவனாய் - இவ்வழியே
சாந்தி நிலையடைந்து தான்பின் நிருவாணத்
தாந்திறமும் பெற்றிருப்ப னாம்.

16. மீதூணா(ய்) உண்போன்; உணவே உண்ணாதோன்
மீதுறக்கம் கொண்டோன் உறங்காதோன்;- மேதினியில்
அந்தநல் யோகத்திற் காளாவோ னல்லனாம்
அந்தமுள அர்ச்சுனநீ ஆய்!

17. உண்டு களித்தல் உறுகருமத் துற்றிருத்தல்
கண்டுயிலல் கண்விழிப்பு மற்றவைகள் - கொண்டால்
மிதமாகக் கொள்வோர்க்கு மேதினியில் யோகம்
இதமாக்கும் இன்னலெலா மிற்று.

18. முற்றும் வயப்பட்ட நெஞ்ச முடிவாகப்
பற்றின்றி ஆன்மாவிற் றான்படிந்தால் - குற்றமிலா
யுக்த னவனென்றே ஓதுவோர் ஈதறிவாய்
முக்திவழிக் கீதே முடிவு.

11&12. ராமகிருஷ்ண பரமஹம்சரின் விளக்கம்:

ஒருவரும் வாராத இடத்தில், அல்லது காட்டில் தனியாக அல்லது உன்மனமாகிய நிசப்தமான கோவிலில் இறைவனைப் பற்றிச் சிந்தனை செய்.
ஏகாக்ரம்: ஊசியில் நூலைக் கோர்க்க வேண்டுமெனில் நூலின் முனையைக் கூராக்கி, நீட்டிக் கொண்டிருக்கும் பஞ்சுத் துண்டுகளை எடுத்தெறிய வேண்டும். அப்பால் ஊசியின் காது வழியாக நூல் எளிதாகப் போகும். அது போன்றே மனத்தை இறைவனிடம் செலுத்த வேண்டும்.

ஒரு வேடன் ஒரு பறவையைக் கொல்வதற்குக் கவனமாக இருந்தான். அப்பாதையில் அப்போது சென்ற ஆடம்பரமான கல்யாண ஊர்வலம் அவன் கவனத்தைக் கவரவில்லை. இதைக் கவனித்த முனிவர் வேடனைத் தன் குருவாக ஏற்றுத், தியானத்தில் இருக்கும் போது தன் மனமும் வேடனைப் போல் ஏகாக்ர சிந்தையாய் இருக்கட்டும் என்றார்.

*14. * பிரசாந்தவாத்துமன் - பிரசாந்த ஆத்மன் - அலையாத அமைதியுடைய ஆன்மா.*

19. காற்றிலா வோரிடத்தே ஏற்றிவைத்த தீபம்போல்
மாற்றுயர்ந்த யோகி மனதாகும் - காற்றென்னும்
இந்திரிய மெல்லா மிவன்மனதாந் தீபமதை
வந்தே யலைப்பதில தாம்.

20-23 மனதை யொருநிலையில் வைத்திடலா லந்த
மனதுதன் சாந்திநிலை யெய்தும் - தனதுருவைத்
தன்னிலே பார்த்துத் தெளயுந் தகைமையுளான்
தன்னில் திருப்திபெறத் தான்காண்பன் - மன்ன
முடிவிலா வானந்த முன்னின் றறிவால்
திடமா யனுபவித்துப் பின்னால் - இடமாறி
இந்திரியத் தேகாணு மீதனில்நி லைத்தவர்க்கு
அந்தநிலை மாறா ததுவேதான் - சொந்தநிலை
என்றடைந்த பேருக் கெதுவும் பெரிதல்ல
என்றுமே துக்கமது எய்திடா் - நின்றநிலை
இஃதுதான் யோகநிலை யென்பரிது தானே
துக்கந் துணிந்திடுமாம் தொல்லுலகில் - இஃதியற்ற
வேண்டின் விடாமுயற்சி வேண்டுமத னோடு
வேண்டுமனிர் விண்ண* உளம்.

24. சங்கல்பத் தால்வந்த இச்சையெலாந் தன்மனதில்
தங்கு நலத்திருக்கத் தான்துறந்து - அங்கிங்
கலையாதே இந்தியத்தி னாசை மனத்தால்
நலிய அடக்கிடவே நாடு.

25. அறிவைப் பொறுமையிலும் ஆன்மாவிற் றானே
உறுதியதா யுள்ளமது ஒன்றப் - பெறுதியவன்
பின்னாலச் சாந்தி பெறுக படிப்படியாய்
உன்னா திருக்கவே றொன்று.

26. சஞ்சலமா யுள்ளம் திறமற்றுச் சற்றேனும்
சஞ்சரிக்கக் காண்பாயேல் தட்சனமே - மிஞ்சிடா
தோட்டத்தைத் தான்கொடுத்து உற்றிருக்க ஆன்மாவில்
பூட்டி விடவே புகுந்து.

எல்லாம் பிரம்மமய மென்றறிந்தோ னுள்ளத்தே
எல்லா மமைதிபெற இச்சையெலாம் - நில்லாது
மாசெல்லாம் நீத்தொழித்த முத்திநிலை வந்திடவே
பேசரிய பேரின்பம் பின்.

28. இந்தவித மாகமனத் தின்பதுன்பந் தான்மறந்து
சிந்தையென்று மவ்வழியிற் சேர்ந்திருப்போன் - அந்தப்
பிரம்மத்தோ டொன்றாகும் பேரின்ப வாழ்வை
நிரந்தரமாய்ப் பெற்றிருப்ப னே.

29. யோகத்தா லுள்ளமதை யோர்நிலைக்கே சேர்ந்திருப்போன்
ஏகமாய் நோக்கு மெதனையும் - ஏகனை
எல்லா வுயிர்களிலும் ஏகனிலெல் லாவுயிரும்
எல்லாமாய்க் காண்பவ னே.

30. என்னை யனைத்தினிலும் என்னி லனைத்தையும்
நன்னயமாய்ப் பார்க்கும் நலமுடையான் - உன்னியெனை
விட்டுப் பிரியானே மேதினியில் நானவனை
விட்டிரேன் இஃதோர் விதி.

31. சகல வுயிர்களிலுந் தங்குவோனென் றென்னில்
அகலாத ஏகத்வந் தன்னைப் - புகழ்வோன்
உணர்வோ னெனில்நிலைகொள் உத்தமனா மென்னில்
உணர்ந்துறை வோனவனே ஓர்.

32. துக்கசுக மன்னியர்பால் தோன்றுமவை தன்னதென
இக்குவல யத்தோற்கு மெண்ணமுளான் - பக்குவியாம்
யோகியவ னென்றே உலகோர் நவிலுவரால்
ஏகத் திரகசிய மீது.

---

23. * *அனிர்விண்ண - தளராத*

அர்ச்சுனன் கூறியது :

33. பிழைபடா ஏகத்தைப் பேசுமிவ் யோகம்
அழிவிலா மற்பயனை யாற்றும் - வழியறியேன்
சஞ்சலமே கொண்டுளதால் சற்றேனு மென்வயமில்
நெஞ்சத்தால் என்னாம் நிகழ்த்து.

34. கண்ணா மனதடக்கல் காற்றை யடக்கிடல்போல்
ஒண்ணா தெனவே உணர்ந்தனனே - மண்ணிலே
சஞ்சலத்தால் மாபலத்தலால் சற்றும் வயப்படா
நெஞ்சமிதற் கேது நிகர்.

ஸ்ரீபகவான் கூறியது :

35. சஞ்சலமாய் நிக்கிரகம் சற்றும் இயலாத
நெஞ்சமிது வென்பதுவும் நிச்சயமே - அஞ்சாமல்
அப்பியாசம் வைராக்ய மாமிரண்டு முண்டாமேல்
இப்புவியி லீதடக்க லாம்.

36. சிந்தை யடங்காதோர் யோகத்தைச் சேர்வதில்லை
சந்தேக மில்லையிதிற் றானறிவாய் - சிந்தை
அடக்கினோ னுற்றவழி நின்றுழைத்த லஃதும்
அடைவனே யோகந் தனை.

அர்ச்சுனன் கூறியது :

37. சிரத்தை யிருந்துந்தன் சிந்தை யடங்கா
ஒருத்தனுக்(கு) இவ்யோகம் வீணேல் - வரத்தக்க
அந்த முடிவதனை யாதென்று நீயுரைப்பாய்
அந்தமிலாக் கண்ணா எனக்கு.

38. பிரம்ம நெறியிற் பிழைபட்டோ னாகித்
திரமிழந்(து) இவ்விரண்டுந் தான்கெட்(டு) - இருந்திடுவோன்
ஆதரவற் றுச்சிதறும் ஆகாய மேகம்போல்
பேதிப்பன் அன்றோ வுரை.

39. ஐயமிது முற்றும் அகற்றுவோர் நீயல்லால்
மெய்யாக வேறில்லை மேதினியில் - மைவண்ணா
நின்சீட னெற்கு நிலையான போதமுற
நன்மை நவிலுவீரிந் நாள்.

ஸ்ரீ பகவான் கூறியது :

40. நல்வழியில் நின்றவர்க்கு நானிலத்தே துக்கமது
வெல்வழி யுண்டேயல்லால் வேறில்லை - வில்விஜயா!
நீசொன்ன அன்னவர்க்கு நேருவதற் குண்டான
நாசமது வொன்றுமிலை யே.

41. யோகப் பிரஷ்டன் உயர்லோகங் கட்கேதான்
ஏகுவன் பல்லாண் டிருந்தங்கு - மாகனமே
தங்கியபேர் சீரமைந்த தாரணிக்கோர் நன்மரபில்
இங்கிதமாய் வந்துதிப்ப னே.

42. அல்லாதவன் ஞானமுயர் யோகியர் ஆனவர்கள்
நல்ல தொருமரபில் நானிலத்தே - எல்லாரும்
போற்று மருட்பிறவி போயங் கடைவனே
ஆற்றுமவன் யேகாகத்தி னால்.

43. பூர்வ மடைந்திருந்த புத்திசம் யோகத்தால்
ஆர்வமாய் மேல்விழியை யங்கிருந்தே -சேர்வதற்கு
உற்றதோர் யத்தனங்கள் ஒன்றியே செய்வதிலே
உற்றிருப்ப னென்றே யுணர்.

44. பூர்வம் பழகியதால் போவா(ன்) அதுவழியே
நேர்வழியுந் தானாய் நினைவுறவே - கூர்மதியின்
யோகத்திற் ஜிக்ஞாசு சப்தபிர மத்தின்மேல்
ஏகுவனா மென்றே யறி.

45. விடாமுயற்சி யாலே விவிதமாய் மாசு
படாது பிரிந்திருக்கப் பண்ணும் - விடாதே
சிறுகச் சிறுகச் சிலகாலஞ் சென்று
பெறுவன் கடைசி முடிபு.

46. தவத்தனைக் காட்டிலும் தான்பெரிதும் யோகி
பவங்கொய்ய ஞானவழி பற்றும் - அவனியிலும்
வேத விதிப்படியே செல்லுமக் கன்மத்தன்
ஆதியிவர் கட்கெல்லாம் மேலாவன் - ஆதலால்
தேகமுள காலத்தே சீரியோய் நீயந்த
யோக மியற்ற லுயர்வு.

47. அந்தரான்மா தன்னை அடைவித் தெனிலொன்றாய்ச்
சிந்தை சிரத்தையுறச் சேர்ந்திருப்போன் - நிந்தையிலா
யுக்தர்க்கெ லாமதிக யுக்தனென் றேயவனை
நித்தமும் யானினைப்பேன் நின்று.

தியான யோகம் எனும்
ஆறாவது அத்தியாயம் முற்றிற்று.

ஞான விஞ்ஞான யோகம் எனும் ஏழாவது அத்தியாயம்

ஸ்ரீ பகவான் கூறியது :

1. என்னில் நிலைத்த மனதெய்திச் சார்ந்திருந்து
முன்னியே யோகம் முடிப்பவனாய் - என்னுருவை
ஐயமற முற்றும் அறிவதெவ் வாறென்ப
துய்ய வுரைப்பனு னக்கு.

2. ஞானவிஞ் ஞானம் நவிலுவே னிங்கெடுத்(து)
ஆனவிலை கேட்டபின் அர்ச்சுனா - மேனவில*
ஒன்றுமே யில்லையெனு முண்மையை யுன்மனத்தே
நன்று தெரிந்திடுவாய் நன்று.

3. பல்லாயி ரத்தொருவர் சித்திபெறப் பார்த்திடுவோர்
நல்லாரி வர்தம்மில் நாடியென்? - எல்லாரு
முண்மை வடிவமதை யூகித் துணர்வல்லான்
அண்மையிலா தாமெனலு மாய்.

4. என்றன் பிரகிருதி எண்வகையாம் பூமியதி
லொன்று,நீர், தீ, வாயு, ஆகாயம் - என்றும், பின்
புத்தியகங் காரம் புரைசெய் மனமென்னு
மித்திறத்தா லெட்டா மிவை.

5. சீவ பிரகிருதி செப்பினே னிங்கெடுத்(து)
ஏவும் விசையீதா மென்றெனக்கு - மேவுமென்
மாயா பிரகிருதி மற்றொன்று மிங்குளதாம்
ஓயா வுலகிற்கா மீது.

---

2. *மேனவில - மேல் + நவில

6. அகில சராசரங்க ளவ்விரண்டிற் றொன்றும்
மகிபாலா யெண்ணிலவை தோன்றும் - சகல
உலக மனைத்தினுக்கு(ம்) உற்பத்தி நாசம்
இலகுமென் பாலென் றறி.

7. என்னை விடமேலாம் பொருளொன்று மிங்கில்லை
சொன்னமணி பூஷணத்திற் றோன்றுகயி - றென்னவே
ஆதார மாக அவனிக்கே யாயிருப்பன்
தேர்ந்தி தையுணர்வாய் நின்று.

8. தண்ணீருக் குற்றரசம் சந்திரா தித்தனொளி
உண்ணிறைந்த வோமென்ப வேதத்தில் - விண்ணிலே
ஓசையும் மாந்தர்க்கு ளூற்றதொரு பவ்ருஷமும்*
நாசமிலா நானென் றறி.

9. மண்ணிற் சுகந்தம் வளர்சுடரு மக்கினியில்
எண்ணுமுயிர்க் குள்ளே எழிற்சீவன் - பண்ணுமுயர்
மாதவத்தோர் தந்தவமும் மண்ணிடை யானென்ப
நீதெரிந்து கொள்வாய் நினைத்து.

10. நிலவுயிர்கட் கெல்லாம் நிலையான வித்து
நிலவுமதி மேதையர்தம் புத்தி - நிலைதவறா
வீரரில் வீரம் விளம்புமிவை நானென்றே
தீரனே நீயுணர்வாய் தேர்ந்து.

11. ஆசையபி மானமிலா வாற்றல்யான் ஆற்றலரில்
நேசமுறந் தன்ம னிகழ்த்துமிச்சை - தேசுளாய்
மாந்தர்க்குள் யானென்றே மாறாதே நீயுணர்வாய்
நீந்திடுவா யுன்பிறவி நீ

12. சத்வரசோ தாமதங்கள் தாமென் னிலையெனினும்
உத்பவமு மென்னிடத்தென் றேயுணர்வாய் - உத்தமனே!
நானவற்றி லில்லாதோன் நாடியவை என்னிலே
தானிருப்ப தாமென் றுணர்.

8. * பவ்ருஷம் - பௌருஷம் - ஆண்மை.

13. முக்குணத்தின்* காரியத்தால் மூடுண்ட யிவ்வுலகம்
அக்குணத்திற் கப்பாலாய் அவ்யயனாய் - நிற்குமெனை
இங்குணர மாட்டா திருக்குமோ ருண்மையினை
இங்குரைத்தே னுன்மனத்தே யேல்.

14. முந்துறு முக்குணத்து மாயை கடக்கரிதாய்
வந்துறு மென்ப வளருலகில் - நந்தலரும்
பக்தியா லென்பால் சரணடைந்தா ரம்மாயா
சக்தியைத் தான்கடப்பர் தாம்.

15. துட்டர் அதமரும் மூடரிவர் தம்முள்ளே
கெட்ட மதியினராய் மாயையினால் - இட்டமாய்
அவ்வசுரர் தம்வழியே ஆற்றுஞ் செயலுளராய்
எவ்வழிக்கும் நாடார் எனை.

16. நாலுவித மாஞ்சுகிர்தர் நன்னுவ ரென்றனையே
காலத்தா லல்லலுக்கா ளானவரும் - சீலமார்
சிஞ்ஞாசு அர்த்தார்த்தி ஞானிபர தர்ஷபா*
எஞ்ஞான்றும் மிந்நால்வ ரே.

17. ஆயினும் ஞானியவன் நித்யயுக்த னாயிருந்து
ஏயதோர் ஏகபக்தி இங்கெய்தித் - தூயமனத்
துற்றிருந்து மற்றோர்க் குயர்நிலையில் வைப்பவனே
மற்றிவனே எற்பிரிய னாம்.

18. பொருந்து குணத்தரிவ ராவர் பொதுவாய்த்
திருந்துகுண ஞானியெனில் யானே - அருந்தவத்தில்
தானிவன் யுக்தமன தோடே யெனைமுடிவாய்த்
தானடைந்தே யுற்றிருப்பன் தான்.

---

13. *முக்குணம் - ராகம், துவேஷம், மோஹம் - விருப்பு, வெறுப்பு, மயக்கம்.

16. பரதர்ஷபா - அர்ச்சுனா சுகிர்தர் - புண்ணியவான்கள்
சிஞ்ஞாசு - ஜிஜ்ஞாசு - ஞானத்தைத் தேடுபவன் அர்த்தார்த்தி - செல்வத்தை நாடுபவன்.

19. ஞானியும் நானிலத்தே ஜன்மம் பலகடந்து
தானவன் என்னைச் சரணடைவன் - மானிலத்தில்
சர்வம் பரவாசு தேவனெனு மம்மகாத்மா
துர்லபமென் றேயவனைச் சொல்.

20. தத்தஞ் சுபாவத்தால் தள்ளுண்டு வேறுசிலர்
பத்திசெயத் தெய்வங்கள் பற்பலவாய்ச் - சித்திபெறச்
செய்கருமம் பற்பலவாய்ச் சேர்ந்திங் கிருந்திடுவர்
வையகத்தி லிஃதோர் வகை.

21. சிரத்தையுட னெவ்வுருவைச் சிந்திப் பினுமச்
சிரத்தை கலையாமற் செய்தே - இருந்திடல்
என்கடமை யாமென்றே எண்ணுபவ னீதுணர்ந்து
நின்கடமை தன்னை நிகழ்த்து.

22. அந்தச் சிரத்தையினா லந்தக் கடவுளையே
சிந்தித் தவன்பக்தி செய்வானேல் - வந்தபயன்
யானளிப்ப தேயல்லால் ஆறுபிற வேறில்லை
மானிலத்தோர்க் கீதுளத்தே வை.

23. குறைமதியோர் கோரும் குறைபயனே யெய்தி
உறைவரத் தேவர்பா லுற்று - நிறைமதியால்
என்னைத் தொழுவோர் எனைவந் தடைவரே
முன்னதாம் ஈறில் முடிவு.

24. ஒப்புவமை யில்லாதே அவ்யயமா யோங்குமெனைத்
தப்பாக எண்ணித் தவறிழைப்பர் - இப்புவியில்
புத்தியில்லா தார்க்கும் புரியாதென் பூரணமவ்
யத்தம் வியத்தமொன் றே.

25. முக்குணத்து மாயையினால் மூடியதா மென்சொரூபம்
தக்கவர்க் கல்லால் தரணியிடை - மிக்கதொரு
மோகத்தே சிக்கியுள்ள மூடர்கள் பார்த்திடவே
ஆகும் பிறப்பிலவ்ய யம்.

26. முக்காலத் துற்றிருந்த சீவரை முற்றிலும்
எக்காலம் யானுணர்வே னிங்கிருந்து - இக்காலத்
தென்னை யறிபவரோ இங்கில்லை யென்றறிவாய்
மன்னவனே யர்ச்சுனாயிவ் வாறு.

27. இச்சை வெறுப்பதனி னின்றெழுமத் துக்கசுகம்
பித்துடைய சீவர் பிறக்குங்கால் - நிச்சயமாய்
மோகத்தே வீழ்வர் பரந்தபா மூண்டெழுமிச்
சோகத் தழுந்த வியல்பு.

28. வந்தவினை புண்ணியத்தால் மண்மேல் வரட்சி
தொந்தவமோகம் இற்றே உறுதியாய் - இந்தநாள்
என்னை யுறுதியதாய் ஏற்றித் துதிசெய்வர்
பின்னைப் பெறுவரென் பேறு.

29. வார்த்திகமுஞ் சாவும் மறுபடியும் வாராமல்
தீர்த்தாயென் றென்பால் சரணடைந்தோர் - பூர்த்தியும்
அந்தப் பிரமத்தில் அத்தியாத்மம் கன்மத்தில்
சிந்தை தெளிந்திருப்பர் தேர்ந்து.

30. அதிபூதத் தோடென்னை யாரறிவார் மற்றும்
அதிதெய்வத் தோடறிவார் யாரோ - அதியக்ஞத்
தோடென்னைத் தானறிவர் யாரோ அவர்களடை
வோடுமறி வாருறுதி யோடு.

ஞான விஞ்ஞான யோகம் எனும் ஏழாவது அத்தியாயம் முற்றிற்று.

---

24. வியத்தம் - வ்யக்தம் - தோற்றம்

அவியத்தம் - அவ்யக்தம் - தோன்றுதல் இல்லாத•அவ்யயம் -மாறுதலில்லாத

அக்ஷரப்ரஹ்ம யோகம் எனும்
எட்டாவது அத்தியாயம்

1. பிரமமத் யாத்மம் அதிபூதம் யாது
கருமமதி தெய்வமும் யாது - திருவுளம்
பற்றுதல் வேண்டுமெனப் பார்த்தன் பகர்ந்ததனால்
மற்றுந்தன் னையுமிவ் வாறு.

2. இந்தச் சரீரத் ததியக்ஞ மென்பதெது
இந்தச் சரீரம தேகுங்கால் - எந்தவித
மாகவு னையறிவார் இந்தியங்கள் தாமடக்கி
ஏகமாய் நிற்போர் இவண்.

3. பரமக்ஷ ரம்பிரம்மம் பார்த்தாயிஃ தென்றும்
கிரமமா யொவ்வோர் சரீரத் - திருப்பதனை
அத்யாத்ம மென்பர் கருமமுயிர் தோன்றிப்பின்
வைத்தாள வானகத்தோர் வைப்பு.

4. நசிப்பததி பூதம் நவிலுமதி தெய்வம்
வசிப்பவனா மாந்தர் சரீரத் - துசிதமாய்
இங்கிவ் வுலகுக் கதியக்ஞம் யானென்ப
தங்கவை நீமனதிற் றான்.

5. மரணமாங் காலத்தே யென்னை மனதில்
தருணத்தி லெண்ணியுயிர் விட்டேன் - அருணோக்கால்
என்னை யவனடைவா னென்பதற்கோ ரையமில்லை
பின்னைப் பயமில்லாப் பேறு.

6. முடிவி லெதையெண்ணி மூச்சுநின் றானவ்
வடிவி லவனெய்து வானே - திடமாய்த்
தினமு மனத்ததனைச் சிந்தித் திருக்க
மனமொன்று பட்டிடவே வந்து.

7. ஆதலா லென்று மகத்தே யெனைநினைத்து
நீதமா யுத்தம் நிகழ்த்திடாய் - பேதமிலாப்
புத்திமன தென்பால் புகுத்துவையே லென்பதமே
சித்திக்கு மைய மிலை.

8. அப்பியாசந் தான்மனதை ஆட்கொள்ள அன்னியத்தில்
தப்பியுஞ் செல்லாது தானடக்கி - அப்பிரமத்
தென்று முளத்தால் தியானிப்பன் திவ்வியன்
என்றே யியம்பிடுவாய் இங்கு.

9&10. சருவக்ஞ னாகிச் சனாதனனாய் நிற்போன்
சருவந்தன் னாளுகையிற் றாங்கி- உருவத்
தணுவிற் சிறிதாய், அவனிக்கோர் தாதா,
எணுதற் கயலா வுருவாய் - மணிச்சுடரின்
ஆதித்தன் போலும் அணையாத தற்சுடராய்
மேதினியில் மாயைக்கு மப்பாலாய் - ஆதித்
தனிப்பொருளைப் பக்தியுடன் சாம்போதி லெண்ணி
மனதை யொருமைப்படுத்தி மற்றும் - புனிதமாம்
யோக பலத்தால் பிராணனைப் பந்தித்தே
ஏகமா யப்புருவ மத்தியிலே - வாகுடனே
நாட்டிடுவோ னந்த நவையிற் பரம்பொருளாம்
மாட்சிமையிற் சேர்வன் மதி.

---

10. அதிதைவ என்று கீதையில் குறிப்பிடுவது விராட்புருஷ உபாஸனையைக் குறிக்கும். அது மனத்தின் ஏழு நிலைகளைக் காட்டுகிறது. மனிதனுடைய மனம் ஐந்து நிலைகளைக் கொண்டது. அது பக்குவம் அடையும் நிலைகள் இவை. மனம் தன்னைச் சுற்றியுள்ள உலக விஷயங்களைப் பற்றிச் சிந்திக்கும் போது லிங்கம், குஹ்யம், நாபி, என்று மூன்று இடங்களில் அதன் விஷயங்களில் - சஞ்சரிக்கும். இந்த நிலைகளில் உயர்ந்த சிந்தனைகள் தோன்றுவதில்லை. காமம், காஞ்சனம் (பெண், பொன்) ஆகியவற்றில் அழுந்திக் கிடக்கும்.

11. வேதமுணர் வித்தகர்கள் அட்சரமென்* றேவிளம்பும்
சோதிதனை யிங்கெடுத்துச் சொல்லுவன் - போதியவா
றிந்திரிய நிக்கிரக மெய்தியவன் ஏதடைய
அந்தப் பிரமசர்ய வாழ்வினையே - நிந்தையற
வாழ்வனேல் அஃதுனக்குச் சங்கிரக* வார்த்தையினால்
தோள்வலாய் சொல்வன் தொகுத்து.

12&13. இந்திரிய மெல்லாம டக்கிச்சிந் தையிதயத்தில்
பந்தித்தே வைத்துப் பகர்பிராணன் - அந்தச்
சிரத்திலே சேர்த்துச் சிரத்தையாய் ஓமென்
றுரைத்துத்தன் னுள்ளம் ஒருமைக் - கிருத்தியே
என்னை நினைந்தொழுகி நின்றோன் தனக்குண்டாம்
பின்னைப் பரகதியாம் வேறு.

14. புறவிடயஞ் செல்லாப் புனித மனத்தால்
திறமையா யென்னைத் தினமும் - மறவாதே
யுள்ளத்தே வைத்த உறுதியாம் யோகியெனை
உளளுறவாய் லேசா யுறும்.

நான்காவது இடம் இதயம். இங்கு வரும் சிந்தனைகள் ஆத்ம எழுச்சியை முதன் முதலில் உண்டாக்கும். இந்நிலையில் மனம், பெண், பொன் ஆசைகளில் ஒரு போதும் செல்லாது. ஐந்தாவது இடம் கழுத்து, இங்கு அஞ்ஞானம் அகலுகிறது. புருவமத்தி மனத்தின் ஆறாவது இடமாகும். இங்கு மனம் எப்போதும் திவ்யதரிசனத்தைக் காண்கிறது. தலை ஏழாவது இடம். இந்த நிலையில் மனம் அமைதி பெற்றுத் தியானத்தில் மூழ்கிச் சமாதி நிலையைப் பெறுகிறது. தன்னை இழந்து, தன் நாமம் கெட்டு, உலக நிகழ்வுகள் அனைத்தும் அறவே ஒழிந்து இறைவனுடைய பரமானந்தத்தை அனுபவித்து விடுதலை பெறுகிறது. இவற்றையே யோக நூல்கள், மூலாதாரம், ஸ்வாதிஷ்டானம், மணிபூரகம், அனாஹதம் விசுத்தி, ஆக்ஞை, ஸஹஸ்ராரம் என்று கூறுகின்றன.

11. * அட்சரம் -அக்ஷரம் - அழியாப்பொருள்
* சங்கிரக - சுருக்கமான

15. ஞானமது பூரணமாய் நாடி யெனையடைந்தோர்
மானிலத்தே துக்கமே சாஸ்வதமாம் - ஈனம்
பிறவிப் பெரும்பிணியைப் பின்னோர்கா லெய்தாத்
துறவிமகாத் மன்னெனச் சொல்லு.

16. பிரம்மாதி லோகங்கள் பெற்றவரும் பின்னால்
வருமாம் பிறந்திந்த மண்மேல் - ஒருமையாய்
நின்றெனைத் தானடைந்த பின்னர் நிலமிசையே
சென்றுபிற வானிதைநீ தேர்.

17. ஆயிரமாண் டோர்பகலு மாயிரமாண் டோரிரவும்
ஏயபிரமற் கோர்நாளென் றுணர்ந்தோர் - மேய
பகலிரவி னுண்மைப் பரிமாணந் தன்னை
அகமதில் நன்குணர்ந்தோ ராம்.

18. துயிலெழுதற் போலும் பகற்காலந் தோன்றில்
வியக்தமா மவ்வியக்தம் விட்டே - வியத்தம்பின்
அவ்வியத்தந் தன்னி லடங்குமிரா வந்துற்றால்
எவ்வுயிர்க்கு மிஃதே விதி.

19. இந்த வுலகத் துயிர்முன் விருத்தனவே
வந்துவந் தேதோன்றும் மண்ணிடையே - அந்தப்
பகல்போ மிரவாம் படிமே லவசத்*
தகலு முயிர்பின் வரும்.

20. அவ்வியத்தின் வேறாம் இருப்பே பிரம்மமாம்
அவ்வியத்த மென்று மழியாதாம் - அவ்வியத்தம்
ஊழியி லெல்லா வுலக மழிந்தாலும்
மாளுவதில் என்றே மதி.

---

*19. * அவசத் - ந வசத் - தன்வசமின்றி.*

21. எய்து பரமுடிவா மப்பொருளை யிவ்வுலகில்
அவ்யத்த மட்சரமென் றேயறைவர் - மெய்தான்
இதுவென் பரமநிலை யாமிஃ தடைந்தோர்
மிதியா ருலகையவர் மீண்டு.

22. பரம புருஷன் பதமடைய வேண்டின்
சிரமமா மென்பதனைத் தேர்ந்து - ஒருமையுடன்
எங்கும் வியாபகனை எல்லா வுயிர்களிலுந்
தங்கு மவனைநீ நாடு.

23. யோகிக ளானோர் உடல்துறந்த பின்னவர்கள்
ஏகித் திரும்பா திருப்பதற்கும் - ஏகும்
வழியெதுவா மென்பதையும் மற்றதற் குண்டாம்
வழியெதுவா மென்பதுஞ்சொல் வான்.

24. அனற்சோதி யாதித்த னுள்ளபோ தின்னும்
பனிபெறு சுக்கில நற்பட்சம் - முனிவன்
கதிரோன் வடதிசையாங் காலத்திற் செத்தால்
வதியும் பிரம்மத் தவன்.

25. புகையுரவு பட்சம் கிருட்டினமாம் போதும்
தகைசால் அயனதட்சி ணத்தும் - இகம்விடுத்துத்
தான்செல்லும் யோகியவன் சந்திரலோ கத்தடைந்து
தான்பின் திரும்புவன் றான்.

26. இந்த நெறியிரண்டும் சாஸ்வதமா யிங்கிருக்கும்
தந்தம் பலனளித்தித் தாரணியில் - முந்துறுதல்
மீண்டும் பிறவியிலாப் பேறளிக்கும் மேதினியில்
வேண்டும் பிறவிமற் றொன்று.

27. நெறியிவ் விரண்டினையும் நின்மலமாம் யோகி
அறிவா லுணர்ந்ததற்பின் மோகம் - பெறமாட்டான்
நித்தமும் யோகத்தே நின்று நிலைத்திடுவான்
உத்தமனே அர்ச்சுனவிஃ தோர்.

28. வேதத்தால் யக்ஞத்தல் தானதவ வேகத்தால்
சாதித்தல் ஏதெனினுந் தாரணியில் - சோதித்தல்
மேற்சொன்ன வுண்மை விளங்கியநல் யோகியோ
ஏற்பனிதன் மேலாம் பதம்.

அக்ஷரப்ரஹ்ம யோகம் எனும்
எட்டாவது அத்தியாயம் முற்றிற்று.

ராஜவித்யா ராஜகுஹ்ய யோகம் எனும்
ஒன்பதாவது அத்தியாயம்

ஸ்ரீ பகவான் கூறியது :

1. அசூயையிலா வுன்றனுக்கு அப்பரம ஞானம்
விசேடமா யான்விளங்கச் சொல்வன் - உசிதமாம்
விஞ்ஞானத் தோடதனை மேதினியி லீதுணர்ந்தால்
எஞ்ஞான்றுந் தீமையில தே.

2. பரவித்தை யீதே பரமமாங் குஹ்யம்*
பரிசுத்தஞ் செய்திடுமாம் ; பார்த்தா! பிரத்தியட்ச
மாயுணர்தற் காமால் அறத்தாறா மாற்றலெளி
தாயுளதா மவ்யயமென் றாய்.

---

2. *குஹ்யம் - ரசசியம். அருமையாய்ப் போற்றத் தகுந்தது.

3. சிரத்தையிலா மாந்தரெனைச் சேராதே மீண்டும்
மரித்துப் பிறக்கும் வழியே - வரத்தகும்
பேறா யனுபவிப்பர் பின்னொன்றுங் காண்பதிலை
வீர பரந்தபனே நீ.

4. அவ்வியத்த மாயனைத்தில் யானே வியாபகனாம்
எவ்வுயிரும் என்னில் இருப்பதலால் - அவ்வுயிரில்
யானிருப்ப தில்லை ; அவனிக் கிதையுணர்வாய்
மேனவிலு* மிந்த விதம்.

5. என்னி லவையிருப்ப தென்பதுவு முண்மையல
என்னுயர் யோகமதை நீயுணர்வாய் - என்னால்
அனைத்துயிர் தாங்கி அளிக்கப் பெறினும்
அனைத்தி லுறைவதில்லை யான்.

6. அலைகின்ற வாயுக்கள் ஆகாயத் திற்றான்
நிலைபெற்றி ருப்பதுபோல் நேரும் - உலகில்
உயிரெலா மென்னிலே வுற்றிருக்கு மென்பர்
செயிர்செயும் கொற்றவனே தேர்.

7. கற்ப முடியுங்கால் சீவர்கள் கண்ணுறங்கி
எற்சுபாவத் தேயடங்கி நிற்குமாம் - கற்பமது
மீண்டும் தொடங்குங்கால் மேதினியி லேயிவரை
மீண்டும் பிறப்பிப்பன் யான்.

8. மாயை வசமாகும் மன்னுயிர்க ளத்தனையும்
மாயைத் துயிலெழுப்பி மற்றதனால் - ஏய
உயிரெலா மீண்டெழுந்தெ ழுந்தியல்பாய்த் தோன்ற
செயுமிச் செயலுணர்வாய் நீ.

---

*3. * மேல் + நவிலும் - மேனவிலும்.*

9. உபேட்சையாய்ப் பற்றறுத்தே யுற்றிருக்கு மென்னால்
அபேட்சைப் படுபொருளொன் றில்லை - உபாதியாம்
மாயையு மென்வசமாய் வைத்திருக்கு மென்செயலால்
ஏயதொரு பந்தமிலை யே.

10. மாயையென் சந்நிதியில் வந்திருந்தே இவ்வுலகத்
தேய சராசரங்கள் இங்கியற்றும் - ஓய்விலா
திந்த வுலகஞ் சுழல்வதுவு மிங்கிதனால்
குந்தி சுதனேநீ குறி!

11. வையகத்திற் கெல்லா மகேஸ்வரனா மென்பரம
மெய்யுருவைக் காணும் விவேகமிலார் - தொய்யவில்
மானிட தேகத்தில் வந்துளதைக் கண்டுண்மை
தானறியா தேயிருப்பர் தாம்.

12. வீணாசை வீண்முயற்சி வீணுணர்ச்சி கொள்ளுமிவர்
வாணாளை வீணாக்கும் மாந்தரே - ஆணாய்ப்
பிறந்தசுரர் பின்னரக்கர் பெற்றகுண மெல்லாம்
சிறந்ததெனக் கொண்டார் தினம்.

13. பார்த்தா! மகத்துகள் பண்புயர்ந்த சக்தியினால்
பார்த்தெனைச் சீவர்கட் காதியாய்ச் - சீர்த்திகழ
ஒன்றிய வுள்ளத்தால் அவ்யயனா மென்னுருவை
நன்று தொழுதிருப்ப ராம்.

14. என்புகழைப் பேசி இடையறாச் சிந்தனையால்
தஞ்சிரந் தாழ்ந்து நமஸ்கரித்து - பண்புடனே
என்றும் திடவிரத ராகி உபாசிப்பர்
நன்றுதிகழ் மேன்மையினார் தாம்.

15. ஞானயக்ஞுஞ் செய்துநாளும் நாடியெனை வேட்டசிலர்
ஆன வனைத்துமா யாகுமெனை - நானிலத்தே
ஒன்றாய்ப் பிரிதாய் உளத்தே யமைத்தென்னை
நன்றாய் தொழுதிடுவர் தாம்.

16. ஓமம்யான் யாகம்யான் உற்ற சுவதாயான்
மாமருந்து மந்திரமும் யானேயவ் - வோமத்தீ
நெய்யும் ஹுதமென்ப நீனிலத்து யானேயாம்
உய்யும் படியிஃ துணர்.

17&18. அப்பனும் அம்மையும் ஆதரிக்கும் ஐயனும்
இப்புவிக்கு நானே; இனியறியும் - அப்பெரிய
வத்துவும் தூய்மை செய வந்தவனும் ஓங்காரம்
ரிக்குயஜுர் சாமமுதல் வேதமும் - உத்தமர்கள்
கோரும் குறிப்பிடமும் நாயகனு மாண்டவனும்
நேருங் கரியும் நிவாசனும் - சேரும்
புகலிடமும் தோழனும் பொய்யிலா வாதி
யுகலயமு மின்னும் உறையுள் - சகலமாம்
பண்டக சாலை அழிவிலா பீஜமும்
மண்டலத்தில் யானென் றுணர்.

19. சூரியனாய் நின்றுலகில் சூடளிப்போன் ; காய்ந்தக்கால்
மாரி வழங்கி நிறுத்துவோன் ; - நேரும்
மரணமும் திண்மையும் சுத்தசத்து நானே!
திரணமு மையமில தே.

20. மறைமூன் றறிந்தார் மகம்பலவு மாற்றி
இறைவனென் றென்னையே யேற்றும் - குறையறவே
சோமமு மேற்றுண்டு சுத்திய டைந்தவராய்த்
தாமுயர்ந்த தேவருல கெய்தியே - ஏமமுற
இந்திரனாய் நின்று றியல்விசும்பிற் போகங்கள்
முந்தவே துய்ப்பர் முகந்து.

21. போகங்கள் துய்த்திடுவார் புண்ணியந் தீர்ந்தக்கால்
லோகத்தே மானிடராய்த் தோன்றிடுவர் - யாகங்கள்
வேத விதிப்படியே வேண்டுதல் கொண்டியற்றிப்
போதல் வரற்கே புகும்.

22. இடைவிடா தென்பால் என்றும் வழிபா
டுடையதோர் உத்தமர்க ளானோர் - படிமிசையே
யோகமும் க்ஷேமமும் என்னதென உன்னியே
ஏகி யளிப்பன் இருந்து.

23. சிரத்தையுடன் வேறுபிற தெய்வத்தைப் பூசித்
திருப்பேரு மென்னையே பூசித் - திருப்பவராம்
ஆனால் அறியாமை யால்தான் அவர்களும்
வானாள்வோன் மைந்தா அறி.

24. யக்ஞங்கள் ஏற்பவனும் ஆள்பவனும் யானேயாம்
அக்ஞானத் துண்மை யறியாது - ஏகியவர்
மீண்டும் உலகடைய வேண்டுவோர் ஆகுவர்காண்
ஈண்டிதனை யுள்ளத்தே யேல்.

25. தெய்வ விரதர்கள் தேவரைத் தானடைவர் !
செய்ய பிதிர்களையே சேவித்தோர் - மெய்யாய்ப்
பிதிர்களையும் பூதங்கள் பூசித்தோர் பூதர்!
மதியோ டெனைத்தொழுவோ னென்னை - இதமாய்
அடைவ ரிதிலேதும் மாறுத லுண்டாக்கும்
தடையொன்று மில்லையெனச் சாற்று.

—

26. பக்தி யுடனளிக்கும் பத்திரமும் புட்பமும்
சக்தி யனுசாரந் தண்ணீரும் - அஃதிலதேல்
சொற்பப் பழமேனும் தூயவராய் நின்றளித்தல்
எற்கதுவே யேற்குமென் றெண்ணு.

27. குந்தி சுதனே! நீ கோரியதைச் செய்திடினும்
எந்த வுணவைநீ யேற்றிடினும் - அந்தமுள
ஹோமமெது நீசெயினும் உற்றதொரு தானங்கள்
தாமவைநீ செய்திடினும் தக்கவ - ஏமமாய்
எத்தவத்தைச் செய்திடினும் என்றனுக் கர்ப்பணமாய்ச்
சித்தமிசை யெண்ணியவை செய்.

28. இவ்விதத்தால் கன்மத்தா லெய்து பலாபலன்கள்
செவ்விதாய்ச் சேராமற் செய்திடலாம் - எவ்வழிக்கும்
பற்றிலா யோகயுக்த னாயிருந்த பந்தம்
மற்றெனைத் தானடைதல் மன்னு.

29. எல்லா வுயிர்க்குஞ் சமமாக யானிருப்பன்
வில்லார் விஜயா வேறுப்பெனக்கு - இல்லை
பிரியமு மில்லையே ; பேதமிலா பக்தர்க்
குரியனாம் யானென் றுணர்.

30. துன்மார்க்க னாயிடினும் என்னைத் தொழுதிடுவோன்
நன்மார்க்க னாடுவோனாம் நானிலத்தே - சன்மார்க்கத்
தெண்ணமதைச் செல்லாது பிறிதெண்ணாத்
திண்ணமென வெண்ணிட லால்.

31. தன்னாத்மா வாகியவன் சாஸ்வதமாஞ் சாந்தியினை
நன்மகனே எய்திடுவன் நானிலத்தே - என்வழிசேர்
பக்தனுக் கென்னாளும் பாரிடையே நாசமிலை
இஃது மனத்துறுதி செய்.

32. மாதரும் சூத்திர வைசியரு மென்னையே
மேதினியிற் றஞ்சமென வேயடைந்தால் - நீதமாய்
அந்தப் பரமமுடி வெய்துவ ராமிதற்குச்
சந்தேக மொன்றுமிலை தான்.

33. புனிதப் பிராமணரும் போத முயர்ந்த
தனதா(ம்)இ ராஜரிஷி கட்காம் - இனிதாக
இந்தப் பதவியினை யெய்தத் தடையுண்டோ?
இந்தப் பிறவியிலே மானிடனாய் - வந்தநீ
நித்யசுக மற்றதொரு நீணிலத்து வாழ்க்கையினை
நத்தியிரா தென்னையேநீ நாடு.

34. நின்மனதை யென்னில் நிலைத்திருக்கச் செய்திடுவாய்!
என்வழிபா டுன்னி இருந்திடுவாய் - நன்அகமும்
என்றனுக்கே யாற்றி எனக்கே சிரந்தாழ்ந்து
ஒன்றாக என்னில் உறுதியுடன் - நின்றே
எனையே பரமுடிவா யேற்பதினா லென்றும்
எனையேநீ வந்தடை வாயே.

ராஜவித்யா ராஜகுஹ்ய யோகம் எனும்
ஒன்பதாம் அத்தியாயம் முற்றிற்று.

விபூதி யோகம் எனும்
பத்தாம் அத்தியாயம்

ஸ்ரீபகவான் கூறியது :

1. நின்னுடைய நன்மையே நெஞ்சத்தே வைத்துரைப்பன்
என்னுடைய மேலான வின்னுரையை - மன்னவனே
பின்னும்நீ கேட்கப் பிரியமும் கொண்டாயேல்
உன்னியே கேட்பா யுளம்.

2. தேவரா மற்று மிருடியருந் தீர்வையாய்
ஏவரா மென்வரவு மெண்ணறியார் - தேவர்
இருடியர்க்குங் காரணனா யிங்கிருக்கு மென்னை
ஒருவருங் காணாரென் றோர்.

3. என்னைப் பிறப்பிலனா யாதியிலா விண்ணுருவாய்ப்
பின்னை மகேஸ்வரனாய்ப் பேருலகில் - உன்னி
யுணர்வோன் மனிதரிடை உள்ள மயக்கப்
புணர்விலான் பாவமிலா னாம்.

4&5. புத்தியும் ஞானம் பொறுமை மயக்கமின்மை
சத்திய மாதி சமதமங்கள் - நந்துசுகம்
துக்கம் பிறப்பிறப்புத் தோன்றும் பயாபயங்கள்
தக்க அகிம்சை சமதையும் - ஒக்கும்
திருப்தி தவங்கருணை கீர்த்தியப கீர்த்தி
யுருப்படுவ தென்னிடத்தென் றோர்.

6. சப்த விருடிகளும் சத்வசன காதியரும்
இத்தரணிக் குற்றமனு மானவரும் - சக்தியினால்
என்னை நிகர்வாரென் மானதமாய்த் தானுதித்தார்
பின்னையிவர் பாற்சீவப் பேறு.

7. அன்னதாகும் மென்றன் விபூதிநிலை யோகம்
மனத்தினால் நன்குணர வல்லோர் - எனைத்தானும்
சந்தேக மின்றிச் சலனமிலா யோகத்தே
சிந்தை நினைப்பரெனச் செப்பு.

8. அகிலத்திற் காதி அனைத்துமென் தோற்றம்
சகலமிவ் வாறுணர்ந்த ஞானி - பலவிரவு
என்னை யனைத்தினிலும் எப்திடப் பார்த்திருந்து
என்னைத் தொழுதிடுவான் இங்கு.

9. மனதெலா மெற்களித்து மற்றைக் கரணம்
புனிதமுற வென்னிற் புகுத்தி - நனிதுயர்ந்த
போதம் பரஸ்பரமாய்ப் போற்றிப் புனைந்துமே
ஏதமறு மின்னுரைகள் எற்காக்கி - மேதினியில்
உள்ளத் திருப்தியினை யுட்களிப்பை யெய்திடுவர்
அள்ளக் குறையா வருள்.

10. யோகத்தே நின்றுவப்போ டுற்றெனைத் தாந்தொழுவோர்
ஏகத்தின் மாறா விதயத்தோர் - பாகத்தில்
புத்தியோ கந்தனையே போதிப்பன் இஃதறிந்தால்
சித்திக்கு மென்னிலவன் றான்.

11. அன்னோ ரகத்திருளைச் சுட்டுப் பொறித்திடுவன்
சொன்னனன் ஞானச் சுடரொளியால் - அன்னோர்
இதயத்தே வீற்றிருந்து இஃதியற்று மென்பால்
மதியுறவே நீயென்று மன்னு.

அர்ச்சுனன் கூறியது :

12&13. நீயே பரபிரம்மம் நீயே வுயர்வீடு
நீயே பவித்திரஞ்செய் நின்மலனும் - வாயாற
ஏல்லா விருடிகளும் தேவரிடி நாரதரும்
சொல்லால் அசிதனும் தேவலரும் - நல்ல
மறைபயந்த மாதவனும் வாழ்த்தியே உன்னை
இறையே இயலொளியே யென்றும் - நிறையே
பிறப்பிலியே யென்றுதுதி பேசிடுதல் போலும்
சிறப்புரையே நீயுரைத்தா யெற்கு.

14. கேசவா நின்னுரையைக் கேட்டவற்றி னுண்மையினை
நேசமுடன் சிந்தித்தேன் நெஞ்சகத்தே - வாசுதேவா!
வானவரும் தானவரும் வந்துன் சொரூபம்
தானறிய மாட்டுவரோ சற்று.

15. உன்னையுன் னாலே உணர்ந்திடுதல் நீயல்லால்
பின்னை யுணர்பவரார் பேருலகில் - அன்னை
எவ்வுயிர்க்கு மீசனே! தேவாதி தேவனே!
இவ்வுலகை யாள்பவன்நீ யே!

16. எந்த விபூதிநிலை யானீர் வியாபகமாய்
இந்த வுலகில் இருப்பீரோ? - அந்தநிலை
நீரே யெனக்கெடுத்து நிச்சேஷ மாயுரைப்பார்
யாரே யுளருமையல் லால்.

17. யோகியே! உன்னை யுணருவகை எங்ஙனமோ
ஏகனே! எந்தெந்தப் பாவனையால் - ஊகனை செய்
துன்னை யுணர்வதென ஓர்ந்தில னிஃதெனக்கு
இன்னுரையால் நீயுரைப்பா யிங்கு.

18. உன்றன் விபூதிநிலை யோடுநின் யோகத்தை
என்றனுக்கு விஸ்தரித்தே நீயுரைப்பாய் - தின்றால்
தெவிட்டாத இன்னமிர்தாம் தீஞ்சுவை சேருகின்ற
திரட்டுரையைச் சொல்வாய் திறந்து.

ஸ்ரீபகவான் கூறியது :

19. உயர்வான் என்றன் விபூதிநிலை யாவும்
உயர்வொட்டி ஓதுவன் இங்கே - அயராதே
எல்லா மெடுத்துரைப்ப தென்றால் முடியாதாம்
நல்லாய்ச் சிலவுரைப்பன் நான்.

20. எல்லோரு ளத்தும் இருந்துறையும் ஆத்துமன்யான்
பல்லுயிர்கும் ஆதி பகர்நடுவும் - அல்லாமல்
சேரும் இறுதியும் யானே திகழுலகில்
ஒரும் வழியீது ணர்.

21. ஆதித்தர் பன்னிருவர் தம்மிலே விட்டுணுயான்
சோதியற் சூரியனும் யானேயாம் - ஓதுவன்
காற்றின் கடவுளர் தம்மில் மரீசி! விண்மீன்
ஏற்றும் சசியும் யானே*.

22. நான், மறையிற் சாமம் நயன மிமையாத
வானவரில் வேந்தனும் வாசவனும் - நானாவேன்
போகும் புலனிற் பொருந்துமனஞ் சீவர்கள்
வாகுறவே சேதனனும் யான்.

23. உருத்திரரிற் சங்கரனும் யக்ஷ வரக்கரில்
வித்தேச னாம்குபேர வேந்தனும் - பார்த்தா!
வசுக்களில் அக்னியும் மாமலையில் மேரு
திசையறிய நானென் றறி!

24. புரோகிதரி லந்த வியாழனும் போரில்
விரோதியை வாட்டும் விறலிற் - பரமனின்
பாலனாம் கந்தன் படிமிசையே நீர்நிலையில்
நீலத் திரைக்கடல்யா னே!

25. ஆன்ற விருடியரில் அந்தப் பிருகுயான்
ஊன்றுபொருளுடை சொல்லினுள் ஓங்காரம் ;
ஜபயக்ஞம் யக்ஞத்தில் ; தாவரங்கள்* தம்மில்
சுபமாம் பனிமலையும் யான்.

---

21. *கசியபருக்கு அதிதிதேவியிடம் புத்திரர்கள் பன்னிருவர் - தாதா, மித்ரன் அர்யமா, இந்திரன்,வருணன்,அம்சன்,பகன்,விவஸ்வான் (சூரியன்), பூஷா, ஸவிதா, த்வஷ்டா, விஷ்ணு, கடைசி புத்ரனான விஷ்ணு குணத்தில் சிறந்தவன்.

கசியபருக்கு திதிதேவியிடம் 49 புத்திரர்கள் மருத்கணங்கள் ஆவர், திதிதேவியின் மற்ற புத்திரர்கள் அசுர சுபாவமுடையவர்கள் ; மருத்துக்கள் தேவர்களாயினர். அவர்களுள் சிறந்தவன் மரீசி.

26. தருவி லரசும் தபோதனரின் மிக்க
சுரவிருடி நாரதனும் யானே! - மரபுயர்ந்த
சித்ரரதன் கந்தர்வக் கேற்றுமச் சித்தரிடை
முத்தன் கபிலமுனி யான்!

27. உத்தமா மஸ்வத்தில் உச்சைச் சிரவனும்யான் ;
அத்தியிடை ஐயரா வதம் யானே! - இத்தரணி
மாந்தரில் வேந்தன்யான் ; மன்னுமென னுண்மைநிலை
வேந்தனேஸ யின்னுமுள வே!

28. வாட்கருவி வஜ்ரம்யான் ; கோக்களிடை இச்சையுடன்
கேட்கும் பொருள்நல்கும் தேனுயான் - வேட்கை
வளர்க்குமக் கந்தர்பன், வாசுகியா னெல்லா
பிளவுநாக் கூர்வனவிற் பின்.

29. நாகரிடை சேடன்யான் ; நன்னீ ரிடைவாழ்வோர்க்
கேகனா மவ்வருணன் யானேயாம் ; - ஏகும்
பிதிர்களில் அர்யமான் ; பேதமிலா வானைக்
கெதிரிலா லவ்வியமான் யான்.

30. தைத்திரிய ரில்நான் பிரகலாத னென்றறிவாய்
அஃது மளவளக்கும் அந்தகன்யான் - நித்தம்
விலங்கினத்திற் சிங்கம்யான் ; புள்ளி யினத்தில்
நலங்கொள் கருடனும் நான்.

31. பரிசுத்தஞ் செய்யும் பவனன்யான் ; பாரில்
இரவிகுலத் தோன்ற விராமன் ; - பெரிதான
மச்சத்திற் கெல்லாம் மகரம்யான் - ஓடுகின்ற
இச்சகத்திற் கங்கையென்றே எண்.

---

*25. * தாவரங்கள் - ஸ்தாவரங்கள் - அசையாத பொருட்கள்*

32. தோன்றும் பொருட்குத் தொடக்க நடுமுடிவும்
ஆன்றதொரு வித்தையில் அத்யாத்ம - வித்தையான்
வாதிப்போர் தம்மில் வளரும்வாய்ச் சண்டையில்
வாதம்யான் னென்றே யுணர்.

33. எழுத்தில் அகரம் ; இணைப்பிலே தொந்தம்
இழுக்க இடம்பெருக்கும் காலம் - வழுவில்
உயிரைக் கடாட்சிக்கும் உள்ளன்பில் எங்கும்
உயிர்க்கும் உலகெல்லாம் யான்.

34. எல்லாம் கவரும் மரணமும் தோற்றமும்
நல்மகள் லட்சுமியும் நாவினில் - நல்தேவி
ஸரஸ்வதியும், கீர்த்தி நினைவாற்றல் புத்தி
நிறைசித்தம் நற்பொறுமை நான்!

35. சாமநல் வேதத்தில் சாமபிரு ஹத்யான் ;
நாமமுயர் சந்தசில்யான் காயத்ரி - நேமமுறு
திங்களில் மார்கழியான் ; சீரார் பருவத்தே
தங்குமிள வேனிலும்யா னே.

36. வஞ்சகர்பால் சூதும் வளரொளியின் மிக்கவரில்
மஞ்சுமொளி யானன்றி வேறில்லை - வஞ்சமரில்
வெற்றியான் ; வீர முயற்சியான் ; சத்துவரில்
உற்றதொரு சத்துவமும் யான்.

—

37. யாதவரில் வாசுதேவன் யானேயாம் - பாண்டவரில்
சூதறியாப் பார்த்தனெனச் சொன்னேனே - கோதிலா
மாமுனிவர் தம்மில் மறைபயந்தோன் ; அக்கவிகட்
கேமமுறும் சுக்கிரன்யா னே.

38. சிட்சிப்போர் தம்கையிற் செங்கோல்யான் ; வெற்றிக்கே
இச்சையுளார் கையாளும் தந ரம்யான் ; மெச்சுபுகழ்
மௌனம்யான் ; குஹ்யத்தில் முற்று ணர் ஞானியரில்
ஞானம்யான் என்றே நவில்.

39. எல்லா உயிர்களின் பீஜம்யா னென்றறிவாய் ;
எல்லா சராசரங்கள் என்னிடத்தே - வில்விஜயா!
அல்லாற் பிறிதில்லை ; அத்தனையும் என்னையன்றி
நில்லா நிலத்தே நிலைத்து.

40. எல்லையிலா வென்மகிமை இங்கெழுத்து உன்றனக்குச்
சொல்லாலோர் உத்தேசஞ் சொல்லியுளேன்;- பொல்லாப்
பகைவர் தகித்திடவே பண்ணிடுவாய் ; சொன்ன
தொகையாற் பிறவுமுணர் வாய்.

41. பெருமையும் கீர்த்தியும் பேரழகும் உண்மை
அருமை வலிமையும் உண்டேல் - இருநிலத்தில்
என்னுடைய அம்சமென எண்ணி உணர்ந்திடுவாய்
நின்னுளத்தே நன்றாய் நிலைத்து.

42. சொல்லிப் பயனென் சுருக்கமாய்ச் சொல்வதுகேள்
தொல்லை யுலகமும் தோன்றுமுயிர் - எல்லாம்
பரந்தவென் சக்தியிலோர் பங்காமோர் அம்சத்
திருந்திவை தாம்வளர்த லெண்ணு.

விபூதி யோகம் எனும்
பத்தாவது அத்தியாயம் முற்றிற்று.

விச்வரூபதர்சன யோகம் எனும்
பதினொன்றாவது அத்தியாயம்

அர்ச்சுனன் கூறியது :

1. அத்யாத்ம வித்தை* அடியனென்பால் மாறாது
வைத்த கருணை வழங்கியதால் - சித்தமிசை
சந்தேக மற்றேன் ஜனார்த்தனா கேசவா
செந்தேன் மொழிபருகச் செய்து.

2. கமல நயனா கருமுகில் வண்ணா
நிமலா சராசரங்கள் நேர்தல் - உமதருளால்
பின்னும் முடிதல் பெருமையெல்லாம் கேட்டேனே
நன்னும் விரிவுரையால் நான்.

3. எங்கும் வியாபகமா யெல்லாப் பொருள்களிடை
தங்கும் நினதுருவைத் தான்பார்க்க - இங்கெனக்கு
இச்சை வளர்ந்துளதென் னிச்சை தணிந்திடவே
அச்சுதா அஃதெனக்கே காட்டு.

4. நின்சொரூபம் தன்னை நெருங்கியான் நோக்கிடுமாறு
என்சென்மப் புண்ணியமும் ஈதுளதேல் - இன்சொலாய்
யோகேஸ்வ ராவெனக்கு உன்னழிவி லாவடிவை
வாகாய ளித்திடுவாய் வந்து.

ஸ்ரீபகவான் கூறியது :

5. நானா விதமாய் நவிலுமென் தோற்றங்கள்
நானாவாம் வர்ணங்கள் நாமங்கள் - வானாளும்
மன்னவன் மைந்தா மனதால் நினைக்கரிதாம்
உன்னியே பார்த்திங் குணர்.

6. ஆதித்ய ருத்திரர்கள் அட்டவ சுக்களையும்
கோதிலிரு வஸ்வினிகு மாரருடன் - மோதியெழும்
ரேழேழ் மருத்துகள் இன்னும் அதிசயங்கள்
ஆழி நிறைய அமைந்து.

7. அகில வுலகும் சராசரங்க ளொன்றாய்த்
தகவுடனே பாரென் சரீரத் - தகத்தின்னும்
என்னென்ன பார்த்திடவே இச்சைநீ கொண்டாலும்
அன்னவெலா மிங்கிருத்த லாய்.

8. ஊனக்கண் கொண்டென்னைக் காண்ப தரிதாகும்
ஞானக்கண் ணிங்குனக்கே நான்தருவேன் - மோனக்கண்
ஈதுனக்குக் காட்டும் எழிலாரென் யோகநிலை
மேதினியில் மேலாம் விறல்*

சஞ்ஜயன் கூறியது :

9. சஞ்ஜயனு மிப்பால் திருதனைத் தான்பார்த்துச்
செஞ்சொல்லா லிஃதுரைத்து யோகேசன் - தஞ்சொரூபம்
காட்டினா னென்றே கழறுவான் பார்த்ததெலாம்
கேட்டதெலா தன்னுளத்தே கொண்டு.

10. வாயனந்தம் கண்ணனந்தம் மற்றும் அதிசயங்கள்
வாய்ந்ததோர் காட்சியும் வானிறைந்து - ஏயதோர்
திவ்வியநல் லாபரணம் திவ்விய ஆயுதங்கள்
செவ்விதா யஃதெழுந்த தே.

11&12. வாடா மலர்மாலை திவ்வியமாம் வஸ்திரத்தி
னோடே கலந்த உயர்கந்தம் - நாடா
வியப்பா ரதிசயங்கள் எல்லையிலா ரூபத்
துயர்முகங்கள் எண்ணிலாவா யுற்றுச் - சுயமாக
ஆதித்த ராயிரவர் ஆகாயத் துற்றதுபோல்
சோதி வுருவதெனச் சொல்லு.

13&14 பாண்டுதரு மைந்தன் பரதேவன் தேகமதில்
நீண்டெழுந்த வையமும் உட்பிரிவும் - வேண்டியதும்
அங்கவன் கண்டான் அதிசயித்தான் ஆனந்தம்
பொங்க மயிர்சிலிர்த்துப் போற்றினான் - செங்கரங்கள்
கூப்பித் தொழுதுசிரம் தாழக் குனிந்துரைப்பான்
நாப்பெருக்கும் இன்னுரைஅஞ் ஞான்று.

அர்ச்சுனன் கூறியது :

15. தேவர்க ளெல்லாமுன் தேகத்தில் தங்கிடுவர்
சீவர்கள் பல்வகையும் சேர்ந்திருப்பர் - பூவில்
அயனை யிருடியுரை மற்றும் உரகர்*
நயனத்தால் காண்கின்றே னான்.

16. வாயுதர நேத்திரமும் மாமலர்க்கை எல்லையிலா
தேய வடிவமும் எண்ணிலவாம் - மாயனே
விஸ்வேஸ் வரனே இவைக்காதி மத்யாந்தம்
விஸ்வரூபா காண்கிலேனே யான்.

17. கிரீடமும் சக்கரமும் கேடிற் கதையோ(டு)
இருடீர் சுடரொளியே மிக்குக் - குருடாக்கும்
சோதிப் பெருக்கால் சுவாலையும் மிக்குளபல்
ஆதித்தர் கூடியதே போல்.

18. கேடில் பரனே கிளர்ஞானத் துட்பொருளே
தேடி யடையும் புகலிடமே - நீடறங்கள்
காத்தவனே கண்ணா சநாதனனே என்றென்றும்
ஏத்துவனே உன்னை இனிது.

---

1. * அத்யாத்ம வித்தை - ஆன்ம வடிவத்தை நன்கு தெளிவுபடக்கூறுவது.
* விறல் - பெருமை, வெற்றி.
* உரகர் - நாகர், சமணர்.

19. ஆதியிடை யந்தமிலாய் வீரியத்தில் கீறில்லாய்
சோதிக் கரம்பலவும் கொண்டுள்ளாய் - ஆதித்தன்
சந்திரனை நேத்திரமாய் வெந்தழலே வாயாகத்
தந்தனையுன் சூழலகில் தான்.

20. நின்னுருவே யெவ்விடத்தும் நீக்கமறக் கண்டேன்யான்
மன்னுவான் பூமிக் கிடைவெளியும் - நின்னுருவின்
அத்புதமு முக்கிரமும் மூவுலகுங் கண்டதனால்
சித்தங் கலங்கினதால் நின்று.

21. தேவர்க ளொன்றாகிச் சேர்வதுவு மச்சமுடன்
சேவித்துக் கைகூப்பி நிற்பதுவும் - நாவினால்
சித்த ரிருடியரும் திவ்வியநற் கீதங்கள்
பக்தியுடன் சொல்வதுவும் பார்.

22. உருத்திரரா தித்தரும் சாத்யர் வசுக்கள்
மருத்துக ளோடுவிஸ்வ தேவர் - கருத்தமையக்
கந்தருவர் யட்சர் அசுர இராக்கதரும்
அந்தமுள சித்தருமை ஆர்வமுடன் - சிந்தைக்
கினிமையென் றேபார்த்து ஆச்சரியத் தாலும்
மனமகிழ நோக்கிடுமால் மற்று.

23. பார்வைக் கடங்காப் பரமான நின்னுருவைப்
பார்த்திவ் வுலகும் பயந்ததுவே - தீர்வையாய்
நானும் பயந்தேன் நயனம்,வாய் கைகால்கள்
காணும் தொடைஉதரம் கோரமாய்த் - தோன்றும்
பயங்கரமாம் தந்தங்கள் பார்த்தெவர்தாம் பொல்லாப்
பயங்கொள்ளார் உள்ள படி.

24. வர்ணம் பலவுடனே வானளாவி நின்றிடுவாய்
சொர்ணம்போல் ஜோதிசுடர் துன்னுவிழி - அண்ணலே
வாய்திறந்த நின்னுருவைப் பார்த்தென் மனோதிடமும்
ஏய திறமிழந்தேன் இங்கு.

25. கோரப்பற் கொண்டவாய் கண்டே பிரளயத்தில்
சேருமனல் வீசுந் திருவுருவை - நேரிலே
கண்டேன் திசையறியேன் ; சாந்தியும் காண்கிலேன் ;
மண்டலத்திற் காதி மறைபொருளே - அண்டர்க்
கதிபதியே நீகருணை வைத்தென்னை யாளாய் !
கதிவேறில் நீவீடுத்த கால்.

26&27. திருதன்தன் மைந்தர் திகழவணி பாலர்
கருணை துரோணருடன் பீஷ்மர் - செருவடியில்
நம்முடைய சேனைத் தலைவரும் நின்வாயில்
அம்ம! அடைகின்றார் ஐயகோ - வெம்மைசேர்
கோரப்பல் காணக் குலையு நடுங்கினதால்
வீரர்நும் வாயில் நுழைவரால் - தீரம்
இழந்தவர் பல்லிடுக்கில் பட்டுத் திறங்கெட்
டுழன்றார் உருவம் உராய்ந்து.

28. நதியெலாம் சாகரத்தை நாடியே செல்லும்
விதமாக இவ்வுலக வீரர் - கதியிழந்து
எல்லாத் திசையும் அனல்வீசும் நின்வாயில்
எல்லாரும் போய்ப்புகுவா ரிங்கு.

29. பூச்சியெல்லாம் தீயிடையே புக்கொழியப் போனாற்போல்
தீச்சுடர்சேர் நின்வாயைத் தேடியே - போய்ச்சேரும்
சீவர்தாம் சாவுக்கே செல்லுவாம் யாமென்ற
பாவமற் றோடுகின்றார் பலர்.

30. எல்லாத் திசையிலெரி ஜோதியின் வாயினில்
எல்லா வுலகமும் தான்விழுங்கி - மெல்ல
உதட்டையே நக்கி, ஒளியா லுலகை
அதட்டுவீர் சுட்டெரிக்கு மாறு.

31. கோரமே மிக்க வுருவமே கொள்ளுநீ
ராரென்ப தன்புடனே எற்குரைப்பீர் - பேரியல்
ஆதியே தேவர்க் கணியேனும் காரியங்க
ளேதென் றறிவிப்பீ ரின்று.

ஸ்ரீ பகவான் கூறியது :

32. சங்கரிக்குங் காலன்யான் ; இவ்வுலகைச் சங்கரிக்க
இங்குவந் தோனென்றெ னையுணர்வாய் ! இங்குள்ள
வீரரை நீபொருது வீழ்த்தாயே யானாலும்
சாருமவர் சாவெனவே சாற்று.

33. புகழடையப் போர்புரிவாய் ! பூமியெலாம் ஆணை
நிகழுமா றுன்பகையை நீக்கி - இகலெல்லா
மென்னால் முனமே இறந்தொழிந்து மாண்டனரால்
உன்னை நிமித்தமென உன்னு.*

34. வீட்டும்* துரோணருடன் வீரனாம் கன்னனும்
நீட்டிய வில்லில் சயத்திரதன் - கூட்டமாய்
வந்துளோ ரென்னால் மரண மடைந்துளரால்
சிந்தையி லச்சமின்றித் தீரமாய் - நிந்தையிலாச்
சண்டையிது செய்வாய் சயமு னதாயிடுமால்
பண்டை முடிவிதுவோ பார்.

சஞ்ஜயன் கூறியது :

35. கேசவன் சொன்னவுரை கேட்டுச் சிரந்தாழ்ந்து
தேசுயர் பார்த்தன் திடமிழந்து - பேசுமுரை
பின்னிழுக்கக் கைகூப்பிப் பீதியினால் மெய்விதிர்த்துச்
சொன்னதெலாஞ் சொல்வான் தொடுத்து.

---

*33. *"மகனே! யொன்றை யாக்குதல் மாற்றுதல்*
அழித்திட லெல்லாம் நின்செயலன்று காண்" - பாரதியார்

"வாள் தன்னை வடிவமைக்கக் கூறவில்லை. தன்னை ஏந்துகின்றவனையும் தடுப்பதில்லை. தன்னைப் பயன்படுத்திக் பிறரைக் கொன்றாலும், உடைந்தாலும், ஒதுக்கி வைத்தாலும் வருந்துவதில்லை. ஆக்கப்படுவதில்லை ஆனந்தம் உண்டு. பயன்படுவதிலும் மகிழ்ச்சி உண்டு. அந்தச் சமமான அனந்தத்தைக் கண்டுகொள்" - ஸ்ரீஅரவிந்தர்.

அர்ச்சுனன் கூறியது :

36. இம்மையி லுன்னையே ஏற்றிடவே இவ்வுலகோர்
செம்மையாய்ச் சிந்தை களித்திடுவர் - அம்ம!
அரக்கர் பயந்தொழிதல் சித்தர் சிரந்தாழ்தல்
பொருத்தமா மென்றே புகல்.

37. ஏற்றா திருக்கவெனில் எவ்வாறு றமையுங்கொல்
போற்றி யுனது புகழதனைச் - சாற்றியே
தேவேசா வென்பர் ; அனந்தா அயன்தனக்கு
மேலீசா வென்பர் ; வியனுலகை - ஆளீசா
என்றுதுதி செய்திடுவர்; சத்தே யசத்தென்றும்
அன்றிவற்றிற் கப்பாலா யாதவராய் - நின்றிருக்கும்
நாசமிலா நற்பொருளே ! நாதா ! நவிலரிய
தேசுயரு நின்தாள் திறம்.

38. ஆதியம் தேவே! அனந்த உருவத்தோய் !
ஆதிப் பழம்பொருளே ! அம்புவிக்கோர் - கோதில்
புகலிடமே ! புத்திக் குறைவிடமே ! போதந்
திகழிடமே! சேரும் முடிவே - சகலமும்
உன்னால் வியாபகமா யுற்றிருக்கும் தன்மையினை
என்னால்சொல் லப்படுமோ இங்கு.

39. வாயு வருணன் எமனக்னி மாமதிநீ!
ஏயபிர ஜாபதிநீ யிவ்வுலகில் - நேயமாம்
தாதைநீ ! உன்னைச் சரணடைந்து வந்தித்தேன்
ஓதிப் பலகாலும் ஓர்ந்து.

40. முன்பின் னுனைத்தொழுதேன் முற்றுமற் றெத்திசையும்
உன்புகழுக் கோரெல்லை யுண்டாமோ - உன்வீரம்
உன்திற மெல்லா வுலகினிலு முற்றிடலால்
சந்தேக மின்றியெலாம் நீ!

---

34. *வீட்டும் - வீட்டுமரும் - பீஷ்மரும்*

41&42. அன்ப றிவிலனாய் யானிருந்தேன் ஐயகோ!
உன்பெருமை யெல்லா முணர்கிலனாய் - நண்பனே!
கண்ணனே! யாதவா! என்றென் கவனத்தில்
எண்ணி யழைத்ததுவு மென்றவரே! விண்ணுருவே!
இன்னும் விளையாட்டா யின்னளிசேர் நின்புகழைப்
பின்னப் படுத்திப் பலபேசி - உன்னோ
டிருக்கும் பொழுதும், நடந்தே - இருக்கும்
பொழுதும் உணவைப் புசிக்கும் பொழுதும்
விழிதுயில் போழ்தும் விளம்பும் - பிழையுரைகள்
நீமனதில் வையாதே! மன்னிக்க நின்கருணை
சாமள வேண்டுவனே சற்று!

43. அகில சராசரத்திற் கன்புள்ள தந்தை
சகலமும் நின்றுதொழும் சான்றோய் ! மிகவும்
சிறந்த பொருளே! ஜெகமுன் றதனில்
சிறந்தோர் உமைப்போல் இலரே! - பெருந்தகையே!
உன்னைநிகர் வார்ஒரு மூன்று லகினிலும்
பின்னை இலரென்றே பேசு.

44. மன்னிப்பை வேண்டி மனுவொன்று பண்ணியுள்ளேன்;
தன்னருமை மைந்தனைத் தந்தையும் - உன்னியநற்
றோழனைத் தோழனும் காதலியைக் காதலனும்
வாழவைத்தல் போலன் பவை.

45. பாராத காட்சியெலாம் பார்த்துள்ளம் பூரித்தும்
தீராத் திகிலு முடனடைந்தேன் - சீரான
நின்பழைய ரூபத்தைக் காட்டுவாய் நீக்கமுற
மன்பதைக் குற்ற விடம்.

46. ஆயிரமா மத்தமும் அற்புதமாம் நின்னுருவும்
போய்ப்பழைய ரூபம் பொலிவுறவே - ஏயதோர்
நாலுகரம் சக்ர,கதை யேந்தியே பொன்முடியில்
சீலமுடன் தோன்றாய்ச் சிறந்து.

ஸ்ரீபகவான் கூறியது :

47. மேலான யோகத்தென் விஸ்வரூபந் தன்னையே
பாலாநீ யன்றிப் பிறர்பார்த்திலர் - மாலாய
அனந்தமாய்த் தேஜோ மயமாயும் ஆதியாய்த்
தினமும் திகழுமெனத் தேர்.

48. வேதம் படிப்பதால் வேள்விக ளாற்றிடலால்
வேதக் கிரியை விளக்கமுற - போதியநல்
தானம் தவம்செயலால் தாரணியில் வேறெவரும்
தானிதனைக் காண்கிலரே தாம்.

49. பயங்கரமாம் இவ்வுயிரும் பார்த்துப் பயந்தால்
தயங்கிடவே வேண்டாநீ சற்றும் - பயமின்றிச்
சந்தோஷத் தோடும் சகசமா மிவ்வுருவைக்
கௌந்தேய குறித்துக் கொள்.

சஞ்சயன் கூறியது :

50. என்றுவசு தேவன் இயம்பியே அர்ச்சுனர்க்கு
நின்றுசுய ரூபத்தில் நேர்ந்ததனால் - அன்றே
பயமெலாம் அற்றிருந்தான் பார்த்தனும் நெஞ்சம்
சுயவுணர்வு தோன்றிடவே பெற்று.

அர்ச்சுனன் கூறியது :

51. நின்னுருவம் மானுடனாய் நீகாட்டக் கண்டிங்கு
என்னுள்ளம் நிம்மதியும் எய்தியதே! - முன்னிருந்த
அந்தநிலை பெற்றேன் ; அறிவு நிலைபெற்றுச்
சொந்தநிலைக் கெய்திச் சுகம்.

ஸ்ரீ பகவான் கூறியது :

52. எந்த உருவமது பார்த்தற் கெளியதோ
அந்த உருவின்று பார்த்தறிந்தாய் - அந்தரத்துத்
தேவரும் பார்க்கத் தினமும் விரும்புவரால்
ஆவலா யென்றும் அமர்ந்து.

53. வேதமும் ஓதுதலால் வேட்டலால் தானத்தால்
சாதனைக்கே அரிய வெந்தவத்தால் - மேதினியில்
நீஎன்னைப் பார்ப்பதுபோல் நேர்ந்திங்குப் பார்ப்பதிலை!
ஆய்ந்திதனை உள்ளத்து அறி.

54. அனன்யமாய் என்னை அகத்திருத்தும் பக்தர்
மனம்புந்தி இவ்வுருவை வாழ்த்தத் - தினம்தினம்
பார்த்தறிவர் என்னில் பகுப்பறிவொன் றாயிடுவர்
பர்த்தாவிவ் வுண்மையினைப் பார்.

55. எனக்காகக் கன்ம மியற்றுவோ னென்னைத்
தனக்கான நன்முடிவாய் நாடி - மனத்துரையும்
பற்றெல்லாம் விட்டுப் பகையொருவர் பாலமையா
துற்றெனை வந்தடைவ னே.

விச்வரூபதர்சன யோகம் எனும்
பதினொன்றாம் அத்தியாயம் முற்றிற்று.

பக்தி யோகம் எனும்
பன்னிரண்டாவது அத்தியாயம்

அர்ச்சுனன் கூறியது :

1. நீக்கமற நின்னையே நெஞ்சில் வழிபடுவோர்
ஆக்கமென நாசமிலா அவ்வியத்தத் - தாக்கிமனம்
நின்று வழிபடுவோர் நேரு மிருவரிலே
நன்றெவர்செய் யோகம் நவில்.

ஸ்ரீ பகவான் கூறியது :

2. என்னில் நிலைத்தமனத் தெய்திச் சிரத்தையுடன்
நன்னயமாய் நாளும் வழிபடுவோர் - உன்னதநல்
யோகங்கைக் கொண்டவனாய் உன்னுவ னீதுணர்வாய்
ஏகமிது வாமென்றே யெண்ணு.

3&4 அழிவிலா அப்பொருளை அவ்வியத்த மாயும்
அழைகுறியில் லாதவனை யாதி - பழம் பொருளை
எங்கும் நிறைந்தவனை எப்பொழுது முள்ளவனை
அங்கிங் கலையா அசலனை - இங்கிதமாய்த்
தேடி வழிபட்டோர் இந்திரியஞ் செம்மையாய்
நாடுவர் எவ்வுயிர்க்கும் நன்மையே - நீடுலகில்
என்னையே பின்னால் இவரடைவ ரென்பதனை
உன்னுவா யுன்ற னுளம்.

5. அவ்வியத்தம் தன்னை அடைய நினைத்தவர்க்கு
இவ்வுலகில் இன்னல் மிகவுண்டே - இவ்வுடலைத்
தங்கிடு மாந்தர்க்கு அவ்வியத்தம் தானடைதல்
எங்கு? வெகு துர்லபமென் றெண்ணு.

6&7. என்னைப் படிமுடிவாய் எண்ணியே கன்மங்கள்
உன்னியெனக் கர்ப்பணமாய் உண்டாக்கி - மன்னும்
மனதால் எனைவிடாது சிந்தித்தே வந்தித்
தினிதாக இங்கிருப்போர் என்னால் - புனிதமுறச்
சாவு பிறப்பென்னும் சாகரத்தே வீழாமல்
காவல் செயப்பெறுவர் காண்.

8 நின்மனது புந்திதனை நீக்கமற வென்னிலே
மன்மகனே வைத்து வருவாயேல் - என்னிலே
நீவுறைவா யென்றுமிது நிச்சயமே நிச்சயமே
வாயுரை மட்டுமல வாம்.

9. அப்படியுன் சித்தமதை ஆழமா யென்னிலே
வைப்பதற்கு மிங்குனக்கு வாய்த்திலதேல் - அப்பியாச
யோகமதைத் தானியற்றா யுற்றவிவ்வாற் றால்நீதான்
வாகுடனே வந்தணுகு வாய்.

10. அப்பியாசத் தாலு மடைய முடிந்திலதேல்
இப்புவியில் கன்மங்கள் என்பொருட்டாய்த் - தப்பின்றிச்
செய்திடவே கற்றாயேல் சித்திக்கும் பூரணமாம்
உய்திறனும் என்றே உணர்.

11. இதையும் செயற்கரிதா யெண்ணுவையே யானால்
இதயத்தை யென்னில் இருத்திப் - பொதுநோக்கால்
தன்னை யடக்கியே சார்கருமத் துற்றபலன்
தன்னிலே பற்றற் றிரு.

12. அப்பியாசந் தன்னில் அதிகமாம் ஞானமது
செப்பிய ஞானத்திற் தியானமாம் - ஒப்பரிய
அந்தத் தியானத்திற் கதிகம் பலத்தியாகம்
பிந்திவருந் சாந்தியெனப் பேசு.

13&14. பகையெவர் பேரிலும் பாரானாய்ப் பண்பின்
மிகுதியால் நட்புங் கருணை - அகத்தமைய
யானென த்ற்றவனாய் நன்றுசுகந் துக்கமதைத்
தானுளத் தென்றும் சமமாக்கி - மானிலத்து
உள்ளத் திருப்தி யுறுதி யொருங்கமைய
மெள்ளத் தனையடக்கும் மேன்மையுளான் - உள்ளுறையும்
நம்பிக்கை கொண்டவனாய்த் புத்தியுள நாடியெனை
அன்புடனே பூசிக்கும் அன்பனே - மன்பதையுள்
எற்குரிய அன்பனாம் என்பிரிய பக்தனாம்
பற்குணா! நீயிதனைப் பார்.

15. ஊறுபிற ழாமையான் உற்றவுல கத் தினர்க்கே
ஊறு நினையாத உத்தமனாய்க் - கூறும்
அழுக்காறு சந்தோஷம் அல்லல் பயமும்
ஒழித்தான் பிரியனெனக் குன்னு.

16. வேண்டு தலற்றவனாய் நின்மலனாய் மேவுதிறம்
யாண்டும் படைத்தவனாய்ப் பற்றிலனாய்த் - தூண்டும்
கவலை களற்றவனாய்க் கன்மங்கள் விட்டே
எவனெனைத் தான்றொழுவா ரேனும் - அவனே
எனக்குரிய பக்தனெ னக்கன்ப னாமிஃ
துனக்குரைத்தேன் நன்றா யுணர்.

17. சந்தோஷ மிச்சை அருவறுப்புச் சாரானும்
சிந்தா குலஞ்சிறிதும் சேரானும் - வந்ததோர்
நன்மையுந் தீமையும் நாடாது பக்தியுளான்
என்மனதிற் கேற்றவனா யெண்ணு.

18&19. மித்திரனைச் சத்துருவை மேதினியில் ஒன்றெனவே
வைத்து நினைத்திடுவோன் மற்றவரால் - உற்றதொரு
கண்டனையும் கண்ணியமும் ஒன்றாய்க் கணிப்பவனும்

மண்டலத்தில் மோனமுற வாழ்ந்திடுவோன் - உண்டிச்
சுவைதேடான் வீடில்லான் புத்தி திறமானோன்
புவியிலே பக்தனாம் புண்யன் - நவையில்லா
மானிடனே யென்றன் மனதிற் குகந்தவனாய்
வானிலத்தே கொள்வான் மகிழ்ந்து.

20. சொல்லியநல் தன்மமிது சோர்விலா தாற்றியே
ஒல்லையா யென்னையு யர்முடிவாய் - நல்ல
சிரத்தை யுடன்பக்தி செய்திடுவோர் தாமே
பரத்தி லெனக் கன்பரென் பார்.

பக்தி யோகம் எனும்
பன்னிரண்டாவது அத்தியாயம் முற்றிற்று.

க்ஷேத்ர க்ஷேத்ரஞ விபாக யோகம் எனும்
பதிமூன்றாவது அத்தியாயம்

1. புருஷன் பிரகிருதி போற்றுமச் க்ஷேத்ரம்
உரியதாம் க்ஷேத்ரக்ஞ னோடு - பெரிதான
ஞானமும் நேயம் நவிலுவாய் கௌந்தேய!
யானறிய வேண்டு மவை.

2. தேகமே க்ஷேத்திரமாம் தேகியே க்ஷேத்திரக்ஞன்
ஆகுமென நன்கறிந்து ஆன்றோர்கள் - வாகுடனே
சொன்னாரித் தொல்புவியில் தோமிலா வாக்கியத்தை
முன்னா லெனுமிதனை உன்னு.

3. எல்லா வுடம்பில் இருந்துவரும் தேகியான்
நல்லாயித் தேகமும் தேகியும் - ஒல்லையாய்
ஊன்றி யுணர்வதே யுண்மை யுயர்ஞானம்
ஆன்றவென் கொள்கையிது வாம்.

தேகமதில் கூறும் திகழுமோர் மாறுதலும்
வாகுடனே வந்தவிதம் இங்குரைப்பன் - தேகியார்
என்பதுவும் பின்னை யிவனரிய செய்கையெலாம்
அன்புடனே தான்திரட்டி யான்.

4. பேரிய லுண்மை பிரம்மநற் சூத்திரத்தும்
ஆரியநந் நாட்டி லருந்தவத்தோர் - சீரியபல்
சந்தங்கள் வாயிலாச் சாற்றினார் யுக்திக்குக்
கந்தவுரை யைப்புவியின் கண்.

5&6. பூதங்க ளைந்தும் அகங்களும் புத்தியும்
பேதிக்கு மூலப் பிரகிருதி - மோதியெழும்
இந்திரியம் பத்தும் இதயந்தன் மாத்திரைகள்
முந்தியெழு மிச்சை முனிவுடனே - வந்தசுக
துக்கங்கள் இந்தத் தனுவுடனே சேதனமும்
மிக்க வுறுதியுடன் மேதினியில் - ஒக்கவொரு
தேகமென்றே சொல்வர் சேர்ந்தவற்றின் மாறுதலும்
வாகுடனே இங்ஙன் வரைந்து.

7. தன்னடக்க மாடம் பரமின்மை காருணியம்
நன்னடத்தை சாந்தி குருபக்தி - முன்னடந்தும்
சுத்தம் திடமனது தற்காப்பு சொல்லுமிவை
நித்தம் பழகியே நின்று.

8. ஐந்துவிட யப்பற்ற றுத்தவனாய் ஆழ்புவியில்
சிந்தை யகங்காரஞ் செய்யானாய் - இந்தப்
பிறப்பிறப்பி னோடு பிணிமூப்பு துக்கம்
தரும்தீமை உள்ளத் துணர்.

9. பற்றின்மை இல்லாள் மகன்வீடு பார்மிசையே
உற்றயிவை தானென் றுணராமை - மற்றும்
சமமென்றே நன்மையும் தீமைசதா யெண்ணி
அமைதிபெற நிற்றல் அறிந்து.

10. பிரியாத பக்திப் பெருக்கில் பிறழா(து)
உரிய தனியிடத்தில் உற்றே - பெரிய
ஜனத்திரளைக் கண்டாய் அருவெறுப்புச் சாரும்
மனத்தினனாய் யாவும் மறந்து.

11. நித்தமத்தி யாத்ம நிமலநன் ஞானத்தே
சித்த மிருந்துவரச் செய்திடலும் - தத்துவத்தின்
உட்பொருளை யூகித் துணர்தலும் ஞானமாம்
மற்றவைஅஞ் ஞானமெனு மால்.

12. அப்பர மாம்பிரம மாகும் அறிபொருளைச்
செப்புவ னுன்றனுக்குச் செய்யவனே - அப்பொருட்
காதியிலை சத்தசத் தென்னுமிதில் யாதென்றே
ஓதலு மாகா துணர்.

13. எங்கெங்குப் பார்த்திடினும் எல்லாத் திசைதனிலும்
அங்கங்கள் பார்க்க வமைந்துளவே - செங்கை
திருப்பாதங் கண்கள் சிரம்வாய் செவியாய்
இருப்பா னவன்தன் எழில்.

14. இந்திரியச் செய்கையா லெங்கும் விளங்கிடினும்
இந்திரிய மொன்றுமே இங்கமையான் - பந்தமிலான்
ஆயினும் போஷிப்பான் ஆனகுண மொன்றுமிலான்
ஆயினும் கொள்ளுமவற் றை.

15. சீவர் தமுள்ளும் புறம்புமி ருந்திடுவான்
மேவு சராசரங்கள் வீற்றிருப்பான் - காவலறு
சூக்குமமே யாதலினால் தூரமாம் அண்மையுமாம்
நீக்கமற யெங்கும் நிறைந்து.

16. ஒன்றா யிருந்தும் உயிர்தோறும் வெவ்வேறாய்
நின்றான் எனினும் நிலத்துயரைப் - பொன்றாது
காப்பான் படைப்பான் முடிப்பான் கவலையுடன்
ஏற்பான் இவன்தன் தொழில்.

17. ஒளிக்கெலாம் நல்லொளியாம் ஒல்லையிருட் கப்பால்
விளக்குநன் ஞானமும் நேயம் - அளப்பரிய
ஞானமுடி வாகநல்லோர் பொல்லா ருளத்தையே
தானமாய்க்* கொண்டிடுவான் நான்.

18. தேகமும் ஞானம் திகழுநன் நேயமிவை
வாகுடனே இங்ஙன் வடுத்துரைத்தேன் - ஊகமுயர்
என்னுடைய பக்த னிவையறிந்தே எந்நிலையைத்
தன்னுடைய தாயடைவன் தான்.

19. புருடன் பிரகிருதி யாமிவையி ரண்டும்
ஒருகாலம் தோன்றிப்பின் இன்றி - பிரகிருதி
தன்னிலே மாறுதலும் முக்குணமும் தானுண்டாம்
என்னுமிதை யுள்ளத் திருத்து.

20. தனுகரண மெல்லாம் பிரகிருதி தன்னில்
அனுபவித்தல் துக்கசுகம் ஆய்ந்தால் - புனிதப்
புருஷனி லென்பார் பொதுவிதி யீதாகும்
அர்ச்சுனா நன்றா யறி.

---

17. * தானமாய் - ஸ்தானமாய் - இடமாய்

21. புருஷன் பிரகிருதி தன்னிலே நின்று
பிரகிருதி பெற்ற குணமூன் - றிருத்தியே
துய்ப்பனித் தோடப்பால் தோன்றும் பிறப்பிறப்பு
இப்புவியி லென்றே யெண்ணு.

22. பரம புருடனித் தேகத்தே பார்க்கும்
ஒருவன் அனுமதிப்போன் உற்ற - பெருமையன்
தாங்குவோன் போக்த்தா மகேஸ்வரன் தாரணியில்
ஓங்குபர மாத்தும மே.

23. இவ்வாறெ வன்புருடன் தன்னோடு நற்குணங்கள்
செவ்விதாய் உள்ள பிரகிருதி - இவ்வாறே
கருத்தினில் கண்டோன் வருணபேத மின்றிப்
பிறப்ப திலையாமே மீண்டு.

24. சில்லோர் தியானத்தால் தாமாக ஆன்மாவை
உள்ளத்தில் தாம்காண்பர் ; உண்மையீது - சில்லோரும்
சாங்கியயோ கத்தால் உணர்வர் சிலபேரோ
ஓங்கியே கர்மயோகத் தால்.

25. மற்றவர்கள் இவ்வழியை நாடாது தாம்பிறர்பால்
கற்ற வழியால் வழிபடுவார் - உற்றயிவர்
தாமும் மரணபயம் தாண்டுவர் தாம்கேட்ட
ஏமப் பொருளினா லே.

26. தோன்றும் சராசரங்கள் தொன்மைசேர் இப்புவியில்
ஈன்று வளர்ந்திங் கிருப்பவெலாம் - சான்றோய்
தேகமும் தேகியும் சேர்ந்தே உருவமைந்த
தாகும் பரதர்ஷ பா!.

27. பார்வை படைத்தவன்யார் என்றால் பரமேசன்
தீர்வையாய் எவ்வுயிரில் சேர்ந்திருப்பன் - கோர்வை
அழிந்து கெடுமுடலில் தேகியழி யானென்
றுளர்ந்தேர்ந் திருப்பவனே உன்னு.

28. எங்கும் சமமாய் இருந்திடும் ஈஸ்வரனை
இங்கிதமாய்ப் பார்க்கும் இயல்பினால் - அங்கவன்
ஆன்மா விபரீத மாயெண்ண லற்றவனாய்
மாவான்மா ஆகிடு வான்.

29. ஆத்மா செயலற்றோன் என்றே அறிபவனும்
ஏத்துமா மாயையினால் எச்செயலும் - சாத்தியமாம்
என்றே உணர்பவனும் இவ்வுலகில் பார்ப்பவனாம்
என்றே இதயத்தே யெண்ணு.

30. வெவ்வேறாய்க் காணும் வியட்டியாம் சீவரெலாம்
ஓவ்வியதாம் ஓர்பொருளில் உற்றிருக்கை - அவ்வொன்றில்
நின்றே விரியுமெனும் நிச்சயத்தைக் கண்டறிந்தால்
அன்றே பிரமமவ னாம்.

31. அநாதியாய் நிர்குணனாய் அவ்வயனாய் நிற்கும்
அனாதிகளுக் கெட்டாத மன்னன் - சனாதனனாய்
எச்செயலும் செய்வதில்லை ; இவ்வுடலில் தங்கியதால்
எச்செயலில் பட்டதிலை யே.

32. சூக்குமமாம் ஆகாயம் சூழ்ந்தெலா வத்துவிலும்
நீக்கமறத் தங்கி நிலைபெறினும் - பார்க்கையிலே
சம்பந்தம் அற்றிருக்கும் தன்மைபோல் ஆன்மாவும்
சம்பந்தம் அற்றதுடல் சார்பு.

33. ஆதித்த னொன்றே அகில உலகத்தும்
சோதி திகழவே தோன்றிடல்போல் - மேதினியில்
தேகியொன் றுள்ளிருந்து தேசு வளர்த்திடுமால்
தேகமெல் லாமொளிரச் செய்து.

34. தேகம்யார் தேகியார் என்ப திகழ்ஞானத்
தூகமதா லிங்குணரு முத்தமர்கள் - சோகமா
மாயை தனையொழிக்க வல்லவராய்த் தாமடைவர்
ஏயபர மானநிலை யே.

க்ஷேத்ர க்ஷேத்ரஞ விபாக யோகம் எனும் பதின்மூன்றாவது அத்தியாயம் முற்றிற்று.

குணத்ரய விபாக யோகம் எனும் பதினான்காவது அத்தியாயம்

ஸ்ரீ பகவான் கூறியது :

1. ஞானமுயர் ஞானம் பரமநன் ஞானமதைத்
தானெடுத் திங்குனக்குச் சாற்றுவன் - மோனநிலை
பெற்ற முனிவரும் பூரணத்தைப் பெற்றிடவே
கற்ற திதையறிந்தே காண்.

2. ஞானமிதைப் பெற்று நடப்போன் யெனையடைவன்
வானமிர்தம் பெற்றவனாய் மண்மிசையே - தானொருக்கால்
வந்து பிறப்பதிலை ஊழியிலு மாள்வதிலை
நிந்தை தவிர்ந்துலகில் நின்று.

3. மாயையென் கர்ப்பமாம் மன்னுமுயிர் பீஜமிதில்
தாயைப்போல் காப்பாற்றித் தானிருப்பன் - ஏயதோர்
சீவரெலா மிங்குச் சிருட்டியிவ் வாறாகும்
காவலனே உண்மையிது காண்.

4. பல்விதமாய்த் தோன்றுமுயர் அத்தனைக்கும் பார்மிசையே
வல்வினைசேர் கர்ப்பமது மாயையே - வில்விஜயா!
தந்தையாய்த் தானிருந்து தந்திடுவேன் பீஜமெலாம்
சிந்தையில் நீயிதனைத் தேர்.

5. சத்வரஜ தாமதங்கள் தாம்விளையத் தாயாவாள்
மித்தையாம் மாயையலால் வேறில்லை - இத்தனுவில்
அவ்வயமாம் ஆன்மாவைக் கட்டி இணைத்துளதும்
செவ்விதா யீதென்று தேர்.

6. முக்குணத்தில் சத்துவமே குற்றமிலா நின்மலமாம்
பக்குவியாய்ப் பாவமிலாப் பார்த்தனே - மிக்கவொரு
மாசிலாத் தன்மையினால் தேசுசால் மற்றதுவே
பேசும் சுகஞானப் பேற்றினால் - நாசமிலா
ஆன்மாவைக் கட்டிற் கடங்கியதாய்ச் செய்திடுவோர்
மேன்மைதரு மென்றே விளம்பு.

7. மற்றை யிரஜதமோ மண்மேல் இராகத்தால்
பற்றுதலும் இச்சையும் பண்ணுவிக்கும் - சுற்றிலும்
கன்மத்தால் ஆன்மாவைக் கட்டுப் படுத்துவதாம்
நின்மனத்தே நன்றாய் நினை.

8. சாருமஞ் ஞானத்தின் சம்பவமாம் தாமதத்தால்
நேருவது மோகமென நீயுணர்வாய்! - பாரில்
வீபரீத மாலசியம் நித்திரையால் வேந்தே
அபகரிக்கு மென்பதனை ஆய்.

9. பரதன் வழித்தோன்றால்! பண்பமைந்த சத்வம்
தருதல்நற சுகந்தானித் தாரணியில் - கர்மமே
செய்விக்கும் ரஜதமே சீர்கெடுக்கும் தாமதமோ
செய்விக்கும் மோகமெனச் செப்பு.

10. மூன்றிலே வொவ்வொன்றும் முன்னிற்கும் காலையிலே
ஆன்றவா! மற்றிரண்டும் பின்னிடையும் - சான்றவர்க்கு
உற்றதாம் சத்துவமும் ஓர்காலை மற்றிரண்டைச்
சுற்றி மறைத்துமே தானோங்கும் - மற்றும்
இரஜதமும் ஓர்காலை தாமதமும் ஓர்கால்
பரவிமேல் நிற்குமதைப் பார்.

11,12&13.ஞானம் ஒளியிரண்டும் நன்றுபல் விந்தியத்தும்
தானெழும் காலந்தான் சத்துவமே - லானதாம்
லோபம் பிரவிருத்தி லோலமிக் கன்மங்கள்
தாபமிவை யாவும் தலைகாட்டின் - ஓ! பரதா!
அந்த விரஜதமே யாகுமாம் தாமதத்தில்
அந்தகாரம் சோம்பல் நித்திரையும் - சிந்தை
மயக்குறுதல் குற்றமெல்லாம் வந்தடையும் பாராய்!
சயிக்கொணாத தொல்லையாய்ச் சார்ந்து.

14. சத்துவம் மேலாகத் தானிருக்கும் காலையிலே
இத்தரணி வாழ்வு மிறுதியுறின் - உத்தமராம்
ஞானிகள் சேரும் நலமுயர்ந்த நற்பதமே
தானடை வானென்றே சாற்று.

15. சாவு மிரஜதத்தில் தான்தோன்றில் கன்மத்தில்
ஆவல் படைத்தவர்பால் வந்துதிப்பன் - பாவஞ்சேர்
தாமதத்தால் செத்தவனோ மூடமாம் சென்மத்தில்
தாமுதிப்பா னென்றவனைச் சாற்று.

16. நற்கருமத் துற்றவன்சாத் வீகமென்றே கூறுவாய்
சொற்ப இராஜதத்தால் துக்கமாம் - அற்பமாம்
தாமதத்தால் தோன்றும் அறியாமை தானென்றே
நீமதிப்பாய் நன்றாய் நினைந்து.

17. சத்துவத்தே ஞானம் இரஜதத் தாசையும்
உத்தமனே வந்திங் குறுமென்பார் - சிந்தித்தே
சேரு மயக்கம் அறியாமை தாமதத்திற்
சாருமெனச் சாற்றிடுவார் தான்.

18. சத்துவர்கள் மேற்பதமே சாருவர் ராஜசத்தோர்
மத்தியிலே தானிருப்பர் மானிலத்தே - புத்தியில்
தாமஸிக ளானோர் தரணியில் கீழ்க்குணங்கள்
சேமித்துச் செல்வரே கீழ்.

19. முக்குணமே எப்பொருட்கும் மூலமெனத் தானுணர்வர்
அக்குணத்தின் மேலாம் அறிபொருளைத் - தக்கவன்
இங்கறிந்து பின்னால் எனையடைவா னென்பதனைச்
சங்கையற நீமனதில் சார்.

20. தேகம் படைத்த திரிகுணங்கள் விட்டப்பால்
தேகி கடந்தவனாய்த் தேறியே - சாகும்
பயமும் பிறவிப் பிணியும் முதுமை
துயரற் றமரத் தடைந்து.

அர்ச்சுனன் கூறியது :

21. முக்குணங்கள் தான்கடந்த முன்னவனைக் காண்பதற்கு
லக்கணமும் யாதென் றெனக்குரைப்பாய் - முக்குணங்கள்
எவ்வாறு தான்கடந்தார்? எவ்வாறு தானடப்பர்?
இவ்வாறெல் லாமிங் கெடுத்து.

ஸ்ரீ பகவான் கூறியது :

22. சோதி மயக்கம் பிரவிருத்தி தோன்றிடுமே
மேதினியில் சத்வதம ரஜதத்தால் - ஈதுளத்தே
நின்றெழுதல் எண்ணி நினைவில் அறுவருப்பும்
இன்றெனின் கோருதல்வேண் டேல்.

23. சம்பந்த மற்றவனாய்த் தானிருப்பன் ; முக்குணத்தால்
இம்பரில் சஞ்சலத்திற் கேலாதான் - அம்புவியில்
இக்குணங்கள் ஆகுமென எண்ணி அவைதாமாய்
அற்பமும் ஆட்டிவைத்த லற்று.

24&25. துக்கசுக மொன்றாக்கித் தன்னி லடங்குமதைத்
தொக்கவிருந் தோடுகல் பொன்னையும் - மிக்கதென்று
ஒன்றையும் எண்ணா துவப்பும் வெறுப்பிலனாய்
என்றும் ஒருநிலையாய் என்சொலினும் - ஒன்றாலும்
கண்டனையும் கண்ணியமும் வேறாய்க் கனியாதே
மண்டலத்தில் மானவ மானமும் - கண்டவற்றில்
பேதமே காணான் பிரியமுளான் சத்துருவப்
பேதமும் பாரானும் பேருலகில் - சாதனமாய்
எத்தொழிலும் ஏலானாய் உள்ளவனே யிவ்வுலகில்
முக்குணமும் தான்கடந்தோ னாம்.

26. முக்குணமும் விட்டோன் முழுமனதால் பக்தியோக
தெக்கணமும் என்சேவை செய்திடுவோன் - இக்குணம்
வாய்ந்தவ னாய்ப்பிரம நந்நிலையை வந்தடைவான்
ஆய்ந்தறிவாய் உள்ளத் தது.

27. என்னிலையே யப்பிரம மற்றிலை யென்றெண்ணும்
அந்நிலையே சாஸ்வாமாம் தன்மநிலைக் - குன்னத
ஏகாந்த நற்சுகத்திற் கேற்றதாய் அவ்வயமாம்
வாகாய் மரபிலதாம் மற்று.

குணத்ரய விபாக யோகம் எனும்
பதினான்காவது அத்தியாயம் முற்றிற்று.

புருஷோத்தம யோகம் எனும் பதினைந்தாவது அத்தியாயம்

ஸ்ரீ பகவான் கூறியது :

1. அரச மரமுண்டு அதன்கிளைகள் கீழாம்
தரைசெல்லும் வேரதுவோ தான்மேல் - இருப்பதுவாம்;
அவ்யயமா மஃது அருமறையே பச்சிலையாம்;
செவ்விதாய் யிஃதறிவோன் வித்தகனாம் - இவ்வழியாய்
வேதமுணர் மேலோன் விவேகத் துணர்ந்திடுவான்
மேதினியி லென்றே வுணர்.

2. கொப்புகள் மேல்கீழ் படர்ந்து குணந்தம்மால்
செப்பும் வளர்ச்சித் திறன்படைத்து - இப்புவியில்
வேர்கள் செலவிட்டுக் கன்மவினை வுண்டாக்கும்
சேர்விடயந் தாந்தளிரக் கொண்டு.

3&4. இதற்கோர் வடிவில்லை ஆதிநடு அந்தம்
எதுவுமிலை வெட்டியிதைத் தள்ளல் - புதிய
நிராசையாம் கட்கம் நிகழ்த்திடுதல் வேண்டும்
தராதலத்தில் இஃதியற்றிப் பின்பே - பராவுபுகழ்
மேவுமுயர் ஞானி அடைந்துபின் மீளாத
மேவரிய மேன்முடிவை வேண்டும் - எவர்பால்
ஆதிதொழில் தோன்ற லமைந்திடுமோ - அன்னவச்
சோதி புருடனையே சார்ந்துறைவன் - ஈதறிவாய்
ஐவர் தமில்நடுவ னானவா! ஆய்ந்துணர்ந்து
செய்யவசு நீமனதில் வை!.

5. செருக்கும் மயக்கம் சிறிதும் இலாமல்
தருக்கித் தகப்பற றுத்து - விருப்பம்
விடுத்தான்ம ஞானத் தினில்சுக துக்கம்

கொடுக்கும் விடயத்தைக் கோரான் - திடத்தால்
மடமை யொழித்தோரே மானிலத்தில் மேலாம்
இடம்பெற் றிருப்பரென யெண்ணு.

6. இருசுடரின் நல்லொளியை ஏற்றிடுவ தில்லை
பரவுதீ யன்னதே பார்த்தா - பரநிலையாம்
அப்பதவி யெய்தினோர் ஆழிசூழ் இப்புவியில்
தப்பிப் பிறப்பதிலை தாம்.

7. மன்னுமென் அம்சமே மண்ணுலகிற் சீவராய்ச்
சொன்ன பிரகிருதிக் குள்ளிருந்து - இன்னலுறு
அம்மனதி னோடுற்ற ஆறெனும் இந்திரியம்
இம்மையில் தன்னதெனு மே.

8. பூவின் மணமெல்லாம் காற்றிழுத்துப் போவதுபோல்
ஏவு மனமுதலாம் இந்தியத்தைத் - தாவியுடல்
மேவுங்கால் விட்டுப் பிரியுங்கால் ஈச்வரனும்
ஆவலாய் ஏற்றிருப்பன் அங்கு.

9. இந்திரிய மைந்தும் இதய மதிஷ்டானத்
தந்தமுடன் தானிருந்து ஆழ்புவியில் - சொந்தமதாய்ச்
சத்தப் பரிசமுதல் ஆன விடயங்கள்
நத்தி நுகர்வனவாம் நன்று.

10. முக்குணங்க ளோடு முயங்கி இருந்துடலில்
புக்கிருத்தல் மற்றவற்றில் போய்ப்புகுதல் - ஒக்கவே
போக மனுபவித்த லாமவனைக் கண்டுணர்தல்
வாகுடனே ஞானவிழி கொண்டு.

11. தம்மிலே ஆன்மாவைக் தாம்காண்பர் யோகியர்கள்
இம்மையில் தாம்முயற்சி ஏற்றிடலால் - தம்மிடைப்
பட்டோர் மதியீன மக்கள் முயன்றிடினும்
சற்றேனும் காண்கிலரே தாம்.

12. எந்த இயலொளியால் சூரியனும் சந்திரனும்
அந்த எரிசுடரும் ஆயினவே - அந்தநற்
சோதியே என்னுடைய சோதியெனத் தானிவாய்
மேதினியில் பாரதத்தோர் வேந்து.

13&14. பூமிக்குள் வீரியமாய்ப் புக்குயிரைப் போற்றுவன்,யான்
சோமனாய் ஓஷதிகள் தோற்றுவிப்பன் - ஏமமாய்
வைஸ்வா னரனாய் அபானப் பிராணனுடன்
பஸ்மஞ்செய் வேனுணவைப் பார்.*

15. எல்லோ ரிதயத் திருப்பதுவும் நானேயாம் ;
எல்லாரு மெண்ணமுயர் ஞானமஃ - தில்லலாத
அந்நிலையு மென்னிலாம் ; ஆதிமறைக் காதியாம் ;
உன்னி யுணர்பவனும் ஓர்பொருளும் - என்னிலே
எல்லா மடங்கிய தென்றே யுணர்ந்திடுவாய்
சொல்லுமிவ் உண்மை தொகுத்து.

16. இந்த உலகத்தில் சீவனும் கூடஸ்தன்
தந்த இருவகையாய்த் தானியம்பும் - அந்தமுள
கூடஸ்தன் அட்சரமாம், சீவன் க்ஷரமாகும்
நாடி யிவையுணர்க நன்று.

---

14. மானிட சரீரம் பானையைப் போன்றது. மனம், புத்தி, இந்திரியங்கள் அப்பானையில் இடப்பட்ட நீர், காய்கறி, அரிசி முதலியவற்றிற்குச் சமமானவை. அப்பானை அடுப்பின் மீது வைத்தால் நெருப்பு பானையில் உள்ளவற்றை வேகச் செய்யும். ஆனால் வேக வைக்கும் உஷ்ணம் பானையினுடையதன்று. நீர், காய்கறி, அரிசி இவற்றினுடையதுமன்று. அதுபோல மானிட சரீரத்தைப் பாதுகாத்தும் வளர்த்தும் இயக்குவிக்கும் சக்தி பகவானுடையதே. - ஸ்ரீராமகிருஷ்ணர் உபதேச மொழி

15. உடல் முழுவதும் ரத்தமிருந்தாலும் பசுவின் மடியில் அது பாலாக உள்ளது. அது போல ஈசுவரன் உலகில் எங்கும் பரவி இருக்கின்றான். இருப்பினும் இதயத்தில் தியானத்தால் அவன் உணரப்படுகிறான்.
- ஸ்ரீராமகிருஷ்ணர் உபதேச மொழி

17. இன்னும் பரமான்மா என்னும் புருஷனுளன்
மன்னுமவர்க் கில்லையே மாறுதலும் - உன்னியிவன்
மூவுலகம் முற்றும் வியாபிக்கும் ஈசுரனாம்
காவல் புனைந்திருப்பான் காண்.

18. நாசமுறும் நிலையை நான்கடந்து நிற்பதனால்
நாசமிலா வஸ்துவின்மேல் நானுளதால் - நேசமுடன்
இந்த வுலகமும் ஈரிரண்டு நன்மறையும்
தந்தபுரு டோத்தமப்பேர் தான்.

19. மயக்கமுறா நல்லறிவால் மானிலத்தே என்னை
உயர்புரு டோத்தமனா யுன்னும் - அவர்கள்
அனைத்தாகும் பாவனைபோல் இங்கே யிருப்பர் ;
நினைத்துப்பார் நெஞ்சேநீ நின்று.

20. பாவமிலாய்! இந்தப் பரம இரகசியத்
தேவுதல் என்னிலென்றே றேயுணர்வோர் - மேவுமுயர்
ஞான மடைந்த கிருத கிருத்தியனாய்
நானிலத்தே விளங்கும் நன்று.

புருஷோத்தம யோகம் எனும்
பதினைந்தாவது அத்தியாயம் முற்றிற்று.

---

16. கூடஸ்தன் - கூடம் என்றால் கொல்லன் உலை. உலையில் உருப்பெறும் பொருள்கள் மாறுபாடடையும் ; உலைமாறுபாடடைவதில்லை. இதுபோல் மாறுபாடின்றியிருப்பன் இவன் புத்தியில் உறையும் ஜீவசைத்தன்யம். ஜீவனே ஆன்மா. ஜீவசாட்சி.

தைவாசுர சம்பத் விபாக யோகம் எனும்
பதினாறாவது அத்தியாயம்

ஸ்ரீ பகவான் கூறியது :

1. அஞ்சாமை தூய்மையுடன் ஞானயோ கத்துறுதி
மிஞ்சிய தானதம வேள்வியுடன் - எஞ்சாது
வேதமும் கற்றுணர்தல் வீரத் தவம்புனைதல்
நீதமாம் ஆர்ஜவமும்* நேர்ந்து.

2. கொல்லாமை வாய்மையுடன் கோபமிலா மைதுறவு
எல்லாரும் சாந்தநிலை இச்சையின்மை - நல்லதொரு
ஜீவதயை அந்த மிருதுநிலை நாணுடைமை
தூய சலியாமை தொடர்ந்து.

3. ஒளியும் பொறையும் உறுதி பரிசுத்தம்
பழியில் துரோகமிலாப் பண்பும் - உளமதிலே
கர்வமே தானடையாக் கண்ணியமும் தேவரிடத்
துற்பவமாம் நற்குணமென் றோர்.

4. தம்பமொடு* தர்ப்பம் அபிமானம் வன்சினமாம்
வம்பர் கொடுமையுடன் அஞ்ஞானம் - இம்பரில்
இக்குணங்களே அசுர சம்பத்தை யெய்தியவன்
புக்கிருக்கும் தீக்குணங்க ளாம்.

5. தேவகுணம் முக்திநிலை சேர்ப்பிக்கும் பந்தமதில்
காவலாம் மற்றையவை ஆயுங்கால் - காவலனே
பாண்டவ தேவநிலை பண்பினுக்கே நீபிறந்தாய்
வேண்டாமித் துக்கம் விடு.

---

1. ஆர்ஜவம் - நேர்மை. முக்கரணங்களிலும் நேர்மை
4. தம்பம் - கர்வம் ; தர்ப்பம் - கொழுப்பு ; அபிமானம் - தற்புகழ்ச்சி.

6. தேவா சுரகுணங்கள் சீவரைப் பற்றுமெனக்
காவலனே யான்முன்னம் காட்டியதில் - தேவகுணம்
முன்னே விரிவாய் மொழிந்துள்ளோம் ; மற்றதுவும்
இன்னே உறைத்திடுவன் இங்கு.

7. அசுர குணம்படைத்தோர் ஆற்றும் கருமம்
நிசமாய் உணரார் ; நிவர்த்திக்* - கிசைந்திடுமோர்
செவ்வழியும் தேரார்கள் ; தூய்மையும் வாய்மையும்
எவ்வழிக்கும் நல்லொழுக்க மிங்கு.

8. பொய்மை நிலையாமை ஈசுவர னின்மையென
மெய்யுலகில் ஆன்பெண்ணின் சேர்க்கையால் -உய்ந்ததென்று
காமத்தைக் காரணம் காட்டிடுவர் ; வேறென்ன
ஆமோ வெனப்பேசு வார்*.

9. அறிவிலா மூர்க்கரிவர் ஆற்றும் செயலால்
உறுவர் உலகுக்கோர் ஊறாய் - நெறிபிசகி
வீழுமிவ் வீணரால் மேதினியில் நன்மையிலை
வாழுமிவர் நாசமடை வர்.

10. தீராத ஆசை செருக்குடனே தம்பமும்
பேரா தகந்தையும் பெற்றவராய் - ஈறேது
மில்லாத துன்முடிவை எண்ணிப் புரிவர்காண்
பொல்லாத எண்ணம் புனைந்து.

11. கட்டையுடன் தீரும் கவலை மிகப்புனைந்து
இட்டசுக போகமே எல்லையாய் - நட்டமிலா
தத்தனையும் நாடுவது மங்கதிலே யுள்ளதெனும்
பித்தனே யாகுமெனப் பேசு.

---

7. நிவர்த்திக்க - நிவ்ருத்திக்கு - விலக்கத்தக்க தீவினைக்கு
8. இச்சுலோகம் ஆசிரியரால் மொழியாக்கம் செய்யப்படவில்லை.

12. பலப்பலவாம் ஆசையினால் பந்திக்கப் பட்டே
மலமான இச்சை சினம்கொண்டு - புலன்வழியே
போகம் புசிக்கப் பொருட்டே வேண்டுமெனும்
தாகத்தால் தீயவழிச் சென்று.

13. இன்றிதைப் பெற்றுவிட்டேன் இச்சை நிறைவேறும்
இன்றிதுவும் என்னதாம் இங்கினிமேல் - நன்றுயான்
நாடும் பொருள்பெறுவேன் நாட்செல்லச் செல்லவே
பீடுயறா மென்பதிவர் பேச்சு.

14. சத்துருவை வென்றுவிட்டேன்; சார்ந்தினியும் வந்தவரை
எத்தியே கொல்லவென்னால் ஏலுமே ; - இத்தலத்துக்
கீசுரனும் யோகியான் சித்தியும் என்னதே
பேசுபல மும்சுகமும் தான்.

15. சம்பத்தும் நற்குலமும் சார்ந்தவன் எற்கிணையாய்
அம்புவியில் யாருமிலர் ; யக்ஞங்கள் - தெம்புடனே
செய்வேன் ; பிறர்க்கீவேன் ; சிந்தை களிப்பனெனும்
மையலுற்ற மாந்தர் மனம்.

16. மட்டில்லாச் சித்தப் பிராந்தியினால் மாயவலைக்
குட்பட்டே இச்சையினுக் குள்ளாகிப் - பட்டபயன்
உண்டு களித்திடுவர் ஊறிலதோ இங்கிவர்கள்
கண்டதும் ஆழ்நரகே காண்.

17. தற்பெருமை கர்வம் தனத்தால் வருமமதைக்
குற்பன்ன மானதொரு தம்பத்தால் - அற்பமும்
நல்ல விதிமுறைகள் நாடாதே நாமயக்ஞம்
செல்லச் செயிற்றிப்பர் சேர்ந்து.

18. தர்ப்பம் அகங்காரம் தாகம் பலம்கோபம்
முற்பிறப்பின் மூட்டை முடிந்துவந்து - இப்பிறப்பில்
தம்மில் பிறவற்றில் தாமிருந்தே ஆட்டிவைக்கும்
எம்மை மறந்துவிட்டார் இன்று.

துவேஷிக்கும் இந்தக் கொடியதொரு துட்டர்
அவாவா லலையும் அதமர் - குவலயத்தில்
பேர்சற்று மந்த அசுரர் பிறவியிலொவ்
வேர்காலும் வந்திடச் செய்வோம்.

20. அசுரரின் கர்ப்பத் தடைந்தஇம் மூடர்
நசிப்பதல் லாலென்னை நாடார் - பசுபட்சி
ஆதிகீழ்ச் சன்மம் அடைந்திடுவர் ; குந்திசுத!
ஓதுமிவ் வுண்மை யுணர்.

21. நாசமுறச் செய்து நரகத் திடைவீழ்த்தும்
ஆசைசினம் பேராசை யாம்மூன்றும் - பேசரிய
வாயில் களாகும் வழிதெரிந்து இம்மூன்றைச்
சேரா விலக்கின் ஜெயம்.

22. சொல்லும் நரகத் தொடர்புள்ள மூன்றொதுக்கி
நல்ல குணங்களை நாடுவனேல் - ஒல்லையாய்
மோனம் பரகதியை மிச்சமிலா தெய்திடுவன்
நூலாறா முண்மை நுகர்.

23. நூலில் நுவலுண்மை நோக்காது காமத்தால்
மேல்நோக்குக் கொண்டிருக்கும மேதினியோர் - காலத்தால்
சித்திசுகம் மற்றும் பரகதியும் சேர்ந்திடார்
நத்தியி தைஉணர்வாய் நன்று.

24. நூலின் விதிவிலக்கு நோக்கியே காரியங்கள்
சாலத் தொடர்ந்தாற்றல் தான்முறையாம் - மேலும்
இதையே மனத்திருத்தி இங்கியற்று; மாற்றால்
விதைபோம் பிறவியற வேறு.

தைவாசுர சம்பத் விபாக யோகம் எனும்
பதினாறாவது அத்தியாயம் முற்றிற்று.

---

17. செயிற்று - குற்றம், கோபம்.

சிரத்தாத்ரய விபாக யோகம் எனும்
பதினேழாவது அத்தியாயம்

அர்ச்சுனன் கூறியது :

1. நூலின் விதிநோக்கார் உள்ளச் சிரத்தையொடு
சாலவே யக்ஞங்கள் தாஞ்செய்யின் - மேலவர்
அங்கவர்க் கென்னிலையாம் சத்வரஜ தாமசங்கள்
இங்கிதற் குள்ளமுறை யேது.

ஸ்ரீ பகவான் கூறியது :

2. முற்பிறப்பின் வாசனையால் மூன்றுவித மாம்சிரத்தை
இப்பிறப்பில் மாந்தர்தா மெய்திடுவர் - செப்புமவை
சத்வரஜ தாமசமாய்ச் சாற்றிடுவ னிஃதுனக்கு!
நத்தியவை கேட்டிடுக நன்று.

3. உள்ளியல்பை ஒத்ததாய் உற்ற சிரத்தையுமாம்
உள்ளஞ் சிரத்தை உருவாகும் - தள்ளலறும்
அச்சிரத்தை தானாய் அமைந்துள்ள மானிடனாம்
முச்சிரத்தை தம்மிலே மூண்டு.

4. சத்துவர்கள் தேவரையே தான்துதிக்கும் யக்சரையே
நித்தமும் ராசத்தோர் நின்றேற்றும் - சித்தத்தே
பூதப் பிரேதரையே நின்று புகழ்வார்கள்
மீதமுள தாமசிகள் வேறு.

5. நூலைநோக்கார் நொய்ய வகங்கார டம்பமும்
மேலெழவே காம விளைவுகளில் - பாலராய்
எய்தரிய பேரெய்த எண்ணியே கோரதவம்
செய்திடுவ ரங்குச் சிலர்.

6. புறத்தமைந்த பூதத்தைப் புண்படுத்தி நிற்பர்
அகத்தமைந்த என்னை அலைப்பர் - இகத்தில்
அசுர குணம்படைத்த அற்பரிவ ராவர்
உசிதவுணர் வாமோ உரை.

7. ஆகாரம் மூன்றுவித மாமவர்கள் தங்களுடைய
தேகாதி போஷிக்கச் செய்திடற்கே - வாகாயத்
தவம்யக்ஞும் தானமும் தாமவைமும் மூன்றாம்
அவையிங் கெடுத்துரைப்பன் ஆய்.

8. ஆயுரா ரோக்யபல சத்துவமா மாகாரம்
ஏய பிரீதியின்பம் ஏற்பதாய் - வாய்க்குருசி
உள்ள குழம்பாய் உறுதி யுளமுவப்ப
உள்ளதே சாத்விகர்க்காம் உன்னு.

9. உப்பும் புளிப்பும் உவர்ப்பு மிகுந்தனவும்
கப்பிய சூடளவும் காரமிகுந் - தப்புடனே
சேர்க்கையில் லாதனவும் துன்பம் துயர்நோயும்
சேர்ப்பிக்கும் ராசதர்பால் நின்று.

10. பழைய உணவு சுவையற்றுப் பாழாய்
அழுகியது எச்சில் அசுத்தம் - இழிவான
அந்தத் தமோகுணத்தார் ஆசித்தே உண்பர்காண்
சிந்தை மகிழ்ந்திடவே தேர்ந்து.

11. விதிப்பிடியே செய்து பயனை விரும்பா
ததன்பொருட்டுச் செய்திடுவ தானால் - அதனையே
எக்ஞத்தில் சத்துவமாம் எக்ஞமென ஏற்றிடுவர்
மக்கினவர் காணா ரிது.

12. பயனும் பெருமைக்கே பண்ணிடுவோர் யக்ஞம்
வியனுலகில் ராஸதத்தில் மேவும் - நியமமிது
பார்த்தறிவாய் நீயே பரதத் சிரேட்டாவே!
கூர்த்த மதிவிளக்கைக் கொண்டு.

13. மந்திரமும் அற்று முறையற்று மற்றுமுள
தந்திடும்ஊண் தட்சிணையும் தாமற்றுச் - சிந்தை
சிரத்தையில்லா தேயிங்குச் செய்திடுமோர் யக்ஞம்
உரைத்திடுவர் தாமசமென் றோர்ந்து.

14. அந்தணர் தேவர் குருமார் அறிஞரையே
சந்ததமும் பூசித் திருந்திடலும் - சிந்தையில்
தூய்மைகொல் லாமையும் நேர்மைபிர மச்சர்யம்
ஆயசரீ ரத்தவதே யாம்.

15. கோபம் விளைக்காத உண்மை குறியாக
ஞாபகமும் நன்மைக்கே நாடுவதால் - சோபைகொளப்
பேசுவது வேதம் பிரதிதினம் ஓதுவதும்
ஆசித்த வாக்கும் தவம்.

16. சிந்தைத் தெளிவு செழுங்கருணை மௌனமும்
முந்தவே தன்னடக்கம் முற்றியெழச் - சந்ததமும்
நன்னோக்காம் கொண்ட நளின மமைந்தானேல்
அன்னதுள் ளத்தவமே யாம்.

—

17. வாக்குமனம் காயம் வழங்குமிம் மூன்றுதவம்
நோக்குபல னின்றிநித்தம் நோற்போராய் - ஆக்கம்
சிரத்தையாய்க் கொண்டுமே செய்திடுமேல் அந்தோ
அரற்றுவர் சாத்விகமென் றாய்.

18. போற்றி வரவேற்கும் பூஜை பெருமையெண்ணி
ஆற்றுவதும் தம்பத்திற் காயிடுமேல் - மாற்றமிலா
திங்கதனை ராசதமென் யெண்ணிடுவா யீதுறுதி
தங்கியதில் மாறிடமே தான்.

19. நல்லதொரு கொள்கையிலார் நாளும் தனைவருத்திச்
சொல்லரிய தொல்லை பிறர்க்கியற்ற - வல்லமையும்
பெற்றிடவே வேண்டிப் பிழையின்றிச் செய்தவமும்
குற்றமாம் தாமசமாய்க் கொள்.

20. கால மிடமறிந்து கைம்மாறு வேண்டாது
சீலமுள பாத்திரனைத் தேர்ந்தெடுத்து - ஏலுமவர்க்
கீதலே சாத்விகமாம் தானமென இங்கியம்பும்
ஆதலால் நீயிஃ தறி.

21. கைம்மாறு எண்ணிக் கடனுக்கே ஈந்திடலும்
இம்மைக்கு வேறுபயன் வேண்டிடலும் - செம்மைநலம்
இன்றிப் பிரியமிலா தீதலிவை யெல்லாமே
என்றும் இராசதமாம் எண்ணு.

22. கால மிடமறியா தீதல் கடைப்பட்ட
சீலமிலா மாந்தர்க்கே செய்திடலும் - மேலும்
அவமதிப் போடீதல் அருவறுப்போ டீதல்
புவிக்கிவை தாமசமாய்ப் போம்.

23. ஆதலால் ஓமென்றே அட்சரத்தை முன்னிட்டே
வேத விதிப்படிசெய் வேள்விதனில் - ஓதுவர்
தானம் தவமியற்றுங் காலையிலும் தானிதுவே
ஆனமுறை யென்றே அறி.

24. தத்தென்ற சொல்லையே தாமுச்ச ரித்திடுவர்
நத்தும் பயன்கருத நல்வழியில் - உத்தமமாம்
தான தவமான சத்கிரியை யில்மோட்சத்
தானபயன் கோரு மவர்.

25. சத்தெனும்சொல் லுண்மைக்கும் சாதுநிலைக் காமென்பர்
உத்தமாம் நற்செயற்கு மொவ்வுமாம் - சித்தமிசை
நன்றா யிதையுணர்வாய் பார்த்தா! நலம்பெருக
வென்றே யிதையுள்ளத் தேல்.

26. வேள்விதவம் தானம் இவற்றில் உறுதிநிலை
கேள்நீ யிதுகேடில் சத்தென்பார் - கோள்வினைகள்
அந்தப் ரமத்தின் பொருட்டாக ஆற்றுமவை
சந்ததமும் சத்தென்பர் தாம்.

27. சிரத்தையிலா வேள்வியும் தானதவம் செய்ய
உரைக்கில் அசத்தெனவே உன்னு - சிரத்தையிலா
இந்தக் கருமம் இகபரமி ரண்டிற்கும்
எந்தப் பயனிலதாம் எண்ணு.

சிரத்தாத்ரய விபாக யோகம் எனும்
பதினேழாவது அத்தியாயம் முற்றிற்று.

மோக்ஷ ஸந்ந்யாச யோகம் எனும்
பதினெட்டாவது அத்தியாயம்

அர்ச்சுனன் கூறியது :

1. சன்யாச மென்பர் தியாகமெனச் சொல்லிடுவர்
என்னவென இவ்விரண்டும் என்றனுக்குச் - சொன்னபடி
வெவ்வேறா யிங்குரைக்க வேண்டும் ரிஷிகேசா!
அவ்வியவா! கேஷிகொன்ற வா!

ஸ்ரீபகவான் கூறியது :

2. காம்ய கருமங்கள் கைவிடுதல் சன்யாசம்
தீம்பலனை விட்டால் தியாகமாம் - நாம்புகலும்
இஃதுநீ கேட்பாய்! இதுமுனிவர் ஞானியர்கள்
நத்தியுரை வாசகமாம் நாடு.

3. விதித்தகன் மம்சிலரே விட்டொழியச் சொல்வார்
மதித்தியக்ஞ தானமதை மட்டும் - ஒதுக்கொணா
தென்றுபிறர் சொல்லிடுவார் ; இவ்விரண்டும் நிச்சயத்தை
இன்றுனக்குச் சொல்வேன் இவண்.

4. தியாகமும் மூவிதமாய்ச் செப்பிடுத லுண்டே
வியாக்கிரம்போல் வீரமுள வேந்தே - சுயாதீனம்
பெற்றுய்ய எண்ணும் பெரியபர தத்தோன்றல்
உற்றுக் கவனித் துணர்.

5. வேள்விதவம் தானம் விடத்தக்க தல்லனவாம்
வேள்விதவம் தானம் விவேகிகளுக் - காள்வினையால்
வந்துளதாம் மாசெல்லாம் வாடிடவு மங்கவர்க்குத்
தந்திடுமாம் தூய்மைநிலை தான்.

6. பார்த்தா! இவைகூடப் பற்றின்றித் தான்செயலும்
ஆர்த்த பயனொன்றும் அடையாதே - சீர்திகழ்ச்
செய்திடலும் தானே சிறப்புளதா மெற்கதுவே
செய்திடினும் சம்மதமாம் தேர்.

7. நியதியாம் கன்மம் துறந்துமே நீக்கல்
கயவர்தம் செய்கையே கண்டாய் - மயலால்
விடுத்தலும் கீழா கவேதா மதத்திற்
கடுத்ததே யாகும் அறி.

8. தேக உபத்திரவச் சிந்தனையால் துன்பத்திற்
கேகுதல் கூடாதென் றெண்ணியே - மாகன்மம்
விட்டவ னிராசதத்தால் விட்டவனா யாகுவன்
கிட்டும் பயனிவர்கட் கேது?

9. கடமையாய்ச் செய்யும் கருமத்தி னாலேற்
படும்பய னொன்றுமெதிர் பாரா - திடுங்கருமம்
செய்திடுவா னாயின் சிறந்ததோர் சாத்விகமென்
றெய்திடு நாமமிதற் கே.

10. சத்துவனாய்த் தானிருந்து சந்தேக மற்றவனாய்
உத்தமதி யாகம் உடையவன்தான் - சித்தமிடை
இன்பமென துன்பமென எக்கரும மெண்ணாமல்
பண்புடனே செய்வான் பரிந்து.

11. கன்மங்கள் தேகிக்கும் கைவிடுதல் கூடாவாம்
கன்மபலன் வேண்டாக் கருத்தமைந்தோன் - சென்மத்தில்
நல்ல தியாகியென நாட்டார் நவிலுவரால்
சொல்லுமிதை யெண்ணித் துணி.

12. நல்லபயன் தீயபயன் நன்மை கலந்ததீமை
சொல்லும் மிசிரபலன் தோன்றிடுமாம் - ஓல்லையாய்
இந்தவுயிர் நீங்கியபின் இச்சையுடன் செய்வோர்க்கு ;
அந்த சன்யாசிக் கிலை.

13. எல்லாக் கருமத் திறுதியெனும் சாங்கியத்தில்
எல்லாக் கருமம் இனிதாற்ற நல்லாய்!
காரணங்கள் ஐந்தெனவே காட்டினார் இங்கந்த
காரணங்கள் யாம்கழறக் காண்.

14. தேகமுமே ஆகி திரிபுரியும் சேர்ந்தைந்து
பயமாய்த் தானே பகர்வா - யூகனே
அந்தக் கரணங்கள் அங்கவற்றின் சேட்டைகள்
முந்தகக் கடவுளுந்தான் மூன்று.

15. காயமனம் வாக்கால் கருமங்கள் நல்லதுவும்
தீயதுவும் செய்திடினும் செய்தவர்க்கு - ஏயதொரு
காரணங்கள் மேலேயாம் காட்டினதாம் ஐந்தினில்தான்
நேரு மெனவுணர்வாய் நீ.

16. காரணங்கள் ஈதிருக்க ஆன்மாவைக் கர்த்தாவாய்
யாரெண்ணு வாரேல் அவருலகில் - பூரணமாய்ப்
புத்தி திருந்தாத புல்லியரா மிங்கவர்க்கு
நத்தியுணர் காட்சியில் தாம்.

17. அகங்காரன் நானென்ப தற்றவன் பற்றைப்
பகுந்து பிறர்க்களித்த பான்மைக் - குகந்தவன்
கொல்லுவதி னாலும் கொலைக்குற்றம் செய்யவில்லை
இல்லையாம் சம்பந்த மெண்ணு.

18. ஞாதாவு ஞேயமும் ஞானமெனல் மூன்றுந்தான்
யாதாயி னும்செய்கைக் காதரவாம் - ஆதலால்
கர்த்தா கருவி கருமமென மூவிதமாய்
வைத்த கருமத்தின் வடிவு.

19. முக்குணங்கட் கேற்றபடி மூன்றுவித மாஞானம்
அக்கருமம் கர்த்தா வெனஅறைவர் - ஒக்கவே
இங்கவற்றை யுள்ளபடி யானெடுத்துப் போதிப்பன்
இங்கிதமாய்க் கேட்பா யிவண்.

20. எந்தவுயர் ஞானத்தால் எண்ணரிய சீவர்க்குள்
அந்தவான் மாவொன் றெனவறியும் - சிந்தையில்
கண்டு தெளிந்திடவே கூடுமோ காணதுவே
விண்டார்கள் சத்துவாய் மற்று.

21. வியட்டியாம் பார்வையில் வெவ்வே றியல்பில்
சிருட்டியில் பட்டவெலாச் சீவர் - பொருட்டாய்
நிலவும் பலபிரிவில் நேர்ந்திவற்றை நோக்கல்
உலவும் இராசதமென் றுன்னு.

22. ஆய்ந்தாய்ந்து பாராதே ஆதரவிற் றல்பமாய்
ஏய்ந்தவோர் காரியத்தை எல்லாமாய்த் - தேய்ந்தமதி
யாலென்னும் ஞானமே இங்குரைப்பர் தாமசமென்
றேய உரைப்பானீ தே!.

23. விதிமுறையை யொட்டி விருப்புவெறுப்பு பற்று
எதிலும் பயன்விரும்பும் எண்ணம் - ஓதுக்கியே
எக்கருமம் செய்தாலும் இம்மைக் கெழிலமைந்த
அக்கருமம் சாத்விக மென்றாய்.

24. நானெனுமாங் காரம் நசையுடனே கூடியவன்
தானியற்றும் கன்மமெலாம் தாரணியில் - வான்பெரிதாய்க்
கொண்ட சிரத்தையுடன் கூடியதே ஆனாலும்
விண்டார் இராசத மென்றே.

25. அடையும் பயனுணரா(து) ஆராய் தலற்றே
இடையில் வருநஷ்டம் இன்னல் - இடம்பொருள்
ஏவ லுணரா தியற்றிடும் கன்மமது
காவலனே தாமசமாம் காண்.

26. பற்று தலற்றவனாய்ப் பாரிடையே நானென்னும்
குற்ற முடையாக் குணமுளனாய் - வெற்றியும்
தோல்வி கருதானாய்த் தொல்லுறுதி ஊக்கமுளான்
மேல்வரும்சாத் வீகம் மிகுந்து.

27. வேட்கையும் கன்ம விளைவின் விருப்புள்ளான்
தேட்டையில் பேராசைத் தீங்கமைந்தோன் - ஆட்களுக்
கின்னல் விளைப்போன் அசுத்தன் எனவுள்ளோன்
உன்னுவாய் ராசத னென்றே.

28. நிலையற்றோன் நேர்மையிலான் மூர்க்கன் அயோக்யன்
சொல்லுமோர் பொறாமையுள்ளான் சோம்பல் - தலைசிறந்தோன்
ஏக்கம் பிடித்திருப்போன் இன்றியற்றக் கற்றிலான்
மாக்களில்சேர் தாமசனே மற்று.

29. புத்தி உறுதி புகலுமிவை மூவகையாம்
சித்தத்தின் முக்குணத்தின் சேர்க்கையால் - வித்தகனே
இங்கிவற்றை யெல்லாம் இனிதுரைப்பன் கேட்பாய்பின்
தங்கும் தனம்செயாநீ தான்!.

30. பிரவிருத்தி ஓர்வான் நிவிருத்தி தன்னை
உரியதும் கூடாதுணர்வான் - பெரியதொரு
அச்சமும் அஞ்சாமை பந்தம் விடுதலையும்
நிச்சயித்தோன் சத்வமதி யோன்.

31. தரும மதர்மமும் நற்செயலஃ திண்மை
உருவமைந்தே உள்ளபடி ஓரார் - இருநிலத்தில்
புத்தியிராசத மாம்போதம் படைத்தவராம்
நத்தியுணர்வாய் நன்று.

32. அதருமத்தைத் தர்மமாய் ஆய்ந்துணர் வானந்த
வேதனை வேறுவித மாக - நிதமும்
நினைப்பான் உணர்ந்திடுவான் நேருக்கு மாறாய்
இனத்தால் தமசுமதி யீது.

33. இதயமு யிர்புலன்கள் எண்ணிச் செயல்கள்
உதயமாம் போழ்தில் ஒழுங்காய்ப் - பதப்படுத்திக்
கொண்டு செலுத்தும் உறுதிகொள் யோகமே
விண்டார்நற் சாத்வீக மென்றே.

34. பற்றுடையோன் நேரும் பயன்வேண்டும் ஆசையினால்
உற்ற வறம்காமம் செல்வங்கள் - பெற்றுய்யப்
பேணுவோன் பெற்ற பிறவுறுதி ராசதமாம்
காணுவா யீதுண்மை காண்.

35. எவ்வுறுதி யால்மூடன் ஏக்கம் துயரமும்
அவ்வுறக்கம் அச்சம் அகலானோ - அவ்வுறுதி
தாமசமா மென்பதனைத் தானுணர்வாய் பார்த்தாநீ
ஆமிதுவே உண்மையென ஆய்ந்து.

36. மூவிதமாம் இன்பம் மொழிகுவன் கேட்பாய்நீ
யாவைபழக் கத்தாலா னந்தம் - எவர்க்குமே
துக்க நிவர்த்தியும் துய்த்திடச் செய்திடவும்
தக்கதோ தானதையே தான்.

37. தன்னறிவில் தோன்றும் தரணியிடை யெச்சுகமும்
முன்னமே நஞ்சாய் முடிவிலே - பன்னலஞ்சேர்
அந்த அமிர்தமாய் மாறுமோ அன்னதுவே
முந்தவே சாத்விகமா முன்னு.

38. புலனால் விடயத்தில் புக்கடையு மின்பம்
நலஞ்சேர் அமிர்தமாய்ப் பின்னா - குலஞ்சேர்
விடம்போல மாறும் விதியினா லஃது
திடமான ராசதமாம் தேர்.

39. சோம்பலும் தூக்கம் மயக்கத் திடைதோன்றும்
தீம்பலனும் முன்பின்னு மாய்மயக்கத் - தோம்புதலாய்
உள்ள சுகமெதுவும் தாமசமென் றேயுணர்வாய்
தள்ளரும் உண்மையிது தான்.

40. மாயா மலமாகும் இன்னுமிம் முக்குணத்தில்
தோயா வுயிரெதுவும் தோன்றகில - மாயா
வரம்படைத்த தேவர்க்கும் வாய்த்திலவாம் வானில்
இருநிலத்திற் கீதுண்மை காண்.

41. அந்தணா வீரர் அவனியிடை வர்த்தகரும்
முந்தவே ஏரோட்டும் மூதுழவர் - தந்தம்
தொழில்யாவும் தொன்மையா தோன்றும் குணம்தான்
எழில்பெற்றி ருந்திடுமென் றெண்ணு.

42. சமதமம்* தூய்மை தவம்பொறுமை நேர்மை
மமதையறு ஞானம் வடிவம் - தமதுணரும்
கல்வியோடு ஆஸ்திகமும் கண்ணியமாய் அந்தணர்க்கு
பல்விதமாய்த் தோன்றுகுணம் பார்.

43. போரிடையே தீரம் உறுதி புறங்காட்டாத்
தாரணியும் நல்திறமை தானமைந்து - கோரியது
ஈதல் பிறர்க்கே இறைமை இயற்கையிலே
சார்தலவ்வேந் தர்குணம் தான்.

44. வேளாண்மை ஆநிரை காத்தல் இவற்றோடு
தாளாண்மை மிக்குடை வாணிபம் - கேளாய்நீ!
வைசியர்தம் கர்மமாம்! மற்றும் அனைவருக்கும்
சேவைசெய் சூத்திரர் தாம்.*

45. தனக்குரிமை யாம்கருமம் தானிழைத்து வந்தாய்
நினைக்கரு நேர்பயனில் நேர்வால - தனக்குரிய
நற்கடமை செய்வதனால் நண்ணுவதும் பூரணமே
பொற்புடனே சொல்வன் பொருள்.

46. காரணம்யார் இவ்வுலகின் கர்த்தா வார்? எங்கணும்
பூரணமாய் நின்றிலங்கும் பூரணனார் - ஆரணங்குள்
தேடும் பரம்பொருளார், செய்வினையோ டன்னவனை
நாடுவோர் சித்தி பெறுவார்.

47. தனக்குரிய தர்மத்தில் தான்தவறுண் டாயின்
உனக்கொரு கேடுறுவதில்லை - நினைக்கில்
பிறர்க்குரிய கன்மம் பிசகின்றிச் செய்யின்
சிறப்பேது தன்தருமம் போல்*

48. குற்ற முடைத்தெனினுங் கைவிடுதல் கூடாதாம்
உற்ற தனக்குரித்தா மோர்கருமம் - மற்றும்
நெருப்பைப் புகைசூற்றி நிற்பதுபோல் எல்லாக்
கருமத்தும் குற்றமுண்டே காண்.

49. எங்கனும் பற்றறுத்த நன்மதிப்பை யேற்பவனாய்
இங்கிதமாய் வென்ற இதயத்தோன் - தங்கும்பல்
லிச்சையெழாச் சன்யாசத் தீடில் செயலொழித்த
மெச்சும் பரமடையு மே.

50. குந்தி சுதனே சுருக்கமாய்க் கூறுவன்கேள்!.
அந்தப் பரமத்தைத் தானடைந்து - அந்தமுள
ஞான முடிவான நற்பிரமத் துற்றிருக்கும்
மோனநிலை யெய்து முடிவு.

---

42. சமதமம் - சம = அகக் கரணங்களின் அடக்கம் தம = புறக் கரணங்களின் அடக்கம்.

44. மொழிபெயர்க்க விடுபட்டுள்ளது

51. தூய மதியினால் தோன்றுமுடல் இந்தியத்தை
ஏய வுறுதியினால் இங்கடக்கி - வாயுருசி
யோடடைந்தா யுள்ள விடயமும் உள்ளவுவப்
போடு வெறுப்பினையும் விட்டு.

52. ஓதுக்கிடந் தேடி உணவைச் சுருக்கித்
துதிக்குந் தியானத்துள் தோய்ந்து - விதிக்குப்
புறம்பிலே போகா வுடல்பேச் சுளத்தில்
திறமமைந்த வைராக்யந் தேர்ந்து.

53. காமம் குரோதம் கருவம் அகங்காரம்
தோமுயர்ந்த கோபம் பலவும் - தாமொழிந்து
என்னுடைமை என்பதற இன்னிதயச் சாந்தியுள்ளோன்
அன்னான் பிரமநிலைக் காம்.

54. பிரமநிஷ்டை நல்மனம் கொண்டு துன்ப மிலாது
நிராசையுலா தெல்லா உயிரில் - திரமொன்றே
என்றெண்ணிப் பின்னென்னில் உண்மை பக்திகொண்டு
மேன்னி லையடைவன் தான்.*

55. உள்ளபடி பக்தியால் என்னை உணர்ந்தவனே
உள்ளபடி யான்யாரே தென்றுணர்ந்து - உள்ளத்தால்
உண்மையாய் என்னை உணர்ந்தவனும் அன்னவனே
அண்மையில் வந்து புகுவன்.

56. எக்கருமம் செய்தாலும் என்னில் அடைக்கலமாய்
அக்கருமம் செய்வதா யாயிடுமேல் - முக்காலும்
உண்மை யவனே ஒழிவற்ற நித்தியத்தைத்
திண்ணமாய் வந்தடைவன் தேர்.

---

47. 2ம் அத்தியாயத்தில் 5ம் ஸ்லோகத்தில் அர்ச்சுனனுக்கு ஓர் ஐயம் எழுந்தது. ச்ரேயோ பே'ாக்தும்
பை'க்ஷயமபீஹ லோகே. வணக்கத்திற்குரிய ஆசிரியர்களைக் கொல்வதைக் காட்டிலும் இவ்வுலகில்
பிச்சை புகுந்துண்ணுதலும் சிறந்ததன்றே? என்று கேட்கிறான். அக்கேள்விக்கு இங்கு பதிலிருப்பதை
ஒப்புநோக்குக. ஸ்வப'ாவநியதம் கர்மகுர்வன் ந ஆப்னோதி கில்பி[3]ஷம் இயற்கையில் ஏற்பட்ட
கருமத்தைச் செய்து தீமையை ஒருவன் அடையமாட்டான்.

57. மானஸிக மாயென்னில் மற்றுமுன் கன்மங்கள்
தான்வழங்கி யென்னைத் தனிப்பொருளாய் - மோனமுற
புத்தியோ கத்தால் புணர்ந்திருப்பாய் தேர்விஜயா!
உத்தி இதுவே உணர்.

58. என்னில் மனமிருத்தி என்னருளால் துன்பங்கள்
தன்னி லிருந்து தவிர்ந்திருப்பாய் - உன்னில்
ஆங்காரம் ஓங்கியென் சொல்லை அவமதித்தால்
தீங்கான நாசமெனத் தேர்.

59. ஆங்காரத் துட்பட்டே ஆடேன்நான் போரென்னில்
நீங்காத மாயையிது நேர்விக்கும் - தாங்கா
இயற்கைமுன் உன்னெண்ணம் ஈடேற லின்றித்
துயருக் காளாக்கும் துணி.

60. மோகத்தால் நீநினைத்த வாறு முடிந்திடவே
தாகத்தைக் கொண்டாலும் தானுன்றன் - வேகத்தால்
முன்னுதித்த உன்னியற்கை கன்மங்கள் மூண்டெழுந்து
உன்னால் நடைபெறுமென் றுன்னு.

61. மாயையெனும் சக்கரத்தில் மன்னுயிரைத் தான்சுழற்றி
ஏயதோர் சீவர் இதயத்தும் - போயமர்ந்து
அப்பரம னின்றிலங்கும் அர்ச்சுனா நீயுணர்வாய்
செப்புமோர் உண்மையிது தேர்ந்து.

62. எண்ணம் பிரிதின்றி ஈசன் திருவடியைத்
திண்ணமா யுன்மனதிற் சேர்ந்திருப்பாய் - அண்ணலவன்
இன்னருளால் மேலான சாந்திநிலை இங்கடைந்து
மன்னுமுயர் தானத் தடைந்து.

---

54. இச்சுலோகம் ஆசிரியரால் மொழிபெயர்க்கப்படவில்லை

63. பரம விரகசிய பாங்கினைப் பார்த்தா!
விரவ விளம்பினோம் முற்றும் - நாமறிந்து
இச்சைபோல் செய்க எதுவுனக்கு நன்மையோ
நிச்சயித்துக் கொண்டினிமேல் நீ!.

64. மீண்டு மொருமுறையும் மேலா மிரகசியம்
ஈண்டு விளம்புவன் கேட்டிடுவாய் - காண்டீப!
நீயெனக் கன்பனாய் இஷ்டனாய் நிற்பதினால்
ஏயதொரு நன்மையிது வென்று.

65. மனதை எனக்காக்காய் மாறாத பக்திக்
குனதுள்ளத் தாலென்னை ஓராய் - உனதரிய
வேள்வியெனக் கியற்றாய் ; மேலும் எனைவணங்காய்
தோள்வலாய்! என்னை அடைந்திடுவாய் - நாளும்
நவிலும் துண்மையே நானுரைப்பன் கேளாய்
புவியில் எனக்கினியாய் நீ!.

66. எல்லாத் தரும மறிந்தென் சரணடைவாய்
பொல்லாத பாவமும் போக்கிடுவேன் - நல்லாய்
விடுவிப்பேன் உன்னை விசனமேன்? உன்னைத்
தடுத்தாள நானிருக்கும் போது.

67. தவமிலார் பக்தியிலார் தன்னடக்கத் தோடு
செவிமடுக்கும் இச்சையிலா தோர்க்கும் - அவமாக
என்பால் பொறாமையுள ஈனம் படைத்தவர்க்கும்
அன்பால் மொழியற்க வீது.

68. என்னரிய பக்தர்க்கே ஈதியம்பும் உத்தமனே
என்னரிய சேவை இதயத்தால் - நன்னயமாய்ச்
செய்தவனாய் என்பதவி சேருவன் ஐயமிலை
உய்திறனும் ஈதே உணர்.

69. மாந்தரிடை என்னை மகிழ்விக்கும் உத்தமனும்
போந்தஎன் அன்பில் புனைவானும் - ஆய்ந்தக்கால்
அன்னவனே அன்னவனே ஐயமிலை பார்த்தாநான்
சொன்னவனே திண்ணமிது வே.

70. புனிதசம் வாதமிது போதமுற வாசித்து
இனிதிருக்கும் உத்தமர்கள் என்னை - நனிதுயர்ந்த
ஞான யோகத்தால் நணுகியெனை பூஜைபுரிந்(து)
ஆனவராம் ஈதென் மதம்.

71. சிரத்தையுட னிஃது செவிமடுப்போன் தானும்
துரத்திப் பொறாமையினைத் துண்டித் - திருப்போன்
விடுதலை பெற்று வியனுலகஞ் சேர்ந்தோன்
முடிவிதுகாண் உன்மனத்தே உன்னு.

72. சித்தம் ஒருமையோடு கேட்டிலை யோநீயும்?
உத்தமனே இஃது உணர்ந்தனையோ? சித்தத்
தறியாமை யாவும் அழிந்ததோ அன்றிப்
பிரியா திருக்குமெனில் பேசு.

அர்ச்சுனன் கூறியது :

73. நின்னருளால் என்மயக்கம் நீங்கியதால் அச்சுதனே
பொன்னருளால் ஐயம் பொடியாகி - மன்னருள்யான்
என்னிலைமை கண்டுகொண்டேன், இங்குறுதி கொண்டுநின்றேன்,
நின்னுரையைப் பேணுவன்யான் நின்று.

ஸஞ்ஜயன் கூறியது :

74. புளகம் தருமிந்தப் போத சம்வாதம்
பழகிய தந்நண்பனாம் பார்த்தன் - உளமகிழ
வாசுதே வன்தான்வ டித்துரைத்த வாறெல்லாம்
மாசறவே கேட்டேன் மகிழ்ந்து.

75. வியாத னருளால் விளக்கமுறும் பார்வை
சுயோதமாய்த் தோன்றத் தொடர்ந்து - சியாமள
கண்ணனே நேராய்க் கனிந்துரைகள் சொல்லியவை
எண்ணமுறக் கேட்டேன்நான் இன்று.

76. கேசவனும் அர்ச்சுனனும் பேசிய நல்லுரைகள்
மாசிலாத புண்ணியம் பெற்றிட்ட - பாஷணையே!
இங்கவற்றை யெண்ணியெண்ணி உள்ளம் மகிழ்ந்திருந்தேன்
எங்ஙான்றும் நெஞ்சினில் கொண்டு.

77. மீண்டும் ஹரிகொள் விசுவரூபம் தன்னையே
ஈண்டென் மனத்தினால் எண்ணியக்கால் - தூண்டுசுடர்
போலுமென் சந்தோஷம் பொங்கியே பூக்குதாம்
மேலு மரசே மிகுந்து.

78. சம்பத்தும் வெற்றி சகலமாம் வைபவமும்
அம்புவியில் மாறாத நீதியும் - பம்புமாம்
யோகக் கடவுளாம் கண்ணனும் வில்விஜயன்
ஏகமாய் நிற்கு மிடம்.

மோக்ஷ ஸந்ந்யாச யோகம் எனும்
பதினெட்டாவது அத்தியாயம் முற்றிற்று.

பிழைத்திருத்தம்

பக்.	அத்.	பா.	வரி.	பிழை	திருத்தம்
65.	1.	1.	4.	சாற்றுபிவை	சாற்றுமிவை
71.	1.	40.	2.	மதிகெட்டுப்	மதிகெட்டு
74.	2.	9.	0.	சஞ்ஞயன்	சஞ்சயன்
75.	2.	12.	4.	ஆயுங்காளிஃதே	ஆயுங்காலிஃதே
75.	2.	13.	1.	விஷயமொலாஞ்	விஷயமெலாஞ்
76.	2.	15.	4.	நன்ருயுணர்	நன்றாயுணர்
	2.	18.	1.	நாசிமிலான்	நாசமிலான்
	2.	19.	4.	பணணுவதில்	பண்ணுவதில்
77.	2.	21.	5.	ஏற்படுமோ	ஏற்படுமோ
78.	2.	31.	2.	தன்டமைக்	தன் கடமைக்
79.	2.	33.	1.	நிராகரிப்பையானல்	நிராகரிப்பாயானால்
79.	2.	33.	2.	லாபமும்	பாபமும்
79.	2.	33.	2.	கிதையுணராய்	இதையுணராய்
9.	2.	37.	2.	சுகத்தினை	அகத்தினை
2.	2.	48.	2.	பற்றிவா	பற்றிலா
4.	2.	62.	1.	றோன்லாகும்	றோன்றலாகும்
5.	2.	68.	3.	நிலைவறாப்	நிலைதவறாப்
5.				நல்தலாறொன்று	நல்லாறொன்று
5.	2.	69.	3.	நின்றிங்கால்	நின்றிடுங்கால்
6.	2.	72.	4.	அந்தந்திலுங்	அந்தத்திலுங்
8.	3.	9.	3.	பகர்யக்ய	பகர்யக்ஞ
8.	3.	10.	2.	யக்ஞமந்	யக்ஞமுந்
7.	4.	13.	3.	அறித்தே	அறிந்தே
9.	4.	25.	3.	அவ்வறியால்	அவ்வறிவால்
0.	4.	29.	1.	மதைப்பிப்பர்	மதையர்ப்பிப்பர்
1.	4.	34.	3.	கன்ட	கண்ட
2.	4.	41.	2.	அருமந்தாம்	அருமருந்தாம்
3.	5.	1.	1.	கழற்றுவாய்	கழறுவாய்
9.				விட்டால்லால்	விட்டாலல்லால்

பக்.	அத்.	பா.	வரி.	பிழை	திருத்தம்
109.	6.	3.	1.	கன்ம்மா	கன்மமா
109.	6.	3.	4.	நனிவணர்கவே	நனிவுணர்கவே
113.	6.	20.	3.	தெளயுந்	தெளியுந்
116.	6.	42.	4.	யேகாகத்தினால்	யோகத்தினால்
121.				ஆகும்	ஆகுமோ
123.	8.	5.	2.	விட்டேன்	விட்டோன்
127.	8.	25.	1.	புகையுரவு	புகையிரவு
128.	8.	28.	1.	யக்ஞுத்தல்	யக்ஞுத்தால்
132.	9.	23.	2.	பூசித்திருப்பேருத்	பூசித்திருப்போரும்
133.	9.	29.	2.	வேறுப்பெனக்கு	வெறுப்பெனக்கு
135.	10.	8.	2.	பலலிரவு	பகலிரவு
137.	10.	19.	1.	உயர்வான்	உயர்வான
137.	10.	20.	2.	பல்லுயிர்கும்	பல்லுயிர்க்கும்
138.	10.	21.	2.	சோதியற்	சோதியிற்
139.	10.	27.	2.	ஜயராவதம்	ஐராவதம்
	10.	27.	3.	மன்னுமெனணுண்மை	மன்னுமென்னுண்மை
143.	11.	6.	3.	ரேழேழ்	ஒழேழ்
146.	11.	25.	6.	வீடுத்தகால்	விடுத்தகால்
	11.	26.	1.	திகழவணிபாலர்	திகழவனிபாலர்
148.	11.	37.	1.	எவ்வாறுறமையுங்	எவ்வாறமையுங்
150.	11.	50.	1.	வசுதேவன்	வாசுதேவன்
153.	12.	6.	1.	பிடிமுடிவாய்	பரமுடிவாய்
155.	13.	0.	0.	க்ஷேத்ரஞு	க்ஷேத்ரக்ஞு
158.	13.	18.	2.	வடுத்துரைத்தேன்	வகுத்துரைத்தேன்
163.	14.	10.	2.	பின்னிடையும்	பின்னடையும்
165.	14.	27.	2.	சாஸ்வாமாம்	சாஸ்வதமாம்
173.	16.	19.	4.	வேர்காலும்	வோர்காலும்
176.	17.	12.	3.	பரதத்சிரேட்டாவே	பரதச்சிரேட்டாவே
18.	18.	66.	1.	மறிந்தென்	மரிந்தென்

கீதாசாரம்

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கும்.

உன்னுடையது எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு
எதை நீ படைத்திருந்தாய் அது வீணாகுவதற்கு.

எதை நீ எடுத்துக்கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை நீ கொடுத்தாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.

எது இன்று உன்னுடையதோ அது
நாளை மற்றொருவருடையது ஆகிறது
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்
இந்த மாற்றம் உலக நியதியாகும்

– பகவான் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா